UNIVERSITY OF MADRAS.

B. A. Examination, 1934.

# வஞ்சிமா நகர்.


ஸேதுஸம்ஸ்தானம் மகாவித்வான்

ரா. இராகவையங்கார்

எழுதியது



இரண்டாம் பதிப்பு

சென்னை

தாம்ஸன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 54 | 10 | மளையாள | மலையாள |
| ,, | 23 | குன்றக்குறைவர் | குன்றக்குறவர் |
| 59 | 5 | அகப்பட்டான் | அகப்பாட்டான் |
| 87 | ,, | மேக்ஙகள் | மேகங்கள் |
| ,, | 6 | வான்வர் | வானவர் |
| 92 | ,, | பேரறிவாளாராகிய | பேரறிவாளராகிய |
| 95 | 22 | புகார்க் | புகார்ச் |
| 105 | 6 | எனவருதலா னுணர்க. | எனவருதலா னுணர்க. |
| 111 | 9 | இராமனிருக்குமிடய | இராமனிருக்குமிடம் |
| ,, | 20 | கொடுங்கோளூராகிம் | கொடுங்கோளூராகிய |
| 134 | 23 | திருப்போரூர்த்தலத்து | திருப்பேரூர்த்தலத்து |
| 143 | 9 | நன்றுதெளிலாம். | நன்றுதெளியலாம். |
| 147 | 16 | கழுமல் | கழுமலம் |

ஸ்ரீ

முதற்பதிப்பின்

# முன்னுரை

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழியுணர்ந்த புத்திமான்களுக்குள் சிலகாலமாகச் சங்ககாலத்துச் சேரர்தலைநகராகிய **வஞ்சிமாநகர்** கொங்குநாட்டுக்கருவூர்தானோ; அன்றி, மேல்கடற்கரைக்கணுள்ள கொடுங்கோளூர்தானோ—என்று ஐயமுண்டாகி அதனடியாகச் சிலபல ஆக்ஷேப சமாதான ரூபமான வாதங்கள் புஸ்தகவாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் நிகழ்தலைக்கண்டு செந்தமிழ்ச் செல்வ வேந்தரும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், எம் அன்னதாதாவுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் இராஜராஜேச்வர ஸேதுபதி மஹாராஜரவர்கள் யாம் இவ்விஷயமாக நிச்சயித்ததை எழுதியுதவும்படி பல்காலுந்தூண்ட அதனானே இந்நூலெழுதப்பெற்று அவர்கள் பெருநல்லுதவியானே அச்சிட்டு நிறைவேறியதாதலின் அம் மஹாராஜரவர்கட்கியாம் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம். செந்தமிழ்ச் செல்வச் சேதுவேந்தரும், அவர்கள் திருமரபும் அவர்களாதரிக்குநறுந்தமிழும் என்னான்றுமினிதோங்கிநிலவ இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

---

# உரிமையுரை.

என்போற் புலவ ரிருமாந் திவண்வாழத்
தன்போற் புரக்குந் தமிழ்வள்ள—லன்போவாத்
தேனுரிமை செய்மூல்லைச் சீராச ராசமுகிற்
கியா னுரிமை செய்வஞ்சி யீது.

ரா. இராகவையங்கார்,

ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

ஸ்ரீ

# தற்சிறப்புப்பாயிரம்.

---

## நாமகள் வாழ்த்து.

வெண்டா மரைமேல் விளக்கை யெனதுள்ளத்
தண்டா மரைமேற் றனியேற்றிக்—கொண்டேன்யான்
காணாத பல்பொருளுங் கையகத்து நெல்லியெனக்
கோணாது காண்பான் குறித்து.

## செய்ந்நன்றியறிதல்.

யாவன் கொடுப்பா னெனப்பூமி யெங்கு
மேகா வலைந்தொன்று மாகாது வானின்
மேவுந் தருத்தான் றரற்குள்ள தென்றவ்
விண்ணேக வென்னெஞ்ச மெண்ணேரம் வந்து
காவுஞ் சுரர்க்காய வாவும் மெனத்தான்
கழறாது கைகொண்டு காணக்கொடுத்தான்
தேவன் புகழ்ச்சேது பதிநாக நாதச்
செல்வன் றமிழ்ச்செப்பி வளநாடர் கோவே.

## நூனுதல்பொருள்.

குடகொங்கிற் கொல்லிக் குடவரைப்பாற் சேரர்
தடமதில்சூழ் வஞ்சித் தலந்தான்—கடலிவரும் [யிது
பொன்னிசேர் தண்பொருநைப் பூந்துறைக்க ணுண்மை
தன்னிலே தேறத் தரும்.

---

ஸ்ரீ

# வஞ்சிமா நகர்

வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறுநல்லுலகம் சேரர் பாண்டியர் சோழர் என்னும் மூவர்க்கேயுரியதென்பது தொல்காப்பியனுர் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி, ஞற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனுர் புலவர்" (பொ-செய்-79) எனச் சூத்திரித்துரைத்தவாற்ருனும் ஆண்டு உரையாசிரியர், பேராசிரியர் உரைத்தவாற்ருனும் அறியப்படும். ஈண்டு "நாற்பெயரெல்லையகம்" என்பது வடவேங்கடந், தென்குமரி, குணகடல், குடகடல் என்னப்பட்ட நான்கெல்லையகம் எனக்கொள்வர் பேராசிரியர்: நச்சினர்க்கினியர் வேறுகூறுவர். அதைப்பற்றிப் பிற்கூறுவேன், இம் மூவேந்தரும் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையாரென்பது* தமிழ்நூல்களிற் கண்டது. "கடல கவரைப்பினிப் பொழின்முழு தாண்டநின் முன்றிணைமுதல்வர்" (பதிற்றுப்பத்து) எனச்சேரரையும் "உலகமாண்ட வுயர்ந்தோர்" (மதுரைக்காஞ்சி) எனப்பாண்டியரையும் "சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ் வங்க ணுலகளித்த லான்" (சிலப்பதிகாரம்) எனச் சோழரையும் கூறுதலான் இம் மூவேந்தருடைய ஆட்சித்திறனும் பெருந்தலைமையும் நன்கறியலாகும். இம்மூவரும், வேங்கடம் குமரி இடைப்பட்ட இத்தமிழுலகத்தை மேனுடு, தென்னுடு, கீழ்நாடு என மூன்று பிரிவாகவைத்து ஆண்டாரென்பது

'குடபுலங்காவலர்மருமான்' எனச் சேரனையும்
'தென்புலங்காவலர்மருமான்' எனப் பாண்டியனையும்
'குணபுலங்காவலர்மருமான்' எனச் சோழனையும்

சிறுபாணுற்றுப்படையிற் கூறுதலானுணரப்படும். நச்சினர்க்கினியரும் குடபுலம்-மேற்றிசைக்கணுள்ள நிலம் எனவும், தென்புலம்-

---

* திருக்குறள்-பரிமேலழகருரை.

தெற்கின்கண்ணதாகிய நிலம் எனவும், குணபுலம்-கிழக்கின்கண்ண தாகிய நிலம் எனவும் உரைத்தார். தமிழ்முடியுடையரசர் மூவரேயாதலானும், வேங்கடத்துக்கிப்பாற்பட்ட தமிழ்நாடுமுழுதும்மேற்குறித்த திசைமுறையாற் பிரிப்புண்டபடியானும், வேங்கடத்துக்கப்பாற்பட்டது தமிழ்வழங்காநிலமாதலானும் வடபுலம் என ஒன்று ஈண்டு வேண்டப்பட்டதின்றென நன்றுணர்க. இவ்வருமையான பகுப்புமுறையை யுற்றுநோக்கின் இப்பரதகண்டத்தின்தென்பாகம் விரியாதுசுருங்கிய இயற்கையமைப்பை ஆராய்ந்து மூவேந்தர்க்குந்தகுதியான கடற்கரையும் விரிந்த அகநாடும் உளவாதல்கருதி இவ்வாறு பிரிக்கப்பட்டதென்பது புலனாகும். பாண்டியர் தெற்கண்வளைந்த பெருங்கடற்கரையையும், அதனைத் தொட்டு வடக்கண்விரிந்த அகநாட்டையும் உடையராவர். சேரர் சோழரிருவரும் பாண்டியர் தென்னாட்டுக்கு வடபால்வேங்கடம் எல்லையாகவுள்ள நிலத்தைக் குடபுலம், குணபுலம் என இருபாற்படுத்துக் குடகடற்கரையும், அதனைத்தொட்டுவிரிந்த அகநாடும், குணகடற்கரையும், அதனைத் தொட்டுவிரிந்த அகநாடும் முறையே உடையராவர். இச்சேரர் பாண்டியர் சோழர் மூவரும் நிலவுரிமை கொண்டாளுந்திசைபற்றி முறையே குடக்கோ, தென்னவர், குணபுலங்காவலர் எனப்பெயர் சிறப்பர்.

இனி இம்மூவர்க்குமுரிய இத்தமிழ்கூறுநல்லுலகஞ் செந்தமிழ் நாடு எனவும், கொடுந்தமிழ்நாடு எனவும் இரண்டுபிரிவாகப்பிரித்து வழங்கப்படுமெனவுணர்க. செந்தமிழ்நிலம் ஒன்றும், கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டுஞ் சேர இத்தமிழுலகம் பதின்மூன்று பகுதியுடைத்தாகும். செந்தமிழ்நிலம் என்பது வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்று இளம்பூரணவடிகள், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் தொல்காப்பியவுரைக்கண் உரைத்தார். வையைக்கு வடக்கணுள்ள பாண்டிநாட்டுப்பகுதியும் இதன்கண்ணடங்குதல் காண்க. வையைக்கு வடபால் நாடுகளிலுள்ள திருப்புத்தூர், திருவாடானை, திருக்கோட்டியூர், திருமெய்யமுதலிய தலங்கள் பாண்டிநாட்டுளவெனப்படுதலானும் வையைக்குவடக்கண் நெடுந்தூரம் பாண்டிநாடுண்மை இனிதுணரப்படும். (பிற்காலத்தார் பாண்டிநாடே செந்தமிழ்நிலமென்பர்). இச் செந்தமிழ்நிலத்தைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டாவன; பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு,

குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை என இவையென்று இளம்பூரணவடிகள், சேனாவரையர் உரைத்தார். நச்சினார்க்கினியர் இதனையேகூறி மலைநாடு என்றவிடத்து மலையமானாடு என்றுரைத்தார். ''சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே'' என்பது திவாகரமாதலான் மலையமான் என்பது சேரன்பெயராதல் தெள்ளிது. மேற்கூறிய பன்னிருநிலமும் செந்தமிழ்நிலத்தின் றென்கீழ்பால்முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக்கொள்க என்று சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் உரைத்தார். இதனாற் குடநாடும், மலைநாடும் வேறுவேறென்று தெளிந்துகொள்ளலாம். நச்சினார்க்கினியர் இக்கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன சிங்களமும், பழந்தீவும், கொல்லமுங், கூபமுங், கொங்கணமுங், துளுவும், குடகமுங், கருநடமுங், கூடமும், வடுகுங், தெலுங்குங், கலிங்கமுமாமெனவுரைத்தார். இதனாலிவை கொடுந்தமிழ்நாட்டுக்கும் அப்பாலுள்ள பிறநாடுகளென்று தெளியலாம். இந்நாடுபன்னிரண்டும் தமிழ்மொழிவழங்காது வேறுவேறு மொழிவழங்கு நிலங்களென்பது கொடுந்தமிழ்நாட்டுக்குமப்பா லிவற்றைவைத்துரைத்தமையானும், தமிழ்மொழியல்லாத சிங்களம் வடுகுமுதலிய மொழிப்பெயரே நிலப்பெயராகப் பெரும்பான்மை கூறியதனானும் உணரலாம். இந்நிலத்துமொழிகள் தமிழிற்புக்குவழங்கியவிடத்து உரையாசிரியரெல்லாம் திசைச்சொல் என்று கூறுதலுங்காண்க. சங்கநூல்களிற் பல்லிடத்தும் வடுகர் நிலத்தைத் "தமிழ்பெயர்தேயம்" எனவும் "மொழிபெயர்தேயம்" எனவும் உரைத்தலானும் இதனுண்மையுணரப்படும். இவற்றாற் கொல்லங், கூபங், கொங்கணங், துளு, குடகமுதலியன தமிழ்மொழிநிலங்களாக ஆதியிலெண்ணப்பட்டமை நினைக்கத்தகும்.

இனி மேற்றிசைக்கணுள்ளநிலம் என்பதுபற்றிக் "குடபுலம்" எனப்பட்ட சேரநாடு, மேற்கூறிய கொடுந்தமிழ்நாடுகளுட் குட்டநாட்டையுடையதென்பது சேரனைக்குட்டுவன் என்பதனானும், குடநாட்டையுடையதென்பது குடவர்கோமான் என்பதனானும், பூழிநாட்டை யுடையதென்பது பூழியர்கோமான் என்பதனானும், மலைநாட்டையுடையதென்பது மலையன், மலையமான் என்பதனானும் நன்கறியப்படும். மற்றைநாடுகளைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சியின்று; வேண்டுழிவேண்டுழிக் கூறிக்கொள்வல். இதனாற் குட்டமுதலாக

மலையிறுதியாக ஈண்டுச்சொல்லப்பட்ட நாடெல்லாம் சேரநாட்டகத்தனவென்று தெளியப்பட்டவாற்றான் இவையனைத்துங் 'குடபுலம்' என்று நல்லிசைப்புலவர் குறியிட்ட மேற்றிசைக்கணுள்ள நிலமாகுமென்று எளிதிலுணரப்படும். இதனாற் குடபுலம் என்பதன்கண் குடநாடும், மலைநாடுமென இரண்டுண்டென்றும், ஒன்றொன்றுகூறலாகாதென்றும், சேரரைக் குடதிசை பற்றிக்கூறுமிடத்தெல்லாம் குடநாடொன்றையே குறியாது அவர்க்குக் குடதிசைக்கணுள்ள குட்டமுதலாக மலைநாடிறுதியாகச் சொல்லப்பட்டநாடுகள் எல்லாவற்றையுங் குறிக்குமென்றும் ஐயமறத் துணிந்துகொள்க. இப்பகுப்புமுறையெல்லாம் ஆராயாது குடபுலம் என்ட'து குடநாடொன்றே யென்றும், அதுவே மலைநாடென்றும், அம்மலைநாடு கடற்கரையோரமாகவுள்ளதேயென்றும், தாமே நினைத்துக்கொண்டு இடர்ப்படுவாருமுளர். அவர் மலைநாட்டுக்கும், குடநாட்டுக்கும் இடையிற் பலநாடுண்மையையும், இவையெல்லாஞ் செந்தமிழ்நாட்டைச்சுற்றியுள்ளனவென்று தொல்லாசிரியர் காட்டியதனையும் மறந்தனராவர். இப்பலநாடுந்தொக்குள்ள சேரர் குடபுலத்தை மலைமண்டலமென்று கூறுவதெல்லாம் சோழநாட்டைப் புனன்மிகுதி பற்றிப் புனனாடென்பதுபோல மலைமிகுதி பற்றியென் றெளிதிலுணரப்படும். இதனாற் குடபுலமென்றும், மலைமண்டலமென்றும் பெயருடைய சேரநாட்டுக் கொடுந்தமிழ் நாடாக வெண்ணப்பட்ட குடநாடும், மலைநாடும் வேறுவேறு உள்ளன வென்பது நன்குணரற்பாற்று. ஒருசேரனைக் "குடதிசைவாழுங்கோ" என நூல்கூறின், அது குடபுலங்காவலர்மருமான் என்புழிப்போல மேற்றிசைக்கணுள்ள நிலத்தில்வாழும் வேந்தன் எனப் பொருள் படுத்தலன்றி அது கடலோரமாகவுள்ளதென்றுகொள்ளப்பட்ட கொடுந்தமிழ்நாடாகிய குடநாட்டிலேமட்டும் வாழுங்கோ என்று பொருள்படுத்தல் நெறியன்றென்க. கொடுந்தமிழ்நாடாகிய குடநாடு மேல்கடலோரமாகவுள்ளதென்பது "தண்கடல் வேலி நின் குட நாடற்றே' என வருதலான் அறியலாம். சேரனும் குடபுலமுழுதையுங்குறித்து அவனைக் குடக்கோ என்பதன்றி அவனாட்டின்னோர் பகுதியாகிய குடநாடுமட்டுங்குறித்து அப்பெயராளுதலில்லையென்க. அடியார்க்குநல்லாரும் "குடக்கோச்சேரவிளங்கோவடிகள்" என்புழிக் குடக்கோ என்பதற்குக் குடதிசைக்கோ எனவேயுரைத்தார்.

இத்துணையும் விரித்துரைத்தநாடுகளுள், தொண்டைநாடு, கொங்குநாடு எனப்பட்ட நாட்டின்பெயர்கள் காணப்படாமை

யீனக்கத்தகும். இவற்றுள் தொண்டைநாடு நாகபட்டினத்துச் சோழனொருவன் நாககன்னியைமணந்து பெற்றபுதல்வனும், தொண்டைக்கொடியை அடையாளமாகச்சுற்றப்பட்டகாரணத்தாற் றொண்டைமான் எனப் பெயர் சிறந்தவனுமாகிய ஒருவற்குத் தன் னாட்டைப் பிரித்துக்கொடுக்கப்பின் அத்தொண்டைமான் பெயரான் விளங்கியதொன்றாதலின் இப்பழைய நாடுகளின் வேறெண்ணப் படாததாயிற்று. கொங்கு முற்காலத்துக் கொங்கன் என்னும் பெயரை யுடைய சேரனாளப்பட்டதன்மையாற் கொங்கநாடெ னப்பட்டதெனத்தெரிகின்றது. இதனைச் செந்தமிழ்க்கடனிலைகண்ட கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

> "கோதைபயில் விற்கொடி குலாவிய புயத்தன்
> கோதையர் விழிக்கணை குளிக்குமரு மத்தன்
> கோதைகம ழுங்கவிகைக் கொங்கனென விள்ளுங்
> கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு"

எனப் பாடுதலானறிக. கொங்கனெனவிள்ளுங்கோதை—கொங்கன் என்று வழங்கப்படும் சேரன் என்றது காண்க. கொங்கன்-சேரன்; "வில்லவன் கொங்கன் வஞ்சிவேந்தனே போந்தின்தாரோன்" என் பது சூடாமணி நிகண்டு. "பூழியனுதியன்கொங்கன்" என்பது பிங்கலமும் திவாகரமுமாம். சோழன், பாண்டியன், கொங்கன், தொண்டைமான் இப்பெயர்கள் அரசர்க்குரிய பெயராதலின் அவர்கள் ஆண்டநாடுகள் சோழம், பாண்டி, கொங்கு, தொண் டை என அவ்வரசர் பெயரான் வழங்கலாயினவென்க. இங்ஙனமன்றி வேங்கடங்குமரி என்னுமிவற்றுக்கிடையே உள்ள நிலமெல்லாம் செந்தமிழ் ஒன்றும், கொடுந்தமிழ் பன்னிரண்டுமாகப் பிரிக்கப் பட்டிருக்கவும் அவற்றின்வேறு யொருதமிழ்நாடு தனியே ஆங்குண் டென்று நினைப்பதற்கே இடனின்றாதல்காண்க.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியச்செய்யுளியலில் 'நாற்பெய ரெல்லையகத்து' என்புழி மலைமண்டலம், பாண்டியமண்டலம், சோழ மண்டலம், தொண்டைமண்டலம் எனவுரைத்தார். இதனால் இவர் கொங்குமண்டலத்தைச் சேரர்மலைமண்டலத்தின்வேறாக நினையாமை தெரியலாம்.

இதற்கியையவே இக்கொங்குநாட்டைப் பலவிடத்தும் 'குட கொங்கு'எனவே வழங்குதலான் இது குடபுலத்ததாமென்பது புல

னும். அதனால் இது குடதிசையாட்சியையுடைய சோழ.. னென்று துணியலாம். கலிகன்றியாழ்வாரும் சோழன்செங்கணை அவன்வென்றுகொண்ட நாடுகளானே "தென்னாடன்குடகொங்கன் சோழன்" எனவழங்கியவிடத்துக் குடகோங்கு எனப்பணித்த காண்க. சேக்கிழாரும் வெள்ளானைச்சருக்கத்திற் "குடக்கோ மலணைந்து" என்றார். ஆழ்வார் 'தென்னாடன் குடகொங்கன் சோழன்' என்றது குணபுலங்காவலுடையசோழன் தென்புலத்தையும் குடபுலத்தையும் வென்றுகொண்டதனைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். "தென்னாடன்குடகொங்கன்சோழன்" என்பதற்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை "ஸர்வேச்வரனுடைய ஜகதாகாரதையோடு இவன் மூன்று ராஜ்ஜியத்தையும் நிர்வஹித்ததோடு வாசியற" என உரைத்தார். இவ்வுரையாளர் தென்னாடு குடகொங்கு சோணாடு என்பனவற்றையே மூன்று இராச்சியமாகக் கருதியது காண்க. வில்லிபுத்தூராரும் தம்பாரதத்தில் இதற்குப் பொருந்தவே "சென்னிநாடு குடகொங்கநாடு திறைகொண்டு தென்னனுறை செந்தமிழ்க், கன்னிநாடுறவுடன் புகுந்து" என உரைத்தது காண்க. இச்செந்தமிழ் வழக்கெல்லாம் நன்குதெளிந்த பெரியராகிய மகாவித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களும் சுந்தரமூர்த்தி நாயனார் முதலைவாய்ப்பிள்ளை அழைத்தது குடநாட்டிலென்று திருநாகைக்காரோணபுராணத்து விளங்க உரைத்தார். மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் சிலப்பதிகாரம் முதற்பதிப்பு அபிதானவிளக்கத்தில் கொங்கு—கொங்குமண்டலம்—குடநாடு என்றெழுதினார்கள். வடவேங்கடம் தென்குமரி என்பனபோல, குடபால், தென்பால், குணபால் என்னும் முப்பகுதிகளுள் குணபாற் பட்டது என்று உலகறியக் குடகொங்கென வழங்கினரெனக் கண்டுகொள்க. சங்கநூல்களும் பல்லிடத்தும் சேரனையே "கொங்கர்கோ" (பதிற்-88-90) என வழங்கும் இதனாற் கொங்குநாடு குடதிசைக்கட்பட்ட தமிழ்நிலத்துள்ளதென்றும், அதுபற்றிச் சேரராட்சியிற்பட்டதென்றும் தெளிந்துகொள்க. மற்று

"பாவெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்" (22)

எனப் பதிற்றுப்பத்துட் காணப்படுதலால் இக்கொங்குநாடு சேரர்க்கு வென்றியாற்கிடைத்ததன்றி முன்னிருட்டுச் சேரரதன்றாமெனிற்

கூறுவல். வேங்கடங்குமரி யிடைப்பட்ட தமிழுலகத்து ஒரு நிலப்பகுதி மூவேந்தருளொருவர்க்குரிமையாகா திருந்ததென்பது “வண்டமிழ்மூவர் காக்குந்தண்பொழில்வரைப்பின்” என்ற தொல்காப்பியனார்கூற்றுக்கு மாறுபாடாதலின் இது மூவருளொருவர் பகுதியதேயாமென்று துணியப்படும்: இது சேரர்குடபுலத்ததன்றாயின் இடைநாடாகவுள்ள இக்கொங்குநாட்டைக் குடகொங்கு என வழங்குதல் பொருந்தாததேயாகும். இது “குடகொங்கு” என்பதனால், என்றுங் குடதிசையாளுங்கோவாகிய சேரனதேயென்று கொள்க. இங்ஙனமாகவும் சேரனைக் ‘கொங்கர்நாடகப்படுத்த தோன்றல்’ எனக்கூறியது தன்னாட்டகத்தவராயிருந்துவைத்தே தன் கோலின்வாராது வேறுபட்டுக் குறும்புசெய்தாரையடக்கி அக்குறும்பர்நாட்டைச் சேரன் தன்னடிப்படுத்தியசெய்தியைக் குறித்ததன்றி வேறன்றென்க. இங்ஙனம் முடிவேந்தர் நாடு அடிப்படுத்தல் உண்டென்பது

“நின்னொடு வாரார் தந்நிலத் தொழிந்து
கொல்களிற் றியானை யெருத்தம் புல்லென
வில்குலை யறுத்துக் கோலின் வாரா
வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்து” (பதிற்-79.)

என வருவதனானுணர்க. இவ்வாறு கொள்ளாக்கால்

“கன்மிசை யவ்வுங் கடலவும் பிறவு
மருப்ப மமைஇய வமர்கடந் துருத்த
வாண்மலி மருங்கி னாடகப் படுத்து” (பதிற்-50)

எனவருதலான் சேரர்க்கு கடன்மலைநாடு முன்னர்த்தொட்டு இல்லையாய்ப் பின்னர்க்கிடைத்ததென்று கூறவேண்டி வருமென்க.

“நனந்தலை வேந்தர் தாரழிந் தலற
நீடுவரை யடுக்கத்த நாடுகைக் கொண்டு” (ஷை-55)

என்பதனால் மலைகள் அடுக்கடுக்காகவுள்ள மலைநாடு சேரர்க்கு முன்னொட்டு இல்லையாய்ப் பின்பு கிடைத்ததென்று சொல்லவேண்டியும் வருமென்க. இவ்வாறே “ஊழினாகிய பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ” எனவும் “உம்பற் காட்டைத் தன் கோனிறீஇ” எனவும் “ஏனை-

யழவரைச் செருவிற் சுருக்கி" எனவும் வருவன் பலவுங் காண்க: இவையெல்லாம் தன் நாட்டிலே கோல்முறைவாராது குறும்பு செய்த பல்வகையினரைத் தன்கோல்முறைவைத்த செய்தியையே குறிக்குமென்று கொள்க.

இனிக் 'குடகக்கொங்கர்' என்றொருவகையார் கண்ணகியின் கடவுண்மங்கலத்துப்போந்து வரம்வேண்டினரென்று கேட்கப்படுமாலெனின் அவர் இக்கொங்குநாட்டினரன்றி வேறல்லாமை அவரையே பதிகத்துக் "கொங்கிளங்கோசர்" என்றதனானும், அதற்கு அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்து இளங்கோவாகிய கோசர் என்று உரைத்தமையானுமுணரப்படும்: மற்றுங் குடகக்கொங்கர் என்றது மேற்றிசைக்கணுள்ள கொங்கர் எ-று. குடம், குடகம், குடக்கு, குடகு இவை மேற்றிசைக்குவழங்கும் பெயர்களென்று உணர்க. கொங்கை பாண்டிய் குடகொங்கு என்பதுபற்றி குடகமும் மேற்றிசைக்குப்பெயராதல் கருதிக் குடகக்கொங்கு என்று வழங்கிய தன்றிவேறன்றென்க. இது சோணாட்டுச் சிதம்பரத்தைக் குணசிதம்பரமெனவும், கொங்குநாட்டுச் சிதம்பரத்தைக் (பேரூர்த்தலம்) குடசிதம்பரமெனவுங் கூறுதலானும் உணரப்படும். இங்ஙனங் கொள்ளாது கொங்குநாட்டுத்தமிழரே ஒருகாரணத்தாற் குடகநாட்டுச்சென்று வதிந்தார்: இவர் அவராவரென்றுகூறின் அஃதொருவாறு பொருந்தும்; என்னை காரணமெனின்? பொதியின் மலைக்கணிருந்த ஆய் என்னும் அரசனொருவன் இக்கொங்கரோடு போர்புரிந்து இவரை மேல்கடலிலே ஓட்டினனென்று

"நீயளித்த, வண்ணல் யானை யெண்ணிற்கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே" (130)

என்னும் புறப்பாட்டானறியப்படுதலான் இவர் அக்காலத்து மேல் கடற்பக்கத்தோடி ஆண்டுள்ள மலைப்பக்கங்களில் வதிந்தாராவரென்று ஊகிக்கப்படுதலானென்க. எங்ஙனமாயினுங் கொங்கர் சேரனுடைய குடபுலத்தவர் என்னுமிடத்தும், கொங்கு அவனுடைய குடபுலத்ததே என்னுமிடத்தும் யாதோரையமும் உண்டாகாமை யிவற்றாற்காண்க.

இஃதன்றி இக்கொங்குநாட்டு என்றுமுள்ள கொல்லிமலை சேரர்க்கே சிறந்த தலைமையான மலையென்பது "கொல்லிச்சிலம்பன்" எனச்சேரனை வழங்குமாற்றா னறியப்படும்.

"வாழியர், வில்லெழுதிய விமயநெற்றியொடு
கொல்லியாண்ட குடவர்கோவே" (சிலப்-குன்றக்)

என வருதலான் இக்கொல்லிமலை சேரர்க்கு எத்துணைச்சிறந்த தென்பது இனிதுணரலாம். இஃது அத்துணைச்சிறப்புடைய தாகக் கருதப்படாதாயின் இதனை இமயத்தொடுசார்த்தி இளங்கோவடிகள் கூறாரென்றுணர்க. அகப்பாட்டிலும் "பொறையன்கொல்லி" (62) என்றார். புறப்பாட்டிலும் சேரனை

"வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் கடும்பார்த்து
மோங்குகொல்லியோ ரடுபொருந" (22)

எனக் கூறினர். இதன்கண் "கொல்லியோ ரடுபொருந" என்பதற்குக் *கொல்லிமலையிலுள்ளாருடைய அடுபொருந என்று உரைகாரர் பொருள் கூறினர். இதனாற் கொல்லி சேரனமலையும், கொல்லியோர் சேரன் குடிகளுமாத லுணரப்படும். கொங்குநாட்டைக் குடகொங்கு என்றதுபோல அதன்கணுள்ள இக்கொல்லிமலையை "வெல்போர்வானவன் கொல்லிக்குடவரை" (அகம்-130) எனவும் "குடகொல்லி" (இறையனார் களவியலுரைமேற்கோள்) எனவும் "இமயங்குட கொல்லி" (பட்டினத்தடிகள்) எனவும் வழங்குதலான் இஃதுள்ள திசையைக் குடதிசையென்று கருதினாராதல் செவ்வனம் புலனாகும். இதனானும் இது குடபுலத்ததாய்க் குடபுலங்காவலருடையதாதல் தெளியலாம். பாண்டியர்பொதியத்தைத் "தென்னவபொருப்பு", (புறம்-215)என்பதுபோலஇதனையுங்கொள்க. சோழர்க்குநேரிமலையும், பாண்டியர்க்குப் பொதியமலையும் எங்ஙனஞ்சிறந்தனவோ, அங்ஙனமே சேரர்க்கு இது சிறந்ததாகும். எத்துணையோ மலைகளையுடைமையாற் குடபுலம் மலைமண்டலமெனப்படும். அம்மலைமண்டலங்

* கொல்லிமலையில் இன்றைக்கும் மலையாளரேயுள்ளார். மலையாளர் மலையர் என வழங்கப்பட்டனரென்பது "மண்ணினிற் பொலிகுலமலையர்" (திருஞான-237) எனச் சேக்கிழார்பாடுதலான் அறியப்படும்,

காவல்புரிகின்ற சேரர் பெயர்சிறந்தது இக் கொல்லிமலையானே என்பது ஈண்டைக்கு நினைக்கத்தகும். இது கருவூர்க்கு அணித்தாக வுள்ளது என்பதும் மறக்கற்பாலதன்று. இக் கொல்லியைக் குட வரையெனப் பலவிடத்தும் வழங்கியவாற்றாற் குடமலைநாடன் என்று சேரனைக்கூறியவிடத்துக் குடக்கணுள்ள கொல்லி முதலாகிய மலைகளையுடைய நாட்டையுடையவன் என்று கருதப் படுமென்வுணர்க. இக் கொல்லிமலையைத் தலைமையாகவுடையன என்பதனாற் சேரன் மேல்கடலோரத்து நாட்டை மட்டும் உடைய னாகாது அம்மேல்கடற்குக்கிழக்கே நெடுந்தூரம்விரிந்த அகநா டுடைய னென்பது அதிகமாக வலியுறுதல்காண்க. சேரன் தனக்குரிய குடகடலோரத்துப் பல உயர்ந்தமலைகளை உடை யனாயினும் அவற்றாலிவன் சிறவாமல் இக் கொல்லிமலையானே பெயர்சிறத்தலின் காரணம் ஆராயப்படும். இதுபோலவே மேல் கடற்பக்கத்துச் சுள்ளியம்பேரியாறு முதலிய பெரியயாறுகளை இவனுடையனாயினும் இவன் அவற்றாற் பெயர்சிறவாமற் பொரு நைத்துறைவன் என ஆன்பொருநையானே பெயர் சிறத் தலின்காரணமும் ஆராயப்படும். இவற்றின்காரணத்தை உள்ளவாறு ராயின் சேரர் அரசிருக்கையினையுடைய தலைநகரைத் தன்பாற் கொண்ட நாட்டகத்து இவையுளவாதற் சிறப்புப்பற்றியன்றி வேறன்றென உணரலாகும். இது மேல் யான்கூறும் பிரமாணங்கள் பலவானும் வலியுறும்.

மற்றுக் கொல்லிமலை ஓரியினுடையதென்றும் அவ்வோரியைக் காரியென்னும் முள்ளூர்மன்னன் சேரனுக்குத்துணையாய் நின்று கொன்று அவன் கொல்லிமலையைச் சேரனுக்குக் கொடுத்தானென் றும் அகநானூற்றின்கண்—

“ முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
லோரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி” (209)

என வருதலாற் பெறப்படுமாலெனிற் கூறுவல்—பாண்டியருடைய பொதியமலையில் ஆய் என்னும் ஒருவன் இருந்தரசாண்டது,

" கழறொடி யாஅய் மழைதவழ் பொதியி
லாடுமகள்குறுகினல்லது
பீடுகெழுமன்னர்குறுகலோவரிதே" (புறம்-128)

என்பதனானறியப்படும். இவ்வாயென்னும்வள்ளல் பீடுகெழுமன்னரும் குறுகரியமலையில் இப்பொதியமலையில் இடைக்கண்ணுண்டாகி விளங்கினானும் அப்பொதியமலையை என்ஞான்றுமுடைய பாண்டியர்க்கு அதனுரிமைதப்பாதவாறுபோல ஓரியென்னும்வள்ளல் கொல்லிமலையில் வலியுடையனா யிடையிலுண்டாகிச் சேரக்கடங்காமை காட்டினானேனும் அக்கொல்லிமலையை என்ஞான்றுமுடைய சேரர்க்கும் அதனுரிமை தப்பாதென்றுணர்க. இவ்வுரிமையானே யன்றே தனக்குத்துணையாகிய காரியை ஓரிமேலேவி அவனைக் கொல்வித்துச் சேரன் அக்கொல்லிமலையைக் கொண்டானென்று தெரிக. காரிக்கும் ஓரிக்குமுள்ள பகைமை காரணமாகவே இப் போர் நிகழ்ந்ததாயின் அப்போர்வென்றியின் பயனை அக்காரியே பெறுவானாவன். அங்ஙனமன்மையானும், கொல்லிமலையுரிமை சேரற்கே என்ஞான்றுமுண்மையானும் அதனைக் காரி சேரற்கீத்தானெனத் துணிக. சேரனுரிமைக்கு இடையூறு நீக்கித்தந்த அத்துணையேயல்லது வேறன்றென்றுகொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் பாண்டியன் பொதியப்பொருப்பனாகான்: " நீர்நிகழ் சிலம்பினோரியோனே " (பதிற்) எனச் சேரனைக்கூறுதலாற் சோழன் நேரிப்பனாகான் என்றுகொள்ளவும் நேருமென்க. இதனால் இம்மலைகள் இடையிடையே போர்க்கிடனாகவும், பிறராட்சிக்கிடனாகவும் கேட்கப்படினும் இம்மூன்றுமலைகளையும் என்றுமுரிமையாகவுடையார் அவ்வம்மலையுடைய நாட்டுக்குரிய முடிவேந்தரன்றிப் பிறரில்லையெனத் தெற்றெனவுணர்க.

இனிக் குடநாடு, குட்டநாடு, பூழிநாடு, மலைநாடு என இவை குடபுல ஆட்சியையுடைய சேரரைச்சேர்ந்தனவென முன்னரே யுரைத்தேன். அவற்றுள் மலைநாடு யாதாகுமென்று ஆராய்வோமாக. கொடுந்தமிழ்நாடாகிய இம்மலைநாடு செந்தமிழ் நிலத்தைச் சூழ நிறுவப்பட்ட நாடுகளின் முறையிற் குடநாட்டுக்கு அப்பால் பலநாடுகளுக்குப்பின் வைக்கப்பட்டவாற்றான் இம்மலைநாடு கடலோரமாக இல்லாமல் நெடுந்தூரந்தள்ளி அகநாட்டே உளதாதல் தெளியப்பட்டது. இதனையே நச்சினார்க்கினியர் மலையமானாடு என உரைத்தார். தென்பாண்டிநாடு என்பது தென்திசைக்கணுள்ள

பாண்டியனாடு என மூவேந்தருளொருவன் பெயரேகொண்டு விளங்கியதுபோல, இம்மலைநாடும் மலையமானாகிய சேரனாடு என்பதற்கு மலையமானாடு என வழங்கப்பட்டதாகும். மலையமான் சேரனென்பது நிகண்டுகள் பலவற்றினுங்கண்டது. நச்சினார்க்கினியர் தொல்காப்பியவெழுத்ததிகாரத்துக் 'கிளந்தவல்ல செய்யுளுட்டிரிநவும்' என்னும் அதிகாரப்புறனடைச் சூத்திரவுரைக்கண் தாம் செய்யுளியலுட் கூறிய நான்குமண்டலங்களையுமே கருதிச் சோழநாடு பாண்டிநாடு தொண்டைநாடு மலைநாடு என முடிந்தவற்றிற்கு இலக்கணமமைக்குமிடத்துச் சோழன், பாண்டியன், தொண்டைமான், மலையமான் என நான்குமண்டலத்தலைவர் பெயரையுங் கூறுதலானே இதனுண்மையுணரப்படும். மற்றுச் செய்யுளியலுள் மலைமண்டலத்தைக் கூறினாரெனின் ஈண்டு ஈற்றெழுத்துச் சிலகெட்டு முடிதலும், அன் கெட்டு முடிதலும், முதலெழுத்தொழிந்த பலவுங் கெட்டு முடிதலும் பற்றி இவை முறையே நிறுவப்பட்டனவென்க. இப்பழைமையான நாடுகள் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவருதலையுடைய வண்புகழ்மூவர் பெயராற் சிறப்பதன்றி இவராட்சிக்குரிய நாடுகளில் இடையிடையே தோன்றிமறையுஞ் சிற்றரசர்பெயராற் பண்டேசிறந்ததென்பது சிறிதும் பொருந்தாதென்க. சேரனே மலையமான், மலையன், மலைநாடன் எனப் பெயர்சிறந்தவனென்பது நன்றுணர்க. "சேரன்பொறையன் மலையன்திறம்பாடி" எனச் சிலப்பதிகாரத்து வருதலான் மலையன் என்பதும் சேரன்பெயரேயாதல் தெளிந்துகொள்க. குடநாடும், குட்டநாடும், பூழிநாடும், சேரனாகிய மலையமானுடையனவேனும், இம்மலைநாடு மட்டும் மலையமானாடென அவனாற் பெயர் சிறந்தது, அவன் அந்நாட்டேவதிகின்றதன்மையானென்று எளிதினுய்த்துணரலாம். இளம்பூரணவடிகளும், சேனாவரையரும் எண்ணிய கொடுந்தமிழ் நாடுகளுள் மலைநாடு எனக்குறித்த நிலத்தையன்றே நச்சினார்க்கினியர் மலையமானாடு என்றெழுதினார்; மலைநாடன் என்பது சேரனையே குறிப்பதென்பது பலருமறிவர். அங்ஙனமாயின் மலைநாடு சேரனுடையதன்றி வேறொருவருடையதாகாது. இதனாலும் இந்நாடுடைய மலையமான் சேரனே எனத்தெளிக. மற்று, மேல்கடற்பக்கத்துள்ள மலைகளையுடைய நிலம் என்னை காரணத்தால் இப்பெயரை அக்காலத்துப் பெற்றதில்லையெனிற் கூறுவல்: மேல்கடலோரத்துள்ள நிலங்கள் மக்கள்குடியேறி நாடாய தன்மையான் அவை குடநாடும், குட்டநாடும் எனப்பெயர் சிறந்தன. அவற்றை யடுத்துள்ள

நிலங்கள் மலையடர்ந்தனவேயன்றி அவை மக்கள் குடியேறிய நாடாதற்றன்மையில்லாத படியால் மலைநாடென்று அக்காலத்து வழக்குப் பெறுதாயிற்று. மலைநாடு என்பது மலைகளுடையதும், மக்கள் குடியேறிய நாடாகியதுமாய நிலையேயென்பது தெள்ளிது. அக்காலத்து அவை வாசயோக்கியதைப் பெருமையால் அங்ஙனம் பெற்ற மலையிலமே மலைநாடென வழக்குப் பெற்றதென்று தெளிந்துகொள்க. இவற்றைக் கொடுந்தமிழ் நாடுகளெனக் கூறுதலானும் அத்தமிழை வழங்குமக்கள் நிறைந்தநாடாதல் துணியப்படும். பிற்காலத்து இப் பழைய பெயர்களெல்லாமாறி மலைகளதிகமாக விருத்தல் காரணமாக மேல்கடலோரத்து நாட்டை மலைநாடு என்று வழங்கத்தலைப்பட்டனர் என்று தெரிந்துகொள்க. இதனால் இது கடன் மலைநாடு எனவழங்கப்படுமென்க. சாசனங்களும் இவ்வாறு வழங்கும். இங்ஙனங் கொள்ளாக்காற் பழையோர் எத்துணையோ அறிவொடு பகுத்துக்காட்டியதற்குக் குற்றங் கூறுதலாகவே முடியுமென்க.

இனி ஈண்டுக்கூறிய மலைநாட்டை, மலையமான் என்னும்பெயர் காரி என்பவனுக்கும் வழங்குதல்பற்றி, அக்காரிநாடெனக் கூறலாகாதோ வெனின் அங்ஙனங் கூறலாகாதென்க. என்னையெனிற் கூறுவேன். காரி என்னும் வள்ளல் முள்ளூர்மலையில் இடையிலுண்டாகிய ஓர்சிற்றரசன். அவன் சேரற்கு உறுதுணையாய்நின்று சேரனுக்கு அடங்காத கொல்லிமலைஓரியைக் கொன்றவன். இவன் காலத்துக்கு எத்துணையோ முந்தியே பகுப்புடைய தமிழ்நாடுகளிலொன்று இவன் பெயர்கொண்டதென்பது பொருந்துவதாகாது. அன்றியும் அம் மலையமான் என்னும்பெயர் அவன் சேரனுக்குத் துணையாயகாரணத்தான் அவனுக்குப் பட்டமாகச் சேரனாற்றரப் பட்டதாமென்று கொள்வதல்லது அவனியற்பெயரென்றலுமாகாது.

இனிக் காரியாகிய மலையமான் முள்ளூர்மலையையும், திருக்கோவலூரையும் உடையவனுவன் என்று பழைய நூல்களானறியப்படும். இவன் சேரனாகிய மலையமான் மகளை மணந்து அவனால் நாடும் பெயரும் பெற்றானென்று நூல் கூறும். இவன் தொண்டைநாட்டவனாகவிருந்து சேரனொடு சம்பந்தஞ்செய்தகாரணத்தாற் றொண்டைநாட்டார் சேரற்கு மைத்துனக்கேண்மை பாராட்டு முறைமையுடையராயினரென்று ஊகித்தற்கு மிடனுண்டு. இதனைப் பெரிய புராணத்தில்,

"சேனு லாவுசீர்ச் சேரனர் திருமலைநாட்டு
வாணி லாவுபூண் வயவர்கண் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு"

என்பதுகொண்டு காண்க. அண்ணாமலைச்சதகத்தில்

வந்துலகு புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழின்
மலையமான் றந்த பதுமா
வதிமா திணைப்புணர்ந் தரிதாய்ப் பயந்தவொரு
மைந்தனர சிங்க முனையற்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன் னனு
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்க முனையர்
சந்ததியில் வந்தவர்கண் மலையமா னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசை யெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர் கண்டா
யந்தநர சிங்கமுனை யரையர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்த ராய
ரண்ணவி னிற்றுதிசெய் யுண்ணமு லைக்குரிய
வண்ணம லைத்தே வனே.

என வருதலா னிதனுண்மை எளிதிலறியப்படும். பதுமாவதி சேரன் மகள் என்று இந்நூலுட் கூறுதலானும் அச்சேரவம்மிசியரோயாதல் பற்றி அவர்பெயரையெல்லாம் புனைந்தாராவர். சேக்கிழார், மலாடர் கோமான் என இவர் தம்பியாரைக்கூறுதலான் மலாடர் என்னும் பெயர் பிற்காலத்துக் குடிப்பெயராயிற்றென்று எளிதிலுகிக்கத் தகும். இக்கதையெல்லாம் சேரனை மலையமானென நிகண்டுக ளெல்லாங் கூறியதனையே வற்புறுத்துதல் நன்று கண்டுகொள்க.

இஃது இன்னும் ஒருவகையானும் ஆராயப்படும். அகப்பாட்டில்

"அருவி பாய்ந்த கருவிரன் மந்தி
செவ்வேர்ப் பலவின் பழம்புனை யாகச்
சாரற் பேரூர் முன்றுறை யிழிதரும்

வறனுற லறியாச் சோலை
விறன்மலைநாடன்" (382)

எனக் கூறுவதன்கண் பேரூர்முன்றுறையையுடையது மலைநாடென்று கொள்ளவைத்தார். இப்பேரூர் காஞ்சிவாய்ப்பேரூர் எனப்படுவதாகும். அது காஞ்சியாற்றின் முன்றுறையுடையதாதலுங்காண்க. இது கொங்குநாட்டுள்ள தலம். குடசிதம்பரம் எனப்படுவதுமிதுவே. மலையாளத்தார் பிதுர்சிரார்த்தம் முதலியவற்றை இத்தலத்திலே வந்து நடத்துதலை இன்றைக்கும் காணலாம். இவ்வூருடையநாடு மலைநாடெனலால் கொடுந்தமிழ்நாடாகிய மலைநாடு இப்பக்கத்ததென்று தெளிதற்கு இதுவுமோர் துணையாதல்காண்க. இக்கருத்தானன்றே "மின்னார்குடுமி நெடுவெற்பகங் கொங்கில்வீழ் பனிநோய்" என நம்பியாண்டார் நம்பிகள் கூறினர்.

இனி முருகக்கடவுள் வள்ளியெனப்பெயரிய குறவர் திருமகளை வேட்டது தொண்டைநாட்டு மேற்பாடியூர்ப்புறத்துள்ள வள்ளிமலையின்கணென்பது கந்தபுராணத்துக் கண்டது. இங்ஙனம் அப்புராணங் கூறுநிற்க, அருணகிரிநாதர் "சேரர் மலைநாட்டில் வாரமுடன்வேட்ட சீலிகுறவாட்டி மணவாளா" எனப்பாடுதலான் இவ் வள்ளியைவேட்டது சேரர் மலைநாட்டின்கண் எனக்கொண்டனரென்று தெரியலாம். அவர் 'கொல்லிமிசை வாழ்கின்ற வல்லிபுனமேசென்று" எனவும் "வல்லிபட்டதுன்னு கொல்லிமலை நாடா" எனவும் பாடுதலால் இவ்வல்லி யிருந்தபுனம் கொல்லிமலையின்கண் உள்ளதென்று கொண்டாராவர். இதனையே மலைநாடென்று அவர் கருதினர் என்பது "பருவமலைநாட்டின் மருவு கிளியோட்டு பழைய குறவாட்டி மணவாளா" என்பதனுலறியலாம். இவர் கருத்தே பண்டைத் தமிழ் வழக்கொடு பொருந்துவதென்பது திவாகரத்தும் பிங்கலத்தும் "வல்லியம் பொருப்பே கொல்லிமலையே" எனவும் "வல்லியம் பொருப்பே கொல்லிமலையாகும்" எனவும் வருதலான் இனிது தெளியலாம். வல்லீ—வள்ளிக்கு வடமொழிப்பெயர். வல்லியம் புலிக்குப் பெயரென்றுகொண்டு வல்லியம் பொருப்பாயிற்றெனவிதன்டை கூறின் வல்லியப்பொருப்பு என வருவதன்றி வல்லியம் பொருப்பென வருவதின்மையானும் அதற்கோர் மேற்கோளின்மையானும் சிறிதும் பொருந்தாதென்று நள்ளுக.

இனி இளம்பூரணவடிகளும், சேனாவரையரும் மலைநாடென வழங்கியதை நச்சினார்க்கினியர் மலையமானாடென வழங்கிக்காட்டியது குடபுலத்துக் குடநாடு, குட்டநாடு இவற்றின்பக்கத்துள்ள பெரியமலைகளையுடைய நாடு என்று மயங்காமைப்பொருட்டென்றும், சேரனாகிய மலையமானுடைய நாடு என்று தெளிதற்பொருட்டென்றும் கூறினும் அமையும். "குடபுலங்காவலர் மருமான் குட்டுவன்" (சிறுபாண்) என்புழி அவர் குடபுலத்தொடு குட்டநாடுமுடையன் எனக்கருதியது கண்டுகொள்க.

இனி இச்சேரன் குடபுலத்து ஓர் பகுதியாகிய இம்மலைநாடு, மேற் கூறியவாற்றால் அகநாட்டிடத்தது என்று தெளியப்படுமாயினும் அதனெல்லை உணரப்பட்டிலதாலெனிற் கூறுவேன், சேரன் பெயர்சிறந்தது "வானவன் கொல்லிக்குடவரை" எனப்பட்ட கொல்லிமலையானே யென்பது முன்னேகூறினேன். அவன் பெயர் சிறந்த கொல்லிமலை ஒரு புறனும், மலையமானென்று அவன்பெயர் சிறந்த மலைநாடு ஒருபுறனுமாமென்று சொல்லுதல் பொருத்தமுடைத்தாகாது. எங்கு அவனுக்குச் சிறந்தமலையுளது அங்குத்தான் அவன் பெயர்சிறந்த மலைநாடும் உளதாகும். பதிற்றுப்பத்துரைகாரரும் "கொல்லிக்கூற்றத்து நீர்கூர்மீமிசை" (80–பதி.) என்புழிக் கொல்லிமலையைச்சூழ்ந்த மலைகளையுடைய நாடு என விளங்கவுரைத்தார். அவர் கொல்லிமலையைச் சூழ்ந்தநாடு என்னாது கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாடு எனத் தெளிவித்தலையுங் காண்க. இதனாற் கொல்லிமலையைத் தலைமையாகக் கொண்டு அதனைச் சூழப் பலமலைகளையுடையதோர் நாடாதலின் மலைநாடெனப்பட்டதென்று உய்த்துணரலாம். இக்கொல்லிமலை கொங்கு மண்டலத்துளதாதலின் இம்மலைநாடும் அம்மண்டலத்தினோர் பகுதியா யடங்குதலறியலாம். "கள்ளார் கமழ் கொல்லி அறைப்பள்ளி" என்னுந் தேவாரத்தால் அறைப்பள்ளிக் கோயிலையுடையதே கொல்லிமலை என அறியலாம். இது சேரனுக்குரிய நாடுகள் சிலவற்றைத் தன்னகத்துக் கொண்டதாகும். திருவாவினன்குடியைச் சேரர் கொங்குநாட்டகத்து வைத்து அருணகிரிநாதர் வழங்கியவாற்றான் இக்கொங்குமண்டலத்தின் பெருக்கம் உணரப்படும், அவர்

"ஆதி யந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன் னாடதி
லாவி நன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே"

னவுரைத்தது அறியத்தகும். அவர் இங்குக் கொடுங்கோளூரிலிருந்தரசாண்ட சேரமான்பெருமாளாயனாருக்குக் கொங்குநாடுரியதென்றுபாடுதல் காண்க. இதற்குப் பொருந்தவே அவிநாசிப் புராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் சிதம்பர தரிசனத்திற்கு எய்துகின்றவர்

"மங்கலமா மலைநாட்டு வளச்செறிவுங் கண்டுநெடுங்
கொங்கணைந்தாம் பிரவதியின் குளிர்கரையின் புடைசார்ந்த
மங்குறவழ் மதின்மூதூர் வஞ்சிவளம் பதிபுக்கார்"

என்றும்,

"நம்பதியுந் திருநாடு நலனேயென் றிதங்கேட்டுத்
தம்பமெனுஞ் செங்கோன்மை தளராமை நிலைநிறுவி
யும்பரிறை யெனவிருந்தா ருதியர்குல தீபகனார்"

என்றும் பாடினார். இதனாற் பண்டைச் சேரர் கொங்குநாட்டின் பரப்பு எளிதிலறியப்படும். இவ்வாவிநன்குடிக்கும் கொல்லிமலைக்குமிடையே தான் காவிரி, ஆன்பொருநை, குடவனாறு எனப் பெயரிய ஆறுகள் பலவுள்ளன என்றுணர்க. குடவனாறு என்பது மேற்றிசையுடையவனதாறு என்று பொருள்படுவதாம். ஆன்பொருநை காவிரியுடன் கூடும் யாறென்று பதிற்றுப்பத்து "மாமலைமுழக்கின்" என்னும் பாட்டுரையானுணர்க. இங்ஙனம் சேரர் குடபுலத்துள்ளதும், சேரர்க்குச் சிறந்தகுடவரையாகிய கொல்லியைத் தன்கணுடையதும், சேரர் கொடுந்தமிழ் மலைநாட்டைத் தன்னுட்கொண்டதும், சேரர்க்குரிய ஆன் பொருநை, குடவனாறு முதலிய யாறுகளையுடையதும், மலைநாட்டுள்ள தெனப்பட்ட பேரூரையுடையதும், பாண்டிநாடுவரை பரந்த நிலனுடையதுமாகிய சேரர் கொங்குநாடு சோணாட்டெல்லையிலுள்ள தென்பது எல்லார்க்கு மொப்பதாகும். சேக்கிழார் "கொங்கர்நாடு கடந்தருளிப் பொன்னாட்டவரு மணைந்தாடும் பொன்னிநீர்நாட் டிடைப்போவார்" எனக் கூறுதலானும் இஃதறியப்படும். இதனாற் கொங்குநாடுஞ் சோழர்நாடும்அடுத்துள்ளவாறு புலப்படும்.

மற்றுச் சேக்கிழார் "கொங்கர்நாடு கடந்துபோய்க் குலவுமலைநாட்டெல்லையுற" எனக்கூறியதனாற் சேரர்மலைநாட்டைக் கொங்கு

நாட்டுக்கு அப்பால்வைத்தாரெனிற் கூறுவேன். சேக்கிழார் ஈண்டுக் கூறுவது சேரமான்பெருமாணாயனார் காலத்துச் சேரரிருந்த நாட்டைக் குறிப்பதன்றி வேறுகொடுந்தமிழ்நாடு என்ற மலைநாட்டைக் குறிப்ப தென்று கொள்ளுதல் பொருந்தாது. அவர் மலைநாடென்று கொண்டது சேரமான்பெருமாணாயனார் அரசுபுரிந்த கொடுங்கோளூர்ப்பக்கத்துக் கடன்மலை நாட்டையேயென்பது அவர்பாடிய பெரியபுராணத்தா னறியப்படும். அது உரையாசிரியர் முதலிய பல்லோர் கொள்கைப்படி குடநாடு, குட்டநாடு என இரண்டிலொன்றுவதன்றி இவ்விரண்டிற்கும் அப்பாற் பலகொடுந்தமிழ்நாடுகள் கடந்து நிறுவப்படும் மலைநாடாதல் கூடாதென்க. சேரமான் பெருமாணாயனார் காலத்துக் கொங்குநாடு சேரர் ஆட்சிக்குரிய தாயினும் அவராங்கில்லாமைபற்றிக் கொங்குநாட்டைச் சேரர் மலை மண்டலத்தினின்று வேறுபிரித்தாரெனக் கொள்ளத்தகும். இப் பிற்கால நிலைமையைத் துணையாக்கொண்டு சங்ககாலத்துள்ள தொன்றைத் துணிதலாகாதென்க.

இனிச் சேரமான்பெருமாணாயனார் காலத்துக்கு முன்னே சேரர் தம் வலிகுன்றிச் சோழர்க்குத் திறையளக்கின்ற சிறுநிலையையெய்தினா ரென்பது அச் சேக்கிழார் பெரியபுராணத்துப் புகழ்ச்சோழநாயனார் வரலாற்றான் அறியப்படுவது. வலிகுன்றிய சேரர் பின்னே* கொங்குநாட்டுத் தலைநகரை விட்டுத் தங்கட்குரிய கடன்மலை நாடு குட்டநாடுகளிலே சென்று ஒதுங்கினாரென்று பிற்காலநிலைமைக்குத் தகத் துணியப்படும். இதனாற் சங்ககாலத்துக்குப் பின்னே சோழர் வலியிலராயினாரென்றும், சங்ககாலத்துக்குப் பின்னே சோழராற் சேரர் கொங்கு நாட்டைவிட்டுத் தங் குடநாட்டொதுங்கினராகக் கூறுதல் பொருந்தாதென்றுங் கருதிப் பிறர் கூறுவன பொருந்தாமை காண்க. சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவரான சேரமான பெருமாணாயனார்க்குச் சுந்தரமூர்த்திநாயனாராற் பாடப்பட்ட புகழ்ச்சோழநாயனார் முந்தியவ ரென்பது தெற்றெனவிளங்கும். அப் புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று கொங்கரொடு குடபுல மன்னர் திறைகண்டவாற்றாற் கொங்கரொடு குடபுலமன்னர்வலிகுன்றித் தளர்ந்தவாறறியப்படும் என்க. இதனானும் சங்ககாலத்துச் சேரர் தலைமையும், சேரமான்பெருமாணாயனார் காலத்துக்கு முன்னே

*சேரர் தங்கணாட்டகத்தேயிருந்து பிறர்க்குத் திறையளக்கின்ற சிறுமையை நினைந்து தங்கள் நாட்டை விட்டார் என்றுகொள்க.

சேரர் சோழர்க்குத திறையிடுவாராய்ப்போந்த நிலைமையும் எளிதிலுய்த் துணரப்படு மென்க. புகழ்ச்சோழர்க்குத் திறையுரிமை மட்டிற் கூறியவாற்றுற் கொங்கு நாடு சேரர்க்கே அக்காலத்து முரியதாத லுணரலாம். பிற்காலத்துங் கொங்குநாடு குடபுலம் என்பது மறக்கப்பட்டில தென்பது

"சென்றசென்றகுடபுலத்துச்சிவனுரடியார்பதிகடொறு
நன்றுமகிழ்வுற்றின்புற்று நலஞ்சேர்தலமுங்கானகமுந்
துன்றுமணிநீர்க்கான்யாறுந் துறுகற்சுரமுங்கடந்தருளிக்
குன்றவளநாட்டகம்புகுந்தார்குலவுமடியேனகப்புகுந்தார்"

என வெள்ளானைச்சருக்கத்துச் சேக்கிழார் பாடுதலானும் அறியப் படும். இதன்கட் குடபுலத்துப்பதிகடொறு மின்புற்றுத் தலமுங் கானகமுங் கான்யாறுஞ் சுரமுங்கடந்து அப்பாற் குன்றவள நாட்ட கம் புகுந்தாரென்றுகூறுதல் காண்க. கொங்குநாடு சேரருடைய தென்பது இதன் பின்னும் மறக்கப்பட்டிலாமை முன்னே காட்டப் பட்ட "சேரர்கொங்கு வைகாவூர் நன்னடதில்" என்ற அருணகிரி நாதர் திருப்புகழானறியப் பட்டதாகும். இதனுன் முற்காலத்தும் பிற்காலத்துங் கொங்கு நாட்டைச் சேரர்க்கேயுரிமையாக வைத்துப் பாடினருளரென்ப தறியப்படும்.

இக்கொங்குநாட்டைப் பாண்டியனொருவன் வென்று கொண் டானென்பது "வாடாப்பூவிற் கொங்கரோட்டி, நாடுபலதந்த பசும் பூட்பாண்டியன்" (அகம்—253) எனவருதலான் விளங்கும். சோழனொ ருவன் கொங்கரைப் போரிற் புறங்கண்டான் என்று "கொங்கு புறம்பெற்ற கொற்றவேந்தே" (புறம்-373) என அவனைப்பாடுதலான் அறியலாம். ஈண்டுப் புறம்பெற்ற கொற்ற மென்பது எதிர்ந்தார் புறக்கொடையைப் பெற்றதனாலாகிய வென்றி என்றவாறு. இதனை யிங்ஙன முணராமையான் வேறுவேறு கூறுவாருமுளர். இப்பாண் டியரும் சோழரும் சேரரை வென்றுகொண்ட காலத்து அவர் நாடு வென்றவர்க்குத் திறையளக்குஞ் சிறுமையை எய்தியதென்று கரு துவதல்லது பழைய பகுப்புமுறையினின்றும் மாறிப் பாண்டி நாடும், சோணாடுமாக மாறிற்றென்று துணிதல் பொருந்தாது. அங்ஙனந் துணியின் "காவிரிவைப்பிற் புகார்ச் செல்வ" எனச் சேர னைக் கூறுதலாற் சோணாடு சேரநாடாயிற்றென்றும், செங்குட்டுவன் காலத்துத் தமிழ்நாடுமுழுதுஞ் சேரநாடாயிற்றென்றும் அதற்கு

முன்னெல்லாம் வழங்கிய நாடுகளின்பாகுபாடு அடியோடு ஒழிந்து போயிற்றென்றும் கொள்ளநேரும். இது தமிழ்நாட்டு வழக்கன்றென்பது பண்டைச் செய்திகளை நுணுகிநோக்குவார்க்குப் புலனாகும். முற்காலத்துத் தமிழ்வேந்தர் மூவருள் ஒருவர் மற்றை இருவரை வென்றவிடத்து வென்றவர் தோற்றவர்பாற் றிறைகொண்டிருப்பர். அங்ஙனமன்றாயின், வென்றவர் வென்றுகொண்ட நாட்டின் தொன்மைமுடியைத் தாம்புனைந்து அந்நாட்டு முன்னிகழ்ந்த முறைமையே முறையாக அரசாள்வர். இங்ஙனமல்லது பழையபாகுபாடனைத்தையும் மாற்றிப் பாண்டிநாட்டைச் சோணாடாக்கினனென்றும், சோணாட்டைப் பாண்டிநாடாக்கினனென்றும், இவ்விரண்டையுஞ் சேரநாடாக்கினனென்றுந் துணிதல் பொருந்தாது. செங்குட்டுவன் மற்றை இருவேந்தரினும் மிக்கு விளங்கிய காலத்து மூவர்பொறியையும் அவனிட்டானென்பது சிலப்பதிகாரத்துக்காண்டலானும், உறையூரையாண்ட சோழன் இருவரையும் வென்றபோது மூன்று முடியையும் புனைந்து மும்முடிச் சோழன் என விளங்கினனென்பது தேவாரத்தான் அறியக்கிடத்தலானும், வென்றவேந்தர் வென்றுகொண்ட நாட்டின் பாகுபாடும், அரசியலும் அழியாமல் அவ்வந்நாட்டவர்க்கு அவ்வவ்வேந்தாய் விளங்கி நாடாண்டார் என்றே துணியலாம். இக்காலத்தும், ஒவ்வோர் நாட்டை வென்றவேந்தர் அவ்வந் நாட்டின் பாகுபாட்டை அழித்தற்கியலாமல் அவ்வவ்வெல்லையிலே அவ்வந்நாட்டைவைத்து அந்நாட்டு வழக்கங்கட்கியைய அரசாளுதலையுங் கண்டுகொள்க. இவ்வுண்மையுணர்ந்தன்றே பிற்காலக்கவிகளும் பாண்டியரும், சோழரும் கொங்கு வென்றதையறிந்துவைத்தும் 'சேரர்கொங்கு' என்றேபாடுவாராயினரெனத்தெளிக. அவ்வக்காலத்துவென்ற அரசனைச் சிறப்பித்து மூன்று நாட்டையுமுடையானாக ஒருவனைப் புகழ்ந்ததன்றிப் பாண்டியர் புகார்நாடு, சோழர்மதுரைநாடு, சேரர்கொற்கை எனமாறியாண்டும் பலர்மேல்வைத்து வழங்காமையானும் இதனுண்மைநன்றுதெளியப்படும். மிகவும் அழகிய இம் முறைகெட்டு நிலைதடுமாறியது இறப்பப்பிற்காலத்தின் கண்ணேயாமென்று ஆராய்ந்து கொள்க. யான் இத்துணையுங்கூறியது 'கொங்குநாடு' எஞ்ஞான்றும் சேரர் கொங்கு என வழங்கப்படுமேயன்றிப் பாண்டியர்கொங்கு சோழர் கொங்கு என எந்நூலுளும் வழக்குப்படாதென்பதை யுணர்த்தவேயெனவறிக. சேரர்கொங்கென்னும் வழக்கன்றிப் பாண்டியர்கொங்கு,

சோழர் கொங்கென வழக்கின்மை பன்னாளும் வல்லார் வாய்க்கேட்டுணர்க. பாண்டியருள்ளும், சோழருள்ளும் ஓரொருவேந்தன் வென்றமை குறித்தற்கண் "குனிவார்சிலையொன்றி னால் வென்ற கோன் கொங்க நாட்ட கொல்லை" எனப் பாண்டியனையுங் 'கொங்கர்' என ஒரு சோழனையுங் கூறுதலெல்லாம் சேரனைக் "காவிரி மண்டிய சேய்விரிவனப்பிற் புகார்ச்செல்வ" (பதிற்–73) என்றதனோடொக்கு மன்றிப் பிறிதாகாதென்றுய்த்துணர்ந்துகொள்க.

இத்துணையுங் கூறியவாற்றாற் சங்ககாலத்துக் கொங்கு சேரருடையதன்றிப் பிறருடையதன்மை நன்று தெரியலாம். அங்ஙனமாயின் அக்கொங்குநாட்டூரெல்லாம் அந்நாடுடைய சேரரையேசேர்ந்தன என்பது யான் கூறவேண்டுவதன்று: அக்கொங்குநாட்டுப்பல்லூருட் கருவூர் எனப்பெயரியதோரூருண்மை பலநூல்களானறியப்படும். இக்காலத்தும் அக்கருவூர் அப்பன்னூல் வழக்கிற்குமியையக் கொங்குநாட்டதென்றே தமிழுலகாற் கருதப்படும். இவ்வூர் நூலிற் கூறியாங்கு காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநையின் றுறையையுடையதாகும். சங்கப்புலவரானும், ஆளுடையபிள்ளையாரானும் பாடப்பட்ட திருக்கோயிலையுடையதாகும். கருவூர்த்தேவராற் பாடப்பட்ட திருவிசைப்பாப்பெற்றதாகும். அருணகிரிநாதராற் பாடப்பட்ட திருப்புகழுடையதாகும்: இவ்வூரை உமாபதிசிவாசாரியர் கொங்குநாட்டுத்திருப்பதிகளுளொன்றாக உரைத்தார். இது சேரர் கொங்குநாட்டுள்ள காரணத்தாற் சேரர்கருவூரென்பது தெள்ளிது. மற்றிக்கருவூரைச் சேக்கிழார்

"தங்கள்குலமரபின்முதற் றனிநகராங் கருவூர்"

எனவும்

"மன்னிய வநபாயன்சீர் மரபின்மா நகரமாகுந்
தொன்னெடுங் கருவூரென்ப சுடர்மணி வீதிமூதூர்"

எனவும் கூறுமாற்றாற் சோழருடையதெனக்கருதினாரென்று நினைக்கப்படுமாலெனிற் கூறுவேன். சங்கநூல்களிலேனும், சேக்கிழார்பெரிய புராணத்தேனும், அதற்குப்பிந்திய நூல்களிலேனும், இரண்டு கருவூர் கூறப்படவேயில்லை. சங்கநூல், கருவூரை

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க் கருவூர்" (அகம்-93)

னதத் தெளிவாகச் சோனுடையதென்று கூறிற்று. யாப்பருங்கலக் காரிகை உரைகாரரும்* கருவூரைச் சோணுட்டுக்கு மேற்கே யுளதாகக் காட்டினர். தேவாரத்தலமுறைவகுத்தபெரியாரும் கருவூரைக் கொங்குநாட்டேவைத்திட்டார். சேக்கிழாரும் இக்கொங்கு நாட்டுக்கருவூரையேகருதிக் கூறுகின்றாரென்பது அவர் "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகாணத்.........கருவூரின்வந்தணைந்தார்" எனக் கூறுதலான் நன்குணரப்படும். அவர் புகழ்ச் சோழநாயனர் கருவூர்க்குப் போந்தது கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகாணவேண்டியே என்று மிகவுநன்றாகத்தெளிவித்தல் காண்க. அவர் சோணுட்டூர்கள் பலவற்றைக் கூறுமிடத்தெல்லாம் அவ்வூர்கள் சோணுட்டுள்ளனவெனத்தெரியுமாறு அந்நாட்டுவருணனை கூறிச்செல்லுதலும், இக்கருவூரைச்சோணுட்டதென அங்ஙனங்கூறுமையும் நன்றுநோக்கிக் கொள்க. இப்புகழ்ச் சோழநாயனர்புராணத்தே இப்புகழ்ச்சோழர் உறையூரிலரசுபுரிந்திருந்தார் என்றும், அவ்வுறையூர் சோணுட்டுள்ளதென்றும் விளங்கப்பாடுதலுங் காண்க. அவர் உறையூரிலரசுபுரியுநாளிற் கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகாணவேண்டிக் கருவூர்வந்தணைந்தார்எனவே கூறினர். பிறர்நினைக்குமாறுநோக்கின் குடபுலம் மேலைக்கடலோரத்து நாடாகும்: இக்கருவூர்க்கும், அக்குடபுலத்துக்கும் நெடுந்தூரமல்லாமல் நெறியருமையுமுளது. அக்கடலோரத்துக் குடபுலமன்னர் திறைகாண இக்கருவூர்க்குச் சேறலேனே? பிறர் கருத்துப்படி கொங்குநாடுதான் சேரர்க்கில்லாத்தனிநாடாயிற்றே? ஆண்டுள்ளகருவூரிற் குடபுலக்கோமன்னர் திறைகாண்பதென்னே? கருவூர்க்கும் புகழ்ச்சோழர் அரசுபுரியும் உறையூர்க்கும் நாற்காததூரந்தானே. அவ்வுறையூரிலிருந்தே சோழர் இருவர் திறையுங் காண்டலிலுற்ற தடை யாது? இவையெல்லாம் ஆராயப்புகின் அப்பிறர்கூறுவது பொருந்தாதென்பது தானே புலனுகும். சேக்கிழார் கொங்குநாட்டைக் குடபுலமென்று தொன்னூல் வழக்கிற்கியையவே கருதினரென்பது வெள்ளானைச்சருக்கத்துச் சுந்தரமூர்த்திநாயனர் திருப்புக்கொளியூரவிநாசியினின்று புறப்பட்டுக் குடபுலத்துச் சிவனடியார்பதிகடொறும்போய் அப்பால் மலைநாட்டகம்புகுந்தாரெனக் கூறியவாற்ருன் அறியப்படும். கொங்குநாட்டை ஆண்டுக் குடபுலமென்றுகூறியவர் ஈண்டுக் குணபுலமென்றுநினைத்து அதற்கேற்பக்

---

*ஒழிபியல் - 7.

கருவூரைச் சோழரதூர் என்றார் என்று பொருள்கொள்ளுதல் அசம்பாவிதமாகும். இவ்விடர்ப்பாடெல்லாம் சேரர் குடபுலம் இஃதென்று தெரியாமையானே நேர்ந்ததாகும். இதன்கண் இவ்விரோதமொன்றுமுண்டாகாதபடி நோக்கிப் பொருள்கொள்ளின் உறையூர்ப்புகழ்ச்சோழர் கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகாண அக்கொங்கரும் குடபுலமன்னருமுள்ள குடபுலத்தூர்க்குச் சென்றணைந்தார் எனவுரைத்தலே பொருந்திற்றாதல் காண்க. குடபுலத்தவரைக் கோமன்னர்என்றதனாற் கொங்கர் அவர் கீழடங்கிய சிற்றரசருங் குடியுமாவர். புகழ்ச்சோழர் குடபுலத்தை வென்றுகொண்டதனால் அங்ஙனம் வென்றநாட்டுத் தலைநகர்க்கண்ணே அவர் திறைகாணச் சென்றார் எனவறிக. பிறர்கூறுமாறு குடபுலம் மேலைக் கடலோரத்ததேயாயின் சோழர் 'தந்திறையைக் கருவூரிற்கொணர்ந்து இன்னநாளின் நம்முன் அளக்க' என ஓலைபோக்கி நியமிப்பரென்க. அங்ஙனமொன்றும் நியமியாமையான் குடபுலமன்னர் கருவூரகத்தேனும், தோற்றகாரணத்தான் அவ்வூரைவிட்டு அதன் பக்கத்தேனுமுளராதல்பற்றியே குடபுலக்கருவூர்க்குச் சென்றாரெனப்படுமென்க.

புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று மெய்யொளிமாளிகையினத்தாணிமண்டபத் தரியாசனத்தமர்ந்து அம்முற்றத்துக் குடபுலமன்னர்கொணர்ந்த திறைகண்டார் எனக்கூறியவிடத்துக் கொங்கரையே கூறாமையானும், குடபுலமன்னரையே கூறிவிடுதலானும் கொங்கர் தனியரசராகாமை நன்குணரப்படும். குடபுலமன்னவர் வேற்று நாட்டினின்று கருவூர்க்குத் திறையளத்தற்காக வந்தாரென அங்குக் கூறாமையாலும் குடபுலமன்னர் அவ்விடத்தவராதறெளியப்படும். திறைகண்ட சோழர் குடபுலமன்னரை அவர் நாட்டுக்குச் செல்ல விடைகொடுத்தாரென்று அங்குக்கூறாமையானும் யான் கூறுவதே கருத்தென்றுணர்க. இங்ஙனங் கருதவைத்த சேக்கிழார் இக்கொங்குநாட்டுக் கருவூரைத் "தங்கள் குலமரபின்முதற்றனிநகர்" எனவும் "அநபாயன் சீர்மரபின் மாநகரம்" எனவுங்கூறுவராயின், அதனுணுக்கமிஃதென்று ஆராய்ந்தறிந்து முன்பின் முரணாமை உரைக்கவேண்டுவதாகும். சேக்கிழார் கருவூரைப்பற்றிக் கூறிய இவ்விரிடத்தும் நேரே சோணாட்டூரென்றும், சோழரூரென்றுங் கூறாமல் அதன் சம்பந்தத்தை மரபின் மேலேற்றியே கூறுகின்றார். புகழ்ச்சோழர்க்கு வென்ற சம்பந்தமல்லது வேறுசம்பந்த

முளதாயின் அதைவிளங்கச் சொல்லுவாரென்றேகொள்க. சேரர் ஊரென்று உலகெலாந்தெரிந்த கருவூரைச் சோழரூரென்று கூறுதல் பொருந்தாதென்பதை நன்குணர்ந்தே கருவூரைப்பற்றிச் சோழர் மரபுக்கேனும் சம்பந்தமுண்டா வென்று ஆராய்ந்துகண்டு அதனையே ஈண்டுக்கூறினாராவர். கருவூர் பாற்கரபுரம், பாற்கரக்ஷேத்திரம் என்னும் பெயருடையதாதலின் சோழர் தங்கள் குலமரபின்முதல்வனை சூரியனுடைய நகரமாகும் என்பது கருத்தாகக்கொள்க. மரபின் முதல்வனுடைய நகரமாதற்சிறப்பான் முதன்மையாகிய ஒப்பற்ற நகரமாயிற்று. புகழ்ச்சோழர்க்கு வென்றுகொண்ட சம்பந்தமன்றிக் குலமரபானேக்கினும் சம்பந்தமுண்டெனத் தம்மரியபெரிய புலமையானியைத்துச் சேக்கிழார்பாடிய திஃதென்றுணர்க. முன்னரும் அநபாயன் சீர்மரபின் மாநகரமாகும் என்றதூஉ மிக்கருத்தே பற்றியென்றுகொள்க. இவர்க்கு முன் வகைநூல்செய்த நம்பியாண்டார் நம்பிகளும் இப்புகழ்ச்சோழரைக் "கோகனநாதன் குலமுதலோனல மன்னியபுகழ்ச்சோழன்" (திருத்தொண்டர்திருவந்தாதி—50) எனக் கூறியதனையும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. ஆண்டுத் தாமரை நாயகனான சூரியனாகிய சோழர்குலமுதல்வனுடையநலத்தைத் தன் பானிலே பெறுவித்தவனென்று கூறுதல்காண்க. தங்குல முதல்வனான சூரியன் சேரர்கருவூரையுடையனாயினாற் போலப் புகழ்ச்சோழரும் அதனையுடையராயினாரென்பதுபற்றியே இவ்வுவமை செய்யப்பட்டதாகும். இவ்வகைநூலில் இவ்வுவமையாற்குறித்த பொருண்மையையே உள்ளத்தமைத்துப் பிறிதொருவகையாற் சேக்கிழார் கூறினாரென்றே கொள்க. சோழர்க்கே என்றும் உரிமையாக்குவது அவர்க்குக்கருத்தாயின்

மன்னிநீடியசெங்கதிரவன்வழிமரபிற்
றொன்மையாமுதற்சோழர்தந்திருக்குலத்துரிமைப்
பொன்னிநாடெனுங்கற்பகப்பூங்கொடிமலர்போ
லன்மைசான்றதுநாகபட்டினத்திருநகரம்"

என்பதுபோல் விளங்கவுரைப்பரென்க. கருவூரைப் பாற்கரபுரமென்பது அதன்புராணத்திற் கண்டுகொள்க. அவ்வூரை வைதிகரெல்லாம் பாஸ்கரக்ஷேத்ரமெனவழங்குதலை இன்றுங்கேட்கலாம். "கருவூரை யிலங்கிவளர் பாற்கரபுர மென்றிசைப்பர் தொன்னூலியலோரே." (தலமகிமை) என்பது கருவூர்ப்புராணம். இது பாஸ்கரக்ஷேத்ரமாயின் சோழர் தங்கண்மரபின் மாநகரமேயாமன்றோ. இவ்

வாறு கவித்துவ வன்மையாற் கூறியதனை நுணுகிநோக்காது அதனையே சரித்திரமாகக் கொண்டு இடர்ப்படுவார்பிறரென்க. சோழமண்டல சதகமுடையார் சோணாட்டு நாயன்மார் பலரையுமெடுத்தோதுகின்றவர் புகழ்ச்சோழ நாயனார் உறையூரிலரசுபுரிந்தவரென்று கொண்டும் அவர்சரிதம் நிகழ்ந்தது கருவூர்க்கணென்பது பற்றி அவரை எடுத்துக் கூறாமல்விடுதலானும் கருவூர் சோழமண்டலத்தூரன்றாதல் தெளியப்படும்.

> " கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
> குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
> ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதஞ்
> சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என வழங்கும் வெண்பாவால் சோணாட்டெல்லை கருவூரைப்புறத்திட்டே கோட்டைக்கரையளவாய் நிற்பதுகாண்க. இதனுண்மை அடியிற்*குறித்திருக்குங்குறிப்பாலுமுணர்க. சங்கநூல்களும் பின்னூல்களும் ஒருபடியாகச்சேரருடையதென்று தெளிவித்த கொங்குநாட்டுச்சிறந்ததோரூரினை முன்பின் ஆராயாது சோழரதென்றுகூறிப் பண்டைத்தமிழ்வரம்பழியச் செய்யுள்செய்பவர் சேக்கிழாரல்லரென்று தெளிந்துகொள்க. இத்துணையுங்கூறியனகொண்டு சேரர் கொங்குக்கருவூர் சேரர்கருவூரேயென்றுணர்க.

இனிச் சோழர்நீர்நாடுஞ், சேரர்கொங்குநாடும் ஒன்றையொன்றடுத்துள்ளதன்மை முன்னரே விளக்கிவிட்டேன். சேரரும், சோழ

---

*The last of these names (Kottakarai) means 'fort bank' and tradition says that it refers to the great embankment of which traces still stand in the Kulittalai Taluk. The Karai pottanar river is also supposed to have formed part of the boundary and to have obtained its name from that fact.

—*Page 28 Gazetteer of the Trichinopoly District.*

The Karai pottanar is a small stream rising in the Kollimalai—The name signifies "the river which marked the boundary" and native tradition, which appears to be founded on fact, says that the stream was once the boundary between the Pandya, Chola and Chera Kingdoms.

—*Page 8 Gazetteer of the Trichinopoly District.*

ரும் ஒருவரோடொருவர் இகலிப் பல்காலும்போர்புரிந்தது தொன்னூல்களில் மிகுதியாகக்கேட்கப்படுதலான் சேரர் சோணாட்டையும், சோழர் கொங்குநாட்டையும் பகைப்புலமாகக்கருதினரென்றுணரத்தகும். சோழர்க்குக் கொங்கு பகைப்புலமாதல் "கொங்குபுறம்பெற்ற கொற்றவேந்தே" (373) எனச் சோழனைப்புறப்பாட்டிற் கூறியதனாலறியப்பட்டது. இதனாற் சோழர்பகைப்புலத்தூரைச் சோழரூரென்று நூல்கள்கூறாவென்று தெளிந்துகொள்க.

இக்கருவூர் சேரர் கொங்குநாட்டதாதலாற் சேரரூரென்றுணரப்படுமாயினும் இதன்கண்ணே சேரவரசர் மாளிகையுடையராய் வதிந்தாரென்பது எற்றாற்பெறுதுமெனிற்கூறுவேன். புறநானூற்றில்

"இவன்யாரென்குவையாயினிவனே
புலிநிறக்கவசம் பூம்பொறிசிதைய
வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்
மறலியன்னகளிற்றுமிசையோனே
களிறே, முந்நீர்வழங்குநாவாய்போலவும்
பன்மீனாப்பட்டிங்கள்போலவுஞ்
சுறவினத்தன்னவாளோர்மொய்ப்ப
மரீஇயோரறியாதுமைந்துபட்டன்றே
நோயிலனாகிப்பெயர்கதில்லம்ம
பழனமஞ்ஞையுகுத்தபீலி
கழனியுழவர்சூட்டொடுதொகுக்குங்
கொழுமீன்விளைந்தகள்ளின்
விழுநீர்வேலிநாடுகிழவோனே.

"இது சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேர லிரும்பொறையோடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் பாடியது" (13)

என இருத்தலைக் கற்றார்பலருமறிவர். ஈண்டுப் புறப்பாட்டுரைகாரர் "களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்; இவன்களிறு மதம்பட்டது; இவன் நோயின்றிப்பெயர்க எனக்கூட்டி வினைமுடிவுசெய்க" என்றும், "பெருநற்கிள்ளி களிறுகை

பிகந்து பகையகத்துப்புகுந்தமையான் அவற்குத்தீங்குறுமென் றஞ்சி வாழ்த்தியமையால் இது வாழ்த்தியலாயிற்று" என்றும் நன்கு விளக்கினர். இவற்றாற் சோழன்பெருநற்கிள்ளியென்பான் தன் சோணாட்டெல்லையகத்தே ஓர்காற்களிறூர்ந்துசெல்லும்போது அது மதம்பட்டுக் கைமிகந்து சோழனுக்குப்பகையகமாகிய கருவூரிடஞ் சென்றதென்றும், அங்ஙனம் பகையகமாகிய கருவூரிடம்புகும் அக் களிற்றைச் சோழற்குத் துணையாய்ப்போந்த வாண்மறவரும்,பழகிய பாகரும் தம்வலியாற்றடுத்து வேண்டுவனசெய்யவும் மதத்தால் அவற்றைமதியாது கருவூரிடஞ்செல்லத்தலைப்பட்டதென்றும்,இவன் வாண்மறவருடன் களிறூர்ந்து கருவூர்மேல்வருதலைச் சேரன் அந்துவஞ்சேரலிரும்பொறையென்பான் சோழன்பகையகமாகிய கரு வூரிடத்து வேண்மாடம் என்னும் மாளிகையின் உபரிகைமே லிருந்து தன்கண்ணானேகண்டு தனக்குப்பகையாகிய ஒருவன் வாண் மறவர்புடைசூழக் களிறூர்ந்துவருவானாக நினைந்து முகம்வேறு பட்டுத் தன்பக்கத்து அவ்வேண்மாடத்து உபரிகையிலேயிருந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரென்னும் புலவர்பெருமானை இவன் யாரென்றுவினவ அதற்கு அவர் தம்நுண்ணறிவானும், சோணினுமுற்பட்டு நிகழ்ந்தவற்றை யெல்லாம் ஆராய்ந்து கண்ட துணிவானும், களிறூர்ந்துவருஞ் சோழனை முன்னமே தாந்தெரிந் திருந்ததன்மையானும் "இங்குக்களிறூர்ந்துவருவோன் நீர்நாடுகிழ வோனாகிய சோழன்:இவன் பகையகத்துப் படையெடுத்துவருவானல் லன்:இவன் யானை மதம்பட்டது:அது வாண்மறவரையும் பாகரையும் மதியாது கைமிகந்து, இங்குவாராநின்றது: இதனால் நீ இவனைப் போர்க்குவருவானாகக்கருதிச் சினவாதருள்க: சோழனும் நோயில னாய்ப்பெயர்க" என்று உண்மையைத் தெளிவித்தனரென்றும் தம்பொருளுக் கும் பெரும்புலமைக்கும் ஏற்பது செய்தாரென்றும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். புலவர் இருபெருவேந்தர்க்கும் போர் நிகழ்ந்து பிரமாதம்விளையாதபடி காத்தலைமேற்கொண்டு "இது பகைப்புலத்துப் படையெடுத்தலன்று; யானை மருவியோரறியாது மதம்பட்டது: இக்களிற்றுமிசையோன் நீர்நாடுடைய சோழனென் பதியானறிவேன்: களிறு மதம்பட்டதாலும், பகைப்புலம் புகுதலா னும் உண்டாம் ஆபத்தினின்று இவன் தப்பி நீங்குவானாகுக" என்று சேரன்வெகுளியை மாற்றியருளினாரென்று கொள்ளத்தகும். இத னாற் சோணாடு கருவூரை யடுத்ததென்றும், அது சோழர்க்குப் பகை

யகமென்றும் சோணாட்டு மதம்பட்டகளிறு அடங்காது வெகுண்டெழுந்து கையிகந்தாற் பாணித்தலின்றிக் கருவூர்புகுமளவில் அவ்வளவு அணித்தாக இக்கருவூருள்ளதென்றும் நன்குணரலாம். உறையூர் ஏணிச்சேரியி லுள்ளவராதலான் முடமோசியார் தம்மூர்ச் சோழனை முன்னரே நன்கறிந்தவராவர். உறையூரகத்ததோர் சேரியாதலின் உறையூரேணிச்சேரி எனப்பட்டது. வேண்மாடத்து மேலிருந்து இவையெல்லாங் கண்டவாற்றான் அம்மாடம், ஊர்ப்புறத்து மிகவுயர்ந்திருத்தல் பெறப்படும். இங்ஙனமன்றி வஞ்சி எயிற்புறத்திருந்த வேளாவிக்கோமாளிகை இஃதெனினு மமையும். சிலப்பதிகாரம் நடுகற்காதை பார்க்க. முடமோசியார் தம் உறையூரை நீங்கி இச்செய்தி நிகழ்தற்குமுன்னே சேரனை அவனது ஊர்க்கண்ணே சென்று கண்டிருந்தாரென்பதும் இதனானே கொள்ளத்தகும். இப்புறப்பாட்டில் "இவன்யாரென்குவையாயின்" என்றிருத்தலாற் சேரனும் புலவரும் கண்ணாற்காணக்கூடிய அவ்வளவு அணித்தாக மதக்களிறு சோழனைத்தாங்கிக்கொண்டே கருவூர்ப்பக்கத்து வரலாயிற்றென்றுணரத்தகும். கருவூரைப் பகையகம் என்றதனாற் சோழன் களிறார்ந்தது முதலிற்றன்னகம் என்று நன்றுதுணியப்படும். இச்செய்தியெல்லாம் சோணாட்டின் மேற்கெல்லையிலுள்ளதென்று யாப்பருங்கலவுரைகாரர் கூறிய கருவூர்க்கன்றி மேல்கடலோரத்துப் பெரியதோர் கொங்குமண்டலத்துக்கப்பாலுள்ள கடன் மலைநாட்டிற் கருவூர் என்றபெயரே எந்நூலானுங் கூறப்படாத பிறர் கூறுங் கொடுங்கோளூர்க்குக் கனவினும் பொருந்தாதென்பது அறிஞராராய்ந்து கொள்வாராகுக. இதனாற் சோணாட்டையடுத்துள்ள கருவூர் சோழர்க்குப் பகையகம் என்றும், அதுவே சேரர் பெருமாளிகைகளை யுடையதென்றும், சேரனைப்பார்த்தற்குப் பண்டைத் தமிழ்ப்புலவர் அக்கருவூர்க்குச் செல்வதுதான் வழக்கமென்றும் நன்குணர்ந்து கொள்க. இவ்வரிய புறப்பாட்டு, கருவூர்த்திசையறியாது அலையும் நெஞ்சமாகிய மரக்கலத்தைக் கொண்டுழலும் நல்லுயிராகியமீகானுக்கு அவியாத கலங்கரைவிளக்குப்போல விளங்குவதாகும் என்று தமிழன்புடையாரெல்லாம் அறிந்துகொள்க. இதிற் சேரர்கொங்குநாடு சேரர்மலையாகிய கொல்லியையும், சேரர்யாறாகிய ஆன்பொருநையையும், சேரர்கொடுந்தமிழ்நாடாகிய மலைநாட்டையும் உடையதாயினாற் போலச் சேரர்கருவூரையும் உடையதாதல் தெளியப்பட்டதாகும். இங்ஙனம் அன்றாயின் ஊரொருபுறனும்

நாடொருபுறனும், மலையொரு புறனும் யாறொருபுறனுமாகி இடர்ப்படவேண்டி வருமென்க.

இனிப் புறப்பாட்டுரையாசிரியரும், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியரும் வஞ்சி—கருவூர் என்று உரையெழுதினர் என்பது அறிஞர் பலரும் அறிவர். இங்ஙனமே நிகண்டுநூலுடையாரெல்லாங் கூறினர். இவற்றால் ஓரூர் இருபெயர்களையுடையதென்பது பெறப்பட்டதாகும். இவ்விருபெயரும் இவ்வாசிரியர்களிட்டபெயரன்று; பண்டைச்சங்க நூல்களிற் கண்டனவேயாகும். "கடும்பகட்டியானைநெடுந்தேர்க்கோதை, திருமாவியனகர்க்கருவூர்" (அகம்—93) எனவும், "ஒளிறுவேற்கோதை யோம்பிக்காக்கும் வஞ்சி" (அகம்—263) எனவும் வருதலான் அறிக. இவ்வஞ்சி பகைப்புலத்தையடுத்துள்ள காரணப்பற்றியே சேரன் ஓம்பிக்காக்கும் வஞ்சியென்றாரெனவறிக. இங்ஙனந் தொன்னூலாட்பயின்ற இவ்விருபெயருள்ளும், கருவூர் வழக்கின்கண்ணும் பெயராதலானே அதனிலை எளிதிலறியப்படுமென்றுகொண்டு வஞ்சியென்று வருமிடந்தோறும் கருவூர் என்றெழுதினர் அவ்வுரையாளர்கள் என்றுய்த்துணரப்படும். வழக்கின்கட் பிரசித்தி பெற்றுக் கருவூரென்னும் பெயருடைய ஊர்கள் பலவுளவாயின், அவற்றுட் டாங்கருதியது இஃதென்று எளிதினுலகறிந்துகொள்ளுமாறு வேற்ற அடைகொடுத்துரைப்பார். அங்ஙனம் அடைகொடுத்துக் கூறாமையான் நூலாசிரியரும், உரையாசிரியரும் கருவூர் என்று கூறியதெல்லாம் ஓரூரையே குறிக்குமென்று தெளியலாம். சேக்கிழாரடிகள் பிற்காலத்துச் சேரமான்பெருமாணாயனாரிருந்த கொடுங்கோளூரை மகோதையென்னும் பெயருடன் வஞ்சியென்றும் வழங்கினர். இதனாற்பிற்காலத்துச்சேரமான்பெருமாணாயனாரிருந்ததுகொடுங்கோளூராகிய வஞ்சியென்று துணியப்படும். அக்கொடுங்கோளூரை அவர் யாண்டும் கருவூரென்று வழங்காமையான் பண்டை ஆசிரியர் கூறிய பழையசேரரிருந்த கருவூர்வஞ்சி வேறென்று எளிதிற்றுணியப்படும். வஞ்சிக்குக் கருவூரென்ற பெயரே வழக்கின்கண்ணுள்ளதாமென்பது யான் மேற்கூறியவாற்றானுணரலாம். அப்பெயர்வழக்கம் அக்கொடுங்கோளூர்வஞ்சி யுடையதாயின் அதனை பன்றே முற்படக் கூறுவர். செய்யுளினல்லாமல் வழக்கினும் வழங்கும் ஆற்றலுடைமையானன்றே உரைகாரரும் நிகண்டுகாரரும் வஞ்சியைக் கருவூரென்று கூறிக்காட்டினர். அவரெல்லாம் வஞ்சியைக் கருவூரென்ற பெயரானே விளக்கியது அவ்வஞ்சியென்னும்

பெயர் பிற்காலத்துச் சேரமான் பெருமாணயனர் அரசுபுரிந்த கொடுங்கோளூர்க்கும் இடப்பட்டு வழங்குதலே நன்கறிந்து, பண்டை நூலாருந் தாமுங் கருதிபது அஃதன்று இஃதென்றுணர்த்தவே யென்பது நன்குணரத்தகும். கருவூர் வஞ்சியை யாண்டும் யாரும் கொடுங்கோளூர், மகோதை, அஞ்சைக்கள மென்னும் பெயர்களான் வழங்காமையானும், கொடுங்கோளூர் வஞ்சியைக் கருவூரென்று யாண்டும் யாரும் வழங்காமையானும் இவை தம்முள் வேறு வேறு என்பது எளிதிலுணரப்படுமன்றோ ? இவ்வுண்மையினை யிங்ஙனம் ஆராயாது மயங்கினர் பலர் என்க. பிற்கால நூல்களையும், முற்கால நூல்களையும் ஒருங்குகற்றுச் செந்தமிழ்க் கடனிலேகண்ட கச்சியப்ப முனிவர் தாம்பாடிய பேரூர்ப்புராணத்து

> " ஆனடுத்துயர்பூசனையாற்றியகிலமுந்
> தானளித்தலினூற்கருவூரெனத்தக்கது
> வானடுத்தெழும்வஞ்சிபசுபதியாயினர்
> பானஞ்சினர்பாழியுமானிலையாயிற்றே".

(குழகன்குளப்புச்சுவடுற்றபடலம் 120,

என ஐயந்திரிபறப்பாடுதலான் யான்கூறியதே மெய்யென்று துணிக. இவ்வாசிரியர் சேக்கிழார் பெரிய புராணத்தை எழுதத் தெண்ணிப்படித் தவரேயாவரென்று யான் ஈண்டுக்கூறவும் வேண்டுவதோ? அந்நூல் கற்றதன்மேலு மிவர்க்குண்டாகிய துணிபு இஃதென்று நினைத்துக் கொள்க. இவற்றூற் பண்டைச்சங்கநூல்களி லும், அவற்றதுரைகளிலுங்கண்ட கருவூர்வஞ்சிக்கும், பிற்காலத் துச் சேக்கிழார் நூலிற்கண்ட கொடுங்கோளூர்வஞ்சிக்கும் யாதோ ரியைபுமின்மை நன்குணர்ந்துகொள்க. இப்பாட்டானே கருவூ ரென்ற பெயர்க்காரணமுமறிக. இக்காரணம் பற்றி இதனைச் சபீஜமாநகரமெனக் கூறுவர். கொங்குநாட்டுப்பேரூர் நிர்ப்பீஜ மாநகர மெனப்படும். இதனலது பிறவாநெறி என்று தமிழிற் கூறப்படும்.

இனி "ஊரெனப்படுவ துறையூர்" என்றவிடத்து யாதோர டையு மின்றேனும் உறையூர் என்னும்பெயர் சோழரது தலைநகராகிச் சிராப்பள்ளிக்குன்றைத் தன்கணுடையதாகிய நகரையேயுணர்த்து தல் வழக்கினூற்றலானே யென்பது அறிஞர்க்கெல்லாம் ஒப்பது. அதுபோலக் கருவூர் என்புழியெல்லாம் சேரர்தலைநகராய்த் தன்

ஞன்பொருநைக் கரையிலுள்ள தாய்ச் செந்தமிழ்நாட்டின்மேலதாயுள்ள மாநகரையே வழக்காற்றலாற் செவ்வனங்குறிக்குமென்று துணியாராயின் ஆசிரியர்கள் அதனை அப்பெயரான்வழங்காரென அறிந்து கொள்க. கூடன்மதுரையென்றுரைப்பது மிதுவேபோலுமென்க. கூடலென்று பெயருடைய பல்லூர்களின் விலக்கியுணரவே மதுரை யென்றெழுதப்படுவதென்க. இக்கருவூர் முற்காலத்து மிகப் பெரியதோர் மாநகரமாயிருந்ததன்மையால் அதிகப்பிரசித்திபெற்று வழங்கப்படுவதாகும். தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமை மயங்கியலிலுள்ள "இதனதிதுவிற்றென் னுங்கிளவியும்" என்னுஞ் சூத்திரவுரைக்கண் உரையாசிரியர் இளம்பூரணவடிகள் "உறையூரிற் பெரிதுகருவூர் என்புழி உறையூர்க்குப்பெரிது கருவூர்" என்று கூறிய வாற்ருன் இக்கருவூர் சோழர் உறையூரினும்பெரிதென்று தெரிந்து கொள்ளலாம். இக்கருத்தானன்றே பன்னூலுள்ளும், இக்கருவூர் மாநகர்என்று வழங்குவதென்று துணியப்படுமென்க. இது சோழர் தலைநகரினுஞ் சேரர்தலைநகர் பெரிதென்பதையுணர்த்தாமலிராது. இஃது உறையூரையடுத்தில்லையாயின் உறையூரை எல்லைகாட்டி உறையூரிற்பெரிது கருவூர் என்று கூருரெனவுணர்க. சங்கச்செய்யுளினும் இக்கருவூரைக்கூறியவிடத்துத் "திருமாவியனகர்க் கருவூர்" (அகம் - 93) என இதன்பெருமையெல்லாந் தோன்றக்கூறியதுங் காண்க.

இதற்கேற்பவே கிறிஸ்துபிறந்தபின் நூற்றுமுப்பத்தொன்பதாம் ஆண்டிலிருந்த தாலமி என்னும் மேற்றிசையாளர் தாமெழுதிய பூகோளநூலில் நந்தமிழ்நாட்டைக்கூறுமிடத்துக் கேரளபதிகளுடைய ராஜஸ்தானம் இருக்குமூர் கருவூர் என்றுகூறி அதனைக்கடற்கரை ஊர்வரிசையின் வைக்காது உண்ணாட்டூர்களுடன் வைத்ததனையும் நோக்கிக்கொள்க. அவரும் கேரளபதிகளூர் கருவூர் என்று கேட்டு வரைந்தவாற்ருன் அதுவே எங்கும் வழங்கிய பிரசித்திநாமம் என்பது நன்குணரப்படும். இதனனேயன்றே நம் உரையாளர் பலரும் வஞ்சியென்ற நூல்வழக்குப்பெயர்க்குக் கருவூரென்ற உலக வழக்குப்பெயரை உரையாக எழுதினராவர்.

இனி இக்கருவூர் வஞ்சியென்றுபெயர்பெறுதலைப்பற்றிச் சில கூறுவேன். இவ்வூருள்ளவிடம் வஞ்சிவனமெனவும், வஞ்சுளாரணியமெனவும் வழங்கப்படும். வடமொழியுள் வஞ்சுளம் என்பதனையே

தமிழில் வஞ்சியெனவழங்குவர். தமிழில்வஞ்சியென்பது வடமொழி யிற்போலச் சிலமரங்களின்பெயராகவும், ஓர்வகைக்கொடியின்பெய ராகவும் வழங்கப்படும். இது தமிழில் மரத்துக்கும்பெயரென்பது.

> "ஞாண்கொளுண்கோலின்மீன்கொள்பாண்மக
> டான்புனலடைகரைப்படுத்தவராஅ
> ஞாரிநறவுண்டிருந்ததந்தைக்கு
> வஞ்சிவிறகிற்சுட்டுவாயுறுக்குந்
> தண்டுறையூரனபெண்டிரெம்மை" (அகம்-216)

எனவருதலானறியப்படும். இதனைப் பிசின்மரமென்பர் பிங்கலந்தை நூலார்; அவர் "வானீரப்பிசின்வஞ்சியாகும்" என மரவகையில் வில்வமரத்துக்குஞ் செங்கருங்காலிக்கும் இடையேவைத்தோதுதலா னிதையறியப்படும். "வடியேர்தடங்கண்ணிவஞ்சிக்கொம்பின்றுளிவ் வருவாள்போலும்" (யாப்பருங்கலவிருத்திமேற்கோள்) என்னு மிதன்கண் வஞ்சிக்கொம்பென்பதனானும் இது மரமாதலுணரப்படும். இம்மரத்தின்கொம்பினை இளமாதர்க்குவமையாகவுரைப்பர். அதனால் "வஞ்சிக்கொம்பு" என்று உருவகப்படுத்தினர். சிந்தாமணியினும் "வஞ்சியங்கொம்பனாள்" (358) எனவருதல்காண்க. பெருங்கதை யினும்,

> "இன்னொலிவீணைப்பண்ணொலிவெரீஇ
> வஞ்சிக்கொம்பர்த்துஞ்சு......
> ஒளிமயிற்கலாபம்பரப்பியிவ்வோர்
> களிமயில்கணங்கொண்டாடுவதுகாண்மின்"

எனவருதலானும் இது மரமாதல் துணியப்படும். இதனை வன்னிமரம் மென்பர் கச்சியப்பமுனிவர். இது கொடிக்குப்பெயரென்பது "பூங் கொடிவஞ்சி" எனவருதலானறியப்படும். இக்கொடியினை மாதர் நுண்ணிடைக்கு உவமிப்பர்; "வஞ்சியிடையீர்" (சிலப்.) எனவும் "வஞ்சிநுண்ணிடை" (சிந்தா) எனவும்வரும்.

வஞ்சுளம் என்பது வடமொழியில் வேதஸம், வாநீரம் என்னும் பெயர்களையும் உடையதாகும். அம்மொழியினும் அப்பெயர்கள் மரத்துக்குங்கொடிக்கும் வழங்கப்படும். இங்ஙனம் மரத்துக்குங் கொடிக்கும்வழங்குதலை (பக்கம் 47—48, டாக்டர்.ஆப்பர்ட் பதிப்பு.) வைஜயந்திகண்டிற்கண்டுதெளிக. மஹாகவியாகிய காளிதாஸரு ரகுவம்சகாவியத்தில்

அநம்ராணும்ஸமுத்தர்து:
தஸ்மாத் ஸிந்துரயாதிவ
ஆத்மா ஸம்ரக்ஷிதஸ்மேஹம:
வ்ருத்திமா ச்ருத்ய வைதஸீம்.

என்பதனுல் வேதஸம் கொடியென்பதனை நன்குகாட்டினூர். நதியின் வேகத்தினின்று வேதஸமானது எங்ஙனம்வணங்கித் தன்னைக்காத்துக் கொள்ளுமோ அங்ஙனமே அவ்வைதஸவிருத்தியை மேற்கொண்டு ஸிம்மதேசத்தாரும் வணங்காரை வேரறுக்கும் அவனி (ரகுவி) னின்று தம்மைக்காத்துக் கொண்டார்கள் என்பது பொருள். இதன்கட் குறிக்கப்பட்ட வைதஸவிருத்தி சாணக்கிய நீதியினுங்கண்டதென்று ஈண்டு மல்லிநாதஸூரியென்னும் உரைகாரர் விளக்குகின்றார். நதிவேகத்துக்குவணங்கி, அதன்வேக மொழிந்தவாறே நிமிர்ந்து நிற்குமியல்பினது வேதஸம் என்பது பெறப்படுதலான், இது கொடியாதல் தெளியப்படும். இவ்வேதஸம், வஞ்சியாதலை இவ்விரகுவம்சத்தை மொழிபெயர்த்துதவிய அரசகேசரியார்,

இன்னவாரிதியைநோக்கிக்களிகொண்டவிகல்வேன்மன்னன்
றன்னதாஞ்சிந்தைபோயநெறிதொறுஞ்சாராநின்ற
மன்னர்மாமலையைவவ்வியெடுத்தெறிதரங்கவாரிக்
கன்னிமாநதியினின்றவஞ்சியேகடுத்தார்மன்னோ.

எனப்பாடுதலானறிந்து கொள்ளலாம். இகல்வேன்மன்னன் சிந்தைபோயநெறிதொறுஞ் சாராநின்றமன்னர், மலைகளைப்பெயர்த்தெடுத்தெறியும் அலைநீர்ப்பெருக்கையுடைய அழியாதபெரியாற்றினின்ற வஞ்சியையேயொத்தார் என்பதாம். உத்தரராமசரித நாடகத்தில் பவபூதியென்னும் பெருங்கவிஞர் "வாநீரவீருத்" (2-36) எனவும் "ஆமஞ்ஜுவஞ்ஜுளலதா" (2--39) எனவும் வழங்குதலானும் இது வடமொழியிற் கொடிக்கு மிகுதியாகவழங்கப்படு மென்றுணர்ந்து கொள்க. வீருத், லதா என்பன வடமொழியிற்கொடிக்குப் பெயர்கள். இவற்றையெல்லாமாராயாது வஞ்சுளம் என்பது வடமொழியிற் கொடிக்குப்பெயராகாதென்று துணிந்துவரைந்தாருமுளர். இவ்வஞ்சுளம் அதிகமாக அடர்ந்தவிடம் வஞ்சுளாரணியம், வஞ்சிவனம் என வழங்கப்படும். கொடியும், புல்லும், கல்லும், பூவும், மாமும், பிறவும் மிகுதியாகவுள்ள தன்மைபற்றி இவை நிறைந்த இடம் வனமென்று பெயர்பெறும். வனம் என்பது தனியேவழங்குமிடத்து மரங்க

ளடர்ந்தவிடம் என்பதைக்குறிக்குமேயன்றி புல்லங்காடு, தர்ப்பாரணியம், சரவணம், நெருஞ்சிக்காடு,விருந்தாவனம்,பரற்கானம்,மரற்கானம், குவளைக்காடு, பத்மவனம் எனவழங்கும்போது ஆங்காங்கு தன்னை விசேடித்த பொருண்மிகுதியாகவுள்ளவிடத்தைக் குறிக்குமென்பது ஆராய்ந்துகொள்க. இவற்றால் வஞ்சுளாரணியம் என்பது வஞ்சிமரமடர்ந்தகாடெனவும், வஞ்சிக்கொடியடர்ந்த காடெனவும் பொருள்படுமென்றுணர்ந்து கொள்க. "மன்கருவூர் சீர்வஞ்சியும்" (வராககிரிச்சருக்கம்) என்றார் பழனித்தலபுராண முடையாரும்.

இனி வஞ்சுளாவென்னும் ஆகாராந்தபதம் வடமொழியில் மிகுதியாகப் பால்கறக்கும் பசுவுக்குப் பெயராதலின் அப்பசுக்கணிறைந்த காடு எனவும் பொருள்படும். ஓரூர் ஒருகாரணம் பற்றியே பெயர் கொள்ளுமென்னும் நியதியில்லை. காஞ்சியென்னும் நகரப்பெயர்க்குப் பலபல காரணங்கள் கூறப்படுதலைக் காஞ்சிப்புராண முதலிய நூல்களுட் கண்டுகொள்க. காஞ்சியென்னும் மரம்பற்றியும் காஞ்சியென்ப; திசைமுகனு லஞ்சிக்கப்படுதலினாலுங் காஞ்சியென்ப; காஞ்சனாநதியைக் காஞ்சியென்பதுபோல ஏழுநாழிகையளவுவானம் காஞ்சனம் பொழிந்த ஊராதலாற் காஞ்சியெனவுங் கூறுப. "காஞ்சனம் பொழிகாஞ்சியதன்கணே" என்றார் சயங்கொண்டாரும். இங்ஙனங் கொள்ளுமிடத்துக் கொடிபற்றியும், மரம்பற்றியும், ஆன்பற்றியும் வஞ்சிவனம் எனப் படுமென்று கொள்க. சீத்தலைச்சாத்தனார் "பொற்கொடிப் பெயர்படூஉம் பொன்னகர்." (மணிமே. 26) எனவும், 'பூங்கொடிப் பெயர்படூஉந் திருந்திய நன்னகர்' (ஷை 28) எனவுங் கூறியவிடங்களிற் பூங்கொடியாகிய வஞ்சியின் பெயர் பெறுநகர் என்று கூறினாரல்லது வஞ்சிக்கொடியைத் தன்கண்ணுடைமையால் அதுபற்றி அப்பெயர்பெற்ற நகர் என்றுகூறினாரில்லை. ஒருவர் "எண்கோவை காஞ்சி" என்பதுபற்றி எண்கோவைப்பெயர் படூஉ மின்னகர் என்று கூறினால் அது காஞ்சி யென்று குறித்தாரென்பதல்லது அவ்வூர் எண்கோவையுடையதென்றும், அதுபற்றியே காஞ்சியென்று வழங்கப்பட்டதென்றும் காரணங் கூறத்தலைப்படின் அது எட்டுணையும் பொருந்தாதென்று துணிதல்போல ஈண்டுந் துணிக. பூவாவஞ்சி, வாடாவஞ்சி என்பனவும் இக்கருத்தே பற்றிவந்தன. ஈண்டுக்கூறிய பூவாவஞ்சியும், வாடாவஞ்சியும் அக்கருவூரிலுண்டு; அதுபற்றியேதான் அப்பெயர்களைக் கூறினார் என்று ஒருவர் வாதிப்பது எவ்வளவு பொருந்தாதென்று கொள்ளப்படுமோ

அவ்வளவே வஞ்சிக்கொடியுடைமையால் 'கொடிப்பெயர் படூஉ' மென்பதும் ஆம் எனக்கொள்க. பூங்கொடிப்பெயர்படூஉம் என்னுந் தொடர் பூங்கொடியின் பெயரைப்பெறூஉம் என்றுபொருள்படுதலல்லது பூங்கொடியுடைமையால் அப்பெயர்பெறூஉம்என்று பொருள் படாமையும் நோக்கிக்கொள்க. பிற்கூறியதேகருத்தாயின் அதற் கேற்றசொற்களால் விளங்கவைப்பரென்றுகொள்க. மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் இந்த ஒரு கொடியின்பெயரைப்பெற்றதென்பர்என்றதல்லது இந்தொருகொடியாற் பெயர்பெற்றதென்று கூறாமையும் கண்டுகொள்க. (மணி-அபிதானவிளக்கம்) இவ்வெல்லாம் நுணுகி ஆராயாது: இந்தொருகொடியான்மட்டும் பெயர்பெற்றதென்று மயங்குவாருமுளர்.

இச்சங்கநூல்வழக்கெல்லாங் கற்றுத்தெளிந்த கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

"வன்னிநீள்வனமிருத்தலானந்துவஞ்சியென்றுபெயர்மேவிய
தன்னமாநகரடுத்து நம்முருவினைதுபூசைபுரிகிற்றியாம்".

எனக்கொடியைக்காரணமாக்காது வன்னிமரமே வஞ்சி என்று கொண்டு வன்னிவனமிருத்தலான் வஞ்சியென்று பெயரெய்தியது என்றுதெளிவித்தார். இவரிங்ஙனங்கொண்டதற் கோர்காரணம் உய்த்துணரப்படும். கரணமமைந்தகாசறுகாட்சிப் பரணரென்னும் பாவலர்பெருந்தகைபார் இவ்வஞ்சியிலரசுபுரிந்த செங்குட்டுவனைப்பாடிய ஐந்தாம்பத்தில்

> "காணிலியரோநிற்புகழ்ந்தயாக்கை
> ... ... ... ...
> துளங்குநீர்வியலக மாண்டினிதுகழிந்த
> மன்னர்மறைத்ததாழி
> வன்னிமன்றத்து விளங்கியகாடே (பதிற்-5-4)

எனப்பாடியதன்கண் வன்னிமரத்தையுடையதோரிடம் வன்னிமன்றம் எனச் சிறப்பித்துச்சொல்லப்படுவது. இந்த இறந்தமன்னர் யாக்கையைத் தாழியிற்கவிக்கு மிடுகாட்டுப்பக்கத்ததென்று தெளியப்படுவது. இப்பதிற்றுப்பத்துரைகாரரும் "வன்னிமன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை; அதுதான் பிணத்தொடுசென்றாரெல்லாருமிருந்து மன்றுபோறலின் மன்றெனப்பட்

டது'' எனவுரைத்தார். இவ்வன்னிமன்றத்தையுடையகாடு வன்னி வனமென்று வழங்கப்பட்டதோவென ஊகித்தற்கும் இடனுண்டு.

இங்ஙனம் மரத்தான் வஞ்சுளாரணியம் எனப்படுதலேயன்றி, மிகுதியாகப்பால்கறக்கும் பசுவாகிய காமதேனுபோந்த வனமாதலான் அப்பெயரெய்தியதெனக் கூறினு மிழுக்காது. இப் பிற்கூறிய பொருள் ஆனிலையென்பதனோடு பெரிதும்பொருந்துதல் கண்டு கொள்க. வஞ்சுளா என்பது பசுவிற்குப்பெயராம்போது ஆகாராந்த பதமென்றுணர்க. இதற்கிப்பொருளுண்மை வைஜயந்திநிகண்டிற் காண்க. இங்ஙனம் பல காரணங்களான் வஞ்சியெனப்பட்டது இக்கருவூரென அறிந்துகொள்க. இஃதிவ்விடத்தது என்று பேரூர்ப் புராணத்துக் கச்சியப்பமுனிவர் நன்குதெளிவித்துள்ளார்.

தூம்புறுங்கைமத வேழமேய்ந்துபயில் சோலைசூழ்ந்தவத னுச்சியி
னும்பரத்தினடி நின்றெழுந்தொழுகு மாம்பராவதி வடாதினிற்
றேப்பழுத்துவருகாவிரிக்குட திசைக்கணூர்த் துலவுகாஞ்சியென்
றோம்புகின்றகுடிநைத்தெனதொருசமீசமாநகரமுண்டரோ.

சமீசமாநகரம்-கருவூர் (பேரூர்ப்-குழகன். 107.) என அவர் கூறியவாற்றானுணர்க. (ஷை ஷை 117.)

காமதேனு வழிபட்ட இடனாதலின் இக்கருவூர்ச் சிவபெருமான் கோயில் ஆனிலையெனப்படுமென்றுகூறுவரென்பது

...'...................கருவூரெனத்தக்கது
"வானடுத்தெழும் வஞ்சிபசுபதியாயினார்
பானஞ்சினர்பாழியுமானிலைபாயிற்றே''

என்பதனாற் பெறப்பட்டது. இத்திருக்கோயிலுளெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான் பசுபதியென்றழைக்கப்படுவர். "பசுபதிகர்ப்பபுரத்திலுறுமுகப்பெருமாளே'' என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். "கருவூர்ப்பசுபதியே'' என்றார் உமாபதிசிவாசாரியரும். இப்பசுபதிநாமத்துக்குப் பொருள் பலவுளவேனும் சாதாரணமாக யாவருங்கொள்வது ருஷபத்தையுடைய பதி என்பதேயாம். இப் பசுபதியினருளாலே உலகிற்றோன்றி மாநிலம் விளக்கினவன் செங்குட்டுவன் என்னுஞ் சேரனென்பது

" ஆனே றார்ந்தோனருளிற்றோன்றி
மாநிலம்விளக்கிய மன்னவனாதலின்
செய்தவப்பயன்களுஞ் சிறந்தோர்படிவமுங்
கையகத்தனபோற்கண்டனை"

என்று இறுதிக்காதையில் இளங்கோவடிகள் கூறுதலான் உணரப்படும். வஞ்சியிலுள்ள இப்பசுபதியையே இச்செங்குட்டுவனைப் பாடிப் பரிசில்பெற்ற பரணர்

பண்ணாகப் பாடிப் பலிகொண்டாய் பாரேழும்
பண்ணாகச் செய்த பரஞ்சோதி—பண்ணா
லெருதேறி யூர்வா யெழில்வஞ்சி யெங்க
ளெருதேறி யூர்வா யிடம்.

எனச் சிவபெருமான்றிருவந்தாதியிற் பாடியவாற்றான் இக்கோயிலின் றொன்மை நன்குணரப்படும். ஈண்டும் வஞ்சியிற்சிவபெருமானை எருதேறியூர்வாயென்று முன்னிலைப்படுத்தியதனையும், அதனை அடுத்து இடம் என்றதனையும், வஞ்சி என்றதனையும் நன்கு நோக்கிக் கொள்க. இளங்கோவடிகள் 'ஆனேறார்ந்தோன்' என்பதும்,பரணர் 'எருதேறியூர்வாய்' என்பதும் ஒரு கடவுள் வடிவையே குறிப்பதென்பது தெள்ளிது. பரணர் செங்குட்டுவனைப்பாடிப் பரிசில் பெற்றவராதலான் அச்செங்குட்டுவன் திருத்தம்பியாராகிய இளங்கோவடிகளோ டொருகாலத்தவரென்பது யான்கூறவேண்டுவ தன்று. 'பண்ணாலெருதேறியூர்வா யெழில்வஞ்சி' என்றது பண்ணினிமையையறியும் ஆக்கள் எருதுகளில் ஏறித்தவழ்கின்ற இடத்துள்ள அழகிய வஞ்சி என்னும் நகரம் என்று பொருள்படும். இதனாற் சொல்லியது நிலப்பண்பு. அஃதாவது அந்நிலத்து ஆக்கள் செருக்கால் எருதேறியூருமென்று அதன் நீர்வளமும், புல்வளமுங்குறித்தவாறும். இதனால் வஞ்சுளாரணியம், ஆனிலை என்பவற்றிற்கேற்பவும் பசுபதியென்பதிற்கேற்பவும் இவ்வஞ்சியைப் பசுச்செல்வத்தால் வருணித்தாரென்று கொள்ளப்படும்.* இவ்வூரிடத்துள்ள நதியும் ஆன்பொருந்துவது என்னும் பொருளில் ஆன்பொருந்தம் எனவழங்குதலுங் கண்டுகொள்க. இவ்வூரம்மையை அருணகிரிநாதர் "கோகுலசத்தி" எனவழங்குவர்.

அவர்,

* பிறர்கூறும் அஞ்சைக்களத்துச் சிவபெருமான் பஞ்சவர்ணேச்வரர் என்று பெயர் பெறுவர்.

வெற்றிப் பொடியணி மேனியர் கோகுல
சத்திக்கிடமருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழல் காணிய—ரருள்பால
வெற்புத்தடமுலையாள்வளிநாயகி
சித்தத்தமர்குமராவெமையாள்கொள
வெற்றிப்புகழ்கருவூர்தனின்மேவிய—பெருமாளே.

எனப்பாடினார். இதனானும் இவ்வூர்க்குக் கோகுலசம்பந்தமே மிகுத்துணரப்படும். இக்கருவூரைக் கோவூர் ஆனூர் எனவழங்கு தலையும் தலபுராணத்துட்காண்க. இளங்கோவடிகளும் இவ்வூரைக் 'கோநகர்' என்றார். அரும்பதவுரையாசிரியர் அதற்குத் திருநகர் எனப் பொருள்கூறினார். கோவினிடத்துத் திருமகள்வதிகின்றா ளென்பதுபற்றி அங்ஙனங்கூறினர்போலும். அருணகிரிநாதர் தந் திருப்புகழில் இவ்வூரை 'உயர்கருவைப்பதி' என்றும்' 'குடகிற்கரு வூர்' என்றும் "வெற்றிப்புகழ்தருகருவூர்" என்றும்,பசுபதிகர்ப்பபுரி' என்றும், 'வஞ்சி' என்றும் விளங்கப்பாடியுள்ளார். இதன்கட் 'குட கிற்கருவூர்' என்றது மேற்றிசையிலுள்ள கருவூர் என்றவாறு. இவ் வூரைக் குடபுலவஞ்சியென ஆன்றோர்வழங்கியதுபற்றி இவரும் இவ்வாறு கூறினார். குடம், குடகு, குடக்கு, குடகம் இவை மேற் றிசைக்குப் பெயரென்பதுணர்க. இங்ஙனமின்றிக்*குடகுநாடென்று கொடுந்தமிழ்நாட்டையுஞ் சுற்றிய தமிழொழிந்த நாட்டிலுள்ளது கருவூர் என்றுகொள்ள ஏலாமை நன்குணர்ந்துகொள்க. குடபுலத் தைப்பற்றி முதற்கண்விரித்தோதினேனாதலான் இக்கருவூர் வஞ்சி யுள்ளநிலம் குடபுலமென்பது தெளியப்படும். சேக்கிழாரும் கொங்குநாட்டைக் குடபுலமென்று வழங்கியுள்ளாரென்பதை முன் னரே காட்டினேன். இனி ஒருசாரார் கருவூர் கொங்குநாட்டுள்ளதன் றென்றும் சோணாட்டேயுள்ளதென்றும் மயங்குவர். அவர், சேக்கிழார் திருஞானசம்பந்தநாயனார்புராணத்து

செங்கட்குறவரைத் தேவர்போற்றுந்
திகழ்திருவீங்கோய் மலையின்மேவுங்
கங்கைச்சடையார் கழல்பணிந்து
கலந்தவிசைப் பதிகம்புனைந்து

* குடகுநாடு தமிழ்நாடன்மை மேலே காட்டினேன்.

பொங்கர்ப்பொழில்சூழ் மலையுமற்றும்
புறத்துள்ள தானங்களெல்லாம்போற்றிக்
கோங்கிற்குடபுலஞ்சென்றணைந்தார்
கோதின்மெய்ஞானக்கொழுந்தனையார்.

அப்பாலைக்குடபுலத்தி லாறணிந்தா ரமர்கோயி
லெப்பாலுஞ்சென்றேத்தித்திருநணுவினையிறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண்டமர்கின்ற
வைப்பானசெங்குன்றூர் வந்தணைந்துவைகினார்.

பருவமருப்பொன்னிப் பாண்டிக்கொடுமுடி யார்தம்பாத
மருவிவணங்கி வளத்தமிழ்மாலை மகிழ்ந்துசாத்தி
விரிசுடர்மாளிகை வெஞ்சமாக்கூடல்விடையவர்தம்
பொருவிலுனம்பல போற்றிக்குணதிசைப்போதுகின்றார்.

செல்வக்கருவூர்த் திருவானிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசைவண்டமிழ்ச் சொற்றொடை பாடியங் நாடகன்று
மல்கியமாணிக்கவெற்புமுதலா வணங்கிவந்து
பல்குதிரைப்பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்.

எனக்கூறுதலை அறியாராவர். சேக்கிழார் 'கருவூர்த்திருவானிலைக் கோயில்சென்றிறைஞ்சிச் சொற்றொடைபாடி அந்நாடகன்று' என்று தெளிவுறப்பாடுதலான் அது சோணாட்டெல்லையிற் கொங்குநாட்டே யிருப்பது நன்குபுலனாகும். இங்ஙனம் அணித்தாதலானன்றே சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியூர்ந்தகளிறு மதம்பட்ட வளவில் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த இக் கருவூரிடஞ்சேறலாயிற்றெனவறிக. (புறம்-13) "சென்றசென்றகுடபுலத்து" (வெள்ளானை) என்பது முதலாக இங்ஙனம் பலவிடத்துஞ் சேக்கிழார் கொங்குநாட்டையே குடபுலமென்று தெளியவழங்கியிருக்கவும் அவற்றையெல்லாம் ஆராயாது கொங்குநாடொழிந்த மேல்கடற்பக்கத்துக் கடன்மலைநாடே குடபுலமென்றும் அம் மலைநாட்டுக் கொடுங்கோளூரே குடபுலவஞ்சியென்றும் தம் மனம் போனவாறு துணிந்தார் பிறரெனவறிக. சேக்கிழார் குடபுலத்துப் பதிதொறும் இன்புற்றுத் தலமுங்கானகமுங்கான்யாறுங் கற்சுரமுங்கடந்து சுந்தரமூர்த்திநாயனார் மலைநாட்டகம்புகுந்தார் என்று வெள்ளானைச் சருக்கத்துத் தெளியக்கூறியதுகொண்டும் திருஞானசம்பந்தநாயனார் புராணத்துக் கொங்குநாட்டையே குடபுலமென்று பல்லிடத்தும் வழங்கியதுகொண்டும் ஆராயின் சேக்கிழார்

"கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர்திறைகாண........
கருவூரின்வந்தணேந்தார்"

என்றதற்கு யான்கூறியதே கருத்தாதலெளிதிலுணரலாம்.

இனிப் பழனிப்புராணத்தும்

செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ்
கோங்குநன்னாட்டிடைக்கொன்றைவார்சடைப்
புங்கவன்குமரவேளுறையும்புண்ணியத்
துங்கவெற்புளசிலசொல்லுவாமரோ (கிரிச்சருக்கம்-27).

மழைதவழ்வஞ்சியாரணியத்தும்பரும்
விழைபொருட்டருவதுவெண்ணெய்மால்வரை
தழைதருகறைசையுட்டயங்குசங்கவெண்
குழையினனுறவதுகொடுமுடிக்கிரி (ஷ 28).

என்பனவற்றாற் கோங்குநாடு சேரன்விளங்குகின்றநன்னாடென்றும் அந்நன்னாட்டு வஞ்சியாரணியம் உண்டு என்றும் கூறுதல்காண்க. ஈண்டுக் கூறிய வெண்ணெய்மால்வரை கருவூர்க்கு அடுத்துள்ள வெண்ணெய் மலை எனவறிக. அப்புராணத்துப் பின்னும்

நடித்தபொற்பொது முதலசீர்நாட்டுளநகரும்
வடித்தமுத்தமிழ் மதுரையுங் குமரியும்பிறவுங்
கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலேழுபதியுங்
கடித்திகழ்ந்தமென்மலரினற்கைகுவித்திறைஞ்சி (கௌசலன்-அருச்சனைச்சருக்கம்).

எனக்கூறுதலானும் ஏழுசிவத்தலங்களையுடைய கொங்குநாட்டையே கொடித்தடஞ்சிலைக்கோதைநாடு என்றுகொண்டது தெளியப்படும். கோதைநாடு-சேரனாடு. ஒட்டக்கூத்தரும் "கொங்கத்துவிற்கொடியும்" எனப்பாடுதல் காண்க (மூவருலா).

இங்ஙனம்வஞ்சியென்ற வழக்கும், அப்பெயர்க்காரணங்களும் முற்காலத்துப் பரணர்பாட்டும் பிற்காலத்து அருணகிரிநாதர், கச்சியப்பமுனிவர் முதலியோர் பாடலும் எல்லாம் கருவூர்க்கே பொருந்துதலையும், பிறிதோரூர்க்குப் பொருந்தாமையையும் நன்று தெளிந்து கொள்க.

இனிக் கருவூரென உலகவழக்கினும், வஞ்சியென நூல்வழக்கினும் உள்ள இவ்வூர், ஆன்பொருநையாற்றுக் கரையிலுள்ளதென்பது,

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர் முன்றுறைத்
தெண்ணீருயர்கரைக்குவைஇய
தண்ணான்பொருநை மணலினும்பலவே". (அகம்-93)

எனவும்,

"வஞ்சிப்புறமதிலலைக்குங்
கல்லென்பொருநைமணலினும்" (புறம்-347)

எனவும் வருதலானறியப்படும்.

பதிற்றுப்பத்துரைகாரர்.

"......செங்குணக்கொழுகுங்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன் கூடியகூடலனையை" (பதிற்-50)

எனவரும் பதிற்றுப்பத்தடிகட்கு உரைகூறுமிடத்து "மூன்றுடன் கூடிய கூடல் என்றது அக்காவிரிதானும் ஆன்பொருநையும், குடவனென்றாற்போல்வதோர் யாறும் என இம்மூன்றுஞ்சேரக்கூடிய கூட்டம் எ - று. காவிரியனையையாவதேயன்றி மூன்றுடன்கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க" எனவிளக்கினர். இதன்கட் காவிரியும், ஆன்பொருநையும், மற்றோர்யாறும் சேரக்கூடியகூட்டம் என்று தெளிவித்தவாற்றான் ஆன்பொருநையும்காவிரியும் ஓரிடத்துக்கலப்பதென்பது நன்குபெறப்பட்டது. இதனால் வஞ்சியெனவும், கருவூரெனவும் மேற்கண்டஊர் காவிரியொடுகூடும் ஆன்பொருநையாற்றின்கரையினதென்று தெரிவதாகும். காவிரியொடுங்கூடும் ஆன்பொருநையாற்றுக்கரையின்கணுள்ளது கருவூர்வஞ்சியென்பது தெரிந்தவாற்றால் கருவூர்வஞ்சி மேல்கடலோரத்தில்லையென்றும், குடபுலமாகிய சேரநாட்டில் அகநாட்டுள்ளதென்றும் நன்கு துணியலாகும்.

தொல்லாசிரியர்கள் பல்லிடத்தும் காவிரியைப்

"பூவிரியகன்றுறைக் கணைவிசைக்கடுநீர்க்
காவிரிப்பேர்யாறு" (அகம்-181)

எனவும்

"கடற்கரை மெலிக்குங் காவிரிப்பேர்யாறு"
(சிலப் - 6 கடலாடு)

எனவும் வையையை "வையைப்பேரியாறு" (சிலப்) எனவும் பேர்யாறெனவழங்குதல்போல இவ் வான்பொருநையினை ஆன்பொருநைப்பேர்யாறு, பொருநைப்பேர்யாறென வழங்கக்கண்டிலேன். இதனால் இவ்வான்பொருநையினை உபநதியென்று நன்குணர்ந்தே பேர்யாறென்று வழங்காது தொல்லோர்விட்டாரென்று துணியத்தகும். உரையாசிரியரெல்லாம் பொருநை, ஆன்பொருநை எனவருமிடங்களில் ஆன்பொருந்தமென உரையெழுதினரேயன்றிப் பேர்யாறென்றெழுதினாரில்லை. சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் "பெருமலை விலங்கிய பேர்யாற் றடைகரை" என்புழிப் பேர்யாறு ஓர் யாற்றின்பெயர் என்றெழுதினர். பேர்யாறே பொருநையாயின் இவ்விடத்துப் பேர்யாறென்பது பொருநைக்கொருபெயர் என்றன்றோ எழுதுவர். அங்ஙனம் எழுதாமையான் அவரும் இவ்வான்பொருநைவேறென்றும், பேர்யாறுவேறென்றும் நன்கு தெளிந்தாரேயாவரெனக்கொள்க. பழனிப்புராண நதியுற்பவித்த சருக்கத்து

மாமழைநீழல்போந்தாம்பிரவதியெனவழங்கி
யேமைதேனுவினுருவுகொண்டினிதுவீற்றிருக்குஞ்
சூழல்போதலிற்றுளும்புமான்பொருநையென்றொருபே
ரேழிருங்கடலுடுத்தபாரிசைப்பமேவியதே.

மணிமுத்தாறுகாவிரிவிரிவாளைபாய்பொருநை
யணிமெய்த்தோங்குமுக்கூடலினணிமணியீசன்

எனவருவனவற்றால் இதனுண்மை தெளிந்துகொள்க. இதனால் ஆன்பொருநை காவிரியுடன் கலப்பதென நன்கு தெளியலாம். இவையெல்லாம் ஒருவர்படைத்துக்கொண்டனவாகாது இத்தமிழ்நாட்டுத் தொன்றுதொட்டு நிலைத்தவழக்காதல் உய்த்துணர்ந்துகொள்க. இவையொன்றும் ஆராயாது ஆன்பொருநையை ஆர்பொருநையென்று தப்பெனப்போனவாறுமாற்றி அதுவே மேல்கடலிற்கலக்கும்

பேர்யா றென்றும் அதுவே வாணியென்னும் பெயருடைத்தெனத் துணிவாருமுளர். அவர் "ஆனிவாணியான்பொருந்தமாகும்" என்ற திவாகரநிகண்டினை உணராராவர். இவற்றால் ஆன்பொருந்தம் குடகடலிற்கலக்கும் யாற்றின்வேறுதலையும் அது கொங்குநாட்டிலே இருத்தலையுந் தெளிந்துகொள்க. அவர் இடபப்பாதி மழையாற்பெருகும் யாறாகக்கருதி மிதுநமாதமாகிய ஆனி தமிழ்ச்சொல்லே யென்பதறியாது அதனை ஆநி எனமாற்றி அஃதிகரங்கெட்டு ஆந் என நின்று பின் பொருநையுடன்புணர்ந்து ஆந்பொருநையெனலாயிற்று என்பர். பிரயோகவிவேகநூலார் "ஆனி ஆடியையொழிந்த திங்களும் நாளிருபத்தேழும் தற்பவமாதலின்" என்றதனால் ஆனி தமிழ்ச்சொல்லாதறெளியப்படும். ஆந்பொருநை என யாண்டும் வழங்காமைகண்டு கொள்க. பிறர் "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு மூன்றுடன்கூடிய கூடலனையை" என்னும் பதிற்றுப்பத்துள் மூன்றுடன் கூடிய கூடலென்றது தென்கடலும் மேல்கடலும் கீழ்கடலும் கூடிய கூட்டமென்று நூல்வழக்கிற்கும் உரைவழக்கிற்கும் விரோதமாகத் தாமொரு பொருள்படைத்தார். "பூவிரிபுனலொருமூன்று" எனத் தெளிய வுரைத்ததனையுங் காணாராயினர். "பூவிரிபுதுநீர்" என யாற்றை வழங்குதலானும் பூவிரிபுனல்எனக் கடலை யாண்டும் வழங்காமையானும் அவர் கூறுவது பொருந்தாதெனவுணர்க. கொங்குநாட்டு, மணிமுத்தாறு காவிரி ஆன்பொருநை மூன்றுங்கூடிய முக்கூடலொன்றும், ஆன்பொருநையும் அதனுடன் இரண்டு நதிகள் கூடும் திரிவேணிசங்கமமொன்றும் உளவாதல் கேட்கப்படுகின்றது. பதிற்றுப்பத்துரைகாரர் கூறியபடி மூன்றுடன்கூடிய கூடல் என்றது காவிரியும் ஆன்பொருநையுங் குடவனென்றாற்போல்வதோர் யாறும் கூடிய கூட்டம் என்றேனும், ஆன்பொருநையும் அதனுடன் இரண்டு நதிகள் கலக்கும் திரிவேணிசங்கமம் என்றேனும் ஆகுமல்லது இம்முக்கூடல் கடலாகாதென்பது அங்ஙனம் நூல்வழக்கும் உரைவழக்கும் இன்மையானும் உணரத்தகும். கொங்குநாட்டுத் திரிவேணி சங்கமம் ஒன்றுண்டென்பது

மன்றலங்கோதையர்பொருட்டுவல்லுழிக்
குன்றினின்னதிகளோர் மூன்றுங்கூடிய
மின்றருதலந் திரிவேணிசங்கம
மென்றனருணர்வினரின்னுங் கேட்டிரால்.

விளம்புமாயாபுரியதற்கு மேற்றிசை
யளந்திடு மூவிருகுரோசமற்றபின்
களங்கொள்காளிந்தியுங்காமர்வாணியுங்
குளிர்ந்தவான்பொருநைநன்னதியுங்கூடுமே.

எனப் பழனிப்புராணத்துள் வருதலானுணர்க.

இனிச் செங்குட்டுவன் மலைகாண்குவமென்று தன்கோப்பெருந் தேவியுடனும், இளங்கோவடிகளுடனும், தன் படைத்தலைவனான வில்லவன் கோதையுடனும், அழும்பில்வேளுடனும், படையுடனும், சேடியர்கூட்டத்துடனும், மற்றைப்பரிவாரங்களுடனும்பெருங்கூட்டமாக எல்லா உபகரணங்களையுங்கொண்டு வஞ்சிமுற்றத்தை நீங்கிச்சென்று பெரியமலைகளுக்கிடையே ஊடறுத்துச்செல்லும் பேர்யாற்றின்கரையின் மணலெக்கரிற்றங்கியிருந்தான் என்று சிலப்பதிகாரக் காட்சிக் காதையாற்றெரிவது. இச்செங்குட்டுவன் வாசத்தலமானவஞ்சியோ ஆன்பொருநையாற்றுக்கரைக்கட் கட்டப்பட்ட கோட்டையினையுடைய தென்பது முற்காட்டியபுறப்பாட்டடிகளாற்றெரியலாம். இதனாற் செங்குட்டுவன் ஆன்பொருநைக்கரையிலுள்ளவஞ்சியை நீங்கி எல்லாருடனுஞ்சென்று பேர்யாற்றங்கரையிற்றங்கியிருந்தானென்றே தெளியப்படுவதாகும். பேர்யாற்றங்கரையிலே வஞ்சியுள்ளதென்று நூல்கள் கூறாமையானும், ஆன்பொருநைக்கரையிலே கருவூர்வஞ்சி எனப் பெயரியஊர் உள்ளதென்றே நூல்கள்கூறுதலானும் ஆன்பொருநைக்கரையிலுள்ள ஓரிடத்தைநீங்கிப் பேர்யாற்றங்கரையிலோரிடத்தே தங்கினானென்றே ஐயமறத்துணியப்படுமென்க. பேர்யாற்றங்கரையினின்று செங்குட்டுவன் தன் வஞ்சிக்குத் திரும்பியதைக்கூறியவிடத்து "வாடாவஞ்சிமாநகர்புக்கபின்" என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் "பொலிவுபெற்றகருவூரிலே திரியச்சென்று அரசன் பேராற்றங்கரையினின்றும்போந்து புக்கபின்" என்று விளங்கவுரைத்ததனையும் நோக்கிக்கொள்க. ஈண்டும் பேராற்றங்கரையினின்றுநீங்கி ஆன்பொருநைக்கரையிலுள்ள தன்னூர்க்குப்புக்கபின் என்று கொள்ளுதற்கே எல்லா நூல்களும்போலத் துணையாவது என்றுணர்க. எங்கேனும் ஓரிடத்துப் பேர்யாற்றங்கரையில் வஞ்சியிருப்பதாகக்கூறியிருந்தாலன்றோ, பிறவிடங்களிலெல்லாம் வஞ்சி ஆன்பொருநைக்கரையிலிருப்பதாகக்கூறுதல்பற்றி இரண்டியாற்றுப்பெயரும் ஓர்யாற்றின் பெயரோ என்கின்ற ஐய

மேலும் உண்டாகும். அங்ஙனம் ஐயுறுதற்கும் நூலாதாரமேனும், உரை யாதாரமேனும் இல்லாமை கண்டுகொள்க. பழனித்தலபுராணத்து மேல்கடலிற்கலக்கும் யாற்றின்வேறாக ஆன்பொருந்தம் காவிரியுடன் கலப்பதாகக் கூறியிருத்தலுங் காண்க. வஞ்சியைக்கூறியபல்லிடத்தும் ஆன்பொருநை அதனைச்சூழ்வதாகவேகூறிப் பேர்யாற்றைக் கூறிய பல்லிடத்தும் வஞ்சியை எவ்விதத்தும் இயைத்துக் கூறாமையான் ஆன்பொருநைக்கும் பேர்யாற்றுக்கும் யாதோரியையும் இல்லையென்றுணர்தலுடன் பேர்யாற்றுக்கும் ஆன்பொருநைக்கரைவஞ்சிக்கும் ஓரியையும் இல்லையென்றும் உணர்ந்துகொள்க. இனி, இளங்கோவடிகளாகியபெருங்கவியரசர், சிலப்பதிகாரமூன்றுகாண்டத்திறுதியிலும், கட்டுரைகளாற் சோழர் பாண்டியர் சேரர் மூவர்க்கும் அவ்வக்காண்டம் முறையேயுரித்தாமாறு காட்டிக் காண்டத்துள்ளன தொகுத்துணர்த்திச் செல்வர். அக்கட்டுரைகளிற் சோழர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தந் தெய்வக்காவிரித் தீதுதீர் சிறப்பும்" எனவும் பாண்டியர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தம் வையைப்பேர்யாறு வளஞ்சுரந்தூட்டலும்" எனவும் அவரவர்யாற்றைச் சிறப்பித்துரைத்தவர், சேரர்சிறப்புரைக்குமிடத்துமட்டும் அவர்யாற்றைக் கூறாமலே விடுத்தது, தம் வஞ்சிப்புறமதிலலைக்கும்பொருநை உபநதியாயிருத்தல்பற்றியேயென் றுய்த்துணரப்படும். காவிரியும் வையையும் முறையே புகார்க்காண்டத்தும் மதுரைக்காண்டத்தும் கூறப்பட்டாங்கு "வாழிவருபுனனீர்த் தண்பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்" என்பதனால் வஞ்சிக்காண்டத்துங் கூறப்பட்டிருக்கவும் கட்டுரையிற் கூறாமை கண்டுகொள்க. இவ்வஞ்சிக்காண்டத்து,

"நெடியோன்மார்பிலாரம்போன்று
பெருமலைவிலங்கிய பேரியாற்றடைகரை"

என்பதனால் வேறே பேர்யாறு கூறப்பட்டிருக்கவும், அதனானும் இக் கட்டுரையிற் சேரரைச் சிறப்பித்தாரில்லையென்றுணர்க. இவற்றிற்குக் காரணம் ஆராயப்புகின் ஆன்பொருநை சோழர்காவிரியையும்பாண்டியர் வையையையும்போலப் பேர்யாறாகாது உபநதியாதல்பற்றியென்றும், சோழர்காவிரியையும், பாண்டியர்வையையையும்போலப் பேர்யாறு அரசர் தலைநகரைத் தன்றுறைக்கணுடைத்தாகாமைபற்றியென்றும் நன்குபுலனாகும். ஆன்பொருநைபோற் பேர்யாறுயின், வையையையுங் காவிரியையுங் கூறினாற்போல வஞ்சிக்காண்டக்கட்டுரையிற்

கூறுவரென்றுணர்க. பன்னூல்களும் பாண்டியன் சோழன் இருவரை யும் முறையே வைகைத்துறைவன், பொன்னித்துறைவன் எனக் கூறிச் சேரனைப் பொருநைத்துறைவன் எனவே கூறுதல்காண்க. பேர்யாற்றுத்துறைக்கண் அவன் தலைநகருடையனாயின் அவனைப் பேர்யாற்றுத்துறைவனெனவே கூறுமென்க. ஆறுடைமையேயன் றித் துறையுடைமையையுங்கருதியன்றே யாற்றுத்துறைவனென் பது. பேர்யாறுடையசேரனைப் பொருநைத்துறைவன் என்பது அவன் அதன்கண்வதிந்து அதன்றுறையை அவனுடையனாயகார ணத்தாலென்றுணர்ந்துகொள்க. இதனானும் பேர்யாற்றங்கரையில் கருவூரில்லாமையும், காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநைக்கரையிற் அவ்வூருண்மையும் உணர்க. பிறர் இவற்றுளொன்றும் ஆராயாது பேர்யாறு, பொருநை என்று சொல்லப்பட்டிருப்பன ஒரே யாறெனக்கூறினர்.

இனி வைகைத்துறைவன் பொன்னித்துறைவன் எனப் பாண்டி யனையும் சோழனையும் நதியாற்பெயரிட்டாளுதல்போலச் சேரனைப் பொருநைத்துறைவன் என ஆளுதலா லிப்பொருநையும் மேலுள்ள வைகை காவிரி இவற்றையொப்பதோர் பேர்யாறேயாமென்றும், உபநதியாயின் அதனாற் பேரரசனைப் பெயரிட்டாளார் என்றும் கருதுவாருண்டு. இதன்பொருட்டு ஈண்டுச் சில கூறுவல். ஒரு நதியால் ஓரரசனைப் பெயரிட்டாள்வது அந்நதியால் அவன்நாடு பயன்படுதலையும், அதனான் அவன் செல்வமெய்தலையும், அதன்கண் அவன் ராஜகிருகமுடையனாதலையும் கருதியேயாகும். இவை ஈண்டுக் கூறிய மூன்றியாற்றுக்கும் ஒக்கும். இங்ஙனங்கொள்ளாது யாறுக ளின் அகல நீளங்களையும், அந்நாட்டுமலையிற்பிறந்து அந்நாட்டுக் கடலில் வீழ்தற்றன்மையினையும்பற்றி யாராயின் இம்மூன்றும் தம் முட் பெரிதும் வேற்றுமையடையும். பாண்டியர்க்கு வைகை முழு தும் உரியதாகும். சோழர்க்குக் காவிரியின் தலை இடை கடைகளிற் கடையாறே யுரியதாகும். சேரர்க்குப் பொருநைமுழுதும் உரிய தாகும். இங்ஙனம் ஆராய்ந்துகொண்டு காவிரியுடையசோழரைக் குறைகூறின் அது பொருந்துமா? என்று அறிஞரேயாராய்ந்து கொள்வாராகுக. நிலமெல்லாம்விளைவித்து உயிர்களனைத்தையும் வாழ்வித்தற்குக்காரணமான தன் நீர்மிகுதியை உவர்க்கடலில் வாளா உகுக்கும் ஒரு மஹாநதியினும், தன்நீர்த்துளியையும் வீணாக்காது உலகுபயன்கொள்ள ஓர்யாற்றிலேகலக்கும் உபநதி சிறந்ததென்று

வாதித்துப் பொருநையே மற்றைவேந்தர்நதிகளினுஞ் சிறந்தது என்று கூறலுமாமே. இம்மூன்றுவேந்தர்க்கும் யாறு பேர்யாறாக வேண்டும் என்று கருதுவார்க்கு மூவேந்தர்க்கும் மூன்றுமலையும் தம்முள் ஒத்துப் பெரியவாதல்வேண்டப்படுமன்றோ? அதற்கென் செய்வது? பாண்டியர் பொதியத்திற்குச் சேரர்கொல்லி தாழ்ந்ததாகும். அக்கொல்லிமலைச் சிறப்பி னாற்பிலொருபங்கும் சிறப்புடையதாகச் சோழர் நேரிமலை கூறப்படவில்லை. இச்சிறுமலையாற் சோழனை நேரியன் எனக் கூறலாமா என்று ஒருவர்வினவின் அதற்குப் பிற ரென்கூறுவாரோ? அவனுக்குள்ளமலைகளி லெல்லாம் அதுவே உயர்ந்ததாதலின் அதனால் அவனைச்சிறப்பித்தாரெனின் ஈண்டும் சேரனுக்குள்ள யாறுகளிலெல்லாம் அதிகப்பயனை அவன் நாட்டுக்குவிளைப்பதும், அவனிருக்கும் வஞ்சிக்கு நீரரணாவதும், அவனாட்டே முழுவதும் உள்ளதும், காமதேனுவந்து நீராடுந் தீர்த்தமாயுள்ளதுமாகிய காரணங்களால் அவனாட்டுள்ளயாறுகள் பலவற்றினும் உயர்ந்ததாக ஆன்பொருநையானே அவனைக்கூறினாரென்க. சேரனாட்டுக்காவிரியும் உண்டேனும் அஃது அவனாட்டு இடையாறேயாதலான் அதனா லவனைப்பெயரிட்டாளுத லில்லையென்க. இவனாட்டுக் காவிரியுண்மையைப் பின்னேவிரித்துரைப்பேன்: ஆண்டுக்கண்டுகொள்க. இளங்கோவடிகள் காவிரிக்கும் வையைக்கும் ஒப்பாகவைத்துக் கட்டுரையிற் கூறினாரில்லையேனும், நூலுள் அவ்வக்காண்டங்களில் அவ்வந் நாட்டியாறுகளையேகூறியாங்கு வஞ்சிக்காண்டத்து "வருபுனனீர்த் தண்பொருநைசூழ்தரும் வஞ்சியார்கோமான்" என உள்ளங்கொண்டு கூறுதல் கண்டுகொள்க. காவிரியை முழுதும் உடைய சோழனாயினும், காவிரியினும் அதிக நீளந் தன்னாட்டோடும் யாறுகள் பிறவற்றையுடையனாயினும் அக்காவேரியானே சோழனைக்கூறுவதெல்லாம் அதனாலவன் அதிகப்பயனை யடைதலானோக்கியும், அவன் அதன்றுறையில் ராஜகிருகமுடைமைநோக்கியுமேயென்று கொள்ளத்தகும். இதனோடு யான் மேற்கூறியகாரணங்களையும்சேர்த்துக்கொள்க. பாண்டியன் தாம்பிரவன்னியை ஜீவநதியாக உடையனாயினும் அத்துறையாற் பெயர்பெறாது தன் மதுரையைக் கரையிலுடைய வையையால் வையைத்துறைவனெனப்படுதலையுநோக்குக. கோசல நாட்டிறைவரை அந்நாட்டுப்பயனுறுத்தும் உபநதியாகிய சரயு என்னும் யாற்றாற் சிறப்பித்தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. பெருஞ் சிறப்புடைய

பொருநையைப்பற்றிப் பேர்யாற்றுக்குள்ள குணங்களை மறந்தாரெனலாகாது. அதனைப் பெருமலையிலங்கிய பேர்யாறெனவும், அது வறனுறுகோடையினுந் தீநீரொழுகுவதென்றும், அதனானும் கழனி விளைவுண்டென்றும், அது இருகரையும் வழிந்துசெல்லும் பெருநீரையுடையதென்றும் வருணித்தே செல்வர். இதனாற் பண்டைப் புலவர் அதனதன்குணங்களை யுள்ளவாறுகண்டு எதனால் ஓரரசனைச் சிறப்பித்தால் எல்லாப்படியானும் பொருந்திற் றென்றுகொள்ளப் படுமோ அதனானேசிறப்பித்தா ரென்றறிந்துகொள்க. இதனாற் சேரனுக்குள்ளயாறுகள்பலவற்றினும் சிறந்தது ஆன்பொருநை என்பதனை ஆராய்ந்துணர்ந்தே புலவர் அவனைப் பொருநைத் துறைவன் எனப்பெயரிட்டாண்டாரென்றுணர்க.

இனிப் பதிற்றுப்பத்திற் பேர்யாறு என்பது அயிரைமலையிற் பிறப்பதாக,

> "துவைத்த தும்பை நனவுற்று வினவு
> மாற்றருந் தெய்வத்துக் கூட்ட முன்னிய
> புனன்மலி பேரியா றிழிதந் தாங்கு" (பதிற்-88

என்பதனாற் கூறப்படுவது. ஈண்டு உரையாளர் "தெய்வத்துக்கூட்ட முன்னிய யாறென்றது அத்தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரைமலையைத்தலையாகக்கொண்டு ஒழுகப்பட்ட யாறென்றவாறு; தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரை தெய்வத்துக்கூட்டமெனப்பட்டது" என விளக்கினர். இவ்வயிரைமலை இவ்விடத்தது என்றும், இவ்யாறு இன்னதென்றும் விளக்குவல். பதிற்றுப்பத்துரையாளர், மூன்றாம்பத்துப்பதிகத்து "அயிரைபரைஇ" என்றது, 'தன்னாட்டு அயிரைஎன்னும் மலையில்வாழுங் கொற்றவைக்கடவுளைத் தன்குலத்தார்செய்துவரும் வழிபாடுகெடாமல் தானும்வழிபட்டு எ-று.' என வுரைத்தார். "உருகெழுமரபினயிரைமண்ணி" என்னுஞ்சிலப்பதிகார நடுகற்காதையடிக்கண் அரும்பதவுரையாசிரியர் "அயிரை-ஓர்யாறு; அதிலேகுளித்து" எனவுரைத்தார். இவ்விருவுரையானும் அயிரை சேரர்குலம்வழிபடும் கொற்றவைக்கடவுளையுடையதோர் மலையெனவும், அப்பெயருடையதோர்யாறெனவும் தெளியலாம். இவ்வயிரையாறு அயிரைமலையிற்பிறத்தல்காரணமாகவே அப்பெயரெய்தியதென்றெளிதிலுணரத்தகும். இவ்வயிரைமலை யாண்டையதென்றாராய்வேன். பழனிக்கு 9 மைல் தூரத்தில் இரட்டையம்

பாடிச் சேகரத்து ஐவர்மலையென வழங்குமிடத்துக் கிடைத்த வரகுணன் காலத்துச் சாசனத்தில் "சகாயாண்டு எழுநூற்றுத்தொன்னூற்றிரண்டு போந்தன வரகுணற்கு யாண்டு எட்டு குணவீரக் குரவடிகள் மாணுக்கர் கழுத்துச்சாந்தி வீரக்குரவர் திருவயிரைப் பாரீச்வபடாரரையுமியக்கி அவ்வைகளையும் புதுக்கி இரண்டுக்கு முட்டாவவியுமோரடிகளுக்குச் சோறாக அமைத்தான்பொன் ஐந்நூற்றைந்து காணம்"(The Annual Report on Epigraphy No. 705 of 1905)

எனவருதலான் இப்பக்கத்துள்ள ஆனைமலையே அயிரைமலையென்று தெரிவது. இவ்வானைமலை இந்நாவலந்தீவில் இமயம் ஒழிய எல்லாமலையினுமுயர்ந்ததென்பது வல்லார்வாய்க் கேட்டுணர்க. இதன்கண்உள்ள ஆனைமுடிச்சிகரம் 8840 அடி உயரம் உடைத்தாதலால் இதன் உண்மை அறியலாம்.

இவ்வைவர்மலையிலுள்ள மற்றொரு சாசனத்தில் (*Ibid* 1905 & 6 பார்க்க) அயிரைமலை, பேரியாறு, கோதை மங்கலம், வையாவி நாடு, கொழுமம் முதலிய பெயர்கள் வந்துள்ளன. இவ்விரு சாசனப்பகுதிகளாலும் ஆனைமலைதான் அயிரைமலை யென்றும், அதிலுண்டாகும் யாறுதான் பேரியாறென்றுந் தெரியக் கிடக்கின்றது. இவ்வானைமலையிலுண்டாகின்ற யாறு வானியாறென்ற பெயருடன் கோயமுத்தூர் ஜில்லாவிலோடிப் பாலக்காட்டு வழியாகப் பொன்னுணியென்ற பெயருடன் குட்டநாட்டிற்புக்குத் திருநாவாய்ச் சேத்திரத்தைப் படுத்துச் சென்று பொன்னுணியென்னுமிடத்து மேல் கடலில் சங்கமிக்கின்றது. இந்த யாறே பேரியாறென்று சிலப்பதிகாரக் காட்சிக் காதையில் அரும்பத உரையாசிரியர் கூறியபடி பண்டே வழங்கியதென்பதற்குரிய பிரமாணங்களை இங்குக் காட்டுகின்றேன்.

Carnatica Indica என்னும் கன்னடதேச சாசனத்தொகுதியில் அரிசில்கரைச்சேகரத்து (No. 82 of 1184 A. D) என்று குறிப்பிட்ட சாசனத்தில் ஜாந்நவியாகிய கங்கையானவள் காவிரிக்குத் தென்பாலுள்ள கேரளபூமியில் அநுக்ரகிக்கவேண்டி அத்தேயமலையிற் பேரியாறென்னும் பெயருடன் உற்பத்தியாகி ஓடுகின்றாளென்றும், அதன்கரையில் கொளமுக நகரமுள்ளதென்றும் கூறுகின்றது. இச்சாசனத்திற் கூறியபடியே மேற்கூறிய பொன்னுணித்

தாலூகாவிற் பொன்னுணி நதியையடுத்துக் கொளமுக்கு என்னும் பெயருடன் அந்நகருண்மை இன்றைக்குங் காணலாம். இதனுற் கொளமுக நகரத்தை அடுத்துள்ளது பேரியாறென்று தெளியப்பட்டது. இதனுற் பொன்னுணியின் பழைய பெயர் பேரியாறென்று தெரியலாம்.

கேரளோத்பத்தி யென்னும் நூலிற் பேரியாற்றின் வடகரையில் திருநாவாய் என்னுஞ் சேத்திரமுள்ள தென்றும், அந்த யாற்றிற் பன்னிரு வருஷத்திற்கொருமுறை நிகழும் மகாமகவிழாவிற் கங்கைவருவளென்றுங் கூறியுள்ளது காணலாம். இதனை லோகன் துரை யெழுதிய 1906 ஞ அச்சான மலையாள மான்யூல் 228-ஆம் பக்கத்திற்காண்க.

இதனுல் திருநாவாயை யுடைய பொன்னுணியே பேரியாறுதல் தெள்ளிது. சென்னை கவர்மெண்டு கையெழுத்துப் புத்தகசாலையில் மெக்கன்ஸீ துரையவர்கள் தொகுத்த பலவற்றுள் ஆனைமலைக் கைபீது என்றென்றுள்ளது. அவ்வானை மலையிலுள்ள புளிஞர்கள் (பளிங்கர்கள்) ஆனைமலைவளத்தைப்பற்றிக் கூறி, ஆண்டுள்ள அக்காமலை, தங்கச்சிமலை இரண்டிற்கு மிடையே ஓடுகின்றயாறு பேரியாறென்று வழங்கியதாக எழுதியிருத்தலைக் காணலாம். இதனுலும் மலையின் கீழே வாளையாறென்றும், பாலக்காட்டுக்கப்பாற் பொன்னுணி யென்றும், இப்போது பெயருடைய பெரிய யாறே பேரியாறென்று அம்மலையில் வழக்குடைய தெனத் தெரிகின்றது. இந்த ஆனைமலையில் உண்டாவனவாக அப்புளிஞர் கூறிய பலவகைப் பொருள்களுஞ் சிலப்பதிகாரத்திற் குன்றக்குறவர் செங்குட்டுவனுக்குத் திறையாகக் கொண்டு கொடுத்த பொருள்களும் பெரும்பாலுந் தம்முளொத்திருத்தலை ஆச்சரியத்துடன் இக்கைபீதிலே கண்டேன்.

இதனுற் செங்குட்டுவன் வஞ்சியினின்று மலைகாண்குவமென்று சென்று கண்டுதங்கிய மலை இவ்வானைமலையே யென்றும், அதன்கண்ணுள்ள பேரியாற்றடைகரை பொன்னுணி நதி உற்பத்தித் தானமென்றும், ஐயமறத்தெளிந்து கொள்ளலாம். நெடுவேள் குன்றமாகிய பழனிமலைக்கு மிகவும் அணித்தாக ஆனைமலை யிருத்தலையும் நன்குநோக்கிக்கொள்க. கொங்குவஞ்சியிலுள்ளார்க்கே

இஃது அடைதற்கும், குறவர்வாய்க் கண்ணகி செய்தி கேட்டற்கும் எளியதாதலும், போக்கு வரத்திற்கு ஏற்றதாதலும் நன்கு காண்க.

சாசனத்தால் அயிரைமலையென்று தெளியப்பட்டது ஐவர்மலை யென வழக்குப் பெற்றதன்காரணம், சிவபிரானும், உமாதேவி யாரும், முருகவேளும், திருமாலும், அயனும் ஆகிய ஐவர் இம்மலை யில் ஒவ்வோர் குன்றாக உருவெடுத்துப் போற்றப் படுகின்றாரென்று புராணம் உரைத்தல்பற்றியென்று துணியப்படும். (பேரூர்ப்புராணம் காமதேனு வழிபடுபடலம் பார்க்க) இப்பேரூர்ப்புராணம், காமதேனு இம்மலையிற் போந்து நெடுங்காலம் வதிந்து இவ்வைந்து தெய்வக் குன்றுகளையும் போற்றிவழிபட்டது--என்று கூறுதலான் அக்காமதேனு வதிந்த சிறப்புப்பற்றி அதன்பெயராகிய அயிரா வை ரபியென்பது அயிரை யெனப்பட்டு இம்மலைக்கு வழங்கலாயிற் றென ஊகித்தலாகும். இரா என்பது வடமொழியிற் கடலுக்குப் பெயராதலால் அதன்கட் பிறந்தது காமதேனுவாதல்பற்றி அயிரா என்ப. இஃது அயிரையாதல் தெரிக. இப்புராண விம்மிதப்பட லத்து இம்மலையில் நாற்கோட்டு யானைகள் உண்டென்று கூறுத லான் இச்சிறப்புப்பற்றி ஆனைமலை யெனவும், குஞ்சரகிரியெனவும் வழங்கப்பட்டு இதனால் அயிராவதமலையாகக் கொண்டு அயிரா வதத்தை அயிரையென திரித்து வழங்கியதாமோ வென ஊகிக்க வும் இடந்தருகின்றது. இம்மலையைப் பதிற்றுப்பத்து எண்பத்தெட் டாம் பாட்டில் "தெய்வத்துக் கூட்டம்" என்று பெயரிட்டுக் கூறி னார். அதற்கு உரைகாரர் கொற்றவைத் தெய்வங் கூடியுறைதல் பற்றி அயிரைமலை தெய்வத்துக் கூட்டம் என்று கருதினார். தெய் வத்துக்கூட்டம் என்று பதிற்றுப்பத்து நூலார் இவ்வயிரை மலையை வழங்கியது மேற்காட்டியபடி ஐந்து தெய்வங்களும் கூடியுறைதலை உடையதாதல்பற்றி யென்று நினைப்பது மிகவும் பொருத்த முடைத் தாகின்றது. இம்மலையில் முருகவேளுருவாகிய குன்றையே கண் ணகி அடிவைத்தேறிய நெடுவேள்குன்று எனக் கூறினும் நன்கு பொருந்தும். குறவர் இவள் வானுலகெய்திய செய்தியை இம்மலையிற் பேரியாற்றடைகரைத் தங்கிய செங்குட்டுவனுக்குச் சொல்லு தற்குப் பொருத்தமான இடமாகவும் இதனையுணர்ந்து கொள்க.

இனி இவ்வயிரைமலையில் பஞ்சபாண்டவர்கள் கரந்து உறைந்த போது தங்கினார் என்றும், அதனால் ஐவர்மலையெனப்பட்ட தென் றும், இதற்கேற்ப நச்சுப்பொய்கை யென்னுஞ் சுனையும், பழம்

பொருந்திய இடமும், இன்றைக்கும் பெயர்பெற்று வழங்கப்படுவன வென்றும் இம்மலைப்புறத்தோர் கூறுகின்றனர். கபிலர் பதிற்றுப் பத்து ஏழாம்பத்தில்

" மாடோருறையு முலகமுங்கேட்ப
விழுமென விழிதரும் பறைக்குரா லருவி
முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்று
மயிரை நெடுவரை"

எனக் கூறியதற்கேற்பவே பக்கத்து நாடெல்லாங் கேட்ப ஒலிக்கும் அருவி வீழ்ச்சி உள்ள இடத்தை இன்றைக்கும் 'பழம் பொருந்தல்' என்று இம்மலைப்புறத்தோர் வழங்குகின்றனர்.

இனிச் சுள்ளியம்பேரியாறென்பது சிவகிரியடுத்த மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி, மலையிலே பெரும்பான்மையுமோடி மேல் கடற்பக்கத்து நாட்டில் 35 மையில் தூரமே பாசனத்திற்குப் பயன்பட்டுக் குரங்கனூரில் சங்கம மாகின்றதொன்று. இச்சுள்ளியம் பேரியாற்றிற்கும், ஆனைமலையிற்றோன்றிப் பேரியாறென்பதே பழைய பெயராகவுடைய பொன்னணி நதிக்கும் யாதோரியைபு மில்லையென்று கண்டுகொள்க. மலையாளத்திலுள்ள எல்லா யாறுகளிலும் இப்பொன்னணி யென்பதே பெரியயாறுதல் தெளிக. பொன்னணியென்பது பூர்ணவாகினி யென்பதன் மரூஉமொழி.

குரங்கனூர் என்று கொடுங்கோளூரை வழங்கியது, முசுஸ்ரீ நகரமாதலால். முசிரியென்பது முசு ஸ்ரீயின் மரூஉ. (முசு—குரங்கு) கோகிலசந்தேச நூலார்* இதனை அஞ்சனகளபுரி யென்று வழங்குவர். அஞ்சனை-அனுமன் தாய். சுள்ளியம் பேரியாறு முசிரித்துறையிலே கடலுடன் கலப்பதென்று தெரிக. பொன்னணித்துறைக்கு நெடுந்தூரந் தெற்கே முசிரித்துறை உள்ளதும் காண்க. இம்முசிரியே அஞ்சைக்களமென்பது "முசிரிக் கோட்டு அஞ்சுவண்ணம்" எனவரும் சாசனவாக்கியத்தால் (மலையாள சாசனங்கள்) அறிடலாம்.

* A. D. 1400-ம் ஆண்டில் உத்தண்டகவி செய்தது கோகிலசந்தேச நூல்.

இனி, "நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டு
மலிபுனனிகழ்தருந் தீநீர்விழவிற்
பொழில்வதிவேனிற் பேரெழில்வாழ்க்கை
மேவருசுற்றமோடுண்டினிது நுகருந்
தீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறை மணலினும்பலவே" (பதிற்-48)

என்பதை எடுத்துக்காட்டி "நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும்" என்றதையே பெருந்துணையாகப்பற்றிக் காஞ்சி, பேர்யாற்றுக்குப் பெயரென்று துணிந்தாருளர். இதுபற்றி இவ்வடிகளை ஈங்கு ஆராய்வேன். இவ்வடிகட்குப் பதிற்றுப்பத்துரையாளர் உரை கூறியவிடத்து நின்மலைப்பிறந்து நின்கடன் மண்டுமலிபுனல் என்புழி "மலிபுனலே யுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது" எனவும், "நிகழ்தருந்தீநீரென்றது அவ்யாறுகளிலே புதிதாகவருகின்ற இனியபுதுநீர் எ-று" எனவும் விளக்கினார். இதனால் நின்மலைப்பிறந்து நின்கடன் மண்டும் காஞ்சியென்றியைத்தல் அவர் கருத்தன்றென்றும், நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும் மலிபுனல் (யாறு) என்றுள்ளவாறியைப்பதே கருத்தென்றும், அங்ஙனமலைப்பிறந்து கடன்மண்டும் யாறுகள் பலவென்றும், ஓர்யாற்றின்மட்டுமன்றிப் புதுப்புனல்விழவு கொண்டாடப்படுவது எல்லாயாறுகளிலுமுண்டென்றும், அவ்விழாக்காலத்து நிகழுநிகழ்ச்சியை இவ்வடிகள் கூறுவன என்றும் நன்குணரலாம். மலிபுனல் என்பது யாறாயினபடியாற் பெருந்துறை அவ்யாறுகளுடையவாகும். அப்பெருந்துறைகளைக் காஞ்சியம்பெருந்துறை யென்றது புனலாடுதற்குரியமகளிர் அணிந்து விளையாடுதற்குத் தளிரும் முறியும் தாதும் பூவும் தரவல்ல காஞ்சிமரங்களை ஆண்டுடைமையான் எனவறிக. இவ்வுண்மை

" மணன்மலிபெருந்துறைத்ததைந்தகாஞ்சியொடு
முருகுத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை" (பதிற்-23)

எனவருதலா னுணரப்படும். ஈண்டுரையாளர் "ததைந்தகாஞ்சியென்றது விளையாட்டுமகளிர்பலருந் தளிரும் முறியுந்தாதும் பூவுங்கோடலாற் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சி எ-று" எனவுரைத்ததனையு நோக்கிக்கொள்க. ஈண்டைக்கேற்ப மணன்மலிதல் கூறியதனையும் பெருந்துறைகூறியதனையும் அப்பெருந்துறைகளிற் காஞ்சி ஆயம்

அணிதற்கும் விளையாடுதற்கும் பயன்பட்டு நிற்றலையும் நன்றாராய்ந்து கொள்க.

> " காஞ்சிப்பனிமுறியாரங்கண்ணிக்
> கணிமேவந்தது"......... (344)

எனப் புறப்பாட்டின்வருதலான் "காஞ்சியின் குளிர்ந்தமுறிகளை பகளிரணிதலுண்டென்பது உணரப்படும். "காஞ்சியம் பெருந்துறை மணலினும்பலவே" என்புழிக் காஞ்சிமரமாகாது யாறுயின் உரையாளர்—மலிபுனலையுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது என்றுரைகூறுது—மலிபுனற்காஞ்சி என இயைத்துப் பொருள் கூறுவர் என்பதும் உய்த்துணர்ந்துகொள்க. புனலாடும் ஆயம் தாம் அணிந்து விளையாடுதற்கேற்ற மரங்களுள்ள துறைகளையே விரும்பிச்செல்லுமென்பதும் உணர்ந்துகொள்க. இவையெல்லாம் ஆராயாது ஈண்டுக் காஞ்சி யாற்றின்பெயரென்றும், அவ்யாறு மேல்கடலில் வீழ்வதென்றும், அங்ஙனம் வீழ்வதென்றுகொள்ளினும் . அது வேறுயாறேயாகாது சுள்ளியம் பேர்யாறேயாகுமென்றும் துணிவது எத்துணை வாதத்துக்கு இடமாகும் என்பது யான்கூறியறியவேண்டுவதன்று. இதுவும் பொருநையென்பது பேர்யாற்றுக்குப்பெயரென்று துணிந்ததனோடொக்கும். சுள்ளி-கடம்பு ஆதலால் சுள்ளியாறு காஞ்சி யாறு ஆகாமையுங் கண்டுகொள்க. எவ்வாறு நோக்கினும் பிறர் நினைக்கின்றவண்ணம் பொருநை என்பது சுள்ளியம் பேர்யாறு ஆகுமென்று கனவினு நினையற்க. இதனானே பொருநையின் கரையிலுள்ள சேரர்கருவூர்வஞ்சி சுள்ளியம்பேர்யாற்றங்கரைக்கு எவ்வாறு முயன்றாலும் எய்தாதென்பதும் திடமாகவுணர்ந்து கொள்க. பிறர் நூலின்றியும், உரையின்றியும், வழக்கின்றியும் பொருநையைச் சுள்ளியம் பேர்யாறென்று சொல்லத் துணிந்ததெல்லாம் காவிரியுடன் கலக்கும் பொருநைக்கரையிலுள்ளதென்று பன்னூலும் உரையும் புலப்படுத்திய கருவூர்வஞ்சியைப் பேர்யாற்றங்கரையிலுளதாகக் கூறிவிடுவதற்கேயாமென்பது அறிவாளரெல்லாம் அறிவர். அங்ஙனம் அவர் கூறிவிட்டாலும் வஞ்சி யங்கேயுளதாகுமோ என்று ஈண்டுச் சிறிதாராய்வேன்.

இனிச்சுள்ளியம் பேரியாறு கடலொடு கலக்குமிடத்து உள்ளதாகப் பலழய சங்க நூல்கள் கூறிய ஊர் முசிரி என்பது.

"சுள்ளியம்பேர்யாற்று வெண்ணுரைகலங்க
யவனர் தந்தவினைமாணன்கலம்
பொன்னொடுவந்துகறியொடுபெயரும்
வளங்கெழுமுசிறி" (அகம்-149)

என்னும் அகப்பட்டான் அறியலாவது. கொடுங்கோளூர் அஞ்சைக்களம் ஈண்டுச்சொல்லப்பட்ட அடையாளமுடையதாயின் அது முசிறியேயாமன்றிச் சேரர் கருவூர்வஞ்சியாதல் யாங்ஙனம்? முசிறியும் வஞ்சியும் ஒரூராகச் சொல்ல வொண்ணாதே. பிறர், சேக்கிழார் கூறிய கொடுங்கோளூர்வஞ்சியைப் பழைய சேரரது தலைநகராக்க வேண்டுதலான் அக்கொடுங்கோளூர்வஞ்சி கடற்கரையிடத்ததென்று தேவாரத்தானும், கண்கூடானும் கண்டதுகொண்டு எந்நூலினும் யாரும் கடற்கரையிடத்ததென்று கூறுததும், சோழநாட்டுப்பக்கத்தேஉள்ளதென்று தெளிந்ததும், கொங்குநாட்டு ஆன்பொருநைக்கரையிலுள்ளதுமாகிய பழையசேரர் தலைநகரைக் கடற்கரையிடத்ததென்று கற்பிக்கத்தலைப்பட்டனர். கடற்கரையைக் கற்பித்தவிடத்தும் அதுவும் போதாது ஆன்பொருநைக்கரை வேண்டுதலான் ஆன்பொருநையை மேல்கடலில் விழவிடுதற்கு இயலாமையால் ஆன்பொருநையே பேர்யாறு என்று சொல்லிவிடலாமென்று துணிந்தனர். அப்பிறர் கூறுகிறபடி பேர்யாற்றுக்கரையும் ஆன்பொருநைக்கரையும் கடற்கரையும் ஒன்றெனநினைத்துக்கொண்டவிடத்தும் ஆண்டுள்ளது சேரர்தலைநகராகிய கருவூர் வஞ்சியாகாது, சேரர்கடற்றுறைப்பட்டினமாகிய முசிறியேயாய் முடிகின்றது. இதற்கென் செய்வது? இல்லது துணியுமிடத்து உண்டாந் தடுமாற்றம் இத்துணையோ?

இங்ஙனம் ஆன்பொருநைக்கரையையும், கடற்கரையையுஞ் சேர நினைப்பதன்கணுண்டாம் விபரீதங்களை இனி விளக்கிக்காட்டுவேன். சேரர் தலைநகராகிய கருவூர்வஞ்சியுள்ள இடத்தை,

"வஞ்சிப்புறமதிலலைக்கும்
கல்லென்பொருநைமணலினுமாங்கட்
பல்லூர்சுற்றியகழனி
யெல்லாம்விளையு நெல்லினும்பலவே" (புறட்-387)

என்னும் அடிகள் நன்குவிளக்குவனவாகும். இவ்வடிகளிற் சேரர்தலைநகரின் புறமதிலைப் பொருநையென்னும்யாறு அலைக்கும் என்றும், அப்பொருநை அங்ஙனமலைத்தல்காரணமாகக் கல்லென ஒலிக்குமென்றும், ஒருபெரியகோட்டையின்மோதுதலான் அதிகமாக மணலைக்கரையிற்குவிக்குமென்றும், இவையெல்லாநிகழுமவ்விடத்துப் பலவூர்கள் சுற்றியுள்ளனவென்றும், அவ்வூர்களெல்லாம் மிகுதியாக நெல்விளைகழனியுடையன என்றும் சில அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வடையாளங்களை ஓர்கடற்கரையூர் உடையதாகுமா அல்லது அகநாட்டூர் உடையதாகுமா என்று சிறிதாராய்வேணுக. சேரர்தலைநகர் கடற்கரையிடத்ததென்பார்க்கு அஃது ஆன்பொருநைக்கரையிலுள்ளதென்று தெளிந்தவாற்றான் அவ்வூர் ஆன்பொருநை கடலொடுகலக்குமிடத்திருப்பதாகத்தானே துணிய வேண்டும். அங்ஙனமாயின், ஆண்டுப் பெருமணலுலகமென்று கூறப்பட்ட கடற்கரைமணலே அளவின்மைக்குவிஷயமாகவும், அதனைக்கூறாது அதனினும் எத்துணையோசிறிதாகக்கருதப்படும் பொருநைகுவித்தமணலை அளவின்மைக்குவிஷயமாக்குவது உசிதமாகுமா? இதுகாறுங்கண்ட தொன்னூல்களில் எங்கேனும் ஆறு கடலொடுகலக்குமிடத்து அவ்யாறுதொகுப்பது பெருமணலென்று கூறியதுண்டா? யாறுகடலொடுகலக்குமிடத்துக் கடற்கரைமணலையுங் கடலுட்கொண்டு செல்லுதலான் கடற்கரையையுமெலியச்செய்தலன்றி அக்கடற்கரையின்கண் மணலை யாறு குவிக்குமா? காவிரி கடலொடு கலப்பதைப்பற்றிச்சொல்லுமிடத்துக் "கடற்கரை மெலிக்குங்காவிரிப்பேர்யாறு" என்றன்றோ புலவர் கூறுகின்றனர். கடலுள்ளவிடத்துக் கடற்கரைமணலையே கூறுவரென்பது,

... ... ... தாழ்நீர்
வெண்டலைப்புணரியலைக்குஞ்செந்தி
னெடுவேணிலைஇயகாமர்வியன்றுறைக்
கடுவளிதொகுப்பவீண்டிய
வடுவாழெக்கர்மணலினும்பலவே"

என வருதலானறிக. கடலுள்ளவிடத்து ஆறலைத்தல்கூறாது புணரியலைக்குஞ்செந்தில் என்றதனையும் நோக்குக. இஃதன்றியுங் கல்லென்பொருநை என்று கூறுதலால் யாறு கல்லென ஒலித்தலைப் புலப்படுத்துகின்றார்; ஆண்டு ஆர்கலியன்றோ பெரிதாகும். அத

ஞ்சியைக்கூருது யாற்ருெலியையே மிகுத்துக்கூறுதல் பொருந்துமா. இனி "அலைக்குங் கடலங்கரைமேன்மகோதை" என்றன்றோ சுந்தரமூர்த்திநாயனுர் கொடுங்கோளூரஞ்சைக்களத்தைப் பாடுகின்ருர். அவர்பாடியவாறு கடலலைப்பதைக்கூருமல் அவ்வூரையே யாறலைப்பதாகக் கூறியதென்னே. இது நிற்க. "ஆங்கட், பல்லூர் சுற்றியகழனி யெல்லாம்விளையுநெல்லினும்பலவே" என்று கூறிய அடையாளம் ஒருகடற்கரையூர்க்குப் பொருந்துமா? கடற்கரையூரைப் பல்லூர் சுற்றுதலெப்படி? இதனுலிவ்வடிகளிற்கூறிய அடையாளங்களிலொன்றேனும் கடற்கரையூர்க்குப்பொருந்தாதென்றும், எல்லாம் அகநாட்டூர்க்கே பொருந்துவன என்றுமுணருமாற்ருன் ஈண்டுக்கூறியவஞ்சி கடற்கரையிலுள்ள மகோதையாகிய கொடுங்கோளூராகாமையும், கொங்குநாட்டு ஆன்பொருநைக்கரையிலுள்ளகருவூரேயாதலும் தெளிந்துகொள்க. இவ்வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

> ... ... ... கோமகன்
> வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
> யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்"

என மகோதையாகிய கொடுங்கோளூரின் வேருக வஞ்சியைக்கூறினுரெனவுணர்க. இதைப்பற்றி மேலும் விளக்குவல்.

இனிப் பழைய சேரர்தலைநகராகிய வஞ்சி மேல்கடற்பக்கத்ததாமென்றற்கு ஆதரவாக ஒருசெய்தி கூறுவார்பிறர். அஃதாவது பராசரனென்னும் அந்தணன் சோணுட்டுத்தலைச்செங்காட்டினின்று சேரன் கொடைத்திறங்கேட்டுப் பரிசில்பெறப்போம்போது

> "காடுநாடுமூரும்போகி
> நீடுநிலைமலயம்பிற்படச்சென்ருங்கு" (சிலப்-கட்டுரை.)

என்பதனுல் பொதியமலையைக்கடந்துசென்ருனெனவும், பரிசில் பெற்று மீளும்போது "செங்கோற்றென்னன்றங்காலூரிற் போதிமன்றத்து" த்தங்கியிருந்தானெனவும் சிலப்பதிகாரம் கூறுதலாற் சேரன் தலைநகர் மேல்கடற்பக்கத்திருந்தாலல்லது சோணுட்டுப் பார்ப்பான் போம்போது பொதியத்தைக் கடந்துபோதலும், மீளும் போது பாண்டிநாட்டூராகிய திருத்தங்காலிற்றங்குதலும் நிகழா

வென்பதேயாம். சிலப்பதிகாரத்து இப்பராசரன் செய்தி கூறிய விடத்து,

> "வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
> குலவுவேற்சேரன் கொடைத்திறங்கேட்டு
> வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்த
> திண்டிறனெடுவேற்சேரலற்காண்கென
> ... ... ... ...
> நீடுநிலைமலயம்பிற்படச்சென்று.........
> பார்ப்பனவாகைசூடியேற்புற"
> நன்கலங்கொண்டு தன்பதிப்பெயர்வோன் (சிலப்-கட்டுரை)

என வருதல்காணலாம். ஈண்டுக்கூறப்பட்ட சேரன் எக்காலத்தவனென்றும், யாவன் என்றும் வினவியறியவேண்டுவ தின்றியமையாதது. இப்பார்ப்பான் சேரன்பாற்பரிசில்பெற்றுமீளும்போது பாண்டிநாட்டுத் திருத்தங்காலென்னுமூரிற் போதிமன்றத்துத் தங்கியிருந்துழி அவன் ஆண்டுவந்து விளையாடும்பார்ப்பனச்சிறாரைநோக்கி, என்னுடன் வேதமோதவல்லீராயின் ஓதி என்பரிசிற்சிறுபொதியைக் கொள்ளுக என்றவளவில் அவ்வூர் வார்த்திகன்புதல்வன் தனக்கொப்ப ஓதலான் அவனைவியந்து தன்பொதியின்கணுள்ள முத்தப்பூணூலத்தகுபுனைகலன் கடகந்தோட்டொடு பிறவும் அச்சிறுவற்குக் கையுறையீத்துப்போக, நிகழ்ந்ததுதெரியாது கோத்தொழின்முறையவர் பாண்டியற்குரிய படுபொருள்கவர்ந்த பார்ப்பானிவனென்று அப்புதல்வன்றந்தையாகிய வார்த்திகனைச் சிறையிலிட அவ்வார்த்திகன்மனைவி அலந்தழுதேங்கிப் புரண்டுபுலந்துபொங்கினளாக, அது கண்டு ஐயைகோயிற்கதவுதிறவாதாக, இதுகேட்டுப் பாண்டியன் மயங்கிக் கொற்றவைக்குற்றது அறிந்துரைமின்னென வார்த்திகனைச்சிறைசெய்தசெய்திகூறக்கேட்டு, இறைமுறைபிழைத்ததுணர்ந்து வார்த்திகனைப்பொறுத்தருளுமாறு இரந்து அத்திருத்தங்காலையும் வயலூரையும் அவற்கீத்து அவனை நிலந்தோயவணங்கியவளவில், அச்சிந்தாதேவிகோயிற்கதவந்திறந்தது; திறந்தவுடன் உறுபொருளேனும் படுபொருளேனும் இனியுற்றவர்க்குறுதி பெற்றவர்க்காகுமென்று யானைமேன் முரசறைவித்தான். அங்ஙனம்,

"யானையெருத்தத் தணிமுரசிரீஇக்
கோமுறையறைந்த கொற்றவேந்தன்
றன்முறைபிழைத்ததகுதியுங்கேணீ" (சிலப்-கட்டுரை)

என்று கண்ணகியைநோக்கி மதுரைமாதெய்வங்கூறுதலான் இப்பராசரனீந்த பொருள்காரணமாகச் சிறைப்பட்ட வார்த்திகனைச் சிறைவீடுசெய்து உவப்பித்துக் கலையமர்செல்விகதவந்திறப்பித்தவன் கோவலனைக்கொல்வித்து அரசுகட்டிலிற்றுஞ்சிய நெடுஞ்செழியனேயென்பது நன்றுதெளியப்படும். இப்பாண்டியன்காலத்துச்சேரன் செங்குட்டுவனென்பது சிலப்பதிகாரம்வஞ்சிக்காண்டத்தானறியப்படும். பராசரனுக்குப்பரிசினல்கியசேரன் இச்செங்குட்டுவனேயாயின், இளங்கோவடிகள் இவனை விளங்கவுரையாதிரார். மற்றிவன் காலத்தே சேரன் வேறுளனோ என ஆராய்வோம். செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மணக்கிள்ளி என்பாளுக்கும் பிறந்தமகனென்பது பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தாலறியப்படும். நெடுஞ்சேரலாதனுக்கும் வேளாவிக்கோமான்பதுமன்றேவிக்கும் பிறந்தமகன் ஆடுகோட்பாட்டுச்சேரலாதனென்பது பதிற்றுப்பத்து ஆறாம்பத்தாலறியப்படும். இதனாற் சேரன் செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் ஒருதந்தையின் புதல்வராவர். இவருட் செங்குட்டுவன் வஞ்சியிலரசுசெய்தவன் என்பது சிலப்பதிகாரத்தானன்கு தெளிவது. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் மேல்கடற்கரையையடுத்துள்ள நறவு என்னும் ஊரின்கண் இருந்தவன் என்பது பதிற்றுப் பத்து ஆறாம்பத்தால் நன்கறியப்படுவது: இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதனே இளங்கோவடிகளாற்கூறப்பட்ட வேற்சேரனென்பதற்கும் ஆதரவாகச் சில கூறுவல்.

சிலப்பதிகாரத்து இச் சேரனைப்பற்றியவிடத்துக் 'குலவுவேற் சேரன் எனவும், 'நெடுவேற்சேரன்' எனவும், 'வண்டமிழ்மறையோற்கு வானுறைகொடுத்தவன்' எனவும், இவன் கொடைத்திறங் கேட்டுப் பராசரன் சென்றானெனவுங் கூறியுள்ளார். இதன்கட் கூறப்பட்ட வண்டமிழ்மறையோற்கு வானுறைகொடுத்தவன் இமயவரம்பன்றம்பியென்பது மூன்றாம்பத்தா னன்கறியப்பட்டது. செங்குட்டுவற்கு முன்னே இறந்த சேரர்வரிசையில்,

" நான்மறையாளன்செய்யுட்கொண்டு
மேனிலையுலகம்விடுத்தோனாயினும்"

... ...

" மீக்கூற்றாளர்யாவருமின்மையின்
யாக்கைநில்லாதென்பதையுணர்ந்தோய்'

என்பதனால், இமயவரம்பன்றம்பியையுங் கூறியவாற்றான் அம்முன்னோன்செய்தியாவிவனைச் சிறப்பித்ததன்றி இவன் அவனுகாடுனன் பது நன்குணரப்படுவதாகும். இஃதொன்றொழியவுள்ள அடையாளங்கள், வேறும் கொடைத்திறமுமேயாகும். ஆறாம்பத்து முதற் பாட்டில் இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதனை,

" வென்வேலண்ணன்மெல்லியன்போன்மென
வுள்ளுவர்கொல்லோநின்னுணர்ந்திசினோரே"

என்பதனால் இவ் வாடுகோட்பாட்டுச் சேரலாதனை வேலண்ணல் எனக் கூறுதல்கொண்டு இதனைக் 'குலவுவேற்சேரன்' எனவும் 'நெடுவேற் சேரலன்' எனவும் இளங்கோவடிகள் கூறினரென்றுணரலாம். இவன் : கொடைத்திறத்தைப்பற்றியாராயுமிடத்து இவனைப் பதிற்றுப்பத்துள்,

" வாராராயினுமிரவலர்வேண்டித்
தேரிற்றந்தவர்க்கார்பதனல்கு
நகைசால்வாய்மொழியிசைசாறோன்றல்"

எனச்சிறப்பித்தல் காணப்படும். இதனுரைகாரர் "ஈண்டு இரவலரை வேண்டியென்றது தன்னாட்டு இரவலரின்மையின் அவரைப் பெற விரும்பி எ-று. தேரிற்றந்து என்றது அவ் விரவலருக்கு அவருள்வழித் தேரைப்போகவிட்டுஅதிலே அவர்களை வரப்பண்ணி எ-று. தேரான் என உருபுவிரிக்க; தேர் எனத் தேர்ச்சியாக்கி அவ் விரவலரை அவருள்ளவிடத்திலே தேடி அழைத்து என்றுமாம்" என விளக்கினர். இவற்றால் இவன் தன்னாட்டு இரவலரில்லையாக வழங்கினன் என்றும், அவ் விரவலரைவேண்டிப் பிறர்நாட்டுத் தேடித் தேரைப்போகவிட்டு அவரை அதிலேவரப்பண்ணி அவர்க்கு நிரம்பிய தப்புரவனைத்தும் வழங்கினனென்றும், இங்ஙனம் கொடுக்கும் ஆசையே நிரம்பிய சத்திடகீர்த்தியானிவ னென்றும் நன்சற்

லாகும். வேறியாரிடமுங் காண்டற்கரிய இவ் வரியபெரிய வள்ளன்மையினையே இளங்கோவடிகள் கோடைத்திறம் என்ற அழகிய தொடரான் விளக்கினாரென்று துணியலாம். இவன் பார்ப்பனர்க்குக் கோதானமும் பூதானமுஞ்செய்து குழவிகொள்வாரிற் குடிபுறந்தந்தவன் என்பது ஆறும்பத்துப்பதிகத்தா லறியலாம். இத்தகைய பெருவண்மைகருதியே வண்டமிழ்மறையோற்கு வானுறைகொடுத்தோனாக இவனை அடிகள் சிறப்பித்தாரென்றுணரலாம். இன்னுமிவனை, "இரவலர் புன்கணஞ்சும் புரவெதிர் கொள்வன்" எனவும், "இரவன்மாக்கள் சிறுகுடி பெருக, வுலகந்தாங்கிய மேம்படுகற்பின், வில்லோர்மெய்ம்மறை" எனவும் பாடுதலல்லாமல், "வள்ளியையென்றலிற்காண்கு வந்திசினே" எனச்சிறப்பித்தலையும் ஆண்டுக் காண்க. "வள்ளியையென்றலிற் காண்குவந்திசினே" என்னும் அடி குலவுவேற்சேரன் கொடைத்திறங் கேட்டுப் பராசரன்பரிசிற்குச் சென்றான் என்றதற்கு மிகவும் பொருந்த நிற்றல் உய்த்துணர்ந்துகொள்க. இவனே வேலண்ணல் ஆதலானும், இவனே யாரினுமிக்கொடையாளனாதலானும் பராசான் இவன்பாற் சென்றானென்றே ஒருதலையாகத் துணியப்படுமென்க. இவன் கடற்கரைப் பக்கத்தூர்க்கணிருந்தனன் என்பது—

" தொடைமடிகளைந்த சிலையுடைமறவர்
பொங்குபிசிர்ப்புணரிமங்குலொடுமயங்கி
வருங்கடலூதையிற்பனிக்கும்
துவ்வாநறவின்சாயினத்தானே" (பதிற்று—60)

எனப் பதிற்றுப்பத்துள் இவனிருக்குமிடங்கூறுதலான் உணரப்படும். இதனுரைகாரர் "மறவர்கடலூதையிற்பனிக்கு நறவெனக் கூட்டி ஆண்டுவாழுமறவர் கடலூதையான் மட்டும் நடுங்கும் நறவு என்க. நறவு—ஓரூர். துவ்வாநறவு வெளிப்படை" என விளக்கியதனானும் இதனுண்மை உணரலாம். கடலூதையிற்பனிக்கு நறவு என்றதனால் இந்நறவூர் கடற்கரைக்கு நெடுந்தூரமாயதென்றுகருதற் கியலாமை காண்க. மேகாஸ்தின[illegible]னும் கிரேக்க தூதர் கருவூரைக் கூறி அதனின்வேறாய் நறவ[illegible]கூறுதலையுங் காண்க. மாக்கிரண்டில் என்பவர் வெளியிட்ட நூலில் இது காணலாம். இவனைப்பற்றிய முதற் பாட்டில்,

"விளங்கிரும்புணரி யுருமெனமுழங்குங்
கடல்சேர்கானற் குடபுலமுன்னிக்
கூவற்றுழந்த தடந்தாளுரை
குவிபிணர்ஞாழன்மாச்சினைச்சேக்கும்" (பதிற்று-51)

எனக்கூறுதற்கண் "குடபுலமென்றது தன்நகரிக்கு மேல்பாலாம்" என்று உரைகாரர் கூறுதலானும், நூலுட் "கடல்சேர்கானற்குட புலம்" என்றிருத்தலானும் இவ்வரசனகரிக்கு மேற்கே கடல் சேர்ந்த கானற் புலமிருப்பதென்று புலப்படுதலான், இந்நறவூர் கடலாற் பனிக்காது கடலூதையாற் பனிக்கக் கூடிய அளவாக மேல்கடற்பக் கத்துள்ளதென்று தெளிந்துகொள்ளலாம். மேற்சொன்னபராசரன் இவ்வேற்சேரன் கொடைத்திறங்கேட்டு இவனிருக்கும் கடல்சேர் கானற் குடபுல நறவூர்க்குச் சென்றானுதலாற் பாண்டிநாடு கடந்து மலையம்பிற்படப் போனானென்றும் மீளும்போது பாண்டிநாட்டுத் திருத்தங்காலிற் றங்கினானென்றும் உணர்ந்துகொள்க. இதனுலிப் பராசரன் செங்குட்டுவன் வஞ்சிநோக்கி வந்தவனில்லையென்பது தெற்றெனத் தெளிக.

சேரன்பாற்சென்று போந்த சோணுட்டுப்பராசரன் பாண்டி நாட்டையும் மலையத்தையும் இடைவைத்துக் கடத்தல்காரணம் இஃதென்று ஆராயாமலே கொங்குநாட்டுள்ள பழையசேரர்தலை நகரை மேற்குத்தொடர்ச்சிமலைப் பக்கத்துள்ள கடல்நாடுகளிலுய்க்க முயன்றனர் பிறர். சேக்கிழார், கொடுங்கோளூரை, இராமனிருக்கும் காடும் அயோத்தி என்பதுபோலப் பிற்காலத்துச் சேரர்குலத்தவரி ருந் தல்பற்றி வஞ்சியென்று வழங்கியதைத் துணையாக்கொண்டு அதனைப் பழைய சேரர்தலை நகரென்று கூறிவிடலாமென்று துணி ந்து சேக்கிழார் வஞ்சியென்ற ஊர் ஆர்க்குங்கடலங்கரை மேலிருத் தலை நோக்கிப் பழையசேரர்வஞ்சியுங் கடலுடையதானலல்லது கொடுங்கோளூரென்று சொல்லுதல் பொருந்தாதென்று கண்டு பழைய சேரர்வஞ்சிக்குங் கடலையுண்டுபண்ணத்தலைப்பட்டனர் பிறர். இஃதொரு ஸகரப்ரயத்நமேயாகும்; மேல்கடலாதலின் யாராலும் ஸாதிக்கப்படாமற் போவதென்பதறிக.

தமிழ்நூல்களில் ஓரூர் கடலடுத்ததாயின் அவ்வூரைச் சொல்லு மிடத்து அது கடலுடைமை விளங்கவே பாடப்படுமென்பது முசிரி,

தொண்டி, மாந்தை, கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், புகார் முதலிய பழைய ஊர்களைப்பற்றி ஆங்காங்கு வரும் பாடல்களாற் றெளிப்பபடும். நேரே கடல் கூறு தொழிலினும் கடனிலத்துள்ள தென்று புலப்படக் "கானலந்தொண்டி" "தொண்டியங்கானல்" என்றாற் போலவேனும் விளங்கப்பாடாமை நல்லிசைப்புலவர் வழக்கன்று. இதனுண்மையைத் தமிழ்கற்றாரெல்லாம் நன்கறிப. வஞ்சியைப்பற்றிய பழையபாடல்கள் தமிழில் நூற்றுக்கணக்காகவுள்ளன; அவற்றுளொன்றேனுங் கடலுடைமைபற்றி வஞ்சியைச் சிறப்பித்ததாக யான் கண்டிலேன். "வஞ்சியங்கானல்" என யாண்டும் பயிலாமை ஈண்டைக்கு நினைக்கத்தகும். இங்ஙனம் வழங்காமை மாத்திரமன்று "வஞ்சியம்பூம்புறவின்" என இறையனார்களவியலுரைமேற்கோளில் வேறாகவும் வழங்கியுள்ளது. மணிமேகலையில் இவ் வஞ்சியைப்பற்றிய அடிகள் பலபல வுள்ளன. அவற்றுளொன்றானும் இது கடலுடைமை காணப்படுதலில்லை. இவ்வாறு காணப்படாமை மட்டுமன்று; கடலுடைமைக்கு விரோதமான செய்தியொன்றும் அது புலப்படுத்துகின்றது. அஃதாவது இன்னதென்று காட்டுவல்—கடற்கரையிற் சோழர் பெருநகராகிய காவிரிப்பூம்பட்டினம் இந்திரவிழவை மறந்ததனுலுண்டாகிய தேவசாபத்தாற் கடல்கொள்ளப்பட்டதெனவும், அக்கடல்கோளால் நெடுமுடிக்கிள்ளியாகிய சோழன் அவ்வூரைவிட்டுத் தனியேபோயினன் எனவும், ஆங்கிருந்த அறவணவடிகளும் மணிமேகலையினுடையதாயரும் அக்கடல் கோளால் வருந்தாதுபோய் வஞ்சிமாநகரத்துப் புக்கனரெனவும் மணிமேகலை நூல் கூறுகின்றது, இதனை,

> "விரிதிரைவந்து வியனகர்விழுங்க
> வொருதனி போயின னுலகமன்னவ
> னருந்தவன் றன்னுடனாயிழைதாயரும்
> வருந்தாதேகி வஞ்சியுட்புக்கனர்"

எனவும்,

> "மனங்கவல்கெடுத்து மாநகர்கடல்கொள
> வறவணவடிகளுந் தாயருமாங்குவிட்
> டிறவாதிப்பதிப் புகுந்ததுகேட்டு நும்"

என்வும் வருவனவற்றானுணர்ந்துகொள்க. ஓரூர் கடல்கொள்ளும்போதிலோ அன்றி அக்கடல்கோளைத்தெரிந்தபோதிலோ அவ்வூரை

விட்டு ஓடுவார் கடல்கோளுக்கெட்டாதென்று தாம் தெரிந்து கொண்ட அகநாட்டு ஊர்கட்கே சென்றொடுங்குவரென்பது யான் கூறியறிவிக்க வேண்டுவதன்று. புகார்ச்சோழன் உறையூர் புகுந்தானென்பது திண்ணமாக நினைக்கப்படும். அறவணவடிகள் தாயருடன் உறையூருட் புகாமல் ஒருநான்கு காவதம் அப்பாற்போய்க் குடபுலவஞ்சியுட் புக்கனராவர். சோழன் இந்திரவிழாவெடாத தவற்றாலன்றே அவனுள்ளபுகாரைக் கடல்கொள்வது. இக்கேட்டுக்குக் காரணனான சோழனுடைய நாடே தம்போன்ற மாதவர்க்குத் தங்குதற்குரியதாகாதென்று கொண்டு சேரநாட்டுவஞ்சியுள் அறவணவடிகள் தாயருடன் புக்கிருந்தனரென்றுய்த்துணரப்படும். "வருந்தாதேகி வஞ்சியுட்புக்கனர்" எனவும் "இறவாதிப்பதிப்புகுந்தது" எனவும் கூறுதலையும் நோக்கிக்கொள்க. இனிப் பிறர் நினைக்கின்றபடி இவ்வஞ்சி மேல்கடற்கரைக் கண்ணதாயின் பராசரன் செல்வழியே இவ்வறவணவடிகட்கும் வழியாதலான் இடையிற் பாண்டி நாட்டு மதுரையிற்றங்காது மற்றுமோர் கடற்கரையூர்க்கே அறவணவடிகள் சென்றாரென்றன்றோ முடியும். அங்ஙனமாயின் மதுரையிற்றங்காமைக்கும் கடல்கோளுக்கஞ்சிப் பின்னுமோர் கடலையே யடைதற்கும் காரணங் கூறல்வேண்டும். மேல்கடற்கரையின்கண் வஞ்சியை நிறுவ நினைப்பார் இவற்றுக்கெல்லாம் பொருந்தவுரைக்கலாகுமோ என்று ஆராய்ந்துகொள்க. இஃதன்றியும் அம்மணிமேகலையுள் காஞ்சிக்கும் வஞ்சிக்கும் போக்குவரத்துக் கூறப்படுதல் கற்றார்பலரும் அறிவர்.

> "பொன்னெயிற் காஞ்சி நாடு கவினழிந்து
> மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
> னந்நகர் மாதவர்க் கைய மிடுவோ
> ரின்மையி னிங்கு வரய்தினர் காணாய்"

எனவும்,

> "ஆங்கவன் றனுமறத்திற் கேதுப்
> பூங்கொடிகச்சி மாநகராதலின்
> மற்றம் மாநகர் மாதவன்பெயர்நாட்
> பொற்றொடிதாயரு மப்பதிப்படர்ந்தனர்"

எனவும் வருவனவற்றாற் காஞ்சிநாடு பஞ்சப்பட்டபோது ஆங்கிருந்த மாதவர் வஞ்சிவந்தெய்தினரென்றும் பின் இவ் வஞ்சியிலிருந்த அற

வணவடிகள் தாயருடன் காஞ்சிக்குப்போயினரென்றும் அறியப்படும். காஞ்சிநாட்டையுடைய தொண்டை நாட்டையடுத்துள்ளது கொங்குநாடேயாதலான் காஞ்சி பஞ்சம்பட்டவளவில் அடுத்துள்ள கொங்குநாட்டுவஞ்சியுள் மாதவர் எய்தினரென்பதே பொருந்திற்றாகும். போக்குவரத்துக்கு எளிதாய நெறியுடையதும் மேல்கடற்கரை போல நெடுந்தூரமாகாததும் கருவூர் வஞ்சியேயென்பது எளிதினுணரத்தகும். அறவணவடிகள் புகார் கடல்கொள்ள வஞ்சியுட் புக்கன ரென்றதனோடு பொருந்த நோக்குமிடத்து யான்கூறுவதே பொருத்த முடைத்தாதலுணர்க.

இனிப் பதிற்றுப்பத்துள் மூன்றாம்பத்துப்பதிகத்துக்,

"கருங்களிற்றியானைப்புணர்நிரைபூட்டி
யிருகடனீருமொருபகலாடி"

என்பதனால் சேரனொருவனுடைய அரியபெரிய செய்தியொன்று கூறப்பட்டுள்ளது. இச்செய்தியையே இளங்கோவடிகளும் "இருகடனீருமாடினோனாயினும்" என்பதனாற் கூறினார். இச்செய்தி இமயவரம்பன்றம்பியுடையதாயினுமாகுக; வேறொருசேரனுடையதாயினுமாகுக; அஃதீண்டைக்கு ஆராய்ச்சியின்று. சேரவரசனொருவன் இச்செய்தி நிகழ்த்தினானென்பதுமட்டில் இஃதுணர்த்தாதிராது. பதிற்றுப்பத் துரைகாரர், "இருகடலுமென்றது தன்னதாய மேல்கடலும் பிறநாட்டதாய்ப் பின்பு தான் பொருதுகொண்டு தன்னதாக்கிய நாட்டிற் கீழ்கடலும் எ-று. கருங்களிற்றியானைப் புணர் நிரை பூட்டி, யிருகடனீருமொரு பகலாடி யென்றது அவ்விருமுந்நீரும் ஒரு பகலிலே வரும்படி யானைகளைநிரைத்து அழைப்பித்து ஆடி எ-று" என வுரைத்தார். இதன்கட் குறிக்கப்பட்டது விஜயாபிஷேகமேயாமென்பது பிறநாட்டை வென்று தன்னதாக்கினானென்பதனால் உய்த்துணரப்படும். விஜயாபிஷேகத்துக்குரிய விஜயாஸனம் பெருவேந்தர் கோயிலகத்ததென்பதுமானஸாரநூலகத்துட்கண்டுகொள்க. அந்நூலார் பிரதமாஸனம், மங்களாஸனம், வீராஸனம்,விஜயாஸனம் எனப் பலகூறுவர். அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். சேரன் தன்கோயிலுள்ள தலைநகர் கீழ்கடல் மேல்கடல் இரண்டிற்கும் நெடுந்தூரமாக இருத்தல் காரணமாகவே அவ்விருமுந்நீரையும் ஒருபகலிலே அழைப்பித்தற்கு வகைதேடித் தன் பெருநகர்க்கிருபக்கத்தும் கடல்களினெல்லைவரை யானைகளைநிரைத்து இருமுந்

நீரையுந்தருவித்துக் கொண்டானென்றுணரப்படும். மேல்கடற் கரையிற் கோயிலுடையனுயின் மேல்கடலிலேநின்றே கீழ்கடனீரையாடினன் என்றன்றோ சிறப்பித்துப்பாடுவர்? இருகடலுமாடுதலையன்றோ ஈண்டுப்பெருஞ்சிறப்பாகக்கூறுகின்றார்? இதனாலிருகடலும் அதிக தூரமான நிலையிற் சேரன்கோயிலிருத்தல் செவ்வனம் புலப்படும். இச் செய்தியை "அயிரைபரைஇ" என்று அயிரைமலையிற் கொற்றவைக்கடவுளைப் பரவுதலுடன் கூறினார். அதுவும் ஒரு வீரச் செயலாதலான்; என்னையெனின் பகைவர் நிறம்படுகுருதியானன்றி அக் கொற்றவை பலி கொள்ளாளென்பது கேட்கப்படுதலான் அங்ஙனம் அத்தெய்வத்தை வழிபட்டதனையும் ஓர் அரிய செயலாக்கி இப் பெருஞ்செயலோடு கூறினார் எனவறிக. இவ் விருகடனீருமொருபகலாடிய செய்தி கருவூர் வஞ்சிக்கு எவ்வளவு அழகாகப் பொருந்துவதென்பது ஈண்டு யான் கூறவும் வேண்டுவதோ?

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சி கடற்றுறைப்பட்டினமாகுமென்று தாமே நினைத்துக்கொண்டு,

"அளந்துகடை யறியா வருங்கலஞ் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சிமுற்றத்
திறைமகன் செவ்வி யாங்கணும் பெறாது
திறைசுமந்து நிற்குந் தெவ்வர் போல"

என்னுஞ் சிலப்பதிகாரத்துள்ள "கலம்" என்னும் சொல்லையே கண்டு வஞ்சி கடலுடையதாதற்காதாரமாக இவ்வடிகளைக் காட்டினருமுளர். அவர்க்கு ஈண்டை அருங்கலம் அரியமரக்கலம் என்பதாம். அதனால் அவர்கொள்ளும் பொருள் பலபண்டம் நாவாய் சுமந்துவந்து தலைமயங்கிய வஞ்சிமுற்றம் என்பதாம். அவரிங்ஙனங் கூறுவது பொருந்துமோ என்றாராய்வேன். இவ்வடிகட்குரைகூறுமிடத்து அரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியாஎன்பது முதல் திறையிடுவார்க்கு அடை" என்று சிறார்க்கும் உரைவிளங்க இனிதுரைத்திருக்கவும் அவ்வினிய உரைக்கு உடன்படாது வேறு கூறுவது வஞ்சிக்குக் கடலுண்டுபண்ணுதற்கேயென்று எளிதினுணரலாம். ஈண்டு வஞ்சிமுற்றமென்றது வஞ்சியிலுள்ளமுற்றம் என்றவாறாம். அம்முற்றம் கோயின் முற்றமேயென்பது இறைமகன் செவ்வியாங்கணும் பெறாது அம்முற்றத்தே திறைசுமந்து தெவ்வர்நிற்குந்

தன்மைகூறுதலான் உணரப்படும். தெவ்வர்திறைகமந்துநிற்கும் அக்கோயின் முற்றத்துப் பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலை மயங்குதல் ஏனோ ? கடல்வழியாக நாவாய்சுமந்துவந்த பலபண்டங்கள் அவ்வப்பண்டசாலைகளி லன்றோவுய்க்கப்படும் "பௌவத்து நன் கலவெறுக்கை துஞ்சும் பந்தர்" (பதிற்-55) எனப் பௌவத்திலே வந்த நன்கலமாகிய செல்வந்துஞ்சும் பண்டசாலைகள் கடற்கரையூரிற் கூறப்படுதல்காண்க. கோயின்முற்றத்து வருதற்கும் வந்து தலைமயங்கிக் கிடத்தற்கும் ஏதுவேயில்லாமையுணர்க. இனிப் பலபண்டங்களை அரிய மரக்கலங்கள் சுமந்தால் அதனால் வஞ்சிமுற்றம் தலைமயங்காதென்பது நன்றறிந்து கொள்க. சுமந்தநிலை, பண்டங்கள் மரக்கலங்களிலிருக்கும் நிலையையன்றோ உணர்த்தும். வங்கத்திற் பலபண்டங்களிருத்தல் காரணமாக வஞ்சி முற்றம் வளந்தலைமயங்குமோ? மயங்காது. மற்றெதனலாமெனின் அவ் வருங்கலங்கள் அப்பண்டங்களைச் சொரிந்தால் ஒருகாலாகும். அப் பிறர்கூறுவதே கருத்தாயின் "அருங்கலஞ் சொரிந்து வளந்தலை மயங்கிய" எனப்பாடுவரென்க. ஈண்டுச் சுமந்து என்னுஞ்சொல் விரோதமாக இருத்தலையுணர்த்தும் அது தலைமயங்கிய என்பதுடன் தம் கருத்துப்படி இயையாமையைத் தெரிந்தும் வந்து என்றொரு சொல்லை அதன்பின்னே பெய்து சுமந்துவந்து எனப் பிறர் பொருள்கூறினரென்று உணர்ந்துகொள்க.

இவ்வாறெல்லா மிடர்ப்படாமல் இவ்வடிகளின் உண்மைப் பொருளிஃதென்று துணியுமாறு கூறுவேன். இச் சிலப்பதிகாரத்து வஞ்சியைக்கூறியாங்கு மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனர் மதுரையைக் கூறியுள்ளார். அது,

" நாடரவந்தவிழுக்கலமனைத்துங்
கங்கைபம்பேரியாறு கடற்படர்ந்தாஅங்
களந்துகடையறியா வளங்கெழுதாரமொடு
புத்தேளுலகங் கவினிக்காண்வர
மிக்குப் புகழெய்திய பெரும்பெயர் மூதூர்"

என்பது. இதனுள் விழுக்கலமனைத்தும் அளந்துகடையறியா வளங் கெழுதாரமொடு காண்வரப்புகழெய்திய மூதூர் என்று கூறியதன் கருத்தும், அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து வளந்தலை மயங்கிய வஞ்சி என்றதன்கருத்தும் பெரும்பாலும் ஒத்தல்காண்க. இம்

மதுரைக்காஞ்சியுரையில் நச்சினார்க்கினியர் "நாட்காலத்தே திறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்களும் அத்தன்மையனபிறவும் கங்கையாகிய அழகிய பெரியாறு ஆயிரமுகமாகக் கடலிலே சென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை" எனப் பொருள்கூறினார். ஈண்டு "விழுக்கலம்" திறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்கள் எனப் பொருள் பண்ணப்பட்டதனை நன்றுநோக்கிக்கொள்க. இதற்கேற்பவே சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியா என்பது முதல் திறையிடுவார்க்கு அடை" என்றதனையுந் நோக்குக. மதுரைக் காஞ்சியில் விழுக்கலம் என்று கூறியதுதானே ஈண்டு அருங்கலமெனக் கூறப்பட்டுள்ளது. ஆண்டுக்கலம் என்பது மரக்கலமாகாது அணிமுதலிய பொருள்களையே புணர்த்தல்போல ஈண்டும் உணர்த்துமென்றுகொள்க.

> " அருங்கலந் தரீஇயர் நீர்மிசைநிவக்கும்
> பெருங்கலிவங்கந் திசைதந்தாங்கு"

எனவரும் பதிற்றுப்பத்தில் அருங்கலம் என்பது மரக்கலத்தை யுணர்த்தாது அரியபொருள்களையுணர்த்தல் ஆராய்ந்துகொள்க. அகப்பாட்டிலும் "அருங்கலந்தெறுத்த பெரும்புகல்வலத்தர்" (89) என்புழி மரக்கலங்கூறாது அரியபொருள்களை கூறுதல்காண்க. அருங்கலஞ் சுமப்பது வஞ்சிமுற்ற மென்க; பெரும் பொறை என்பதறியச் சுமந்து என்றார். "நிலநெடுக்கல்லா வொண்பல் வெறுக்கை" (மதுரைக்காஞ்சி) என்புழி "நிலஞ்சுமக்கமாட்டாத வொள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும் என்றது பூண்களையும் பொன்னையும்" என நச்சினார்க்கினியர் கூறுதலான் ஈண்டும் அருங்கலமென்பன அவை என அறிக. முன்னே திறையிட்டார் தரவந்த அரிய அணியும் பொன்னுமாகிய பொருள்களைச் சுமத்தல்காரணமாக அளந்துகடையறியா வளந்தலை மயங்கிய வஞ்சிமுற்றத்து யாங்கணும் இறைமகன் செவ்விபெறாது திறைசுமந்து நிற்குந் தெவ்வர் போல என்று பொருள்கொள்க. அருங்கலம் முன்னே அநுகூலராயிருக்கத் திறையிட்டார்தந்தனவாம். அவர் தந்த திறை யாங்கணும் நிற்பது காரணமாகவும், அவ்வநுகூலர்க்குக்காட்சியளித்தல் காரணமாகவும தெவ்வர் இடமும் செவ்வியும்பெறாதவராய்த் திறைபைச்சுமந்து நிற்பாராயினரெனவுணர்க. பின் தெவ்வர் என்றதனால் முன்னே திறையிட்டார் அநுகூலர் என

வுணர்க. அவரே தெவ்வரின் முற்பட வேந்தன் காட்சிபெறுதற் குரியராவர். இனி அருங்கலம் சேரன்படை வஞ்சிசூடிச்சென்று பகைப்புலம்புக்கு வென்று கொணர்ந்த திறையாயினுமாகும். இத்தகையதிறையே வஞ்சியுள் விளங்கிக்கொண்டிருக்குமென்பது "கூடார்வஞ்சிக்கூட்டுண்டு சிறந்த வாடா வஞ்சி" என்னும் சிலப்பதிகாரவடிகட்கு அரும்பதவுரையாசிரியர் "வஞ்சிக் கூட்டு-எடுத்துச்செலவிற் கொண்டதிறை, அதனாற் பொலிவு பெற்ற கருவூரிலே" என்று விளக்கியவாற்றானுணர்க. இங்ஙனமன்றி வளந் தலைமயங்கிய வஞ்சிமுற்றத்து இறைமகன்செவ்வி யாங்கணும் பெறாது அளந்துகடையறியா வருங்கலஞ்சுமந்து திறைசுமந்து நிற் குந் தெவ்வர் என அரும்பதவுரையாசிரியர் கருத்தொடுபொருந்த இயைப்பினும் அமையும். திறைதருபொருளுள் அருங்கலங்களும் உண்டென்பதை.

"ஆரமிவையிவைபொற்கல மானையிவையிவையொட்டக
மாடல்யமிவைமற்றவையாது முடியொடுபெட்டக
மீரமுடையபனித்திலமேறுநவமணிகட்டிய
வேகவடமிவைமற்றவை யாதும்விலையில்பதக்கமே"

"இவையுமிவையுமணித்திரளினைய விவைகனகக்குவை
யிருளும்வெயிலுமெறித்திடவிலகுமணிமகரக்குழை"

என்னும் கலிங்கத்துப்பரணியானுமுணர்க.

இவையெல்லாம் ஆராயாது கலம் என்னும் ஒரு சொல்லை பற்றிப் பெருங்கவியரசர்பொதிந்த நயங்கள் பலவற்றையுஞ்சிதைத் துப் பழையநூல்வழக்கிற்கும் உரைவழக்கிற்குமாறாக ஒரு பெருங் கடலை ஈண்டுக் கற்பிப்பது பொருந்தாதென்றுணர்க.

வஞ்சியைக் கடற்கரைக்கண் நிறுவமுயல்வார் தங்கொள்கைக்கு ஆதரவாகக் கூறுவது இன்னும் ஒன்றுண்டு. அஃதாவது செங் குட்டுவன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் செல்லும்போது,

"தானவர்தம்மேற் றன்பதிநீங்கும்
வானவன்போல வஞ்சிநீங்கித்
தண்டத்தலைவருந் தலைத்தார்ச்சேனையும்
வெண்டலைப்புணரியின் விளிம்புசூழ்போத

மலைமுதுகுநெளிய நிலைநாடதர்பட
வுலகமன்னவனொருங்குடன்சென்றாங்
காலும்புரவியணித் தேர்த்தானையொடு
நீலகிரியினெடும் புறத்திறுத்து" (சிலப்—கால்கோள்)

என்பதனால் தலைவருஞ்சேனையும் புணரியின் விளிம்புசூழ்போதச் சென்று நீலகிரிப்புறத்துத்தங்குதல் அறியப்படுதலான் இச் செங்குட்டுவனூர் மேல்கடற்பக்கத்திருப்பதென்று கருதப்படுமென்பது· அங்ஙனங்கருதற்கிடனின்மை காட்டுவல் —வஞ்சி கடற்கரைக்கண்ணதாயின் வஞ்சியங்கானல் வெண்டலைப்புணரி என விளங்கவுரைப்பர். வஞ்சியின்பக்கத்துக் கடலில்லாமையானே வஞ்சிநீங்கிப் புணரியின் விளிம்புசூழ்போத என்றார் என அறிக. பிறர்கூறும் வஞ்சி "ஆர்க்குங்கடலங்கரைமேன்மகோதை" யாகியகொடுங்கோளூரன்றே? அவ்வூரைநீங்கி அதன் கடலையடைதலேயோ ஈண்டுப்பெரும்படையெடுத்துச் செலவுக்கு ஒரு சிறப்பாகக்கவியரசர் எடுத்துக்காட்டினார்: அவ்வூரே கடற்கரையினிருக்க அதனை நீங்கிப் புணரியின் விளிம்புசூழ்போத என்று கூறுவதென்னோ. அவர் நினைக்கின்றபடி குடகடற்கரையிலன்றோ சேரர்தலைநகருள்ளதாவது: வடநாட்டுப்படையெடுத்தற்குத் தலைநகரின் வடக்குவாயில் வழியாக வடக்கு நோக்கிச் செல்லவேண்டிய படையில் தூசிப்படையும் சேனைத்தலைவரும் மட்டும் குடகடல் விளிம்புசூழ்வருவதேனோ? இவ் வினாவுக்கெல்லாம் பொருந்தவிடை பகர்தல் இயலாதென்று அறிஞரே ஆராய்ந்து கொள்வாராகுக.

மற்று வடநாடுபுகநினைந்த செங்குட்டுவன் வஞ்சிநீங்கி நேரே வடக்கட்புகாது தலைவருஞ்சேனையும் மேல்பாற்புணரியின் விளிம்புசூழ்போதத் தானும் ஒருங்குடன் செல்லுதற்கு ஏது என்னையெனிற் கூறுவேன். செங்குட்டுவன் வடநாடுபுகுவது தமிழரசராற்றலையிகழ்ந்துபேசிய வடவரசர்க்குத் தமிழ்வலி யிற்றென்றுணர்த்தவும் பத்தினித்தெய்வத்துக்கு இமயமலையிற் கல்கொள்ளவுமாகும். இவ்விருபெருங்காரியங்களையுமேற்கொண்டு பெரும்படையுடன் எழுந்த செங்குட்டுவன் தன் படையினை இடஞ்சுற்றவிட்டுச் செல்லாது தமிழ் நாட்டரசர் வழக்கப்படி வலஞ்சுற்றவிட்டு வடநாடு செல்ல நினைந்ததனாற் புணரியின் விளிம்புசூழ்போத என்றாரென வறிக. தமிழரசர் வடநாட்டுப்படையெழுச்சிக்கண் இங்ஙனம் வலமுறை செல்லுதலுண்டென்பது,

குணகடல்பின்ன தாகக்குடகடல்
வெண்டலைப்புணரிநின் மான்குளம்பலைப்ப
வலமுறைவருதலு முண்டென் றலமந்து
நெஞ்சநடுங் கவலம்பாயத்
துஞ்சாக்கண்ண வடபுலத்தரசே'' (புறம்–31)

எனச் சோழனலங்கிள்ளியைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டான் அறியப்படும். இவ்விடத்து உரைகாரரும் "கீழ்கடல் பின்னதாக மேல் கடலினது வெளியதலையையுடையதிரை நினதுகுதிரையினது குளம்பையலைப்ப வலமாகமுறையே வருதலும் உண்டாமென்று சுழன்று நெஞ்சநடுங்கும் அவலம் பரப்பத் துயிலாதகண்ணையுடைய வாயின வடநாட்டுள்ள அரசுகள்'' எனக்கூறினர். வென்றியே வேண்டி வடநாடு புகுமிடத்துச் சோழன் வலமுறை செல்வானாயின், வென்றியுடன் தெய்வடங்களத்துக்குக் கல்கோடலையுங்கருதிய சேரன் வலமுறை சென்றான் என்று கூறுவதே பொருந்தியதாகும். மேற்கண்ட புறப்பாட்டிற் சோழனலங்கிள்ளி சேரபாண்டியருடைய இருகுடையும் பின்னாக ஓங்கிய ஒன்றாகிய வெண்கொற்றக் குடையையுடையனாயினா னென்று கேட்கப்படுதலா னிவன் தன்னால் முன்னமே வெல்லப்பட்ட சேரபாண்டியரை வெல்லவேண்டி வலமுறைவருதலுண்டென்று கருதற்காகாது. இதனை அப் புறப் பாட்டில்,

சிறப்புடையாபிற் பொருளுமின்பமு
மறத்துவழிப்படூஉந் தோற்றம்போல
விருகுடைபின்பட வோங்கியவொருகுடை
யுருகெழுமதியி னிவந்துசேண்விளங்க
நல்லிசைவேட்டம்வேண்டிவெல்போர்ப்
பாசறையல்லது நீ யொல்லாயே (ஷை ஷை)

எனவருதலானறிக. ஈண்டு உரைகாரரும் இக்கருத்தேபடவுரைத் ததுகாண்க. உவமையானும் சேரபாண்டியரிருவர்குடையும் இவன் ஒருகுடையின்பின்னானதன்மை நன்றுணரப்படும். இருகுடையும் பின்படவோங்கிய ஒரு குடை இன்னும் ஓங்கிச் சேய்மைக்கண்ணே விளங்கப் புகழ்வேட்கையைவிரும்பிப் பாடிவீட்டிலிருத்தலையல்லது நின்னகரிருத்தலை யுடன்படாயென்று அவனைக்கூறியதுங் காண்க

சோழன் பாண்டியனைவென்று அப்பாற் சேரரை வென்று பின் வடநாடுசெல்வதை ஆசிரியர்கருதினராயின் அதற்கேற்ற சொற்பெய்து அப்பொருள்விளங்கவுரைப்பர். அவ்வாறொன்றுங் கூறாது குணதிசையாளுஞ்சோழன் குணகடல்பின்னாகக் குடகடலின்றிரை அச்சோழனது குதிரையின் குளம்பையலைப்ப வலமுறையாக வருதலுமுண்டாமென்று கூறுதலானும் அவர்க்கது கருத்தன்றென்க. இதன்கண், குணதிசைபின்னாக என்றதனால் வடதிசை நோக்கி அப்போதுபுறப்படுதலைக்குறித்தல்காணலாம். சிலப்பதிகாரத்தும் " வஞ்சிநீங்கி வெண்டலைப்புணரிவிளிம்புசூழ்போத " என்புழிச் சூழ்போதஎன்றலாற் சுற்றிவருதலையேகூறினாரென்று தெளிக. புறப்பாட்டிலும் குடகடலை வெண்டலைப்புணரி என்றதனையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க.

அரும்பதவுரையாசிரியர் கடற்கரையே யொருகைபோத என்றார். அதற்கும் இதுவே கருத்தாகும். சேனைத்தலைவரும் தூசிப்படையும் பழையமுறைப்படி தன்னாட்டை வலஞ்சுற்றவிடுத்துத் தலைவருஞ்சேனையுஞ் சூழ்வாரிற்கையிற் றானுஞ்சென்றுகூடித் தானையொடு நீலகிரியினடிப்புறத்துத் தங்கினான் என்றுகொள்க. நீலகிரியிலதிகபாகம் சேரரைச்சேர்ந்ததாதலின் ஆண்டுத்தங்கினான். அக்காலத்து அதுவே படைசெல்வழியுடையதுபோலும். இக்காலத்தும் நீலகிரிப்பகுதியிற் சேரன்பாடி, சேரன்கோடு என்பன உளவாதல் கண்டுகொள்க.

இனிச் சேரர்படைப்பெருக்கத்தைப்பற்றிப் பதிற்றுப்பத்துள் "இறும்பூதாற்பெரிதே" என்னும் பாட்டால் நன்குணரலாம். அதனுள் புலவர் படைத்திரளை "வரம்பில்வெள்ளம்" என்றுகூறி அப்படைத்திரள் பகைவர் நாட்டெல்லையின் முற்பாடுசென்றுவிடும் என்னுங்கருத்தான் "நெடுநீர துறைகலங்க மூழ்த்திறுத்தவியன்றானையொடு" என்று சிறப்பித்தலான் ஈண்டும் அவ்வாறே செங்குட்டுவன் படைப்பெருக்கையுணர்த்தவேண்டிப் படைதிரண்ட அளவிற் றலைவருந் தூசிப்படையுங் கடலெல்லையைச்சூழ்வரச்சென்றான் என்றார் எனினுமமையும். இஃததிசயோக்தியெனக் கொள்ளினுமிழுக்காது. அதிசயோக்தியாகக்கூறுமிடத்து மேல்கடலைநினைத்தது படைவலமுறைசெல்லுதலானென வறிந்துகொள்க. இங்ஙனம் அதிசயோக்தியாக இளங்கோவடிகள் கூறுவரோஎனிற் கூறுவரென்க. "மலைமுதுகு

தெளிய" என ஈண்டே இப்படைச்செலவைப்பற்றிக்கூறியது கொள்ளெண்ர்க. சகடங்களின் பாரத்தையுணர்த்தவே மலைமுதுகு நெளிய என்றாராலெனின் படையின்பெருக்கையுணர்த்தவே கடல்விளிப்பு சூழ்வர என்றாரென்க. இவ்வாறெல்லாம் ஆராய்ந்துகொள்ளாது "வஞ்சிசீங்கி" எனத் தெளியக்கூறுதலையும் பொருட்படுத்தாது கடலைக் கருவூர் வஞ்சிக்கணித்தாகக் கூறப்புக்கார் பிறர்.

மற்றுச் சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் வஞ்சியையடுத்து நான்குநிலமும் அணித்தாயிருத்தலைவருணித்து நீர்ப்படைக்காதையிறுதியிற்கூறினாராலெனிற் கூறுவேன். அவர் ஆண்டு,

குறத்தியர்பாடியகுறிஞ்சிப்பாணியும்
... ... ...
தொடுப்பேருழவரோதைப்பாணியும்
... ... ...
கோவலரூதுங்குழலின்பாணியும்

கூறி, அப்பால்

வெண்டிரைபொருதவேலைவாலுகத்துக்
குண்டுநீரடைகரைக்குவையிரும்புன்னை
வலம்புரியீன்றநலம்புரிமுத்தம்
கழங்காடுமகளிரோதையாயத்து
வழங்குதொடிமுன்கைமலரவேந்தி
வானவன்வந்தான்வளரிளவனமுலை
தோணலமுணீஇயதும்பைபோந்தையொடு
வஞ்சிபாடுதுமடவீர்யாமெனு
மஞ்சொற்கிளவியரந்தீம்பாணியும்
ஓர்த்துடனிருந்தகோப்பெருந்தேவி

என்றுரைத்துள்ளார். இதன்கண் குறத்தியரெனக் குறிஞ்சி நிலத்தாரையும், உழவரென மருதநிலத்தாரையும், கோவலரென முல்லை நிலத்தாரையும் பெயர்குறித்து விளங்கவுரைத்த இளங்கோவடிகள் இறுதியின்மட்டும் நெய்தனிலத்துமாக்கள் பெயராற் கூறாது அஞ்சொற்கிளவியர் என நாகரிகராகவே உரைத்ததன்கருத்து ஆராயத்தகும். காவியரசனைக்கு எல்லா நிலங்களையும் இயைத்துக் கூறப்புக்க அடிகள் மற்றை மூன்று நிலனும் உள்ளவாறு கூறி அந்நிலமாக்கள்

பெயரெடுத் துரைத்து அவர்பாணியும் வருணித்துப்போந்தவர் நெய்தலணித்தாகாததன்மையான் அந்நெய்தற் பொருளாகிய முத்தத்தை முன்கை மலரவேந்திக் கழங்காடுமகளிரோதையாயத்து வஞ்சிபாடுதும் யாமெனும் அஞ்சொற்கிளவியர் பாணியும் என்று உண்மைபுலப்படுத்திப் போனரென்க. இங்ஙனமன்றி நெய்தற்கடல் அணித்தாக இருக்குமாயின் ஆண்டுக்கடனிலமகளிர் பாணியைக் கடலொலியவித்தற்றன்மையையேனும் கடலொலியையேனும் வருணித்தொழிவர் என்க. பிறவிடத்தும் வஞ்சியில் ஆன் பொருநை வெண்மணலிற் குறுந்தொடிமகளிர் கழங்காடுதலைக் கூறுதல் காண்க. அது,

> " செறியரிச்சிலம்பிற் குறுந்தொடிமகளிர்
> பொலஞ்செய்கழங்கிற் றெற்றியாடுந்
> தண்ணான் பொருநை வெண்மணற்சிதைய" (புறம்—36)

எனவருதலா னுணரப்படும். ஆண்டுக்கடலின்மையாற் பொலஞ்செய் கழங்கு என்று கூறியதுகாண்க. ஈண்டுக்கழங்காடுவார் கடன்முத்தத்தையேந்தியாடுவாரென்றது அவ்வஞ்சியார்க்குக் கடற்செல்வமுமுண்டு என்பதைக்குறித்ததன்றிக் கடல் வார்ப்புறத்திருத்தல்கருதியன்றென்க. சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் இவ் வஞ்சியைமுற்றியிருந்தபோது நல்லிசைப்புலவர் பலர்பாடிய பல பாடல்கள் புறப்பாட்டின்கணுள்ளன. அவற்றுளொன்றிலேனும் கடற்சம்பந்தமே கூறப்படாமை ஆராய்ந்துகொள்க. இதனால் மேற்கண்ட சிலப்பதிகாரவடிகட்கு யான்கூறுவதே கருத்தாமென்க. ஆண்டு நெய்தல்வருணனையெல்லாம் வேலைவாலுகத்துப்புன்னையடியில் வலம்புரியீன்றமுத்தம் என முத்தத்தையே விசேடித்தனவாகும் வஞ்சிகடலுடையது, கடலுடையதில்லை யென்று துணிவது இலைதான்றே கொண்டில்லையென்பது பலருமறிவர். மற்றுக்கூறிய வற்றோடும் பொருந்தவைத்தன்றே இலைதாராயப்படுவது. மற்ற வற்றோடு பொருந்த நோக்குமிடத்தும் யான் கூறியதே துணிபாத லுணர்க. பேரறிவாளராகிய இளங்கோவடிகள் மூன்று நிலங்கட்கும் அவ்வந் நிலமாக்கள் பெயரைக்கூறி இந்நெய்தனில்வருணனையில் அந்நிலமாக்களைக் கூறாமல் அந்நிலப்பொருளாகிய முத்தத்தையே விசேடித்தொழிந்து உண்மையைத்தப்பாது புலப்படுத்திய அவர் கவித்திறத்தை யானளந்துரைக்கும்வலியிலேன். அறிவாளரே

நுணுகியாராய்ந்து கொள்வாராகுக. வஞ்சிக்காண்டத்திற் கடல் வர்ணனையே கூறப்படாமையுங் காண்க. கடற்செல்வம்பற்றிக் கடலை ஊர்க்குவிசேடித்தல் நூல்வழக்கே யென்பதும்,

"வந்தமூலகுறுவீ ரெழினீலநக்கற்கும்மின்பப்
பூந்தண்புகலூர் முருகற்குந்தோழனைப் போகமார்ப்பைக்
காந்தூர்க்கனலிற் குளிர்படுத்துங்கூடற் கூடலின்வாய்
வேந்தின்றுயர் தவிர்த்தானையெப்போதும்விரும்புமினே"

என நம்பியாண்டார் நம்பிகள் பாடியபாடலிற் கடற்கூடல் என மதுரையைக் கூறுதலானுணர்க. இது கூடற்குரியகடற்செல்வத்தைக்குறிப்பதன்றிக் கூடல் கடலேயுடையதென்பது கருத்தாகாமை கண்டுகொள்க. எழுகடலழைத்தகதை கூறினரெனின் அதுதோன்றக் கூறுவரென்க. கடற்செல்வமுடைமையே கருதிக் கடலுடையதாகவே வருணித்தல் கவிமரபென்பது கடலுக்கு நெடுந்தூரத்துள்ள திருச்சுழியற்பதியை "கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கெற்றக், கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந் திருச்சுழியல்" எனச் சுந்தரமூர்த்திநாயனர் பாடுதலானுணர்க.

இங்ஙனமாகவும் நல்லுரையாளராகிய அரும்பதவுரையாசிரியர் இச் சிலப்பதிகாரத்துரையில் "குறிஞ்சிமுதலாக நாலு நிலத்துப் பாணியும் ஓர்த்துறங்காத தேவியென்றது நாலுநில அணிமையுங் கூறிற்று" எனவுரைத்தார். அவர் சிறிது நுணுகி நோக்கியிருப்பாராயின் யான் கூறியதனை அவரே கூறினவராவர்.

யான் இத்துணையுங் கூறியவாற்றாற் பழைய சேரர்வஞ்சி கடற்கரைக்கண்ணதாகாமை யுணர்ந்துகொள்க.

இனிச் செங்குட்டுவன் வடநாடுபுகுதற்குக் கடக்களியானைப் பிடர்த்தலையேறியவளவில் ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன் பிரசாதங்கொண்டு சிலர்வந்துபரவினரென்பது,

"குடக்கோக்குட்டுவன் கொற்றங்கொள்கென
வாடகமாடத்தறி துயிலமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்றேத்த" (சிலப்-கால்கோள்)

என்பதனுலறியப்படுதலால் ஈண்டு ஆடகமாடம் என்றது திருவநந்தபுரம் என்னும் ஊரையென்றுகொண்டு அதனற் சேரர்தலைநகர் திருவநந்தபுரத்துக்கு அணித்தாகுமென்று கூறுவாருமுளர். இத

னுண்மையினை இங்கு ஆராய்வேன்—இவ்விடத்து அரும்பதவுரையாசிரியர்—ஆடகமாடம் திருவநந்தபுரம் என்றுகூறி இரவிபுரமென்பாருமுளர் என்றுரைத்தார். இதனு லிவ்வுரையாளர்க்கு முன்னமே இம்மாடவிஷயமாக அபிப்பிராயபேதமுண்டென்று தெற்றென விளங்கும். இரவிபுரமென்பது கருவூர்க்குப்பெயராகுமென்பது யான் பாஸ்கரபுரமென முன்னர்க்கூறியவாற்றானுணரப்படும். செங்குட்டுவன் தான் வடநாடுபுகுவதைத் தன் அணிநகர்மருங்கே பறையறைவித்தறிவித்தான். அறைபறையெழுந்தபின் ஆசான் பெருங்கணி அமைச்சர் தானைத்தலைவர் தம்மொடு வடவரசர் தமிழரசரையிகழ்ந்த செய்திகூறி இகழ்ந்தவடவரசர்தலையிற் கடவுட்பத்தினிக்குக் கல்லேற்றிவாரேனாயிற் குடிநடுக்குறூஉங்கோலேனாகுக என்று வஞ்சினங்கூற, ஆங்கு ஆசான் அவன்சினந்தணியுமாறு சில சொல்லிய அளவிற் பெருங்கணி எழுந்து இருநிலமருங்கின்மன்னரெல்லாம் நின் திருமலர்த்தாமரைச்சேவடிபணியும் முழுத்தமீங்கிது முன்னிய திசைமே லெழுச்சிப்பாலையேகென்றேத்த, அவ்வமயம் இராத்திரியாய் விட்டபடியால் இரவிடங்கெடுத்த நிரைமணிவிளக்கின் எல்லாருஞ் சூழப் பெருங்களிற்றெருத்தத்தில் வாளுங்குடையும் எற்றி வஞ்சியின் புறநிலைக்கோட்டப்புரிசையிற்புகுத்திப் படைத்தலைவர்க்குப் பெருஞ்சோறுவகுத்து அன்றிராத்திரி நீங்கிக் காலைமுரசம் ஒலியெழுந்தவாறே சிவபெருமான்சேவடி சென்னியிற்புனைந்து வடதிசையாத்திரைக்கு யானையேறியபோது "ஆடகமாடத் தறிதுயிலமர்ந்தோன் சேடங்கொண்டுசிலர் நின்றேத்த" என்று கூறப்பட்டுள்ளது. இதனாற் கணி முகூர்த்தமிட்டது என்றவுடன் வாளுங்குடையும் இரவிற் பராஸ்தானப்படுத்தினனென்றும், மறுநாட் காலைமுரசம் ஒலியெழும்போது சிவபிரானை வணங்கி யானையேறினனென்றும், அப்போது திருமால்பிரசாதம் சிலர்கொணர்ந்தனரென்றும் உணரலாம். முதனாள் இராத்திரித்தானே முகூர்த்தநிச்சயமாகி வாளுங்குடையும்பராஸ்தானப்படுத்திக் காலையிற்பயணங்கொண்டசேரன் முன்வந்த இத் திருமால்பிரசாதம்சேரனிருக்குந்தலைநகர்க்கண்ணேயுள்ள திருமால்கோயிலுடையதாகுமா அல்லது தூரத்துள்ள திருவநந்தபுரத் திருமால்கோயிலுடையதாகுமா என்பதே ஈண்டு ஆராயவேண்டியது. பிறர்கூறுகிறபடி இவ்வாடகமாடத்தைத் திருவநந்தபுரமென்றுஞ் சேரனிருப்பது கொடுங்கோளூரென்றுங் கொண்டுபார்ப்போம். முதனாளிராத்திரி வாளுங்குடையும் பராஸ்

தானப்படுத்தி மறுநாட்காலையிற்புறப்படும் அரசனுளனாக நினைக்குங் கொடுங்கோளூர்க்குந் திருவநந்தபுரப்பிரசாதம் வருதலியலுமா? கொடுங்கோளூர்க்குந் திருவநந்தபுரத்துக்கும் இரண்டு மூன்று நாட்பயணதூரமில்லையா? முகூர்த்தநிச்சயமான இராத்திரிச் செய்தி திருவநந்தபுரத்துக்குத்தெரிதற்கே இரண்டு மூன்று நாளாகுமே? அங்ஙனமாகவும் ஆடகமாடந் திருவநந்தபுரமாதல் எங்ஙனங் கொடுங்கோளூர் வஞ்சிக்குச் சாதகமாகுமோ யானறிகிலேன். செங்குட்டுவன் வடநாட்டுப்பயணம் இந்நாளென்று தெரியாவிடினும் பொதுவாகப்புறப்படுவானென்று நாடெங்கும் பறையறைந்த காரணமாகத்தெரிந்துகொண்டு திருவநந்தபுரத்தார் முன்னரே புறப்பட்டுப்போந்தார்; அவர்போந்ததருணம் செங்குட்டுவன் பயணத்துக்குமொத்ததாயிற்று எனக் கூறுவாராயின், அதனையே கருவூர் வஞ்சியே சேரர் தலைநகர் என்பாரும் கூறிக்கொள்ளலாகுமே. இதனால் ஆடகமாடம் திருவநந்தபுரமென்பது கொடுங்கோளூர்க்கு ஓர் அநுகூலத்தையும் கருவூர்க்கு ஒரு பிரதிகூலத்தையுஞ்செய்யாது பொதுவாகநிற்றல் நன்கறியலாம். இனி இவ் வாடகமாடந் திருவநந்தபுரந்தானோ என்பதைப்பற்றி ஆராய்வேன்.

சிலப்பதிகாரம் வரந்தருகாதையில் தெய்வமுற்றதேவந்திகை என்பாள் செங்குட்டுவன்முன்னே மாடலனைநோக்கி இக்கடவுண் மங்கலங்காணவந்தமகளிருள் அரட்டன்செட்டியின் இரட்டைப் பெண்களிருவரும்ஆடகமாடத்தரவணைத்துயின்றோன் அருச்சகனை சேடக்குடும்பியின்புதல்வியும் இங்குளர்; அவரை உன் கரகத்து நீராற்றெளிப்பையாயின் முற்பிறப்புணர்ந்தவராவர். இதைக்காண்பாயாக என்று சொல்ல மாடலனும் அவ்வாறேதெளிக்க அம்மூவரும் கண்ணகிபால் அன்புடைய முதியோர்சொல்லாற்புலம்ப அப்போது மாடலன் அரசனை நோக்கி இவ்வரட்டன்செட்டியின் இரட்டைப்பெண்களிருவரும் கண்ணகிதாயும் கோவலன்றாயுமாவர் என்றும், இச்சேடக்குடும்பியின்மகள் மதுரையிற் கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலங்கொண்ட ஐயைதாய் மாதரியாவள் என்றும் விளக்கிக்கூறுமிடத்து,—

“காதலிதன்மேற்காதலராதலின்
மேனிலையுலகத்தவருடன்போகுந்
தாவாநல்லறஞ்செய்திலரதனை

லஞ்செஞ்சாயலருகாதணுகும்
வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற்
பொற்கொடிதன்மேற்பொருந்திய காதலி
னற்புளஞ்சிறந்தாங்கரட்டன்செட்டி
மடமொழிநல்லாண்மனமகிழ்சிறப்பி
னுடன்வயிற்றோராயொருங்குடன்றோன்றின
ராயர்முதுமகளாயிழைதன்மேற்
போயபிறப்பிற்பொருந்தியகாதலி
னாடியகுரவையினரவணைக்கிடந்தோன்
சேடக்குடும்பியின்சிறுமகளாயின
ணற்றிறம்புரிந்தோர்பொற்படியெய்தலு
மற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறலும்
... ... ... ...
புதுவதன்றேதொன்றியல்வாழ்க்கை"

எனக்கூறப்பட்டுள்ளதனை அறிஞர் அறிவர். இதன்கண், கோவலன் றாயும் கண்ணகிதாயும் ஐயைதாய்மாதரியும் சுவர்க்கம்புகாது இவ்வுலகிற் பிறத்தற்குக்காரணம் கண்ணகிமேல்வைத்தகாதலே என்றும், அற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறல் முறையாதலானே இவர் தம்மாற்காதல்செய்யப்பட்ட கண்ணகி அஞ்சாதணுகும் வஞ்சிமூதூரில் அரட்டன்செட்டி இரட்டைப்பெண்களாகவும்,சேடக்குடும்பியின் மகளாகவும் பிறந்தனரென்றும் கூறப்பட்டிருத்தல் எல்லாரும் அறிந்து கொள்ளலாம். அரும்பதவுரையாசிரியரும் "காதலி-கண்ணகி; என்றும் காதலராகையாலே அறஞ்செய்திலர்; அதனைக் காதலியாகிய அஞ்செஞ்சாயல் அஞ்சாதணுகும் வஞ்சிமூதூரிற்பிறந்தார்" என்றுரைத்ததையுங் கண்டுகொள்க. முன்னிருவரும் வணிககுலத்தவராதலிற் செட்டிமகளிராயினரென்றும், திருமால்பத்திமையாலாடியகுரவையால் ஆயர்மகள் திருமால்திருவடிபிடிப்பான் மகளாயினளென்றும் அடிகள் தெளியவுரைத்ததுங்காண்க. இடைச்சிமகள் இடைச்சியாகப்பிறவாமற் பிறந்ததற்கு "ஆடியகுரவையின்" என்று ஏதுக்காட்டினர். இம்மூவரும் காதலராதலின் நல்லறஞ்செய்திலர்; அதனால் அஞ்சேஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற் பொற்கொடி தன்மேற்பொருந்தியகாதலின் இருவர்தாயரும் அரட்டன்செட்டிமனைவியின் ஒருவயிற்றுஇரட்டைப்பெண்களாகத்தோன்றினர். ஆயர்மகள் ஆயிழைகாதலின், ஆடியகுரவையின் அரவணைக்

கிடந்தோன் திருவடிபிடிப்பானை சேடக்குடும்பியின் மகளாயினள் என்றே கொள்ளக்கிடத்தல்காண்க. ஈண்டு அரவணைக்கிடந்தோன் உள்ள ஊர்வேறும் மேல் அரட்டன் செட்டிமகளிர்க்கு வஞ்சி மூதூரைக்கூறினார்போல இவள் பிறந்தவூரையுங் கூறுவரென்க. அந்நனங்கூறாமைகாண்க. அஞ்செஞ்சாயலாகிய கண்ணகி அஞ்சாதணுகியது வஞ்சியேயெனவும், அவள்பாற் காதலால் அவளுள்ளவிடத்துப்பிறந்தார்கள் எனவும், அங்ஙனம் அவ்வூரிற்பிறப்பானேனோ என்னும் ஆசங்கையுண்டாகாதபடி அதனைப் பரிகரித்து "அற்புளஞ்சிறந்தோர் பற்றுவழிப்படர்தல் புதுவதன்" றெனவும் அடிகள் விளக்குதல்காண்க. திருவடிபிடிப்பான் மகளாகிய ஆயர்மகள் வஞ்சியிற்பிறவாதுதிருவநந்தபுரத்துப்பிறந்தாளெனக்கொள்ளின் அவளாற் காதலிக்கப்பட்ட அஞ்செஞ்சாயலாகிய கண்ணகியணுகியது வஞ்சியாதலான் அவள்பற்று அங்கே அவளையுய்க்குமென்னு நியதியின் மாறி வேற்றிடத்து அவள்பிறத்தற்குக் காரணங்கூறவேண்டிவரும். நூலுள் இவ் வாயர்மகள்பிறத்தற்கு இரண்டு ஏதுக்கள் கூறியுள்ளன. அவை ஆயர்முதுமகளாயிழைகாதலின், ஆடியகுரவையின், மகளாயினள் என்று கூறுதலானறியலாம். இதன்கண் ஆயிழை காதலினாலும், ஆடியகுரவையினாலும் மகளாயினள் என்று கூறியதற்கு ஆயிழைகாதலால் அவ்வாயிழை யணுகிய வஞ்சி மூதூரில் ஆடியகுரவையால் அருச்சகன்மகளாயினளென்றே கொள்ளக்கிடக்கின்றது. இடைச்சி இடைக்குலத்திற் பிறவாது திருமால்அருச்சகன்மகளாயினமைக்கு ஆடியகுரவையின் என ஏதுக்கூறுகின்ற மஹாமேதாவியான பெருங்கவியரசர் ஆயிழை காதலின் என்பதனை வாளாகூறினரென்பது சிறிதும்பொருந்தாது. மேல் தாயிருவரும் அரட்டன் செட்டிமகளிராயினர் என்று கூறிய விடத்தும் "பொற்கொடிதன்மேற் பொருந்தியகாதலின்" என வஞ்சி மூதூரிற்பிறத்தற்கு ஏதுக்கூறுதல் காண்க. அங்குக்கூறிய ஏதுவையே இங்கும் "ஆயிழைகாதலின்" என ஆயர்மகள் வஞ்சி மூதூரிற்பிறத்தற்குக் கூறினாரென்பது தெள்ளிது. இதனாற் சேடக்குடும்பி என்பான் வஞ்சிமூதூரிலுள்ளவன் என்பது தெளியப்படும். இவ்வருச்சகன் வஞ்சியூரினனென்று தெளிந்தவாற்றான் இவன் அருச்சிக்கும் அரவணைத்துயின்ற திருமாலும் அவ்வஞ்சியிலே திருக்கோயில் கொண்டருளிய மூர்த்தியேயாகுமென்பது துணியப்படும்; மாதரி ஆயிழைகாதலின் வஞ்சியிற்பிறந்தாள், ஆடியகுரவையின் திருமால்பத்தி செய்தற்கேற்ற வைஷ்ணவகுலத்துப் பிறந்தாள்—

என்று கூறியதன் கருத்தையுற்று நோக்கின் இவள் கண்ணகி அணு கிய வஞ்சிமூதூரிற் றிருமாலை வழிபடுவாளாய்ப் பிறந்தாள் என்பது புலனாகும். இதனால் வஞ்சிமூதூர் ஒருபுறமும், இவள் வழிபடுந்திருமாலிருப்பது வேறொருபுறமுமாகாமை உணர்ந்துகொள்க. இவற்றால் சேடக்குடும்பி அருச்சிக்கும் அரவணைத்துயின்றோன் எழுந்தருளிய ஆடகமாடம் வஞ்சியுள் ஆனிலைபோன்றதோர் ஸ்தலவிசேஷமேயென்பது தெற்றெனவுணர்க. அது பொன்னாலாகிய மாடக்கோயிலாதலான் ஆடகமாடம் எனப்பட்டதாகும். நறையூர்மணிமாடம், நாங்கூர்மணி மாடம், கடந்தையுட் டுங்கானைமாடம் என்பனவெல்லாம் அவ்வவ்வூரிற் கோயிலையே குறித்தல் கண்டுகொள்க. விஷ்ணுவுக்கு நிவேதனஞ்செய்தல்லது உண்ணலாகாது என்னும் மிருதிபற்றி இக்ஷ்வாகு முதலியோர் அயோத்தியிற் றம்மரண்மனைக்கண்ணே வைத்து வழிபட்ட தேவகிருகம் போன்றதாய்ச் சேரர் அரண்மனைக்கண்ணே உள்ளது இஃதொன்று எனக்கொள்ளினு மிழுக்காது.

இவரோடொத்த பாண்டியரது கூடலிலும் ஆடகமாடமென ஒன்று இருந்தமை,

"கோநெடுமாறன்றென்கூடலின்வா
யாடகமாடங்கடந்தறியாதவென்னாரணங்கே"

என்னும் இறையனாரகளவியலுரைமேற்கோளா னறியப்படும். ஈண்டுக் கூடலின்வாயாடகமாடம் என்றிருத்தலான் ஆடகமாடம் ஊராகாமை நன்குணரப்படும். இதுபோலவே சிலப்பதிகாரத்துக்கூறப்பட்ட ஆடகமாடமும் ஊராகாமதென்றுணர்க. "வானவர் தோன்றல் வாய்வாட்கோதை, விளங்கில்வந்தி வெள்ளிமாடத்து" என்பதனால் வஞ்சியின் நிராவியையுடைய வெள்ளிமாடம் என ஒன்றிருந்தது நன்குபுலனாகும். ஆண்டு வெள்ளிமாடம் ஊராகாததுபோலவே ஆடகமாடம் என்பதனையுங் கொள்க.

இதனால் ஆடகமாடம் வஞ்சியின்கண்ணதாதலானே இராத்திரி முகூர்த்தங்ச்சயித்து வாளுங்குடையும் பரஸ்தானப்படுத்திக் காலையிற்பயணப்பட்ட செங்குட்டுவற்கு அவன் பயணப்பட்டு யானைமேல் வழியதருணத்து அவ்வாடகமாடக்கடவுள் பிரசாதம் நல்கலாயிற்றென நன்குணர்ந்துகொள்க.

ஈண்டு "அஞ்செஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்" என்பதனாற் கண்ணகி அஞ்சாது அணுகும் கருவூர் என்றார். மலையில்

வேங்கையின்மூலிற் குறவரெல்லாங்காண வானவர்போற்றத் தெய்வக்கணவனுடன் விமானத்தேசென்ற கண்ணகி வஞ்சியுள் அஞ்சாதுபுகுமாறு என்னையெனிற் கூறுவேன். கண்ணகி தீக்கனுக் கண்டதன்பின்னே கோவலனோடுபோய் மதுரைப்புறத்து ஒருகாற் கண்ட தீக்கனு அப்படியே பலித்துவிடுமோ என்னும் அச்சத்தோடே புக்கனள். வஞ்சியு ளங்ஙனமின்றி, கோவலனுந்தானும் தெய்வமாய்ப் புகுதலின் இனி ஏதம்வருமென்னும் அச்சமிலாது அணுகினள் என்று கூறினாரெனவறிக. செங்குட்டுவன் கண்ணகியுடன் கோவலற்கும் கோட்டத்துப் படிமம் வகுத்தான் என்பதும், அக்கோட்டம் வஞ்சியின் புரிசைப்புறத்ததே என்பதும் மணிமேகலையுள் வஞ்சிமாநகர் புக்ககாதைக்கண்,

> "தணியாக்காதற் றாய்கண்ணகியையுங்
> கொடைகெழுதாதை கோவலன் றன்னையுங்
> கடவுளெழுதிய படிமங்காணிய
> வேட்கைதுரப்பக் கோட்டம்புகுந்து
> வணங்கிநின்று குணம்பலவேத்தி"

எனவரும் அடிகளானும், மணிமேகலைக்குக் கோட்டத்துள்ளகடவுட் பத்தினி,

> "நறைகமழ்கூந்தனங்கையுநீயு முறைமையினிந்தமூதூரகத்தே"

எனக்கூறிய அடிகளானும் நன்குணர்ந்துகொள்க. கோட்டத்துள்ள கடவுட்பத்தினி இந்தமூதூரகத்து என வஞ்சியைச்சுட்டிக்கூறுதலாற் கோட்டம் வஞ்சியின்கண்ணதே என்றுதெளியப்படும். மணிமேகலை, கோட்டத்துக் கடவுட்பத்தினியைவழிபட்டு, அவ்வாற் பலவுந் தெரிந்துகொண்டு வஞ்சி எயிற்புறவிருக்கையிற்போய்ச் சமயக்கணக்கர்தந்திறங்கேட்டு அப்பாற்சென்று புறக்குடிகடந்து அகழியையும் எயிலையுங்கடந்து நகர்க்குட்புக்காள் என்று சாத்தனார் மணிமேகலை நூலுட் கூறலால் இப்பத்தினிகோயில் வஞ்சியின எயிற்புறவிருக்கைக்கும் அப்பாலுள்ளதென்பது நன்குபுலனாகும். கண்ணகிக்குக் கோவலனுடன்படிமம்வகுத்தபடியாலும், இவளபடிமத்துக்கு "முற்றிழை நன்கலமுழுவதும்பூட்டி" (சிலப்-28) என்றதனாலும் செங்குட்டுவன் இவட்குவகுத்தபடிமம் சுமங்கலிவடிவமெனத் தெளிந்துகொள்க. இதைப்பற்றிப் பின்விரித்துக்கூறுவேன்.

இனிப் பிறர் செங்குட்டுவன் மலைகாண்குவனென்று வஞ்சியினின்றும் கிப்போய்ப் பேர்யாற்றங்கரையிற்றங்கிக் கண்ணகிவரலாறுகேட்டு அவளைத் தெய்வமாகவெழுதிபடப் பலரோடேபோராய்ந்து துணிந்து மீண்டு வஞ்சியுட் புக்கான் என்னுஞ்செய்தியில், செங்குட்டுவன் பேர்யாற்றங்கரைக்கு என்று போனானே அவ்வேற்றினிடத்தினைக் கொண்டு அதனாற் பேர்யாற்றங்கரைக்கு அணித்தாகப் பழைய சேரர்தலைநகர் இருத்தல் வேண்டுமென்றுகூறி அங்ஙனமணித்தாகவுள்ளது கொடுங் கோளூரெனக் கொண்டு அதுவே பழைய சேரர்தலைநகர் என்று துணிவாராயினர். இதைப்பற்றி ஈண்டு ஆராய்வேன். செங்குட்டு வன் மலைகாண்குவமென்று * பேர்யாற்றங்கரைக்குச் சென்றதைப் பற்றி இளங்கோவடிகள்,

"வானவர்தோன்றல்வாய்வாட்கோதை
விளங்கிலவந்தி வெள்ளிமாடத்
திளங்கோவேண்மாளுடனிருந்தருளித்
துஞ்சாமுழவினருவியொலிக்கு
மஞ்சுசூழ்சோலைமலைகாண்குவமெனப்
பைந்தொடியாயமொடுபரந்தொருங்கீண்டி
வஞ்சிமுற்றநீங்கிச்செல்வோன்
வளமலர்ப்பூம்பொழில் வானவர்மகளிரொடு
விளையாட்டு விரும்பியவிறல்வேல்வானவன்
பொலம்பூங்காவும்புனல்யாற்றுப்பரப்பு
மிலங்குநீர்த்துருத்தியுமிளமரக்காவு
மரங்கும்பள்ளியுமொருங்குடன்பரப்பி
யொருநூற்றுநாற்பதுயோசனைவிரிந்த
பெருமால்களிற்றுப் பெயர்வோன்போன்று
.................................
பெருமலை விலங்கியபேரியாற்றடைகரை
யிடுமணலெக்கரியைந்தொருங்கிருப்ப"

எனக்கூறியுள்ளார். செங்குட்டுவன் கோப்பெருந்தேவியுடனும்இளங் கோவடிகளுடனும் வில்லவன் கோதையாகிய படைத்தலைவனும் அழும்பில்வேளும் ஆறறிபுலவரும் பைந்தொடியாயமும் பரிகரமும் தானையும் முதலாய பெருந்திரளுடனும் உபகரணங்களெல்லாம்

* [illegible]

அமைத்துக்கொண்டு மலைகாணச்சென்றானென்பது இக்காட்சிக் காதையினைக்கற்றாரறிவது: இவன் இங்ஙனஞ்சென்றதைவருணிக்குமிடத்துள்ள அடிகள் மேற்குறித்தன. இவற்றான் ஒலியவியாத முழவுபோல் எப்போதும் அருவிகள் ஒலித்தற்குக்காரணமான மேகங்கள்சூழ்ந்த சோலைகளையுடைய மலையினைக்காண்குவமென்று விளையாட்டுவிரும்பிய இந்திரன், வானவர்மகளிரொடு பூங்காவும் யாற்றுப்பரப்பும் நீர்த்துருத்தியும் இளமாச் சோலையும் அரங்கும் பள்ளியுமென்பனவற்றை யானைமேற்பரப்பி ஒரு நூற்றுநாற்பது யோசனை விரிந்த தன்பெருமால்களிற்றுப் பெயர்வோனைப் போலச் சென்று பேர்யாற்றங்கரையிற் சேர்ந்திருப்ப—என்று கூறுகின்றார் அரும்பதவுரையாசிரியரும், இவ்விடத்துப் "பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகநிருமித்து" எனவும் "அரங்கு-நாடகசாலை. பள்ளி மண்டபம். களிற்றிலே இவற்றைப் பரப்பிப்பெயர்வோனென்க" எனவும் விளக்கினார். செங்குட்டுவனை, வானவன்பெயர்வோன்போன்று என்பதனால் இந்திரன் உவமையும், செங்குட்டுவனுபமேயமும் ஆதல் அறியப்படும். இதன்கண் உவமையைப் பலபடியாக விசேடித்து உவமேயத்தை அத்துணை விசேடியாது விடுத்தார். அடிகள் எடுத்துக் கொண்டது உவமேயமாகிய செங்குட்டுவன் மலைகாணச்சென்ற செலவையே யென்பது பலருமறிவர். உபமானமாகிய இந்திரன் விளையாட்டுவிரும்பி வானவர்மகளிருடன் சென்றசெலவை ஈண்டு எடுத்துக் கூறப்புகுந்தவர் அல்லர் என்பதும் பலருமறிவர். அங்ஙனமாகவும் இந்திரனை உவமையாக்கிப் பலபடியாக விசேடித்தது, உபமான விசேடணமெல்லாம் ஏற்றபெற்றியான் உவமேயத்துங்கொள்ளப் படுமாதலான், செங்குட்டுவன் சென்ற செலவின்றன்மை உள்ளவாறுணரப்படுமென்று கருதியேயாகும். அங்ஙனமல்லாக்கால் உவமையை அசந்தர்ப்பமாக வாளாவிசேடித்தாரெனப்பட்டு அவ்விசேடணமெல்லாம் நின்றுபயனின்மை யென்னுங் குற்றத்தின்பாற் படுமென்றுணர்க. இக்கருத்துப் பிறர்க்குமுடன்பாடாகும். என்னை காரணமெனிற் செங்குட்டுவன் விளையாட்டு விரும்பி மலைகாணச் சென்றானென்று அவர் கூறுதலான் என்க. விளையாட்டு விரும்பிய என்பது செங்குட்டுவனை விசேடித்ததல்லாமை காணப்படும். அஃது இந்திரனையே விசேடித்தது "விளையாட்டு விரும்பியவிறல்வெல் வானவன்" என்பதனா னன்கறியப்படும். உவமையின்கணுள்ள விளையாட்டுவிருப்பத்தைச் செங்குட்டுவனுக்கும் அமைத்துக்கொண்டது

உபமாவிசேடணமெல்லாம் உவமேயத்தையும் விசேடித்தனவாகக் கருதப்படும் என்ற நியாயத்தாலேயன்றிப் பிறிதில்லை. அங்ஙனமே மற்றெல்லாவற்றையும் ஏற்றபெற்றியான் அமைத்துக்கொள்ளவே வேண்டுமென்க. இங்ஙனங்கொள்வதே கவிமரபென்க. பிறர் தமக்கு வேண்டிய விளையாட்டு விருப்பமொன்றையே உபமா விசேடணத்தினின்று கொண்டு மற்றவற்றையெல்லாம் ஒழிப்பது உரைமுறையாகாமை எளிதிலறியப்படும். இந்திரன் றன்றெய்வத்தலைமைக் கேற்ப விளையாட்டு வேண்டி அதற்குரிய உபகரணங்களைப் பெரும யானையிலேற்றிச் சென்றது போலச் செங்குட்டுவனுந் தன் றலைமைக்கேற்ப விளையாட்டு விரும்பி மலைகாண்குவமென்று பெரிய உபகரணங்களையெல்லாம் யானைகளிற் பரப்பிநெடுந்தூரஞ் சென்றான் என்றே கொள்ளப்படுமென்க. செங்குட்டுவனும் யாத்திரைகளில் உபயோகிக்கும் நாடகசாலைகளையும், மண்டபங்களையும், தாழியிற்பூத்துப் பயன்றருவனவற்றையும், தான்விரும்பிய யாற்று நீரையும், துருத்திமணலையும், தாழியினின்று குளிர்ச்சி செய்யும் இளமரங்களையும், பிறவற்றையும் தன்யானைகளிற்பரப்பி நெடுந்தூரம் சென்றான் என்றே கொள்ளப்படுமென்க. செங்குட்டுவன் செல்லவே கூற வந்தாராதலான் இதுவே கருத்தாதறெள்ளிது. இவற்றையெல்லாம் உடன்கொண்டு சென்றான் என்று செங்குட்டுவன் இறைமையும் செல்வப்பெருக்கும் இன்பப்பெருக்கும் உணரக்காட்டினார். சாதாரண வேந்தரால் ஆகாதகாரியத்தைத் தேவர்தலைவன் போலச் செய்து கொடுபோனான் என்று கூறுதலே கருத்தென்க. அருவிமுழங்கும் சோலை மலைகாணச் செல்வோன் நீரும் நிழலும் பிறவும் கொடுபோவானேனென்னிற் றனக்கும் கோப்பெருந்தேவிக்கும் அம்மலைபோய் வருதற்கண் இடைநெறிக்கு இன்றியமையாதன வையாகலான் என்க. இக்காலத்துள்ள பேரரசரும்தமக்கினிய நீரும் நிழலும் உரியவற்றினேற்றி உடன்கொண்டுசேறல் கேட்கப்படுகலானென்க. அரங்கும் கொடுபோகலான் நாடகமகளிரும் பிறரும் உடன்சென்றாராதலறியப்படும். பள்ளி என்றார், வேந்தனுக்கும் கோப்பெருந்தேவிக்கும் இளங்கோவடிகட்கும் வில்லவன் கோதைக்கும் அமைச்சில்வேட்கும் புலவர்க்கும் ஆயத்திற்கும் தானைக்கும் அவரவர் தகுதிக்கேற்ற யாத்திரைமண்டபங்களை. இங்ஙனமே இந்திரன் யானையின் நீள அகலங்களையே குறித்து ஒருநூற்று நாற்பதி யோசனை என்பதும் செங்குட்டுவன் யானைகளின் பரப்புக்கும் ஏறுதுபோகாதென்றுணர்ந்துகொள்க. ஈண்டுக்கூறிய தொகையள

வேயளவாகக் கொள்ளாவிடினும் செங்குட்டுவன் யானைப்பரப்பு மிகவுமதிகமாக இருந்ததென்பதுமட்டி லிஃதுணர்த்தாமலிராதென்க. யானைப் பரப்பு இத்துணையோசனை யென்றது இவன்செல்லப்புக்க இடத்தின் றூரத்தை அதிகமாகக் காட்டுதற்கே என்பதெளிதிலுணரப்படும். பரப்பு இத்துணையாயின் அதுசெல்வது அதினுமதிகமாக வேண்டுவதே யென்க. வானவர்மகளிருடன் என்றதற்கேற்பச் செங்குட்டுவற்கும் அழகுமிக்க இன்பமகளிர் பலருடனெனக் கூறிக்கொள்க. இங்ஙனம் பெருங் கவியரசராகிய இளங்கோவடிகள் தாமும் செங்குட்டுவனுடன் சென்று கண்ணாரக்கண்டநுபவித்தவற்றை உலகமறிந்து கொள்ளவேண்டி உபமாவிசேடமுகத்தால் உணர்த்தினரென்பதல்லது வாளா கூறினரெனத் துணிதற்கு எம்மனோருடன்படாரென்க. இங்ஙனம் கவியிருதயத்தைக் காணமாட்டார் வேறுவேறு கூறுவர். அவையெல்லாம் இவ்வடிகள் கருத்தாகாமை கண்டுகொள்க.

இனி இளங்கோவடிகளுடனும் தானைத்தலைவருடனும் நூலறி புலவருடனும் மலைகாணச்சென்றானென்று இக்காதையாற்றெரிதலான் இவரெல்லாருடனும் செங்குட்டுவன் விளையாட்டுவிரும்பினனென்றல் பொருந்தாது. அதனால் இவன் விளையாடல்மட்டுமே விரும்பினனாகானென்றும், அடிகளுடனும் நூலறிபுலவருடனும் அம்மலையிலுள்ளபோது பல நல்ல விஷயங்களைக்கேட்டுத்தெளியவும், மந்திரியருடன் இராச்சியகாரியங்களை ஆராய்ந்து கொள்ளவும் அவகாசமுண்டாமென்று கருதி இவரையெல்லாம் அழைத்துப்போனனென்றும் தெளியலாம். இவ்வளவாலோசனை யுடையனாயித்துணைப் பெருந்திரளோடு சாதாரண அரசர்க்காகாதபடி அரியபெரிய உபகரணங்களை யெல்லாம் அமைத்துக்கொண்டு நெடுந்தூரம் சென்ற செங்குட்டுவன் இரண்டொருநிமிஷங்களோ நாழிகையோ அம்மலையிற் கழித்து மீண்டானெனத்துணிவது சிறிதும் பொருந்தாது. இஃது இக்காலத்துப்பேரரசர்கள் தம் குடும்ப பரிவாரங்களுடன் பன்னூறுகாவதங்கடந்து வேனிற்காலத்து மலைவளந்துய்க்கச் செல்வதோடொக்குமோ அன்றி அவரவர் ஊர்ப்புறத்து மாலையிற் சில நாழிகைகளே நல்லகாற்றினைத் துய்த்தற்பொருட்டு உலாப்போந்து மீளுதலை யொக்குமோ என்று அறிஞரே ஆராய்ந்துகொள்வாராகுக. இஃதன்றி நாளுள் மலைகண்ட அன்றே செங்குட்டுவன் மீண்டான் என்று துணிதற்கு அடையாளம் ஒன்றுமில்லை. அக்கொள்கைக்கு

விரோதங்களே பல ஆண்டுக் காணப்படுகின்றன. பிறர், விளையாட்டு விரும்பிச் செங்குட்டுவன் மலைகாணச்சென்றானென்பதற்குடன்பட்டார். அவ்விளையாடல்கள் பல திறப்படுமே. அவற்றுக்கெல்லாம் அவகாசமதிகமாகவேண்டுமே. பிறர் செங்குட்டுவன் சென்று தங்கிய பேர்யாற்றங்கரையாண்டையதென்று துணிவரோ தெரிகிலேன். அவர் கூறுமாற்றான் ஆல்வாய்ப்பக்கமென்றாகிக்கப்படுகின்றது. அது துஞ்சா முழவினருவியொலிக்கும் மஞ்சுசூழ்சோலைமலையிடந்தானோ? அஃதன்றாயின் நெடுந்தூரம் மலைமேலேறிச் சென்றாலன்றோ அத்தகையது காணலாம். கொடுங்கோளூர்க்கும் ஆல்வாய்க்குமே இரண்டு காவதங்கட்கு விஞ்சியதாகும். அதற்குமேலே மலைகாணச்சென்றானாயின் மலைகண்டு குளித்து உண்டு பலவகைவிளையாடலையும் விளையாடி மலையிலுள்ள வேடர்கொணர்ந்த பலவகைத்திறையையும்ஏற்று அவர்பாற் கண்ணகிசெய்திகேட்டுச் சாத்தனார்வாயால் அவள் வரலாறுதேர்ந்து நெடும்போது அவளை வழிபாட்டிற்பொருட்டு நூலறிபுலவர்முதலிய பலருடன் ஆராய்ந்துதுணிந்து அன்றேமீண்டானென்றன்றோகொள்ள வேண்டிவரும்? இத்தனை திரளுடன் துஞ்சாமுழவினருவியொலிக்கு மலைப்பக்கத்துக்குக் கொடுங்கோளூரினின்று செல்லவே சிலநாளேனுஞ் செல்லும். அங்ஙனமாக அன்றேபோய் இத்தனை காரியங்களையுஞ் செய்து அன்றே மீண்டானென்பது இயற்கைக்கு வெகுவிரோதமாக நினைக்கப்படும். இவன் செலவுக்கே ஒரு நாட்போதாதென்று துணியப்படாநிற்க, இவன் மலைகண்டு விளையாடி இத்தனையுஞ் செய்து அன்றே மீளுதலுஞ் செய்தான் என்பது பொருந்தாதென்றியார்தாந் துணியார். இவன் செய்த ஒவ்வொரு வினைக்குச் சிறிதுசிறிது நாழிகையாகப் பகுத்தாலும் நாள்கள்பலவாகும் என்றுணர்க. அரங்குங்கொடுபோயவன் விளையாட்டுவகையுளொன்றாக் நாடகமுங்கண்டானவன். இஃதெல்லாம் நிமிஷங்களில் நடந்தனவாகா.

மதுரைக்கூலவாணிகன்சாத்தனார் மதுரைப்பதியினரென்பது பலருமறிவர். அவர் செங்குட்டுவனை முன்னே காணுநவர். பரிசில் வேட்கையால் அவனைக்காண்டற்கு வந்தவர். மலைமிசைவாழ்நர் என்றைக்குச் சென்று செங்குட்டுவனைப் பேர்யாற்றங்கரையிற் கண்டாரோ அன்றுதான் இப்புலவர் அவனைக் காண்டலானுண்டாகிய கண்களிமயக்கத்துடன் இவனைக்காணப்பெறுதலான் இனி விசாரமில்லையென்றுதுணிந்து மகிழ்ந்தவராவர். இதனை,

"மண்களிநெடுவேன்மன்னவற்கண்டு
கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த
தண்டமிழாசான்சாத்தனிஃதுரைக்கும்"

என இக்காதையிற் கூறுமாற்றானறிக. பதிகத்தும் "அவனுழை யிருந்த தண்டமிழ்ச்சாத்தன்" என்பதற்குப் பரிசில்காரணமாகவந்து அவனுழையிருந்த சாத்தன் என்று பொருள்கூறுதல் காண்க. மன்ன வற்கண்டு கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த என்பதனால் இப் புலவர் அப்போதுதான் வந்துகண்டவர் என்பது நன்குணரப்படும். இவர் ஒரு பெருவேந்தன் பெருந்திரளுடன் அயிரைமலைப் பேர்யாற் றங்கரைக்குவருதலை முன்னரே நன்குணர்ந்து மதுரையைவிட்டுப் பேர்யாற்றங்கரையை யடைந்து அவனைக் கண்டாரென்பதல்லது வேறுகூறலாகாது. இவர், வேந்தன் பேர்யாற்றங்கரையிற் சிலகாலம் பெருந்திரளுடன் தங்குவான் என்பதை யுணர்ந்ததனாலன்றே அவனைக்காண ஆண்டுச் சென்றார். ஒருநாளிற் சில போதே பேர்யாற்றங்கரையிற்றங்குவானாயின் அது வேற்று நாட்டுக்கு முன்னரே உணரப்படாததாகும் என்றுகொள்க. அவ் வொருநாளிற் சிலநாழிகைகளைநம்பி அப்பெருவேந்தன் விளையா டல் விரும்பிச் சென்ற அம்மலையில் அவனைக்காணலாகுமென்று ஒரு பேரறிவாளன் நினைந்து தன்னாட்டை விட்டு இத்துணைத்தூரம் செல் வானா என்று அறிஞர் ஆராய்ந்துகொள்க. அரசன் மலைவளங் துய்த்து நெடுநாட்டங்குவன் என்றுணர்ந்தாலல்லது இவர் ஆண்டுப் போய்க் காண்டற்கு ஒருப்படா ரென்க. இவர் சேரன்பரிசில்காரண மாகப் பிறர் கூறுகின்ற கொடுங்கோளூர்க்குச் சென்றவராயின் அரசன் அன்றேமீடல் தெரிந்து அவ்வூரிலே தங்குவதல்லது ஒரு நாட் சிலபோது விளையாட்டு விரும்பிப் பெண்டிருடன் சென்ற மலைக்கு அவ்வரசற்குப்பின்னே போய்க்காண்டலை நினைத்தலுஞ் செய்யாரென்றுதுணிக. இதனாற் பலபுலவர் இவன் மலையிற்றங்குவது தெரிந்து பரிசிற்குவருதலுண்டென்பது தெரியப்படும். புதியராய்ப் புக்க பெரும்புலவர் அடிகளைக்கண்டு அளவளாவிப் பின் செங்குட்டு வனைக்கண்டு தம் புலமைத்திறங்காட்டற்கண் சிலநாள்கள் கழியு மென்றுணர்க.

இவற்றையெல்லாம் நுணுகிநோக்கின் செங்குட்டுவன் மலை காணச் சென்ற அன்றே மீண்டானெனத் துணிதலாகாமை யுணர்க.

இவன் கோப்பெருந்தேவியுடனும் அடிகளுடனும் மந்திரியுடனும் அழும்பில் வேளாகிய நண்பினனுடனும் ஆயத்துடனும் படையுடனும் மலைக்குச் சென்றது அவரவரால் பலவகைப்பயனுந்துய்க்க என்று எளிதிலறியலாம். அங்ஙனந்துய்க்கப் போதுமான அவகாசமுடையவனாய் மலைக்கணிருந்தானென்பது உணர்ந்துகொள்க. ஈண்டுப் பேரறிவாளராகிய அடியார்க்குநல்லாரும் அன்றே மீண்டானெனத்துணிந்தது இரங்கத்தக்கது. மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகள் ஒருவன் சேய்மைக்கட்சேறலை யுணர்த்துவதன்றி அணிமைக்கட் சேறலைச் சிறிதுங் குறிக்காமைகண்டுகொள்க. கருவூர்வஞ்சிக்கும் அயிரைமலையாகிய ஆனைமலைக்கும் உள்ள தூரத்தை நினைக்க. இக்காட்சிக்காதைக்கண் "இளங்கோவேண்மாளுடனிருந்தருளி" என்புழி 'வேண்மாளுடனிருந்து இளங்கோவை யருளிப்பாடிட்டு என்றுபாய்' எனப் பொருள்செய்தலானும் பதிகத்து "இளங்கோவடிகட்குக் குன்றக்குறவரொருங்குடன்கூடி......... இறும்பூதுபோலு மஃதறிந்தருளியென"க் கூறினரெனக் கூறுதலானும் இளங்கோவடிகளும் மலைக்குச்சென்றிருந்தது துணியப்படும். அடிகளும் அங்குச் சேறலையறிந்து கொண்டேதான் சாத்தனார் மலைக்குப் போய்ச்சேரனைக்கண்டாராவரெனவுணர்க. மதுரையினின்று நீங்கிக் கண்ணகி சென்றவழிதான் சாத்தனார்க்கும் வழியாமென்றும் உய்த்துணர்க.

இனி,

" செங்குணக்கொழுகுங் கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும் பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை"

எனப் பதிற்றுப்பத்துட் செங்குட்டுவற்குக் காவிரியை உவமை கூறினாரென்பது உரையாளர் "காவிரியனையை யாவதேயன்றி மூன்றுடன் கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க" என்று கூறியவாற்றானறியலாம். ஈண்டுக் காவிரியனையை என்றது சேரனுக்கு இல்லாதயாற்றை உவமைகூறியதென்று பிறர் கூறுவர். இதனுண்மையை ஈண்டு ஆராய்வேன். காவிரிமுழுதுஞ் சோழர்க்கேயுரியதாகா தென்பதனை முன்னரே கூறினேன். காவிரி குடகமலையிற் பிறந்து குணகடலையெய்தற்குள் மூன்றுமண்டலங்களிற் புகுந்து

செல்கின்றது. முதற்கண் மஹிஷமண்டலத்துத் தென்கிழக்காகவும், அப்பாற் கொங்குமண்டலத்துத் தெற்காகவும், சோழமண்டலத்துக் கிழக்காகவும் அவ்யாறு ஓடுதலைப்பலரும் அறிவர். கொங்குமண்டலத்திற்குக் காவிரியே கிடையாதென்று கூறுதலியலாது. சேக்கிழார் ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணத்தில் "கொங்கினிற் பொன்னித் தென்கரைக்கறையூர்க் கொடுமுடிக்கோயின் முன் குறுகி" எனப் பாடுதலான் கொங்குமண்டலத்திற் காவிரி யொழுகுதல் நன்குணரப்படும். கச்சியப்பமுனிவர் கொங்குநாட்டியாறுகளிற் சிறந்தவற்றைக் கூறுவாராகிப்,

"பாவிரிபுலவர்சாவாப்புலவரும் பழிச்சுந் தெய்வக்
காவிரிபவானியாம்பராவதிகங்கையென்னப்
பூவிரிகாஞ்சிமற்றும்பொங்கிவெண்டிரைகள்வீசித்
தாவிரிபழனமோம்பத்தலைத்தலைபரந்தமாதோ (பேரூர்ப்-நாடு34.)

என்னும்பாடலான் அவை இன்னவென்றும் அவை கொங்குநாட்டுப் பழனங்களைப் பாதுகாத்தற்கு ஆண்டுப்பரந்தனவென்றும் நன்கு விளக்கினர். அவர் காவிரி தெற்குமுகமாகத் திரும்பியொழுகத்தலைப் பட்டது கொங்குநாடு காண்டற்கே என வருணிப்பர். அது:—

"மதியந்தவழுஞ்சையவரைவரைப்பிறப்பிறந்தகாவிரிநன்
னதியந்தனக்குநேர்கிழக்கினடத்தலொழிந்துதெனுதிசைக்
கதிகொண்டெழுந்ததுயர்கொங்குகாணும்விழைவாலெனினிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"
(ஷை-நாடு-74)

என்பதனுல் அறியப்படும். இவற்றுற் காவிரி கொங்குநாட்டுண்மையும் அக்காவிரியாற் பழனம் ஓம்பப்படுதலும் நன்குணரலாகும். கொங்கு சேரர்கொங்காக, அக்கொங்கிற்பொன்னி பிறருடையதாமென்பது சிறிதும்பொருந்தாது. இக் கொங்கிற்பொன்னி கொங்கு நாடுடைய சேரரதேயென்பது இதனுற்றெளியப்படும். கொங்கு சேரருடையது என்பதைப்பற்றி முன்னரே பரக்கப்பேசினேன். இதனுற் சோனுட்டில்லாத காவிரியை அவனுக்குவமைகூறினுரெனத் துணிதல் கூடாமை காண்க. இனி இவ்வுவமையை ஆராய்வேன்.

இதன்கட் செங்குணக்கொழுகுங்காவிரி என்றலால் அது நேர் கிழக்காக ஒழுகுதலைக்கூறினுராவர். செங்குணக்கு என்புழிச்

செம்மை செங்கோல்என்புழிப்போல் வளையாதநேர்மையையுணர்த்துவது. இவ்வாறு நேர்கிழக்காக ஒழுகுதல் இஃது ஆன்பொருநையுடன் கலந்தது முதலேயாகும். இதனாற் கொங்குநாடாகிய நின்னாட்டினின்று நேர் கிழக்காகச்சென்று சோணாடுபுகுங்காவிரியனையை என்றுரைத்தா ரென்பதல்லது வேறுகூறலாகாது. இங்ஙனமில்லையாயிற் செங்குணக் கொழுகும் என்றது வாளாகூறியதாகி நின்று பயனின்மை என்னுங் குற்றத்தின் பாற்படுமென்க. இவ்வுவமையால் என்னகருதினாரெனிற் கூறுவேன். காவிரி கொங்குநாட்டினின்று நேர்கிழக்காகச் சோணாட்டுத் தடையின்றிப்புக்கு அந்நாடெல்லாம் வளம்படுத்தி அச்சோழர் தந்தெய்வம்போற் கொண்டாடிவழிபட நிலைஇயதுபோல நீயும் கொங்கு நாட்டினின்று தடையின்றிச் சோணாடுபுக்கு அந்நாட்டு அரசுநிலையிட்டுத்திருத்தியவாற்றான் நின்னைத் தெய்வம்போற் குணநாட்டார் கொண்டாடிவழிபட நிலையினாய் என்று கூறினாரெனவுணர்க. குடகமுதற் குணநாடிறுதியாகத் தொழத்தோன்றுந் தன்மையினையே யீண்டுக் கருதினாரெனினுமமையும். குடநாட்டார் குடநாட்டரசனைத் தொழுதலியல்பு. அந்நாட்டரசனைக் குணநாட்டார்தொழுத லரிதாதலின் அவ்வரிய தன்மை செங்குட்டுவன்பாற் காண்டலான் அதைப்பாராட்டியே செங்குணக்கொழுகுங்காவிரியனையை என்றாரென்க. கனுழிமலிர் நிறைக் காவிரியனையை யென்றது, அக்காவிரியைப்போல நாளும் எப்போதுந்தட்பமுடைமையும் தோற்றப்பொலிவுடைமையும் புதுவருவாயுடைமையும் எதிர்ந்தார்க்கு அச்சந்தோற்றுதலுடைமையும் தடுத்தற்கருமையும் கடத்தற்கருமையும் நீயுடையை என்று கருதினாராவர். இங்ஙனந்தன்னாட்டும் பிறநாட்டும் இவன் பயன்பட நிலைஇய தன்மையைக்காவிரியனையை என்பதனால் நயம்படக்கூறினாரெனவுணர்க. தன்னாட்டேயில்லாமற் பிறநாட்டே பயன்படுங்காவிரியை உவமித்தால் அஃது அவ்வரசற்குப் புகழும் பெருமையுமாகாது எனவுணர்க. இங்ஙனமன்றித்தன்னாட்டில்லாததாய்ப் பிறர்நாட்டுப்பெரும்பயன் றருவதாய்ப் பகையரசர் பெருஞ்செல்வமாயுள்ள யாற்றையே உவமித்தாரென்னின் அஃது அவனுக்கில்லாமையினையும் பகையரசர்க்கு உடைமையினையும் அறிவுறுத்து முகத்தான் அவனை இகழ்வதாகு மல்லது புகழ்வதாகாது. இவனுக்கில்லாத காவிரியை இங்கு உவமை கூறியது இவன் இப்போது சோணாட்டை வென்றசிறப்புப்பற்றி என்பராலெனின் இவ்வுபயர்நான் காவிரிபூரணமாகச் சேரனுடைய

தாய காரணத்தா லதனை உவமைகூறினரென்று அவர்க்கு அறியக் கூறுக. குடகமுதலியநாடுகளைவென்று தலைக்காவிரியையும் கொங்கு நாட்டை என்று முடைமையால் இடைக்காவிரியையும் உடைய செங்குட்டுவன் சோணாட்டை வென்றகாரணத்தாற் கடைக்காவிரியை யும் உடையனாயினானென்றுகொண்டு காவிரியைப்பூரணமாகவுடைய தன்மையைத் தெரிந்து அக்காவிரிபோல எங்குந்தொழ நிலையினாய் என்று சிறப்பித்தாரென்று கூறுக. மற்றுச் சேரனைக் காவிரித்துறை வன் என்றது பொருநைத்துறைவன் எனவே நூல்கள் கூறும். இக் காவிரித்துறையைக் குடநாட்டாருடையராயினும் அவரையும் அங் ஙனம்நூல்கள்கூறாமை போலக்கொள்க. அக்காவிரியாலதிகவளத்தை யெய்துஞ் சோழனைக் காவிரிநாடன் எனக் கூறியவாற்றாற் பிறரை யும் அப்பெயரானேகூறின் உலகமலைவுமாதலின் அங்ஙன மலையா மைப்பொருட்டு ஒருவனை ஒரு பெயரான் ஆளின் அப்பெயரானே பிறனொருவனை ஆளாமை கவிமரபென்க. நூல்வழக்கிற் காவிரிநாடன் என்பது சோழனையன்றி மஹிஷ மண்டல வேந்தனைக்குறியாமை நன்குணர்ந்துகொள்க. இதுபற்றி அவ்வேந்தற்குக்காவிரியில்லை யென்பது எவ்வளவு அஸமஞ்சஸமாகும் இதுபோலச் சோற்குங் கொள்க. இவ்வெல்லாம் ஆராயாது சேரனுக்குக் காவிரியில்லையென் பார் ஈண்டுக்காவிரியனையை யென்றது ஒருவன் பகைநாட்டைவென்ற தருணத்து அப்பகைநாட்டு ஊர் ஆறுமுதலியவற்றையுடையனாக அவ் வென்றவனை வருணித்ததுபோலு மெனக்கொண்டு, தாங்கொண்ட தற்குதாரணமாகப் "புகார்ச் செல்வ" என்று பதிற்றுப்பத்துள்பெருஞ் சேரலிரும்பொறை யென்னுஞ் சேரனை அரசில்கிழார்பாடியதனைக் காட்டுவர். அவர் அப்பெருஞ்சேரலிரும்பொறை "இருபெருவேந் தரையுமுடனிலைவென்று முரசுங்கலனுங் குடையுங்கொண் டுரை சால்சிறப்பி னடுகளம்வேட்" டான் என்பதுபற்றி அங்ஙனங் கருதினராவர். இச்சேரன் வென்றது இருபெருவேந்தரையுமாக அவருட் சோழர்புகாரைமட்டும் ஈண்டு எடுத்துக்கொண்டு "புகார்ச் செல்வ" என்று கூறிவதேனோ? 'கூடற் செல்வ' என்றும் கூறாத தேனோ? என்னும் வினாக்கள் நிகழ்தற்கு அவர் கூற்றிடந்தரு கின்றது. ஆண்டுத் தனியே புகார்ச்செல்வ என்னாது "காவிரி மண்டிய சேய்விரிவனப்பிற் புகாஅர்ச்செல்வ" என்று கூறியிருத் தலைக் காணலாம். சோழனைவென்ற காரணத்தாற் காவிரி கடலொடுகலக்கும் வரையும் அது கடலொடுகலக்குமிடத்துள்ள பட்

டின முளப்படக் காவிரி முழுதுமுரிமையாகிய செல்வத்தையே ஆண்டுமபாராட்டினுரென்றே துணிந்துகொள்க. இது கருத்தில்லை யாயின் காவிரிமண்டிய சேப்விரி வனப்பிற்புகார் என்று விசேடித் ததுபயனின்றுதல் காண்க. பாண்டியர் கூடலுடையனுகக் கூறுமை யானும் யான் கூறுவதே கருத்தென்க. மற்று அவர்காட்டுங் கலிங் கத்துப்பரணியிற் 'பொன்னித்துறைவன்*' என்று முதற்கட் சோழனை சிறுவி அவன் இதனையிதனை வென்றுடையனுயினுன் என்று—பொருநைக்கணவன் எனவும் கன்னிக்கொழுநன் எனவும் கங்கைமணுளன் எனவும் கூறுதலும் கண்டுகொள்க. தமிழ்நாடு வென்றதனையும் வடநாடுவென்றதனையுமன்றே இப்பரணிகாட்டு கின்றது: அங்ஙனம் வென்றதெல்லாங் கூறினுற்போல இப்பதிற்றுப் பத்துக் கூறுது காவிரிமண்டிய புகாரையே கூறிபதனுற் காவிரியைக் குறைபவுடைய சேரன் முழுதுமுடையனுயினுன் என்பதே கருதினு ரெனத் துணியப்படுமென்க. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம்பத்துள்,

> "சாந்துவருவானிநீரினுந்
> தீந்தண்சாயலன்மன்றதானே" (பதிற்-86)

எனச் சேரற்கு அவன் நாட்டுள்ள வானியாற்று நீரினேயேயுவமித் தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. வானி அன்பொருநைக்குப் பெயரென்பது "ஆனிவானியான் பொருந்தமாகும்" என்னுந் திவா காரத்தானுணரலாம். வானி-பவானியாறு எனினும் இழுக்காது; "வடகொங்கின் வானியாற்றின்" எனத் தேசிகப் பிரபந்தத்து வருதலா னறிக.

இப் பிறர்காவிரியைச் சேரனுட்டில்லதாகக் கூறுதலாற்பயன்— காவிரி சேரற்கில்லாமை கூறின் அக்காவிரிபாயுங் கொங்குநாடுசேரற் கில்லாமைபெறப்படும்.கொங்குநாடு சேரற் கில்லாமை பெறப்படின் கொங்குநாட்டுக்கருவூர் சேரர்வஞ்சியாகாமை துணியப்படுமென்பது போலும். இவர்க்கியான் கூறுவதென்னவெனின் கொங்குநாடு சேர ருடையதென்பது பலபடியாலும் யான் முன்னர்த்தெளிவித்துவிட் டேன். அதனுல் அந்நாட்டுள்ள யாறும் மலையும் ஊரும் பிறவுமெல்

---

*பொன்னித்துறைவனை வாழ்த்தினவே
பொருநைக்கணவனை வாழ்த்தினவே
கன்னிக்கொழுநனை வாழ்த்தினவே
கங்கைமணுளனை வாழ்த்தினவே. (கலிங்கத்துப்பரணி-செய்-120.)

லாஞ் சேரருடையனவேயாகும். கொங்குநாட்டிற் காவிரியேயில்லை யெனல் தேவர்க்குமாகாது. அந்நாட்டைச் சேரர்க்கில்லையெனல் யாவர்க்குமாகாது. இதனால் சேரர்கொங்குநாடு காவிரியானும்வளம் பெறுதலுணரப்பட்டதாகும் என்க. இங்ஙனமாகவும் ஒருசாரார் காவிரியொழுகாத நிலமே கொங்குநாடென வரைந்துகாட்டினர் அது

"பொன்னித்தென்கரையாங் கொங்கினிடை" (திருஞான. 324)

எனவும்

"கொங்கினிற் பொன்னித்தென்கரைக்கறையூர்க்
கொடுமுடிக்கோயின் முன்குறுகி" (ஏயர்கோன்கலிக்காமநாயனார்–87

எனவும் வருஞ் சேக்கிழார் பெரிய புராணத்தொடும்,

"மதியந்தவழுஞ்சையவரை வரைப்பிற்பிறந்தகாவிரிநன்
னதியந்தனக்குநேர்கிழக்கினடத்தலொழிந்துதெனுதுதிசைக்
கதிகொண்டெழுந்த துயர்கோங்குகாணும்விளைவாலெனிலிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"

"சரந்தவந்நகரெவ்வுழியெனத்தளரலை
பரதகண்டத்திற்பசுந் தமிழ்நாட்டினிற்சைய
வரைதனக்குத்தென்றிசையினில்வளம்பயில்கோங்கேன்
றுரைதனேடியரோருபெருநாடுளததனில்"

"மதுவனத்தின்மேற்றிசைப்பொறிவண்டுபண்பாடும்
புதுமலர்த்திரள்சுழித்தெழும்பொங்குகாவேரி
நதிதனக்குத் தென்றிசையினும்பராவதிவடபாற்
பதிவுகொண்டெழும்பவானியின்கீழ்த்திசையுளதால்"

எனவருங் கச்சியப்பமுனிவர்பேரூர்ப்புராணத்தொடும் முரணுமாறு கண்டுகொள்க. கொங்குநாட்டே காவிரியுளதாகவுஞ் சோழரையே அதுடையராகக்கூறுதல்

"........................மேக்குயரக்
கொள்ளுங்குடகக்குவடுடைறுத்திழிபத்
தள்ளுந்திரைப்பொன்னிதந்தோனும்" (விக்கிரமசோழனுலா)

என்பதனால் ஆதியிற்காவிரியாற்றைத் தமிழ்நாட்டிற்கொணர்ந்தவரென்னும் உரிமைபற்றியாகுமென்று கொள்ளத்தகும்.

இனிக் கந்தபுராணத்துக் காவிரிநீங்குபடலத்துக் காவிரியானது முதன்முதல் அகத்தியர்கமண்டலத்தினின்று கவிழ்க்கப்பட்டொழுகியது கொங்குநாட்டின் கண்ணே யென்று தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் கற்றூர்பலரும் அறிவர். இதனை,

"செங்கைதாங்கிய தீர்த்தநீரொடுங்
கோங்கின்பாற்செலக்குறியமாமுனி
மங்குகின்றவம்மைந்தர்நேருரு
வங்கண்மேவினாருந்தவத்தர்போல்"

"ஆசில் கோங்கினுக்கணித்தினொரிடை
வாசமீதெனமகிழ்ந்துவிற்றிரீஇ"

"அருந்தவமுனிவன் கொங்கினமலைபருச்சித்தங்கணிருந்
[திடுகின்றான்"

"அகத்தியன்கோங்கின்பால்வந்தருச்சனைபுரிந்துமேவும்"

"அன்னவன்றனதுமாட்டோரணிகமண்டலத்தினூடே
பொன்னியென்றுரைக்குந்தீர்த்தம்பொருந்தியேயிருந்ததெந்தாய்
நன்னதியதனைநீபோய்ஞானமேற்கவிழ்த்துவிட்டா
லின்னதோர்வனத்தினண்ணுமென்குறைதீருமென்றான்"

"கோங்குறுமுனிவன்பாங்கர்க்குண்டிகைமீதிற்பொன்னி
சங்கரனருளின்வந்ததன்மையுப்புணர்ப்புமுன்னி
யைங்கரன்கொடியாய்நண்ணவகத்தியனவனென்றோரா
னிங்கொருபறவைகொல்லாமெய்தியதென்றுகண்டான்"

"குண்டிகையதனைத்தள்ளிக்குளிர்புனற்கன்னியன்னான்
பண்டையிலிசைவுசெய்தான்பாரினீபடர்தியென்றான்"

"நன்னதிபோலவின்னுஞாலமுநடுங்கவார்த்துப்
பொன்னியாறுலகந்தன்னிற்பொலிவளனப்பெயர்ந்ததன்றே"

"மறைகின்றவெல்லைதனிற்குறுமுனிவிம்மிதமாய் மன்னுயிர்களெங்கு
[illegible] புகல்வான்றன்கோலத்தைகயுணர்ந்து
[போற்றி

யறைகின்றகாவிரியைக்கண்ணுற்றுநகைத்துவெகுண்டருள்கைநாடி
யுறைகின்றகோங்குதனையொருவித்தென்றிசைநோக்கியோல்லைசென்
[றான்"

என வருவனவற்றால் நன்குதெளிந்துகொள்க. இக்கதை கொங்குநாட்டுக்காவிரியொழுகுதலை ஐயமறவுணர்த்துமென்று துணிக.

இனிப் பிறர் தமிழ்மூவேந்தர்க்கும் யாறு மஹாநதியாகவே இருக்கவேண்டுமென்பதற்கு ஆதாரமாகத் திருவள்ளுவமாலையிற் கண்ட,

"மும்மலையுமுந்நாடுமுந்நதியுமுப்பதியு
மும்முரசுமுத்தமிழுமுக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர்தடமுடிமேற்றாரன்றோ
பாமுறைதேர்வள்ளுவர்முப்பால்"

என்னும் வெண்பாவை எடுத்துக்காட்டுவர். இப்பாடல் அவர் கொள்கையை எதனுலாதரிக்கின்றதென்பதை யானறிகிலேன். மும்மலையாகிய பொதியம் கொல்லி நேரி என்பவை தம்முளொத்தன வில்லை. இவை முறையே உத்தமம் மத்திமம் அதமம் என முத்திறப்படுமென்பது பலருமறிவர். முந்நாடும் மலைநாடும், கடனாடும், நீர்நாடுமாகக்கூறப்படும். இவை தம்முள் ஒத்தனவாகா. பாண்டிநாட்டு முத்து மிகுதியும், சோழநாட்டு நென்மிகுதியும், சேரநாட்டுப் ("கொங்கிற்பொன்" என்பது நூல்வழக்கு) பொன் மிகுதியுங்கூறுப. முந்நதி—பாண்டியர் வையைமுழுது முடையர். சேரர் பொருநை முழுது முடையர். சோழர் காவிரியிற் கடையாறேயுடையர். முப்பதி—பாண்டியர் கூடலுக்கு மற்றை இருவேந்தர்தலைநகரும்ஒவ்வா.சோழர் உறையூரினுஞ் சேரர்கருவூர்பெரிது. மும்முரசு—வீரமுரசு, நியாய முரசு தியாகமுரசு.வீரமுரசைப் பிரதானமாகவுடையர் வில்லுடைய சேரர்; நியாய முரசைப்பிரதானமாகவுடையர் தமிழுடைய பாண்டியர்; தியாகமுரசைப் பிரதானமாகவுடையர் நெல்லுடைய சோழர்; "அறந்துஞ் சுறந்தைப் பொருநனை" எனவருதலானறிக. இங்ஙன முரசினைப்பிரித்து மூவர்க்குங்கொள்ளாக்கால் மேல் மும்மலை முதலாகப்பிரித்தெடுத்துக் கூறிவந்த முறையொடு முரணுமென்க. முத்தமிழும் இவ்வாறே கொள்ளப்படும். பாண்டியர்க்கு இசைத்தமிழும், சேரர்க்கு நாடகத்தமிழும், சோழர்க்கு இயற்றமிழும் பிரதான

மாகக் கூறப்படுமென்க. இவற்ற துண்மையினைப் பழையநூல்களி னுய்ந்துகொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும். முக்கொடி—வில்லும், கயலும், புலியும். இவற்றதொவ்வாமை எளிதிலறியப்படும். மும்மா—கனவட்டம், பாடலம், கோரம் என்பன. இவையுந் தம்மு ளொவ்வா என்பது பிற்காலத்தார் "கோரத்துக்கொப்போகன வட்டமம்மானை" எனப்பாடுதலானுணரப்படும். இனித் தட-முடிமேற் றார் மூன்று—போந்தை வேம்பு, ஆர். இவற்றது ஒவ்வாமை கண் கூடாகக்காணப்படும். இங்ஙனமே முப்பாலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்எனவாம், இவற்றுள்ளும் உத்தம மத்திம அதமம் என முத்திறப்படுதல் உணர்ந்துகொள்க. வள்ளுவர் முப்பால் மூவேந்தர் முடிமேல் மூன்றுதாரன்றேவென்பதே கருத் தாகலான் சோழர் அறத்துப்பாலையும், சேரர் பொருட்பாலையும், பாண்டியர் காமத்துப்பாலையும் தத்தம்முடிமேற் றார்போலச் சூடிக் கொள்வர் என்று கருதியுரைத்தாரெனவறிக. இங்ஙனம் பாடன் முழுவதூஉந் தாரதம்மியமயமாகவுள்ளது, மூந்நதியும் ஒத்தனவாக வேண்டுமென்பதற்கு எத்துணை ஆதாரமாகுமோ, யான் கண்டிலேன்.

இனிப் பிறர் சேரனாட்டுக் காவிரியில்லையென்பதற்கு மற் றொன்று கூறுவர். அஃதாவது:—

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கடவுட்குக் கற்கொள்ளவும் அக்கல்லை நீர்ப்படை செய்யவுந் தெளியுமிடத்துப்,

"பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டு
முதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தன்
மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்
சிறப்பொடுவரூஉஞ்செய்கையோவன்று" (சிலப்-காட்சி)

என அவன் கூறுதலான் இக்காவிரி அவனாட்டதாகாதென்பது. செங் குட்டுவன் கண்ணகியை வழிபடவேண்டுமென்று நூலறிபுலவரை நோக்கப் புலவர் அவனுள்ளக் கருத்தைக் குறிப்பானுணர்ந்து

"ஆங்கவ,ரொற்காமரபிற்பொதியிலன்றியும்
விற்றலைக்கொண்ட வியன்பேரிமயத்துக்
கற்கால்கொள்ளினுங்கடவுளாகுங்
கங்கைப்பேர்யாற்றினுங்காவிரிப்புனலினுந்
தங்கியநீர்ப்படைதகவோவுடைத்தென" (ஷை ஷை)

எனக்கூறியதன்பின் செங்குட்டுவன்கூறியனவாகும், முற்காட்டிய அடிகள். ஈண்டுப்பிறர்கருத்து, சோழரையும் பாண்டியரையும் வென்று சேரன் தமிழ்நாட்டுத் தலைமையெய்தியிருந்தாலும் தன்னாட்டில்லாமலையிற் கற்கொண்டு தன்னாட்டில்லாக்காவிரியில் நீர்ப்படை செய்தல் தன் வீரக்குடிக்கு இழுக்கென்று செங்குட்டுவன் சினந்து கூறினன் என்பதாம். செங்குட்டுவன் கருத்து இதுவோ வேறோ என இங்கு ஆராய்வேன். பத்தினிக்கடவுளைப்பரசல் வேண்டுமெனச் செங்குட்டுவன் புலவரை நோக்கியவளவிற் புலவர் நன்றாய்ந்து எளிதாச்செய்தல், அரிதாச் செய்தல் என இருவகையினையு முணர்ந்து, நீ எளிதாச்செய்தலைக் கருதினுயாயின் இத்தென்னாட்டகத்தே தளராத தன்மையினையுடைய பொதியிலிற்கற்கண்டு இத்தென்னாட்டகத்தேயுள்ள காவிரிப்புனலினீர்ப் படை செய்து கடவுண்மங்கலம் புரிதலாகும். அரிதாச்செய்தலைக் கருதினுயாயின் சேரர்விற்பொறிபைத் தலையிற்கொண்ட சிறந்த எல்லா மலையினும்பெரிய இமயத்துக்கற்கொண்டு எல்லாயாற்றினும் பெரிய கங்கையாற்றில் நீர்ப்படைசெய்து கடவுண்மங்கலம் புரிதலாகுமென இரண்டுபடக் கூறினர். இதைக்கேட்ட செங்குட்டுவன் இமயத்திற்றாழ்ந்த பொதியக்குன்றத்துக்கற்கொண்டு கங்கையிற்றாழ்ந்தகாவிரிப் புனலில் நீர்ப்படைசெய்து இங்ஙனம் எளிதாப்புரிதல் எம்வீரக்குடிக் கேற்றதன்று எனக் கூறினன். இக்கருத்தே கொள்ளுமாறு இளங்கோவடிகள் ஏற்றசொற் பெய்து ஈண்டுவிளக்கியுள்ளார். அவர் நூலறிபுலவர் கூற்றாகக் கூறியவிடத்துப் பொதியில் தளராதவியல்புடையது தான்: ஆயினும் இமயம் சேரர்விற்பொறியை மற்றை இருவேந்தர்கயற் பொறியினும் புலிப்பொறியினும் மேலாகத் தலையிற்கொண்டது; மலையரையன் ஆகச் சிறந்தது; அங்ஙனஞ்சிறத்தற்குக்காரணமாக எல்லாமலையினும் பெரிதாகவுள்ளது: பொதியில்போல எளிதாக ஈண்டேகொள்ளத்தக்கதொன்றன்று; நெடுந்தூரம்போய்ப் பன்னாடுகடந்து அரிதாகக்கொள்வதொன்று என்றும், அங்ஙனமே கங்கையே பேர்யாறென்றும், அதனை நோக்கக் காவிரிசிற்றாறென்றும், அக்கங்கைப்புனலே காவிரிப்புனலாதலான் அதன்புனலினும் நீர்ப்படைசெய்தலாகும் என்றும், இவற்றின் தாரதம்மியமும் செய்யுங்காரியத்தினருமையும் எளிமையுந்தோன்றக் கூறக்கேட்டுச் செங்குட்டுவன் அவர்கூறியகருத்தைத்தெரிந்து கொண்டவனாகி மலை

யரையன் கணல்லாடல் பொதியிலாகியகுன்றிலே கற்கொண்டு கங்கையின்புதுப்புனலன்றிப் பழையபுனலேயுடைய காவிரிமுன்றுறையி லதனைப்படுத்து இங்ஙனமெளிதாகச்செய்தல் வீரப்பெருமையினையும் அதற்கேற்றவாட்படையினையுமுடைய சேரர் குடிப்பிறந்தோர்க்குச் சிறப்போடுவருஞ்செய்கையன்று என்றான்— என்று கூறிய குறிப்புக்கொண்டு ஆராய்ந்துகொள்க. வியன்பேரிமயம் என்று புலவர்கூறியது தெரிந்து அதனைநோக்கப் பொதியில் குன்றளவேஎன்னுங்கருத்தான் பொதியிற்குன்றமென்றிகழ்ந்து கூறினானென்க. கங்கைப்பேர்யாறென்றும் காவிரிப்புனல் என்றும் உயர்வுதாழ்வு தோன்றக் கூறியதனையுணர்ந்து முதுநீர்க்காவிரி என்றிகழ்ந்து கூறினானென்க. நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரவுரைக்கண், அகத்தியர் கங்கையாருழைச்சென்று காவிரி யாரையும் உடன்கொண்டு தென்றிசைப் போந்தாரென்றுகூறுதலான், இக்காவிரிநீர் கங்கையின்பழையநீராதல் தெள்ளிது. இது கருத்தன்றாயின் தங்கருத்து வேறுபாடுதோன்ற அதற்கேற்ற சொற்பெய்து புலப்படுத்துவரென்க. கங்கையே மஹாநதியென்றும், அதனைநோக்கக் காவிரிபுனலளவேயென்றுங் கூறினாரென வுணர்க. பொதியிலைமுற்கூறியமுறைப்படி, காவிரியைமுற்கூறாதது பொதியிற்கும் காவிரிக்கும் ஒரியைபுமின்மையுணர்த்தற்கு. இமயத்தைக் கூறியதன்பின் கங்கைப்பேர்யாற்றைக்கூறியது அவ் யாறு அவ்விமயத்தேபிறப்பதென்னுமியைபுணர்த்தற்கு என அறிக. இவ்வளவு அழகாக உயர்வுதாழ்வு புலப்படுத்திக்கூறியதுகேட்டு அரசனும் அதற்கேற்றவாறு கூறினனெனத் தெளிந்துகொள்க. ஈண்டியான்கூறுவது கருத்தன்றாகிப் பிறநாட்டு யாறும் மலையும்பற்றி இகழ்ந்தானெனக்கூறுவதாயின், இவன் உடன்பட்ட இமயமும் கங்கையும் இவனுட்டனவாதல்வேண்டும். அங்ஙனமில்லையாதலான் அது கருத்தன்றென்க. மற்றுச் சேரர் விற்றலைக்கொண்டது கூறினரெனின், சேரர்விற்றலைக்கொண்டதுபோலப் பாண்டியர் கயற்பொறியையும் சோழர்புலிப்பொறியையும் இமயம் சூடியுள்ளதென்பது தொன்னூல்கள் பலவற்றினுங்கண்டது. அதனால் அது சேரர்க்கே சிறந்ததெனலாகாது. இளங்கோவடிகளே வாழ்த்துக் காதைக்கண்,

"முடிமன்னர் மூவருங்காத்தோம்புதெய்வ
வடபேரிமயமலை"

எனப்பாடுதலான் யான் கூறியதனுண்மையுணர்க. இமயம் விற்றலைக்கொண்டதுபோலக் கங்கைக்கு ஒன்று கூறலாகாமையானும் பிறர்கூறுவது கருத்தன்றாத லுணர்க. முன் பாண்டியனதாய் இப்போது வென்றியாற் சேரனுடையதாயிருக்கும்பொதியத்திற் சேரற்குள்ளபாத்தியமும் இமயத்திற்கூறவியலாமைதன்பது ஈண்டைக்கு ஆராய்ந்துகொள்க. மூவருங்காத்தோம்பு வடபேரிமயமலை என்றலானும் அது சேரர்க்குத் தனியே சிறந்ததாகாது. மற்று விற்றலைக்கொண்ட என்றது சேரர் விற்பொறியைத் தலையிற்சூடிய தன்மையான் சேரரைமதித்து மலையரையன் கற்றருவான் என்பது குறித்தவாறு. அங்ஙன மென்னைமதித்து மலையரையன் ஒருகற்றாரானெனின் யானிதுசெய்வல் எனமேற் செங்குட்டுவன் வஞ்சினங் கூறியவாற்றானும் இதுவே கருத்தாதலுணர்க. "பெருமலையரசன், கடவுளெழுதவோர் கற்றாரானெனின்" என அவன் கூறுதல்காண்க. தாரானெனின் என்றது தான் அரசனாக விருந்து தன்னையொத்த ஓரரசனுக்குத் தெய்வகாரியத்தின்பொருட்டு ஒரு கல்லைத் தாரானெனின் எ-று. எனின் என்றது நல்குதலொருதலை எ-று. தரல் வினையான் ஒப்புக்குறித்தார். இவற்றாற் செய்யும் வினையின் உயர்வு பற்றியும் செய்யும் தன்னுயர்வுபற்றியும் தாழ்ந்தனவும் எளியனவும் நீக்கி உயர்ந்தனவும் அரியனவுஞ்செய்யப்புக்கானென்று தெளிந்து கொள்க. காவிரிமுன்றுறை என்றதனானும் தன்னூர்க்குஅணித்தாதல்குறிக்கப்படும். காவிரி கருவூர்க்கு வுந்துமையில் நெருநரையடுத் தோடுவது. இஃதன்றி யான் மேற்காட்டியவாற்றாலும் இவனாட்டுக் காவிரியுண்மை தெளியப்பட்டதாகும். அதற்கேற்பநோக்குமிடத்து யான் கூறுவதே உண்மைக்கருத்தாதல் நன்றுணரப்படும். யான் கூறுங்கருத்துப்புலப்படுத்தே சொற்பெய் தினிமையாகப் பாடிய இருத்தலைக் கற்றாராய்ந்துகொள்க. இங்ஙனங்கொள்ளாக் கால் புலவர் இரண்டுபடக் கூறியதற்குப் பொருளின்றாதல்காண்க.

பொதியமலை சேரனாட்டுக்கும் பாண்டியனாட்டுக்கும் எல்லையாக வுள்ளது. அதனாலதன் ஒருபுறம் பாண்டியற்கும் மற்றப்புறம் சேரற்கும் உரியதாயினும் அதனுரிமை பாண்டியற்கு வழங்கப்பட்டதனால் சேரற்கு அது கூறப்படுதலில்லை. இதுபோலக் காவிரியின் ஒரு பாகம் சேரற்கு உரியதாயினும் அதன் மறுபாகத்தையுடைய சோழற்கே அஃதுரிமையாக வழங்கப்பட்டவாற்றால் அது சேரற்குக்

கூறப்படுதலில்லை யென்றுணர்க. இங்ஙனமல்லாக்கால் நூல்வழக்குத் தடுமாறுமெனக். இவ்வுண்மையினை ஆராய்ந்துகொள்ளாது சேரனாட்டிற் காவிரியேயில்லையென்று கூறினருமுளர்.

இனிச் சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டில்

"மைந்தராடிய மயங்குபெருந்தானைக்
கொங்குபுறம்பெற்ற கொற்றவேந்தே
................................
வஞ்சிமுற்றம்வயக்களனாக
வஞ்சாமறவராட்போர்பழித்துக்
கொண்டனைபெருமகுடபுலத்ததரி"

எனக்கூறியதன்கண் சோனாட்டிலிருந்து வஞ்சியெறிவதற்காக மலைநாடுசென்றான் என்பதைக்காட்டக் 'கொங்குபுறம் பெற்ற கொற்றவேந்தே' என்று சொல்லப்பட்டிருக்கிறதென்று பிறர்கொண்டார்: இது புறம்பெற்ற, கொற்றமென்பதுஇன்னதென்றும் குடபுலம் இன்னதென்றும் உணராமையானே விளைந்ததென்று தமிழறிவுடையார் எளிதினுணர்வர். குடபுலம் கொங்குநாடு முதலாகச் சேரநாடு முழுதையுங் குறிக்குமாயினும் அது கொங்குநாட்டுக்கே சிறப்பாக வழங்கப்படுதலை முன்னரே விரித்துரைத்தேனாதலான் ஈண்டுக் கூறுவது மிகையாகும். கொங்குபுறம் பெற்ற கொற்றம் என்பதனையும் முன்னரே இன்னதென்றுணர்த்தினேனாயினும் ஆண்டுச் சுருங்கவுரைத்ததனை ஈண்டு விரித்துவிளக்குவல். கொங்குபுறம்பெற்றகொற்றமாவது கொங்கிற்பொருதுஅந்நாட்டார் புறக்கொடையைப் பெற்றதனாலுண்டாகிய வெற்றி. அவ்வெற்றியையுடையனாகச் சோழனை விளித்தார்: இங்ஙனம் கொங்குநாடுமுழுதும் புறக்கொடை கொடுத்து ஓடியதியாங்ஙனம் என்னும் ஆகாங்கையுண்டாக ஒரு நாடு முழுதும்வெல்வது என்பது. அந்நாட்டுத் தலைநகரை வென்று கோடலா னெய்தலாவதென்றுகொண்டு அக்கொங்குநாட்டுத் தலைநகராகிய 'வஞ்சிமுற்றம் வயக்களனாக அஞ்சாமறவராட் போர்பழித்துக் கொண்டனை பெருமகுடபுலத்ததரி' என்று கூறினாரெனவுணர்க. இங்ஙனமல்லாது கொங்குபுறம்பெற்ற கொற்றம் என்பது கொங்குநாட்டுக்கப்பாற்கடந்துபோன கொற்றம் என்றாகாமை நன்குணர்ந்து கொள்க. கொங்குநாடுபுறங்கொடுத்தால் அந்நாட்டாரைப் பின்

பற்றி வீரவேந்தன் அப்பாற் செல்லான் என்க. புறங்கொடுத்தால் அவர்மேற்செல்லாது மீடலே பண்டைவீரரியல்பு. வீரராபுள்ளார் தம்மொடுபொருதார் புறக்கொடைபெற்றவளவில் இம்மெல்லியாரோடு நாம்பொருதோமே என்று மிக நாணுவரென்க. "செருவின் மறிந்தார் புறங்கண்டு நாணியகோன்"(இறையனார்களவியலுரைமேற்கோள்) எனவருதலானுணர்க. புறம்பெறுதல்-புறக்கொடை பெறுதல் என்பது "துப்புறுவர்புறம்பெற்றிசினே" (புறம்—கக) எனவருதலானுணர்க. கொங்குபுறம் பெற்ற கொற்றம் யாண்டு உண்டாயது என்பதனை விளக்கி 'வஞ்சிமுற்றம் வயக்களனாக' என அவ்வெற்றிக் களங்கூறுதலானு மிஃதுணரப்படும். நாட்டுத்தலைநகரைப் பகைவரினின்று காத்தற்கு நாட்டாரனைவரும் ஒருப்படுவராதலான் அவ்வனைவரானுங் காக்கப்பட்ட தலைநகரை வெற்றிக்களனாக அஞ்சாமறவர் ஆட்போர்பழித்து அதனைக் கைக்கொண்ட தன்மையால் அந்நாடு புறங்கொடுத்த கொற்றமெய்தினுங்கும். பதிற்றுப்பத்துள் "பொருமுரணெய்திய கழுவுள் புறம்பெற்று" (38)என்புழிக், கழுவுள் என்பவனுடைய புறக்கொடையைப் பெற்று என்று பொருளாதல்காண்க. இதனை நீண்டுப் பிறர்கொண்ட கருத்து புறப்பாட்டிலுள்ள சொல்லொடும் பொருளொடும் பொருந்தாதாத லெளிதினுணர்க.

இனி இப்பாட்டில்.

> "வஞ்சிமுற்றம் வயக்களனாகக்
> கொண்டனை பெருமகுடபுலத்ததரி"

என வருதலான் வஞ்சியுள்ள நிலம் குடபுலமென்று கூறினாராவர். குடபுலம் கடலோரமல்லாத அகநாட்டுப் பகுதியையே யுணர்த்துமென்பது,

> "அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
> உணங்குதிறம் பெயர்த்த வெண்கல் லமிழ்தங்
> குடபுல மருங்கி னுய்ம்மார் புள்ளோர்த்துப்
> படையமைத் தெழுந்த பெருஞ்சே யாடவர்"

என அகப்பாட்டில் (207) வருதலான் அறியலாம். இதன் கண் வெண்கல்லமிழ்தம் என்பது உப்பு. ஈண்டுக் கடல் நிலவிளைவாகிய உப்பினைக் கடனிலமல்லாத குடபுலப்பக்கத்துக் கொண்டு உய்க்க எழுந்த ஆடவர் என்று பொருளுரைத்தல் கண்டுகொள்க. இதன்கட்

"குடபுல மருங்கினுய்ம்மார்" என்றதனால் இவ்வுப்புக் குணபுலக் கடலுப்பு என்பதாகும். குடபுலம் மேலைக்கடலோரமாயின் கீழ்கடல் விளைவாகிய உப்பினைப் பின்னும் உப்புவிளைவுடைய மேலைக்கடலோரத்திற்குக் கொண்டுய்க்க எழுந்தார் என்றன்றோ பொருள்படும்? மேலைக்கடலில் உப்புவிளைவுண்டென்பது,

"அடுபோர் வேளிர் வீரை முன்றுறை
நெடுவெள் ளுப்பி னிரம்பாக் குப்பை"

எனவருதலான் அறியப்பட்டதாகும். ஈண்டு "வேளிர் வீரை முன்றுறை" என்பது வேளிருடைய கடல் முன்றுறைகளில் எ—று. இவ்வேளிருடைய நாடு வேணுடு என்று வழங்கப்படும். இவ்வேணாட்டுக்குத் தலைநகர் மேலைக்கடலோரத்துள்ள விழிஞம் என்பது சாசனம் பலவற்றானும் கண்டது. இங்ஙனம் உப்புவிளைவுடைய மேலைக் கடலோரத்திற்குக் கீழைக்கடலுப்பைக்கொண்டுய்த்தல் அசம்பாவிதமாதல் காண்க.

இதனாற் குணகடலுப்பை உப்புவிளைவில்லாத அகநாட்டுக்குடபுலத்திற்கே உப்பினைஉய்க்க எழுதல் கருதினார்என்பதுதெள்ளிதாம். இதற்கேற்கவே புறப்பாட்டில் "கானற், கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்" எனவருதல்காண்க. இதன்கட் கடனிலத்து உப்பினைக் கடனிலமல்லாத கன்னாடுகளில் மடுக்கும் என்று கூறுதல் தெளிக. இவற்றாற் பண்டையோர் கன்னாடென்பதும், குடபுலமென்பதும் கடலோரமல்லாத அகநாட்டுப் பகுதியையே கருதினாரென்று நன்று தெளிக. இவ்வேதுக்களானும் குடபுலவஞ்சி அகநாட்டு வஞ்சியாதல் தெளியத்தகும்.

இனிக் கருவூருள்ள நாடு யாதாம் என்று வினவுவாருமுளர். பெரும்பாலுந் தலைநகருள்ளநாடு அத்தலைநகர்ப்பெயரைப்பெறுதல் வழக்கென்பது புகார்நாடு, மதுரைநாடு, காஞ்சிநாடு எனவழங்குதலான் அறியலாம். "சிகரந்தோன்றாச் சேணுயர்நல்லிற் புகாஅர்நன்னாட்டதுவே "(181) என அகப்பாட்டினும் "பொன்னெயிற்காஞ்சி நாடுகவினழிந்து" (28) என மணிமேகலையினும் வருதலானுணர்க. அவ்வந்நாட்டுச்சிறுபதிகட்குத் தலைநகரானவற்றுக்கும் இஃதொக்கும். என்பது தேவாரத்துக் "கொண்டனாட்டுக்கொண்டல்" "மிழலை

நாட்டுமிழலை'' "குறுக்கை நாட்டுக்குறுக்கை'' எனவருதலா னுணர்ந்துகொள்க. இவற்றாற் கருவூர்நாடு, வஞ்சிநாடு என வழக்குப்பெறுவமென்றுய்த்துணர்ந்து கொள்க. வீரசோழியவுரைகாரர் "ஈரெட்டுமூவைந்து'' என்னும் பாட்டினுரையில் பதினாறுமுடனும் பதினைந்தாமுடனுந்தெற்றக் கருநிலஞ்சுற்றின தேசத்துச் சிலர்வழங்குவர் எனவும், பதினேழாமுடனும் மூன்றாமுடனுந் தம்முட்டெற்றக் காவிரிபாய்ந்தநிலத்துச் சிலர் வழங்குவர் எனவும், நெல்லுக்காகின்றது வீட்டுக்காகின்றதென்று பாலாறு பாய்ந்தநிலத்துச் சிலர் வழங்குவர் எனவும் கூறுகின்றார். இவர் செந்தமிழ்நாடு பாண்டிநாடு எனக்கொண்டு செந்தமிழ்வழக்கல்லாதன சிலவற்றை அப்பாண்டிமண்டலமொழிந்த மற்றை மூன்று மண்டலங்களினுஞ் சிற்சிலர் வழங்குவரென்று கூறுகின்றாரென எளிதிலறியலாம். காவிரிபாய்ந்த நிலம் என்பதனாற் சோணாட்டையும், பாலாறுபாய்ந்த நிலம் என்பதனாற் றொண்டைநாட்டையுங் குறித்தாராதலான், ஒழிந்த கருநிலஞ் சுற்றின தேசம் என்பதனாற் சேரனாட்டையே குறித்தாரென்பது தெள்ளிது. ஊரினைக் கருவூர் என்பதுபோல நாட்டினைக்கருநிலம் என்பதனாற் கருநாடு என்று கருதினரோ என ஊகிக்க இவ்வழக்கு இடந்தருகின்றது. கருநிலம்-கன்னடம் எனவும், அது சுற்றிய தேசம், சேரதேசமெனவுங் கூறினுமமையும். சேலம் என்பது சேரம் என்பதன் திரிபு எனவழங்குதலும் இதனை வலியுறுத்தும்.. கபிலர்க்குச் செல்வக் கடுங்கோவாழியாதன்என்னுஞ்சேரன், நன்றா என்னுங்குன்றேறி நின்று தன்கண்ணிற் கண்ட நாடெல்லாங் காட்டிக் கொடுத்தானென்று பதிற்றுப்பத்து ஏழாம்பத்துப் பதிகத்திற் கூறப்பட்டுள்ளது. இவனேறிநின்ற நன்றாமலை தேன் நன்றாமலை என்னும் பெயரான் சேலஞ்ஜில்லாவிலிப்போது மிருத்தலைப் பலரறிவர். இதுவுஞ் சேலநாடு சேரநாடென்பதனையே வலியுறுத்துதல் காண்க.

இத்துணையுங்கூறியவாற்றாற் கொங்கிற் கருவூர் சேரர்தலைநகரென்றற்கட் பிறர்கூறும் ஆக்ஷேபணைகளில் ஒன்றேனு நிலைபெறுமை நன்குணரலாம்.

இனி, இறையனார்களவியலுரைக்கண் மூவேந்தர்தலைநகர்களினும் நிகழும் விழாவைக்குறித்து "மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப்பங்குனியுத்தரமே, கருவூர்உள்ளிவிழாவேஎன இவைபோல்வன''

(16—சூத்-உரை) எனவருதலைப் பலருமறிவர். இதன்கட்கூறப்பட்ட கருவூர் சேரர்தலைநகரேயென்பது பாண்டியர் தலைநகராகிய மதுரையுடனும் சோழர் தலைநகராகிய உறையூருடனுஞ் சேரவுரைத்ததனு லுணரப்படும். மூன்று தலைநகர்களினும் நிகழும் விழாக்களே ஈண்டுக் குறிக்கப்பட்டனவாதல் கண்டுகொள்க. அகப்பாட்டில் 'கொங்கர், மணியரையாத்துமறுகினுடு, முள்ளிவிழவினன்ன, வலரா கின்றது பலர்வாய்ப்பட்டே'' (368) என்பதனுல் இவ்வுள்ளிவிழவு கொங்கர் மணியை அரையிற்கட்டிக்கொண்டு தெருவிலாடுதலையுடையதென்று கூறப்பட்டுள்ளது. இறையனர் களவியலுரையிற் கண்ட கருவூருள்ளிவிழவு என்பதனையும், இவ்வகப்பாட்டிற்கண்ட கொங்கர் 'மணியரையாத்துமறுகினுடு முள்ளிவிழவு' என்பதனையும் சேரவைத்து ஆராயுமிடத்து, இவ்வீரிடத்துங்கூறப்பட்ட உள்ளிவிழவு ஒன்றேயென்றும், ஒன்று ஊர்பற்றியும் மற்றொன்று நாடுபற்றியும் போந்ததல்லது வேறில்லையென்றும் புலனுகும். இவ்விரண்டானும் கொங்குநாட்டார் தந்தலைநகரான கருவூரில் உள்ளிவிழா என ஒருதிருவிழா நிகழ்த்தலுண்டென்றும், அதன்கண் கொங்கர் மணிகளைஅரையிற் கட்டிக்கொண்டு தெருவிலாடுதலுண்டென்றும் நன்குபுலனுகும். இதனுற் கருவூரில் உள்ளிவிழா கொங்கர் நிகழ்த்து முள்ளிவிழா என்று தெளியப்பட்டதாம். இதன்கட் கொங்கர் கருவூர், பாண்டியர்மதுரையுடனும் சோழர் உறையூருடனும் சேர வைத்து உரைக்கப்பட்டதனுல் அக்கொங்கர்கருவூரே சேரர்தலைநகராதலறியத்தகும். அகப்பாட்டில்,

''வென்றெறிமுரசின்விறற்போர்ச்சோழ
ரின்கடுங்கள்ளி னுறந்தையாங்கண்
வருபுனனெரிதருமிகுகரைப்பேர்யாற்
றுருவவெண்டணன்முருகுநாறுதாழ்பொழிற்
பங்குனிமுயக்கங்கழிந்தவழிநாள்
வீயிலையமன்றமாபயிலிறும்பிற்
றீயிலடுப்பினரங்கம்போலப்
பெரும்பாழ்கொண்டன்றுநுதலே'' (137)

என வருதலான் பங்குனிவிழா உறையூர்க்கண்ணே நிகழ்ந்தது என்பது நன்று தெளியப்படும். இதனுனேயன்றே ''உறையூர்ப்பங்குனியுத்தரமே'' என்றுரெனவறிக.

மற்றுக் "குடையொடு, கழுமலந்தந்த நற்றேர்ச் செம்பியன், பங்குனி விழவின் வஞ்சியோ, டுள்ளிவிழவி னுறந்தையுஞ்சிறிதே" (தொல்-களவியல்-'நாற்றம்' என்னுஞ்சூத்திரவுரை: இறையனார் களவியலுரை 'தந்தை' என்னுஞ்சூத்திரவுரை) என்று வேறுவகையாகக்கேட்கப்படுமாலெனின், அது சேரனுடையகழுமலத்திற் பெரும்பூட் சென்னியென்னுஞ் சோழன் சேரன்படைத்தலைவனாகிய கணையன் என்பவனை வென்று சேரநாட்டைத்தன்னடிப்படுத்தியகாலத்துத் தன் உறையூர்ப்பங்குனிவிழவைச் சேரர்வஞ்சியினும், சேரர் வஞ்சியினிகழ்ந்த உள்ளிவிழவைத் தன் உறையூரினும் நிகழ்த்திய தனையே குறிக்குமென்றுகருதுவதே பொருந்தியதாகும். வென்ற வேந்தர் வெல்லப்பட்டநாடுகளிற் றமக்கு விருப்பமான விழாக்களையே நிலைபெறுவித்து நடாத்தலுண்டென்பது "சதய நல்விழா வுதியர்மண்டிலந் தன்னில்வைத்தவன்" எனக் கலிங்கத்துப்பரணியிற் சோழனைப்பாடுதலானறியலாகும். இங்ஙனம்கொள்ளாமல் எப்போதும் வஞ்சியிற் பங்குனி உத்தரவிழாவே நடந்ததாமெனக்கொள்ளின், அது "கொங்கர்மணியரையாத்து மறுகினுடு முள்ளிவிழவு" என்ற அகநானூற்றூடும் கருவூருள்ளிவிழாவே என்ற நக்கீரனாருரையோடும் முரணுமென்றுணர்க. உள்ளிவிழவின்சிறப்புநோக்கி வெல்லப்பட்ட நாட்டாரைக்கொண்டு சோழன்தன் உறந்தையினும் அதனை நடாத்தினன்போலும். கழுமலஞ் சேரனுடையதென்பதும் "திண்டேர்க், கணையனகப்படக் கழுமலந்தந்த, பிணையலங்கண்ணிப் பெரும்பூட்சென்னி" (அகம்-44) என்பதனானும் "நற்றேர்க்குட்டுவன் கழுமலத்தன்ன" (யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்-தொடை 50) என்பதனானும் உணர்க. "கழுமலந்தந்தநற்றேர்ச்செம்பியன் உள்ளிவிழவி னுறந்தை" என்றதனால் இவன் சேரன்கழுமலத்தை வென்றுகொண்டகாலத்து உள்ளி விழவினை உறந்தையினடத்தினனென்று துணியப்படும். இதனானும் கொங்கருள்ளிவிழவுநடக்குங் கொங்கிற்கருவூர் சேரர்தலைநகரென்று துணியப்படுமென்றுணர்க.

இனி, ஒட்டக்கூத்தர்காலத்துக்குப் பின்னிட்ட குமாரகுலோத்துங்கசோழன் காலத்தும், அவன்தம்பியாகிய சங்கரசோழன் காலத்தும் கொங்குநாடும் வஞ்சியும் சோழர்க்குப்பகைநாடும் பகையூருமாகக் கருதப்பட்டனவென்பது குலோத்துங்கன்கோவையில்,

"கொங்கோடக்குத் துங்களிற்ருன் குலோத்துங்கன்" (133)
"கொங்கோட்டும் வேங்கைக்கொடியோன் குலோத்துங்கன்"(82)

எனவருவனவற்றுனும்; சங்கரசோழனுலாவில்,

"..................................கோமகன்
வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்—வெஞ்சமத்து
முன்னின்றுகோட்டுமுனைபட்டிறந்திறந்து
கன்னின்றவர்க்குலகுகாப்பணிந்தும்"

எனவருவனவற்றுனும் தெளியலாம். இச்சங்கரசோழனுலாவில்,

"..................................திண்ககன
வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக்
கொங்கைத்தளைகளைந்தகோமானும்"

என வருவதன்கண் வில்லவனைசேரனைச் சோழன் தளைகளைந்தது அவனுடைய கொங்குநாட்டையுந்தளைகளைந்ததாயிற்று என்னுங் கருத்தால் 'வில்லவனைக் கொங்கைத் தளைகளைந்தகோமான்' எனக் கூறியுள்ளார். இதனுனும் கொங்குநாடு சோழற்குப்பகைஞனுகிய வில்லவனுடு என்றதாயிற்றுக்காண்க. ஈண்டுச் சங்கரசோழனுலா வினின்று முதற்கட்காட்டிய கண்ணிகளில் "வஞ்சிக்குமோதை மகோதைக்கும்" என்பதனுல் வஞ்சிவேறென்றும் மகோதைவேறென் றும் ஐயமறத் தெளியலாகும். மகோதையென்பது கொடுங் கோளூர்க்குப் பெயரென்பது "கோதையரசர் மகோதையெனக்குலவு பெயருமுடைத்தாமால்" எனச் சேக்கிழார் சேரமான்பெருமாளுய ஞர்புராணத்திற் கூறுதலானறியப்படும். இச்சங்கரசோழனுலா வுடையார்கல்வித்திறம் அவருலாவினைக் கற்கும்பேறு பெற்றாரெல் லாம் நன்கறிவர். அவர் வஞ்சிவேறு, கொடுங்கோளூர்வேறு என் பதுபட நன்குரைத்துள்ளார். அவர் இருபேரரசருடைய தலைநகர் களையும் அவருடைய கடற்றுறையூர்களையுமே ஈண்டுக் கூறினுரென் பது பாண்டியர் மதுரையையும் அவர் கொற்கையையும் கூறுதல் போலவே சேரர்வஞ்சியையும் மகோதையையும் அம்முறையே கூறுதலான் எளிதிலறியலாம். ஓதை மகோதையென்ருர் அது கடற் றுறையூரென்பதுணரற்கு. கோமகன்வஞ்சி என்ருர் சேரன்

ஆண்டிருத்தலினுக்கி. மதுரை நிலைநகர் என்றற்கு யாமதுரையிஞ்சி காட்டினர். மகோதையாகிய கொடுங்கோளூர்க்கு வஞ்சி யென்ற பெயர்வழக்குள்ளதாயின் இவர் அதனின்வேறாகியதோ ரூரினை அப் பெயரானேவழங்கமாட்டாரென்றே தெளியலாம். கச்சியப்பமுனி வரும் பேரூர்ப்புராணத்து அஞ்சைக்களத்தை வஞ்சியெனக்கூறாமல் கொங்கிற்கருவூரையே வஞ்சியெனவுரைத்தார். இதனை அந்நூலுட் காண்க. இவற்றாற் சேக்கிழார் மகோதையாகிய கொடுங் கோளூரை வஞ்சியென வழங்கியது அக்காலத்துச் சேரர் ஆண்டிருத் தல்பற்றி உபசாரமாகுமெனக் கருதப்படும். இராமனிருக்குமிடம அயோத்தியே என்னும் வழக்குப்போல இதனையுங்கொள்க. சங்கர சோழனுலாவுடையார் அந்நூலுட்பின்னும்—

"உஞ்சைக்குமேனை யுதகைக்கும்வஞ்சிக்கும்
கொற்கைக்குங்கூடற்கும்"

எனக்கூறுதலானும் இக்கருத்து வலியுறும். ஈண்டும் உதகை, வஞ்சி என்று கூறியமுறையே கொற்கை, கூடல் எனக் கூறியது காண்க. இவற்றாற் சேக்கிழார் உபசாரமாக வழங்கியதொன்றொழிய மற் றெல்லாநூலும் வஞ்சியென்று வழங்குவது கொடுங்கோளூரின் வேறாகியதோ ரூரினையேயாமென்றும், பண்டுள்ள உரைகாரர் நிகண்டு காரர் இவர் கூற்றுப்படி அவ்வஞ்சி கருவூரே என்றும் நன்கு தெளிந்துகொள்க.

இனிச் சேரமான் பெருமாணயனர் கொடுங்கோளூராகிம் மகோதையின்கண் அரசுபுரிகின்றகாலத்துப் பழைய சேரர்க்குரிய கொங்குநாடு சேரர்க்கல்லாமற் பிறர்க்குரியதாயிற்றென்று கேட்கப் படுதலில்லை. அருணகிரிநாதர்,

"ஆதியந்தவுலாவாசுபாடிய
சேரர்கொங்கு"

எனப்பாடுதலான் இக்கொங்குநாடு சேரமான்பெருமாணயனர்க் குரியதாதல் புலப்படும். கொங்குநாடு அவருடையதென்றுணரப்படு மாயின் அக்கொங்குநாட்டு வஞ்சியும் அவருடையதாத லெளிதி லுணரலாம். இதனல் அவர்காலத்தோ அதற்குமுன்னோ தலைநகர மாற்றிக் குடகடற்பக்கத்தொதுங்கினரென்று கூறுதலெல்லாது வேறன்றென்றுணரலாம். சங்கரசோழனுலாவுடையார்,

" வஞ்சிக்குமோதை மகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்"

எனப் பாடுதலான் வஞ்சி கொடுங்கோளூராகிய மகோதையின் வேறாத லெளிதிலுணரப்படும். இதன்கண், மதுரையும் கொற்கையும் பாண்டியருடையனவாதல்போல வஞ்சியும் மகோதையும் சேரருடையனவாதல் உணரலாம். இதனால் சேரர், மகோதையாகிய கொடுங்கோளூரை யுடையகாலத்து வஞ்சியையும் உடையராயினரென்று நன்கு தெளியலாம். சங்கநூல்களில் மகோதை கொடுங்கோளூரென்னுஞ் சொற்கள் காணுமையால் பழையசேரர் வஞ்சியிலரசு புரிந்தகாலத்துக் கொடுங்கோளூர் மகோதை பெரியநகரமாக விளங்கியதாகக் கருதப்படவில்லை. ஆதலான் இச்சங்கரசோழனுலாவால், சேரர் கொடுங்கோளூராகிய மகோதையை யுடையகாலத்தில் அதனின்வேறாக வஞ்சியையும் உடையராயினர் என்பதுமட்டில் நன்குணரப்படும். இதனால் மகோதையரசர் வஞ்சிவேந்தர் எனவும் அழைக்கப் பெறுவரென்றும், மகோதையரசரை வஞ்சிவேந்தரென்று அழைப்பதுபற்றி மகோதையே வஞ்சியென்று கூறலாகாதென்றும் இச்சங்கரசோழனுலாவால் உணரப்படுதல் காண்க. கொற்கையரசர் மதுரைப்பாண்டியரென் றழைக்கப்படுமிடத்துக் கொற்கையும் மதுரையும் ஒன்றெனத்துணியப்படாது அவ்விரண்டூரரசரும் ஒருவரென்றே துணியப்படுதல்போல இதனையுங் கொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் "வஞ்சிக்கு மோதை மகோதைக்கும்" என்று சங்கரசோழனுலாவுடையார் மிகவுந் தெளியக்கூறியதோடு முரணுதல்காண்க. இக்கருத்தானன்றே பெரும்பற்றப்புலியூர் நம்பியாரும் சேரமான்பெருமாணுயனாருடைய ஊரினைக் கொடுங்கோளூர் என்று கூறி அவ்வேந்தரைப் பின் "வஞ்சிக்கொற்றவன்" என்றுரெனவுணர்க. அருணகிரிநாதர், சேரமான்பெருமாணுயனாருக்குக் கொங்குநாடுரிமை கூறியதனான் அவர்க்கு அக்கொங்குநாட்டுக் கருவூர் வஞ்சியுடைமையும் நன்கு புலனாகும். பெரும்பற்றப்புலியூர் நம்பிக்குக் கொடுங்கோளூரே வஞ்சியென்பது கருத்தாயின் அதனை வெளிப்படவுணர ஏற்றசொற் பெய்துரைப்பரென்க. இவற்றோடெல்லாம் பொருந்தநோக்குமிடத்தும் சேக்கிழார், கொடுங்கோளூரை வஞ்சியெனவழங்கியது ஆண்டுள்ள வேந்தர் வஞ்சியரசராதல் ஒற்றுமைபற்றி உபசாரமாவதென்று தெளியலாம்.

மற்றுச் சேக்கிழார் "கொன்றையில்வேன் மறவர்பயில் கொங்கர்நாடு கடந்தருளி எனக்கூறினமெனிற் கூறுவேன். இக் கொங்குநாடு குடபுலம் என்பது சேக்கிழார்க்கு உடன்பாடாதல் முன்னரே காட்டினேன். குடபுலம் குடபுலங்காவலராகிய சேரருடையதா மென்பது தெள்ளிது; ஆதலான் ஈண்டு மறவர் என்றது சேரன் மறவரையேயன்றிப் பிறரையில்லையெனவுணர்க. இந்நாட்டை அக்காலத்தும் பிறருடையதாகச் சேக்கிழார் கூறாமையும் நோக்கிக் கொள்க.

இனிக் கருவூரின் பலபெயர்களுட் கரபுரம் என்பதும் அதற்குப் பெயராகவுண்மை அவ்வூர்த் தலபுராணத்தானுணரப்படுவது.

" கஞ்ச னெண்ணுதிபுரங்கரபுரம்பாற்
கரபுரம்வீரசோழபுரம்
வஞ்சுளாரணியம்வஞ்சிதாயூர்சன்
மங்கலக்ஷேத்திரங்கருவூர்
விஞ்சுறுகருப்புரிமுதனமம்
விளங்குதொல்பதியின்வீற்றிருக்குஞ்
செஞ்சுடர்ப்பொருளினிருபதமேனத்
தேவர்பொன்முடிக்கணிகலனே"

என அதன்கண்வருதலாற் கரபுரமென்பது கருவூர்க்குப் பெயராதலுணரப்படும். இதன்கண் வீரசோழபுரமென்றது பிற்காலத்து வீரசோழ னென்பான் இதனை வென்று ஆண்டகாரணம்பற்றியதாகும். இவ்வீரசோழன், பொன்பெற்றி காவலன் புத்தமித்திரன் காலத்தவனாயினுமாம். இது கரனிருந்ததனல் அப்பெயர் பெற்றதாம் போலும். பௌராணிகர் வேறு கூறுவர்: திரிசிரபுரம் என்பது போல இதனையுங்கொள்க. கரன், திரிசிரன் இவர் இத்தென்னாட்டு ஒருபக்கத்தே இருந்தவரென்பதும் உணரத்தகும். கருவூர்க்குஞ் சிரபுரத்துக்கும் 48—மைல் தூரமேயாகு மென்பது பலருமறிவர். இக்கரபுரம் சேரர் தலைநகர் என்பதனை விளக்குவல். சூளாமணி யென்னும் பழைய நூலுட் சுயம்வரச்சருக்கத்து,

வேலைவாய்க்கருங்கடலுள்வெண்சங்குமணிமுத்தும்
விரவியெங்கு

மலைவாய்க்கரும்பருவகன்பண்ணைதழீஇயருகே
யருவிதூங்குஞ்
சோலைவாய்மலரணிந்தசூழ்குழலார்யாழிசையாற்
றுளைக்கைவேழ
மாலைவாய்நின்றுறங்குமதுரைசூழ்வளநாடன்
வடிவுகாணாய்.
கண்சுடர்கள்விடவனன்றுகார்மேகமெனவதிருங்
களி.ல்யானை
விண்சுடருநெடுங்குடைக்கீழ்விறல்வேந்தன்றிறமிதனை
விளம்பக்கேளாய்
தண்சுடரோன்வழிமருகன்றென்மலைமேற்சந்தனமுஞ்
செம்பொன்னாரத்
தொண்சுடரும்விரவியநல்வரைமார்பனுலகிற்கோர்
திலதங்கண்டாய்.
மழைக்கரும்புங்கொடிமுல்லைமருங்கேறவரம்பணைந்து
தடாவிநீண்ட
கழைக்கரும்புகண்ணீனுங்கரபுரத்தார்கோமானிக்
கதிர்வேற்காளை
யிழைக்கரும்புமிளமுலையாயெரிக்கதிரோன்வழிமருக
னிவனீரீர்ந்தண்
டழைக்கரும்பின்முருகுயிர்க்குந்தாரகலஞ்சார்ந்தவர்க
டவஞ்செய்தாரே.
வண்டறையுமரவிந்தவனத்துலாய்மதர்த்தெழுந்த
மழலையன்னம்
உண்டுறைமுன்விளையாடியிளையவர்கணடைபயிலு
முறந்தைக்கோமான்
கொண்டறையுமிடிமுரசுங்கொடிமதிலுங்குளிர்புனலும்
பொறியும்பூவு
மொண்டுறையுமும்மூன்றுமுடையகோனிவனிவன
தெழிலுங்காணாய்.

னத் தமிழ்மூவேந்தரையுங் கூறுதலைக் கற்றூரறிவர். இவற்றுட் ரண்டியனை மதுரை சூழ்வளநாடன் என்றும், சேரனைக் கரபுரத்

தார்கோமான் என்றும், சோழனை உறந்தைக்கோமான் என்றும் கூறியிருத்தலைக் காணலாம். மதுரைசூழ்வளநாடனாகிய பாண்டியற்கும், உறந்தைக் கோமானாகிய சோழற்கும் இடையே கரபுரத்தார் கோமான் எனக் கூறுதலானும் இவன் சேரனாதல் தெள்ளிது. இவன் அக்கினிவம்சத்தனாதல் "இவன் செந்தழலோன்மரபாகி யீரே ழுலகும்புகழ்சேரன்" எனப் பாரதத்துவருதலான் அறிக. இக்கர புரம் என்னும் பெயர் கொங்கிற் கருவூர்க்குக் கேட்கப்படுதலன்றிக் கொடுங்கோளூர்க்குக் கேட்கப்படாமையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இவற்றுள் மதுரையையும் உறந்தையையுங் கூறிய வரிசையிற் கரபுரத்தைக் கூறுதலான் இது அவைபோலத் தலைநகராதலும், உண்ணாட்டூராதலும் எளிதிலுணரத்தகும். இப்பழமையான சைநநூலானும் சேரர் தலைநகர் கரபுரமாகிய கருவூரென்று தெளியப்படுவதாகும்.

இனிப் பாரதம் இராசசூயச்சருக்கத்துத் தமிழ்நாடுமூன்றையுங் கூறப்புக்க வில்லிபுத்தூரார்,

"சென்னிநாடுகுடகோங்கநாடுதிறைகொண்டுதென்னனுறை [செந்தமிழ்க்
கன்னிநாடுறவுடன்புகுந்துமணிநித்திலக்குவைகள்கைக்கொளா
மன்னிநாடுகெடல்கொண்டகைம்முனிவன்வைகுமாமலயநண்ணினன்
மின்னிநாடுறவிளங்குவெஞ்சமரவீரவாகைபெறுவேலினன்"

எனப் பாடுதலான் சேரநாடு குடகோங்கநாடு என்று வழங்கப்படுதலறிந்து கொள்ளலாம். இப்பாடலில் சென்னிநாட்டுக்கும் தென்னன் கன்னி நாட்டுக்கும் இடையே குடகோங்கநாடு கூறியதனானும் இது சேரநாடாதலுணரப்படும்.

*சேரமன்னராகிய குலசேகரப்பெருமாளும் தம்மைக் "கோல்லி காவலன் கூடனாயகன் கோழிக்கோன் குலசேகரன்" எனப் புலப்படுத்தல்காண்க. பாண்டிநாட்டுத்தலைமையைக் கூடனாயகன் என்பதனானும் சோணாட்டுத்தலைமையைக் கோழிக்கோன் என்பதனானும் உணர்த்தினாற்போலச் சேரநாட்டுத்தலைமையையே 'கொல்லிகாவலன்' என்பதனால் உணர்த்தினாரென்பது எளிதிலுணரத்தகும். கொல்லி சேரர்

* "மாற்றலரை,வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலவன்வில்லவர்கோன் சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே" என்ப.

கொங்குநாட்டுச் சேரர்க்குச்சிறந்தமலையென்பது முன்னரே கூறினேன். அவர் "கொங்கர்கோன்குலசேகரன்" எனப் புலப்படுத்தலையுங்காண்க. அவர் "கொல்லிநகர்க்கிறை" என்று தம்மைக் கூறுகின்றார். கொல்லிமலையையுடைய நகரம் கொங்குநாட்டுக் கருவூராதல் றெள்ளிது. இவர் பாடியருளியபடியே கருவூர்த்திருமால் கோயிலை வித்துவக்கோடு என்று கருவூர்நாட்டார் வழங்குவதை இன்றைக்கும் கேட்கலாம்.

இனி, மாறனலங்காரத்து எச்சவியல் 314-ஆஞ் சூத்திரவுரைக்கண்,

'மன்றல்கமழுமலைநாட்டும்வண்டமிழ்தேர்
நன்றி பயில்பாண்டிநாட்டகத்தும்—வென்றிபயில்
சோணாட்டகத்துந் துயின் மாயனைத் துதிப்பார்
காணார்பிறவிக்கடல்'

என்னும்பாடலை எடுத்தோதி "இதனுள் மலையமானாடேன்பது மலைநாடேன்றும், பாண்டியனாடென்பது பாண்டிநாடென்றும், சோழனாடென்பது சோணாடென்றும் மரூஉவாய் அடிப்படவந்த வழக்காற்றால் வந்து வழூவின்றாயிற்று" என வுரைகாரர் கூறியவாற்றான் மலைநாடு என்பதும் மலையமானாடென்பதும் ஒன்றேயாதலும், அது சேரமானாடேயாதலும் எளிதிலறியத்தகும். இதன்கண் தமிழ் மூவேந்தர்நாடுமே கூறியது காண்க. இன்றைக்கும் மலையமானாட்டையடுத்தே கொல்லிமலையும் கருவூர் வஞ்சியும் இருப்பது காண்க.

இனி, நைடதத்து,

'மாழைமென்னோக்கியிங்குழைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்கூனைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே'

எனச் சோழபாண்டியருடன் சேரனைக்கூறுதலறியலாம். இதன்கட் சேரனைக் குடகநாடாளும்வேந்தென்றது மேற்றிசைநாட்டையாளும் வேந்தனெனவறிக. குடகம்-மேற்றிசை. இக்கருத்தானே அருணகிரிநாதரும் 'குடகிற்கருவூர்' என்றாரென்க. "வஞ்சி

குடக்கினிற் கோதையுமாங்கே" (அழகர்கலம்பகம்) என்பதூஉம் இக்கருத்தேபற்றி வந்தது. இங்ஙனமல்லாமற் 'குடகம்' எனப் பெயரிய தேயத்தையே கருதினாரெனின், அது தமிழ்மொழிவழங் காததேயங்களு ளொன்றாகவைத்து உரையாசிரியர்கள் எண்ணியத னோடு முரணுமென்றுணர்க. அன்றியும் 'குடகதேசம்' குறிஞ்சியே யாக அதற்குரியவியல்பான் வருணிக்காமல் மருதமாகவே வருணித் தது குடகமலைநாட்டை விலக்கியுணர்தற்கெனக் கொள்ளப்படும். இங்ஙனமே அரிச்சந்திரபுராண முடையாரும்,

> "அதிபாரதனபாரவதிரூபமலர்மாலையணியாயிவ
> னதிபாயவுயர்போதினறைபாயநிறையாயசிறைவாவியின்
> மதியாமல்வலைபீறிவெடிபோனபருவாளைவனபூகமேற்
> குதிபாயமடல்கீறிவிழுதேறல்கரைசாடுகுடநாடனே"

எனமருதமாகவே கூறுதல்காண்க. ஈண்டுக் குடநாடெனப்பட்டதே நைடதத்துக் குடகநாடு எனப்பட்டதாமென்றுணர்க. சிறுபாணாற் றுப்படையிலும்,

> "கொழுமீன் குறைபவொதுங்கிவள்ளிதழ்க்
> கழுநீர்மேய்ந்தகயவாயெருமை
> பைங்கறிநிவந்தபலவினீழன்
> மஞ்சண்மெல்லிலைமயிர்ப்புறந்தைவர
> விளையாவிளங்க[illegible]குபெயராக்
> குளவி[illegible]பாயல் கொள்ளுங்
> [illegible]புலங்காவலர்மருமான்......குட்டுவன்
> வருபுனல்வாயில்வஞ்சியும்வறிதே"

என்பதனாற் பெரும்பான்மை மருதமாகவே கூறினார். பைங்கறி என்பதனாற் குறிஞ்சியையுங் குளவிப்பள்ளி என்பதனால் முல்லையை யுஞ் சிறுபான்மைகுறித்தார். ஈண்டுநெய்தலே குறித்தாரில்லை. நெய் தலையில்லாத குடபுலம் கொங்குநாடேயென்பது கச்சியப்பமுனிவர்,

> "......கடல்போக்கிநிலமூன்றிற்
> குலவுசிறப்பெய்தியதுகொங்குவளநாடு" (பேரூர்ப்புராணம்.)

என்று கூறியதனான் உணரப்படும். சிறுபாணாற்றுப்படையில் குட புலங்காவலர்மருமானை குட்டநாடும் உடையனாயினன் என்னுங்

கருத்தால் குடபுலங்காவலர்மருமான் குட்டுவன் என்றுகூறினார். ஈண்டு நச்சினார்க்கினியர் குட்டுவன் என்பதற்குக் குட்டநாட்டை யுடையோன் எனப் பொருள்கூறியதனானும் உணர்க. குட்டநா டுடைமைகூறியதனாற் குடபுலங்காவலர்க்குக்கடலுடைமையுங் குறித் தாராவர். வருபுனல்வஞ்சி யென்றது பெருகுகின்ற நீரையுடைய வஞ்சி எ-று. வருபுனல் என்பதனால் யாறு என்றுகொள்க. "வரு புனல்வையைமருதோங்கு முன்றுறை" (14-ஊர்காண்) எனச் சிலப் பதிகாரத்தும் "வருபுனற்கற்சிறை" என மதுரைக்காஞ்சியினும் வருதலானுணர்க. இவையெல்லாம்ஆராயாது இப்பத்துப்பாட்டடி கள் மேற்கரைவளமும் கழிமுகத்துறைநலமும் விளக்கிநிற்பனஎன்று மயங்கினாருமுளர். செய்தலே சிறிதுங்கலவாது கூறப்பட்ட இவ்வடி கள் கழிமுகத்துறைநலம் விளக்கிநிற்பன என்று அவர்கொண்டது "கொழுமீன்" என்பதுபற்றியும் "வருபுனல்" என்பதுபற்றியும் ஆம் என்று கருதுகின்றேன். அவர்,

> "சேற்றுநிலைமுனைஇயசெங்கட்காரா
> னூர்மடிகங்குலோனென்றனை பரிந்து
> கூர்முள்வேலிகோட்டினீக்கி
> நீர்முதிர்பழனத்துமீனுடனிரிய
> வந்தூம்புவள்ளை மயக்கித்தாமரை
> வண்டூதுபனிமலராருமூர" (அகம்-46)

எனவரும் மருதத்திணைப்பாட்டடிகளையும், வருபுனல் என்பது கடலை யுணர்த்தாது யாற்றையேயுணர்த்துமென்பதனையும் அறியாராவர். "ஆறுமருதம்" என்பதனால் இந்நாற்பத்தாறும் அகப்பாட்டு மருத மாதலெள்ளிது. ஈண்டு "வருபுனல்" என்பதனைக் கடலென்று மயங்கியாங்கு,

> "பேரிசைவஞ்சிமூதூர்ப்புறத்துத்
> தாழ்நீர்வேலித்தண்மலர்ப்பூம்பொழில்"

என்னுஞ் சிலப்பதிகாரத்தும் "தாழ்நீர்வேலி" என்பது கடலென்று இசைத்தலும் அப்பிறர்கணுண்டு. தாழ்நீர்வேலியென்பது ஈண்டு எயில் சூழ்கிடங்காம் என்பதனை அவரறியாரென்க. "தாழ்நீர்வேலித் தலைச்செங்கானத்து" (சிலப்-அடைக்கல) என்புழி 'நீர்வேலி-கிடங்கு மாய்' என்று அடியார்க்கு நல்லாருரைத்ததனை நோக்கிக்கொள்க.

தாழ்நீர் தங்கியநீராதலிற் பொய்கை, குளம் என்பனவுமாம். பிறர் "தாழ்நீர்முத்தும்" (சிலப்-கால்கோட்) என்புழித் தாழ்நீர்என்பதனைக் கடலென்பதற்குக்காட்டினர். ஆண்டு அரும்பதவுரையாசிரியர் தாழ்நீர்-தங்கியநீர்மை என்று பொருள்செய்ததனை அவர் கண்டிலராவர். இன்னும் அப்பிறர்,

"யாங்கணும், கறைகெழுநல்லூர்க்கறைவீடு செய்ம்மென
வழும்பில்வேளோடாயக்கணக்கரை
முழங்குநீர்வேலிமூதூரேவி"

என்புழி மூதூர் வஞ்சியெனமயங்கினர். ஆண்டு யாங்கணுங்கறைவீடு செய்ம்மெனவவியென்று கூறியதுபற்றி அரும்பதவுரையாசிரியர் "மூதூர்களிலே இப்படிச்செய்யுமென்று ஏவி யென்க" என வுரைத்ததனைக்காணாராவர். மற்றும், அவர் "பெருந்துறை" என்பது கடற்றுறையேயாகுமென்றுமிடர்ப்படுவர். அவர் சிலப்பதிகாரத்துப் புறஞ் சேரியிறுத்தகாதைக்கண்,

"வையையென்றபொய்யாக்குலக்கொடி
புனல்யாறன்றிது பூம்புனல்யாறெனன்
வனநடைமாதருமையனுந்தொழுது
பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியு
மரிமுகவம்பியுமருந்துறையியக்கும்
பெருந்துறைமருங்கிற்பெயராதாங்கண்"

என வையையாற்றுக்குப் பெருந்துறையுடைமை கூறப்படுதலையும், பெருங்கதையுட் புனற்பாற்பட்டதன்கண்,

"மணல்கெழுபெருந்துறைமயங்குபுகுழீஇ
விரிநீர்ப்பொய்கையுள்விளையாட்டுவிரும்பி"

எனப் பொய்கைக்குப் பெருந்துறைகூறப்படுதலையும் அறியாராவர். மற்றுப்பிறர் "தண்கடற்படப்பைநாடு" என்பது முதலாகக் காட்டுவனவெல்லாம் சேரர்குடநாடு, குட்டநாடுகளை யுணர்த்துவனவல்லது வஞ்சி கடற்றுறைப்பட்டினமென்று அவை யுணர்த்தாவாதல் நன்குநோக்கிக்கொள்க. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் செங்குட்டுவன்காலத்தே மேல்கடற்பக்கத்துள்ள நறவு என்னும் ஊரிலிருந்தது பற்றி அவனூருள்ள நிலத்தைக் "கடல்சேர்கானற் குடபுலம்"

என்று பதிற்றுப்பத்துள், ஆறும்பத்திற் சான்றோர் கூறினர் என்று முன்னரே எடுத்துரைத்தேன். பதிற்றுப்பத்து 60-ஆம் பாட்டில், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனிருந்த கடற்றுறையூராகிய நறவு என்னும் ஊரே அரு அய்யாணர் உடைத்தென்று இடையறாத கடல்வருவாய் முதலாய செல்வங்களால் விசேடிக்கப்பட்டிருக்கவும் அதனை யாராயாது வஞ்சியென்று வேறுகூறுவாருமுளர்.

இனி அப்பிறர் கருவூர்த்தேவாரத்து ஞானசம்பந்தசுவாமிகள் ஆன்பொருநையைக்கூறுமையால் கருவூர்ப்பக்கத்து ஆன்பொருநை அக்காலத்து ஒழுகியதாகாதென்று துணிந்தார். அவர், உறையூராகிய திருமூக்கீச்சரத்தை ஞானசம்பந்தசுவாமிகள்பாடிய தேவாரத்துக் காவிரி கூறப்படாமையான் உறையூர்ப்பக்கத்தும் காவிரி அக்காலத்து ஒழுகியதாகாதென்று துணிவர்போலும். மதுரைத்தேவாரத்து வையை கூறப்படாமையான் மதுரை வையையையுடையதாகாதென்று துணியலுமாமேயென்று அவர் நினையார். மற்றுமவர், கருவூர்க்குச் சுந்தரமூர்த்திநாயனார்தேவாரம் இல்லாமைபற்றிக் கருவூர் தலைமையாகிய நகரமாகாதென்று துணிந்தார். அவர், பாண்டியர் தலைநகராகிய மதுரைக்கும் சோழர் தலைநகராகிய உறையூர்க்கும் அந்நாயனார் தேவாரப் பதிக மில்லாமையை அறியார். இன்னும் அவர், "திருமாவியனகர்க் கருவூர் முன்றுறை" (அகம்–93) என்புழி முன்றுறை கடற்றுறை யென்றுகொண்டு "இத்தகையவாணிபத்துறைமுகமே முன்றுறையாகும்" என்று மனந்துணிந்துரைப்பர். அவர், சிலப்பதிகாரத்து "முதுநீர்க்காவிரிமுன்றுறை" எனவருதலையும், அகப்பாட்டின்கண்,

> " துஞ்சாமுழவிற்கோவற்கோமா
> னெடுந்தேர்க்காரி கொடுங்கான்முன்றுறைப்
> பெண்ணைபம்பேரியாற்று நுண்ணறல்கடுக்கும்" (அகம்-35)

எனவருதலையுங் காணாராவர். கொடுங்கால் அகநாட்டூராதலுணர்க. பின்னும் அவர் "கலிகெழுவஞ்சி" எனச் சிலப்பதிகாரத்துவருதல் பற்றி வஞ்சி கடலுடைத்தென மயங்குவர். அவர் சிலப்பதிகாரவரந்தருகாதைக்கண் மதுரையினைக் "கலிகெழு கூடல்" எனக் கூறியிருத்தலைக் காணாராவர்.

இன்னும் அப்பிறர், சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்தகாதைக்கண் புகார்நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தை வருணித்தலுட்

மணிமேகலைக் கச்சிமாநகர்புக்ககாதைக்கண் வஞ்சியைவருணித்த லும் தம்முளொத்தனவாகக்கொண்டு அதுபற்றி வஞ்சியைக் கடற்றுறைப்பட்டின மென்று மயங்குவர். இளங்கோவடிகள், புகார்நகரம் கடற்றுறையிடத்தது என்பது நன்குதெளிய அதனைக்,

" கலந்தருதிருவிற்புலம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறையுமிலங்குநீர்வரைப்பும்
..........................................
பீடுகெழுசிறப்பிற்பெரியோர்மல்கிய
பாடல்சால்சிறப்பிற்பட்டினப்பாக்கமும்"

உடையதாகக் கூறியிருத்தலையும், சீத்தலைச்சாத்தனார் வஞ்சியை அங்ஙனங்கூறுதிருத்தலையும் அவர் நோக்கிலராவர். மற்று வஞ்சியை வருணித்தவிடத்துப் புகாரையொப்பப்,

" பன்மீன்விலைஞர்வெள்ளுப்புப்பகருநர்
கண்ணெடையாட்டியர்....................
விலங்கரம்பொரூஉம்வெள்வளைபோழ்நர்"

என இவரும் அவ்வஞ்சிநகர்க்கணுளராகக் கூறினாரெனிற் கூறுவல்—ஈண்டுப் பன்மீன் விலைஞர் என்றது பல்வகைமீனும் விற்கும் வலைஞரை என அறிக. இவ்வலைஞர் மருதநிலத்து யாறுகளிலும் கழனியிலும் மடுக்களிலும் பொய்கைகளிலும் உள்ளமீன்களை முகந்துகொண்டு விலை கூறி விற்பவரெனவறிக. இவ்வுண்மையினை மதுரைக்காஞ்சியில்,

" களிறுமாய்க்குங்கதிர்க்கழனி
யொளிறிலஞ்சியடைநிவந்த
முட்டாளசுடர்த்தாமரை
கட்கமழுநறுநெய்தல்
வள்ளிதழவிழ்நீல
மெல்லிலையரியாம்பலொடு
வண்டிறைகொண்டகமழ்பூம்பொய்கைக்
கம்புட்சேவலின்றுயிலிரிய
வள்ளைநீக்கிவயமீன்முகந்து
கொள்ளைசாற்றியகொடுமுடிவலைஞர்
..........................................
குருகுநரல மனைமரத்தான்

மீன்சிவும்பாண்சேரியொடு
மருதஞ்சான்றதண்பணைசுற்றியொருசார்"

என வருவதனானும், அதற்கு நச்சினார்க்கினியர் உரைத்ததனானும் தெளிந்துகொள்க. இளங்கோவடிகள் புகார்வருணனையில் "மீன் விலைப் பரதவர்" என்று கூறியதுபோலப் பரதவராகியபட்டின வரைக்கூறுது சீத்தலைச்சாத்தனார் "பன்மீன்விலைஞர்" என்றொழிந்ததே மருதநிலத்து மீன்வலைஞர் என உணர்த்தற்கெனத்தெளிக. புகார்போல வஞ்சி கடற்றுறையிடத்ததாயின் இவரும் அடிகள் போற் பரதவர் என்றே கூறுவரென்க. மீனைத்தப்பாமற் பிடிக்கும் பாண்சாதியுள்ள சேரியும் மருதத்து இருப்பதுகாண்க. இனி வெள்ளுப்புப்பகருநர் என்றது கடனிலத்து விளைந்த வெள்ளிய உப்பினைச் சகடங்களிலேற்றிக் கொணர்ந்து விற்கும் உப்புவாணிகர் எனக் கொள்க. "கழியுப்புமுகந்து கன்னாடுமடுக்கு, மாரைச் சாகாட் டாழ்ச்சி" (புறம்-60) என்பதனால் கடலிடத்துப்பை மலைநாடுகளிற் கொண்டுபோய்விற்ற லுணரப்படும். உப்பை உண்டுபண்ணிவிற்போர் 'அளவர்' எனப்படுவர். இக்கருத்தானன்றே அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்து, வெள்ளுப்புப்பகருநர் என்புழி 'அளவருமாம்' என்றுரைத்தாரெனவறிக. இவர் பரதவராகார். மஹாநகரங்களில் மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவுமாகிய பண்டங்களை விற்கும் வணிகர் உளராதல் 'மலைபவு நிலத்தவு நீரவும்பிறவும்,பண்ணியம்பகர்நரும்' (மதுரைக்காஞ்சி) உளராக மதுரையைக் கூறுதலானுணரப்படும். பண்ணியம்-பண்டம். உப்பு நீர்விளைவாதல் "உப்புநீர்விளைவு" (824) எனச் சிந்தாமணியின் வருதலானறியப்படும். உள்நாட்டு நகரங்களே கடல்படு பொருள்கள் பெருவிலை பெறுதற்குரிய இடங்களாதலின் ஆங்கெல்லாம் அப்பொருள்கள்விற்கும் வாணிகருளராவர். "கச்சி கடல்படுவவெல்லாம் படும்" என்றதூஉம் இக்கருத்தேபற்றியதாம். இனிக் "கண்ணொடை யாட்டியர்" என்றது கள்ளைவிற்கும் வலைச்சியரை என்க. இவர் உண்ணாட்டு நகரங்களிலுமுண்மை "கள்ளின்களிநவில்கொடியொடு" மதுரை விளங்குவதாக மதுரைக்காஞ்சியில் வருதலானுணரப்படும். இனி 'விலங்கரம்பொரூஉம் வெள்வளை போழுநர்" உண்ணாட்டு நகரங்களிலு முண்மை "கோடுபோழ்கடைநரும்" மதுரையிலுளராக மதுரைக்காஞ்சியிற்கூறியதனான் நன்குணரலாம். இங்ஙனம் மதுரைக்கொப்பவைத்து கடற்றுறைப்பட்டினத்துக்கே சிறந்த விசேடங்களை முற்றும்விலக்கிச் சீத்தலைச் சாத்த

னார் வஞ்சியை வருணித்திருக்கவும் அதனை ஆராயாது பிறர் தம் மனம்போனவாறு கூறுவர். இளங்கோவடிகள் புகார்க்குக் கூறிய "கயவாய்மருங்கும்," கலந்தருதிருவிற்புலம் பெயர் மாக்கள் அலைவாய்க்கரையிருப்பும், பட்டினப்பாக்கமும் என்னும் இவற்றைச் சீத்தலைச்சாத்தனார் வஞ்சிக்குக்கூறுமையை அப்பிறர் தெரிந்திலராவர். இனி வஞ்சிவேந்தர் உம்பற்காடும் உடையராதலான் அவர்க்குப் புதுக்கோள்யானைகள் உண்மையாலும், சேரர்க்குரிய பழனிமலை "அறுகோட்டியானைப் பொதினி" (அகம்) எனக்கூறப்படுதலானும், அது கருவூர்வஞ்சிக்கு அதிகதூரமன்றாதலானும் கருவூரார்க்குப் புதுக்கோள்யானை யுண்டாகத் தடையில்லையென்க. "நால்வாய் வீழ்கபமறுக் கருவூரா" என ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழ தேவர் பிள்ளைத்தமிழிற் கூறுவர். அவற்றைப்பயிற்றுவோர் அவ்வேந்தர் நகரத்து உளராவரென்றும் தெரிந்துகொள்க. அரசரிருக்குந்தலை நகராதலின் அதன்கண் யானை குதிரை இவற்றைப் பயிற்றுவோரிருப்பது இயல்பு. புதுக்கோள்யானையுடன் பொற்றார்ப்புரவியும் கூறியது காண்க. கருவூரையடுத்துத் தும்பிவாடியுந் திருமாநிலையூரும் இன்றும் உள்ளன. தும்பிவாடி-யானை கட்டிடம். மாநிலை-குதிரைகட்டிடம். பெருங்கதையினும் "மதக்களியானை வடிக்கும் வட்டமுங், கடிசெல்புரவி முடுகும் வீதியும்" இராசகிரியத்துக் கூறினர். யானைகளுள்ள காடுகள் கொடுங்கோளூருக்கு அதிக தூரமாக வுள்ளனவாதலும் அப்பிறர் தெரிந்துகொள்வாராகுக. கொடுங்கோளூர் மலையேயில்லாத பெருமணலுலகத்து நகரென்பதும் அவர் தெரிக.

மற்று அடியார்க்குநல்லார் "குன்றக்குறவரொருங்குடன்கூடி" எனவருஞ்சிலப்பதிகாரப்பதிகத்துக்"குன்றம் கொடுங்கோளூர்க்கயலதாகிய செங்குன்றென்னும்பலை" என்றுரைத்தாராலெனிற் கூறுவேன் கண்ணகி கணவனையிழந்தபின்,

" வாரொலிகூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ்நாளகத்தெல்லைநீங்கி
வானோர் தங்கள் வடிவினல்ல
தீனோர்வடிவிற்காண்டலில் லென
மதுரைமாதெய்வ மாபத்தினிக்கு
விதிமுறைசொல்லியழல்வீடுகொண்டபின்

கருத்துறுகணவற்கண்டபினல்ல
திருத்தனுமில்லேனிற்றலுமிலனெனக்
கொற்றவைவாயிற்பொற்றொடிதகர்த்துக்
கீழ்த்திசைவாயிற்கணவனொடுபுகுந்தேன்
மேற்றிசைவாயில் வறியேன்பெயர்கென
விரவும்பகலுமயங்கினள்கையற்
றரவுநீர்வையையொருகரைக்கொண்டாங்
கவலவென்னளைவலித்திழிதலின்
மிசையவென்னண்மிசைவைத்தேறலிற்
கடல்வயிறுகிழித்துமலைநெஞ்சுபிளந்தாங்
கவுணரைக்கடந்தசுடரிலைநெடுவே
னெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யான்"

எனக்கூறுதலான் மதுரைமேற்றிசைவாயில்பெயர்ந்து வையையை ஒருகரைக்கொண்டு பள்ளத்திழிந்தும் மேட்டிலிவர்ந்தும்போய் நெடுவேள்குன்றத்தேறி வேங்கையின்கீழேதங்கினளென்று அறியலாகும். இவள் தங்கிய மலைமிசையுள்ள இடம்,

"தன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
ணின்னாட்டகவயினடைந்தனணங்கை"

என்று மேற் செங்குட்டுவற்குச் சாத்தனர் கூறுதலான் சேரனாட்டு மலையிடமாதனன்குணரப்படும். இவள் நெடுவேள்குன்றம் ஏறுதற்கு முன் பள்ளத்திழிந்தும் மேட்டிலேறியுஞ்சென்றாள் என்று கூறிய தல்லது பெருமலைகளைக் கடந்தாள் என்று கூறாமையுங்காண்க. கொடுங்கோளூர்க்கு அயலதாகப் பெருமலையொன்றும் இல்லாமை நன்கு கேட்டறிந்துகொள்க. கொடுங்கோளூர்க்கு நெடுந்தூரத்தே செங்குன்றூர் எனப்பெரியதோரூருள்ளது. அதன்பக்கத்ததாகிய தோர்குன்று செங்குன்றாகுமேனும் நெடுவேள்கோயில்கொண்ட குன்றாகாமை கேட்டறிந்துகொள்க. அன்றியும் அக்குன்றுக்குப் போதற்குமுன் இடையே பொதியமலைத்தொடர் பலவற்றையும் சுள்ளியம் பேர்யாற்றையுங் கடத்தல் இன்றியமையாததாகும். வையையொருகரைக்கொண்டு என்றுகூறியதல்லது வேறுநதிகளைக் கடந்ததையேனும் பாண்டியர் பொதியத்தைக்கடந்ததையேனுங்

கூறாமை நன்குணர்ந்துகொள்க. மற்று இவள் ஏறி வானுலகெய்தியமலை பெருமலை என்பது வாழ்த்துக்காதையிற் கண்ணகி உறவினர், மதுரைபோந்து பூசல்கேட்டு வையையொரு வழிக்கொண்டு மாமலையின்மீமிசையேறினார் என்று கூறியிருத்தலானறியலாம். சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் கண்ணகி புக்கது சேரநாட்டு நெடுவேள்குன்ற மென்று கொண்டு திருச்செங்கோட்டுமலை என்றுரைத்தார். அது, செங்குட்டுவன் தங்கிய பேரியாற்றடைகரை உடையது அன்றாதலின் பொருந்தாமை அன்றியும், வையையொருவழிக்கொண்டாலெய்தும் மலையாகாமையும் வையைக்கு நெடுந்தூரத்ததாதலுங் கண்டுகொள்க. வையையின்வடகரையே போகிப் பழனிமலையை அடைந்து அதன்மிசையேறி விற்பட்டிவழியாகப் பழனிமலைப்பகுதியாகிய நெடுவேள் குன்றத்தையேனும் அயிரைமலைநெடுவேள்குன்றையேனும் கண்ணகி எய்தினாள் என்பதே நூலொடு பொருந்தக்கூறுவதாகும். மேற்பழனிமலையின்கண் கீழ்ப்பழனி செல்லுதற்கு ஐந்துநெறிகளுள்ளனவாதல்நெல்ஸன் துரையவர்கள் எழுதிய மதுரை மான்யூலிற் காண்க. "முருகனற்போர்நெடுவேளாவிபோதினி" என அகநானூற்றினும் இம்மலையையே முருகன் குன்றாகக் கூறுதல்காண்க. மற்றுச் செங்குட்டுவன் மஞ்சுசூழ்மலைகாண்குவ மென்று பெருந்திரளுடன் போந்து பேரியாற்றங்கரையெக்கரிற்றங்கியிருந்த அமயத்தன்றே குன்றக்குறவர் அவ்வேந்தன்பா லிக்கண்ணகிவரலாறு சொற்றது. பழனிமலையினிகழ்ந்த கண்ணகிசெய்தி அயிரைமலைப் பேரியாற்றங்கரை மலைப்பக்கத் துணரலாவதெங்ஙனமெனின், பேரியாற்றங்கரை மலை முதலாகப் பழனிமலையிறுதியாகவுள்ளது ஒரேமலைத்தொடராதலானும் இரண்டும் மிகவும் அண்ணியனவாதலானும் அம்மலைவாழ் குறவர்பலரும் ஒருவரொருவர்க்குக் கூறுதல்காரணமாக இச்செய்தி மலையி னெடுந்தூரஞ் செல்லத்தக்கதேயாமென்றுணர்க. சிலப்பதிகாரத்தும் "குன்றக்குற வரொங்குடன் கூடி"ச் சொற்றார்களென்றிருத்தலான் இக்குறவர் பலமலைக்குறவர்கள் என்பதும், இவர்களெல்லாம் ஒருசேரத்திரண்டுபோய்ச் சொற்றாரென்பது உணரக்கிடத்தல் காண்க. அடியார்க்கு நல்லார் கூறியவாறு நோக்கினும் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலையிலுள்ள குறவர் கண்ணகிசெய்தியைத் தம் குன்றுக்கு அயலதாகிய கொடுங்கோளூரிலரசனுள்ளபோது சென்று கூறாது அவன் பேரியாற்றங்கரைப்

பக்கத்துத் தஞ்சாமுழவினருவியொலிக்கு மஞ்சசூழ்சோலை மலை காணச்சென்ற சமயத்து ஆங்குத் தாமுஞ்சென்று கூறினரென்றன் றேகொள்ளவேண்டியிருக்கிறது. கொடுங்கோளூர்க்கு அயலதாகிய குன்றக்குறவர் நெடுந்தூரஞ்சென்று பேரியாற்றங்கரை மஞ்சசூழ் சோலைமலையிற்றங்கிய செங்குட்டுவற்குக் கண்ணகி செய்தி கூறினரென்று கொள்ளின், பழனிமலை முதலாக அயிரைமலைவரையுள்ள குறவருஞ் செங்குட்டுவற்குப் பேரியாற்றங்கரையிற் சென்றுகூறினரென்று கொள்ளலாகுமென்க. கொடுங்கோளூர்க்கு மஞ்சசூழ் சோலைமலை நெடுந்தூரத்ததேயா மென்பது நன்கறிந்துகொள்க. இனி "ஏரகம் என்பது மலைநாட்டகத்தொரு திருப்பதி" எனத் திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியர் கூறுதலான் அது செங்குன்றென்னும் மலையாகு மெனின், குன்றக்குரவையுள், "செங் கோடும் வெண்குன்றும ஏரகமும்" எனச் செங்குன்றை ஏரகத்தின் வேறாக உரைததாராதலான் அது செங்குன்றன்மையுணர்க. நச்சினார்க்கினியர் ஏரகத்தை மலையாகவே கூறார். அவர் "ஏரகமென்கின்ற ஊரிலே" என்றதனானும், 'மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்றதனானுமிதனையுணர்க. அடியார்க்கு நல்லார் செங்குன்றினை நெடுவேள் குன்று என விளங்கவுரையாமையுங் காண்க. இவற்றாற் கண்ணகி வானுலகெய்திய நெடுவேள்குன்றம் பழனிமலையாகவேனும் அயிரைமலையாகவேனும் தெளிந்துகொள்க. இவ்வுண்மையுணராதார் வேறு வேறு கூறுவர். இனி ஒருசாரார்,

> " கொற்றவேந்தன் கொடுங்கோற்றன்மை
> பிற்றெனக்காட்டியிறைக்குரைப்பனள்போற்
> றன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
> ளின்னாட்டகவயினடைந்தனணங்கை"

என்னுமிடத்துப் பாண்டியன் கொடுங்கோற்றன்மையினைச் செங்குட்டுவற்குரைத்தற்பொருட்டுச் சேரநாட்டைடைந்தாளென்று கருதினர். கண்ணகி நெடுவேள்குன்றமெய்தியது தண்கணவனைத் தேவவடிவிற் காண்டற்கென்பது கட்டுரைகாதையா னன்கறிந்ததொன்று. மதுரைமாதெய்வம் சொல்லியது கேட்டன்றோ கண்ணகி கணவனைக் காணப்புக்கது. அதனல் மதுரைமாதெய்வம் கணவனைக் காண்டற்குரிய இடத்தினையும் உரைத்ததேயாகும்; அங்ஙனமன்றாயின் இவள் சேரநாட்டு நெடுவேள் குன்றம் எய்தவேண்டிய நியதியில்லை

யென்க. இச்செய்தியைச் செங்குட்டுவற்குரைத்த சாத்தனர் கண்ணகி கணவனையிழந்து தனிமையிற் றன்சோணாட்டுக்குச் செல்ல நாணினளாய்ப் பாண்டியன் கொடுங்கோற் றன்மையை நினக்குரைப் பாளைப்போல நின்னாட்டகவயினடைந்தனள் என்று கூறினரல்லது வேறன்று. இதன்கண் உரைப்பனள்போல் என்று தெளிவாகக்கூறி யிருப்பவும் உரைக்கவேவந்தாள் என்று அப்பிறர் கொண்டார். அவள் சேரநாடெய்தியது மதுரைமா தெய்வஞ் சொற்றது கொண்டு தன் கணவனைக்காண்டற் பொருட்டேயென்பது நன்றுணர்ந்துகொள்க. கண்ணகி தெய்வமாகி; வானத்தில் ஓர் மின்வடிவாய்த் தோன்றி,

" தென்னவன் றீதிலன்றேவர்கோன்றன்கோயி
னல்விருந்தாயினனவன்றன்மகள்"

என வாழ்த்துக்காதையுட் கூறலானும், அவள் பாண்டியன்கொடுங் கோற்றன்மை கூறவந்தவளல்லளென்பதுணரப்படும். கட்டுரை காதையிலும் மதுரைமா தெய்வம் பாண்டியன் குற்றமிலனாகவே கண்ணகிக்குத் தெளிவித்தது காண்க. இதனாற் கண்ணகி கொடுங் கோளுரை நோக்கிப் பாண்டியன் கொடுங்கோற்றன்மையை இறைக் குரைப்பான் சென்றுபுக்காள் என்று பிறர் கூறுவது பொருந்தாமை யுணர்க. மற்றுச் சிலப்பதிகாரத்து, "அஞ்செஞ்சாயலருகாதணுகும், வஞ்சிமூதூர்மாநகர்மருங்கின்" என்று கூறினராலெனிற் கூறுவேன். மேற் கட்டுரைகாதையில்,

" நெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யானென்றேங்கி
யெழுநாளிரட்டியெல்லைசென்றபின்
றெழுநாளிதுவெனத்தோன்றவாழ்த்திப்
பீடுகெழுதங்கைபெரும்பெயரேத்தி
வாடாமாமலர்மாரிபெய்தாங்
கமரர்க்கரசன் றமர்வந்தேத்தக்
கோநகர்பிழைத்தகோவலன்றன்னொடு
வானவூர்தியேறினண்மாதோ
கானமர்புரிகுழற்கண்ணகிதானென"

எனவருதலாற் கண்ணகி நெடுவேள்குன்றத்து வேங்கையின் கீழ்ப் பதினன்குநாள் தங்கி அப்பாற் கோவலன்றன்னொடு வானவூர்தி

யேறினள் என்று தெளியலாகும். இதனால் இவள் மக்கள்யாக்கையில் வஞ்சிமாநகர்க்குவாராமை நன்கறியப்படும். செங்குட்டுவன் குன்றக்குறவர் சொல்லக்கேட்டுப் பின் சாத்தனார் தம்மாற் கண்ணகி வரலாறுணர்ந்து கண்ணகியைப் பத்தினிக்கடவுளாகப் பரசல் வேண்டுமென்று துணிந்தது நோக்கிக் கண்ணகி தெய்வயாக்கையில் வஞ்சிமாநகர்க்கு எய்தினாள் என்றே கொள்ளத்தக்கதாகும்.

தாய் கண்ணகியையும் தாதை கோவலனையும் கடவுளெழுதிய படிமங் காணும் வேட்கையான் மணிமேகலை "வஞ்சியுட்செல்வனென்று" மணிபல்லவத்தினின்றெழுதலானும், பின் கண்ணகி கோட்டம் புகுந்து ஏத்திய அவட்குக் கண்ணகி,

"நறைகமழ்கூந்தனங்கையுநீயு
முறைமையினிந்தமூதூரகத்தே"

என வஞ்சியைச் சுட்டிக்கூறுதலானும் கண்ணகிகோயில் வஞ்சியின் கண்ணேயுளதாதல் தெளியப்படும். இதைப்பற்றி முன்னரே கூறினேன். வாழ்த்துக்காதையிற் கண்ணகி தனக்குக் கோட்டம் அமைத்துவழிபட்டுச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத் தன் கடவுணல்லணி காட்டிக் கூறியவிடத்து,

"வென்வேலான்குன்றில்விளையாட்டியானகலே
னென்னேடுந்தோழிமீரெல்லீரும்வம்மெல்லாம்"

"வஞ்சியீர்வஞ்சியிடையீர்மறவேலான்
பஞ்சடியாயத்தீரெல்லீரும் வம்மெல்லாம்"

என்றுவருதலானும் இவள்கோயில் நெடுவேள்குன்றின்கணில்லாமை நன்குணர்ந்துகொள்க. இதன்கண் நெடுவேள்குன்றில் வந்து நான் விளையாடுவேன் நீங்களும் அங்கே வாருங்கோள் என்று கண்ணகி தன்கோயிற்குமேல் விசும்பிற்றோன்றிக் கூறியதனாற் குன்றிற்றனக்குக் கோயிலில்லாமை யுணரப்படும். வென்வேலான் குன்று கண்ணகிகோவலனுடன் வானவூர்தியேறிய இடனாதலின் அதன்கண் விளையாடனீங்கேன் என்றாளென்க. அரும்பதவுரையாசிரியரும் வென்வேலான் குன்றைத் தாங்கருதிக்கொண்ட திருச்செங்கோடாகக்கூறி, நான் குன்றில்வந்து விளையாடுவேன்: நீங்களும் அங்கே வாருங்கோள் என்றாள் என்று கூறுயதுகாண்க. மற்றிவ்வாழ்த்துக்காதைக்கண், கண்ணகியுறவினர்,

" வையையொருவழிக்கொண்டு
மாமலைமீமிசையேறிக்
கோமகடன்கோயில்புக்கு
நங்கைக்குச்சிறப்பயர்ந்த
செங்குட்டுவற்கித்திறமுரைப்பர்மன்"

எனக்கூறினாராலெனின்? ஆண்டு உறவினர் வையையின் ஒருகரையே போய்க் கண்ணகிவானவூர்தியேறிய நெடுவேண்மலையேறி அவ்விடம் கண்டுகொண்டு அதன்மேற் கோமகடன் கோயிலுள்ள விடத்துப் புக்கு ஆங்கு நங்கைக்குச்சிறப்பயர்ந்த செங்குட்டுவற்கு இத்திற முரைப்பர் என்றே பொருள்கொள்க. இங்ஙனங்கொள்ளாமல் இவ் வாழ்த்துக் காதையில் "மாமலைமீமிசையேறிக் கோமகடன் கோயில் புக்கு" என்றதொன்றேகருதிக் கண்ணகிகோயில் நெடுவேள் குன்றத்தேயுள்ளதாகும் என்று துணியின் அது மணிமேகலை நூலோடும், இவ்வாழ்த்துக் காதையிற் குன்றில் விளையாட்டி யானகலேன் எல்லீரும் அங்குவாருங்கோள் என்றதனோடும், வரந்தரு காதையில் "அஞ்செஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்" என்றத னோடும் முரணுதல் காண்க. வரந்தருகாதையில்,

" மாடலமறையோன் றன்னொடுமகிழ்ந்து
பாடல்சால்சிறப்பிற்பாண்டிநன்னாட்டுக்
கலிகெழுகூடல்கதழெரிமண்ட
முலைமுகந்திருகியமூவாமேனிப்
பத்தினிக்கோட்டப்படிப்புறம்வகுத்து
நித்தல்விழாவணிநிகழ்கென்றேவி
.........................................
மாடலமறையோன்றன்னொடுங்கூடித்
தாழ்கழன்மன்னர்தன்னடிபோற்ற
வேள்விச்சாலையில்வேந்தன்பெயர்ந்தபின்
யானுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை"

என அடிகள் கூறுதலானும் கண்ணகிகோட்டம் வஞ்சிமூதூர்ப்புறத் துளதாதல் புலனாகும். இதன்கண் அரசன், வேள்விசெய்தற்குரிய இடனாகத்தான் முன்காட்டிய வேள்விச்சாலைக்குக் கண்ணகி கோட்டத்தின்று பெயர்ந்தானென்றும், அடிகள் தாமுங் கண்ணகி

கோட்டம்புக்காரென்றும் அறியக்கிடத்தலல்லது ஒருமலையினின்று மீண்டதாகவும் அம்மலைக்குப்போனதாகவுங் கொள்ளக்கிடையாமை காண்க. இத்துணையுங் கூறியவற்றாற்கண்ணகி "செங்கதிர்மணி முடிச்சேரலன்றிகழ் கொங்கநன்னாட்டிடை"யே புக்காளென்றும்; அந்நாட்டு வருபுனனீர்த்தண்பொருநை சூழ்தரும் வஞ்சியிலே கோயில் கொண்டாளென்றும் கண்டுகொள்க. இவையெல்லாம் ஆராயாது கண்ணகிகோட்டம் கொடுங்கோளூர்க் கயலதாகிய செங்குன்றுமலையிலுள்ளதென்று துணிந்தாருமுண்டு.

இனிக் கருவூர் வஞ்சியென்று பெயர்பெறுதலில்லையென்று மயங்குவாருமுளர். அவர்பொருட்டுச் சிலகாட்டுவல். சிலப்பதிகாரத் துக்காட்சிக்காதைக்கண்,

"கூடார்வஞ்சிக்கூட்டுண்டுசிறந்த
வாடாவஞ்சிமாநகர்"

என்புழி அரும்பதவுரையாசிரியர் வஞ்சிமாநகர் என்பதற்குக் கரு வூரிலே எனப் பொருள்கூறினர். புறப்பாட்டில்,

"விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (11)

என்புழிப் புறப்பாட்டுரையாசிரியர், வஞ்சி-கருவூர் என்றார். அதன்கட்

"பூவாவஞ்சியுந்தருகுவனென்றோ" (32)

என்புழி, அவர், "பூவாவஞ்சியென்றது கருவூர்க்குவெளிப்படை" யென்றார். அதன்கண்,

"மாண்வினைநெடுந்தேர்வானவன்றொலைய
வாடாவஞ்சிவாட்டுநின்" (39)

என்புழி அவர், "மாட்சிமைப்பட்டதொழில்பொருந்திய நெடிய தேரையுடைய சேரனழிய அவனதுஅழிவில்லாத கருவூரை அழிக்கு நினது" என்றார்.

திவாகரநிகண்டுநூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.
பிங்கலந்தைநூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.

கச்சியப்பமுனிவர், "கருவூரெனத்தக்கது வானடுத்தெழும் வஞ்சி" எனப் பேரூர்ப்புராணத்துட்கூறினர். இக் கருவூரென்னும்

பெயரும் வஞ்சியென்னும்பெயரும் சங்க நூல்வழக்கேயாமென்பது "கோதை திருமாவியனகர்க்கருவூர்" எனவும், "ஒளிறுவேற்கோதை யோம்பிக்காக்கும்வஞ்சி" எனவும் வருதலா னுணரலாமென்று முன்னரேகாட்டினேன். இவையெல்லாம் அப்பிறர்தெரியார்போலும். "வஞ்சிபசுபதியாயினுர், பானநஞ்சினர்பாழியுமானிலையாயிற்றே" என்று பேரூர்ப்புராணத்து வருதலான் வஞ்சிக்கண் ஆனிலைக்கோயி லுடைமை புலனாகும்.

இனி இவ்வஞ்சி ஆன்பொருந்தத்தின்கரையிலுள்ளதென்பது,

" தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (புறம்-11)

என்புழிப் புறப்பாட்டுரையாசிரியர் "ஆன்பொருந்தத்தினீரின்கட் பாய்ந்துவிளையாடும் வானைமுட்டியபுகழினையும் வென்றியையுமுடைய கருவூர்" எனவுரைத்ததனான் உணரலாம். ஆன்பொருநை, பொருநை என்பன ஆன்பொருந்தத்தின்பெயரென்பது மேற்காட்டிய 11-ஆம் புறப்பாட்டுரையானும்," தண்ணான்பொருநை" (புறம் 36) என்பதற்குப் புறப்பாட்டுரைகாரர் குளிர்ந்த ஆன்பொருந்தம் என்றுரைத்த தனானும் அறியலாம். இவ்வான்பொருந்தநதிக்கு ஆனி, வானி என்பனவும் பெயரென்பது திவாகரத்து, "ஆனி வானியான் பொருந்த மாகும்" எனவும், பிங்கலந்தையில்,

"ஆனிவானியான்பொருநைபொருநை
சூதநதியான்பொருந்தமாகும்"

எனவும் வருதலா னறிந்தது. இவ்வான்பொருந்தமாகிய யாறு கொங்குநாட்டுள்ளதென்பது"சூதநதி"என்றபெயரானறியநின்றது. சூதம்-ஆமிரம். இதனு லாமிராவதி எனப்படும். இக்கொங்குநாட்டி லுள்ள ஆனி, பொருநை, ஆன்பொருநை, வானி, ஆன்பொருந்தம், சூதநதி என்னும் யாறு காவிரியுடன் கலப்பதாகுமென்பது, பதிற்றுப்பத்துள், "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு, மூன்றுடன்கூடிய கூடல்" என்பதற்குப் பதிற்றுப்பத்துரைகாரர், "காவிரியல்லாமலும் ஆன்பொருந்தமுங் குடவனென்றாற்போல்வதோர்யாறும் கூடிய கூட்டம்" என்வுரைத்ததனுலும் பழனிப் புராணத்தாலும் அறியப் பட்டது. இவற்றாற் கொங்குநாட்டில் வானியென்னும் பெயரை யுடையதும் காவிரியுடன்கலப்பதுமாகிய ஆன்பொருந்தத்தின்கரை யிலே சேரனது அழியாத கருவூருண்மை நன்குபுலனாகும்:

இனிச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் சேரர் கருவூர் முற்றியிருந்தபோது அவனை ஆலத்தூர்கிழார், மாறோகத்து நப்பசலையார்முதலாய நல்லிசைப்புலவர் பலர்பாடிய பாடல்கள் புறநானூற்றிலிருத்தலைக் கற்றோரறிவர். அவையெல்லாம் யான் முற்காட்டிய "இவன்யாரென்குவையாயின்" (13) என்னும் புறப்பாட்டைப் போலச் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துச் சோழரால் எளிதில் முற்றலாம்படி அத்துணையணித்தாக அகநாட்டுள்ள தன்மையினையுணர்த்துதல் நன்கறியலாம்: அப்பலபாடல்களிலொன்றேனும் அவ்வூர் கடலுடைத்தாகக்கூறுதுசேறலையும் நோக்கிக்கொள்க. சோழர், சேரர்பாற்செற்றங்கொண்டபோதெல்லாம் கருவூரைமுற்றுதலையும், கருவூரிற் சேருடையயானையையெறிதலையும், கருவூரையெறிதலையும் நூல்கள் ஆங்காங்குக்கூறுதலை யுற்றுநோக்கிற் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துள்ள தன்மையே புலனாகும். சோழன், சேரனது கருவூரைவென்றுகொண்டகாலத்துச்சோழனைக் "கோழியெழில் வஞ்சியுமோங்குசெங்கோலினன்" (திருஞானசம்பந்தநாயனார் மூக்கீச்சரத் தேவாரம்) எனவும், "வஞ்சிமானதன்" (ஜபங்கொண்டார்பாடிய பரணி) "மாயனிகனெடுமால் வஞ்சியானீர்நாட்டார்மன்" (வீரசோழியம் மேற்கோள்) எனவும் நூல்கள்கூறுதலானும் இவ்வஞ்சியாகிய கருவூர் சோணாட்டை யடுத்துள்ள துணரலாகும். காவிரிபாயுந்தலைநீர் நாடுமுதற் கடைநீர்நாடிறுதியாகச் சோழன் உடையனாயகாலத்துச் சோழனைப் பற்றியபாடல்களிற் "புனனாடன்கொல்லி" எனக்கூறுதல் போலவே, "வஞ்சியானீர்நாட்டார்மன்" எனவும், "அறத்தின், மகனைமுறைசெய்தான்மாவஞ்சியாட்டி, முகனைமுறைசெய்தகண்" எனவுங் கூறப்பட்டன என வுணர்க. பிற்காலத்துச் சேரர்கொல்லி மலை சோழற்கேயுரியதாகிய தன்மைபோலச் சேரர்வஞ்சியும் சோழற்குரியதாகியதனையே இவை காட்டுதல் உணரத்தகும். மேல்கடற் பக்கத்துள்ள தொண்டி, முசிரி, மாந்தை என்னும் ஊர்களையேனும் அப்பக்கத்துள்ளமலைகளையேனும் சோழற்குரிமையாக்கிக்கூறாமல் வஞ்சிநகரையும் கொல்லிமலையையுமே அவற்குரிமையாகக்கூறுதலான் அவை அவன்நாட்டுக்கு அணிமையாக இருத்தல்பற்றி அவனாலவை வென்றுகொள்ளப்பட்டனவேயாகுமென்று துணியத்தகும். மேல் கடற்பக்கத்து இவ்வஞ்சியுள்ளதாயின் அக்கடற்பக்கத்துள்ள பிற ஊர்களையும் சோழற் குரிமை கூறுவரென்றுணர்க: "வஞ்சியானீர் நாட்டார்மன்" "புனனாடன் கொல்லி" எனப்பிற்காலத்து வழங்கியன கொண்டு இவ்வஞ்சியும் கொல்லியும் காவிரிபாயும் நிலத்தை அண்

மையாக இருத்தல் குறித்தாரெனினும் அமையும். கொங்குநாட்டுக் காவிரிபாயும்பகுதியை அடுத்து இவையுண்மையால் பிற்காலத்துச் சோழர்க்குக் காவிரிபாயுந்தலைநீர் நாடுமுதலாக உரிமையாய்விட்டது கருதி, கொங்கிற் காவிரிபாயு நிலமுதலாக எல்லாம் நீர்நாடாகவே கொண்டு வஞ்சியுங்கொல்லியும் நீர்நாட்டனவாகக்கூறினாரென்பதே பொருந்தும். திருஞானசம்பந்த நாயனாரும், "கோழியெழில்வஞ்சியும்" என்றது அவை அணிமையாதல் கருதியென்றுகொள்ளத்தகும். தலைநீர்நாடு என்பது பண்டைவழக்கேயாதலை, "உண்டுறை, மலையலரணியுந்தலைநீர்நாடன்" (390) எனச் சேரர்க்கு உறவினனாகிய அதியமானெடுமானஞ்சியை ஒளவையார் பாடிய புறப்பாட்டானுணர்க. தலைநீர்நாடாதலால் உண்டுறை மலையலரணிந்தது என்று கூறினாரெனவறிக. விடுகாதழகியபெருமாள் சாஸநமொன்றில்,

"வஞ்சியர்குலபதியெழினிவகுத்தவியக்கரியக்கியரோ
டெஞ்சியவழிவுதிருத்தியெண்குணவிறைவனைமலைவைத்தான்
அஞ்சிதன்வழிவருமவன்முதலிகலதிகனலகனநூல்
விஞ்சையர்தகைமையர்காவலன்விடுகாதழகியபெருமாளே"

எனவருதலானும் இவ்வதியமானஞ்சி வஞ்சியர்குலத்தவனாதலுணரப்படும். இவற்றான் முற்காலத்தே தலைநீர்நாடும் இடைநீர்நாடும் சேரர் உறவினர்க்கும் சேரர்க்கும் உரிமையாதலுங் கடைநீர்நாடு சோழர்க்குரிமையாதலும் உய்த்துணரலாகும். பிற்காலத்து முழுநீர்நாடும் சோழர்க்குரிமையாகியசிறப்பால்"புனனாடன்கொல்லி"எனவும், "வஞ்சியானீர்நாட்டார்மன்" எனவும் கூறத்தலைப்பட்டனரென எளிதிலுணரத்தகும். சேரர்கொல்லியையும் வஞ்சியையுமே பிற்காலத்துச் சோழர்க்குரிமையாக்கிக் கடன்மலைநாட்டுப்பக்கத்துள்ள ஊர்கள் மலைகளை அச்சோழர்க்குரிமையாகப் பின்னூல்கள் கூறாமையான் அக்கடன்மலைநாட்டுத் தொண்டி, மாந்தை, முசிரி முதலியனவுள்ளபக்கத்து இக்கொல்லியும் வஞ்சியுமில்லாமை எளிதிலுய்த்துணரலாகும்: இறையனார்களவியலுரை மேற்கோட்பாடல்களில் அரிகேசரிபாண்டியன் சேரர்நாட்டைவென்றுகொண்டான் என்பதையுணர்த்தி வஞ்சி, கொல்லி, முசிரி, தொண்டி, மாந்தை, விழிஞம் முதலாகப் பலவற்றையும் அவற்குரிமையாக்கிக்கூறுதல்போலவண்டுச் சோழர்க்குப் பலவற்றையுங்கூறாமற் கொல்லியையும் வஞ்சியையுமே யுரிமையாக்குதலையு நோக்கிக்கொள்க.

இனிப் புறப்பொருள்வெண்பாமாலைப் பொதுவியற்படலத்துக்,

"குடையலர்காந்தட்டன் கோல்லிச்சுனைவாய்த்
தொடையவிழ்தண்குவளைசூடான்— புடைதிகழுந்
தேரதிரப்பொங்குந்திருந்துவேல்வானவன்
போரெதிரிற்போந்தையாம்பூ"

என்னும்பாடலுண்மை கற்றாரறிவர். இதன்கட் சேரன், தன் கொல்லிமலைச்சுனையிடத்துக் குவளைப்பூவைச்சூடான்; பூசல்தோற் றிற்பனந்தோடாம் அவன்சூடும்பூ என்றுகூறினர். இதனாற் சேரன் தன்கொல்லிமலைச்சுனையிடத்துப் பூத்த குவளையைச் சூடுதற்குரிய நிலையில் அம்மலைக்கு அணித்தாகவதிதல் எளிதிலுணரத்தகும். கொல்லிமலைச்சுனைகளில் இவன் சூடற்காகியகுவளைகள் பலவுள வாகவும் அவற்றைச் சூடானாயினன் என்றது அச்சேரற்கு அவைத்தடையாளப்பூவாகாமையா னென்றுணர்க. சேரன்வதியுநகர்க் கும் கொல்லிமலைக்கும் இடமணித்தாதலில்லையாயின் இவ்வாறு பாடல்பிறவாதென் றுய்த்துணர்ந்துகொள்க. கொடுங்கோளூர்க்குங் கொல்லிக்கும் பன்னூறுநாழிகை வழித்தூரமாகுமென் றறியப் படுதலாற் சேரன் ஆண்டிருந்துசூடநினைந்தாலும் கொல்லிச் சுனைக்குவளை சூடலாகாமையுநோக்கிக்கொள்க. போரெதிரிற் குவளைசூடான்; போந்தைசூடுவன்- என்றுரைத்தவாற்றாற் போரெதிராதபோது சேரன் தன்கொல்லிச்சுனைக் குவளை சூடுவன் என்பது பெறப்படுதல்காண்க. சேரரைக் கொல்லிநகர்க்கிறைவ ரென்பதும் கொல்லியணித்தாகிய நகர்க்குத்தலைவராதல் கருதி யென்றுணர்க. கொங்குநாட்டுத் திருப்பேரூர்த்தலத்து இறவாப் பனை என்பதொன்றுண்மை பேரூர்ப்புராணத்தாலறியலாம். இவ் விறவாமைச் சிறப்பா னிப்பனையின்தோட்டைச் சேரர் அணியத் தலைப்பட்டனரென் றாகிக்கப்படும்.

இனிச் சோழன்செங்கணானும் சேரமான்கணைக்காலிரும் பொறையுந் திருப்போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப்பற்றிக் கொண்டு சோழன்செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களவ்பாடிவீடுகொண்ட களவழி நாற்பதின்கண்,

"ஒண்செங்குருதியுமிழ்ம்புனலுடன்
கொங்கரையட்டகளத்து"

எனவும்,

> "புய்ந்துகால்போகிப்புலான்முகந்தவெண்குடை
> பஞ்சிபெய்தாலமேபோன்றபுனனுடன்
> வஞ்சிக்கோர்வட்டகளத்து"

எனவும்வருதலைக் கற்றுரறிவர். இதன்கட் சோழன்செங்கணன் கொங்குநாட்டாரையட்டான் என்றும், வஞ்சிநகர்க்கரசனையட்டான் என்றும் கூறுதல்கொண்டு வஞ்சியிலுள்ள அரசனாகிய சேரன் தன் வஞ்சியுள்ள கொங்குநாட்டு மறவர் துணையாகச் சோழனோடு பொருதா னென்றும், அங்ஙனம் பொருதுழி அக்கொங்குநாட்டாரையும் அக்கொங்குநாட்டுத் தலைநகராகிய வஞ்சிக்குக்கோவாகிய சேரனை யும் சோழன் அட்டான் என்றும் உணரக்கிடத்தல் நன்குகாண்க. இவை நாடும் ஊரும் புலப்படுத்தல் தெற்றெனவிளங்கும். இவ் வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

> "வெங்கைக்களவழிப்பாடலுக்கு வில்லவனைக்
> கொங்கைத்தளைகளைந்தகோமானும்"

எனப் பாடுவாராயினாரெனவுணர்க. சேரன் இக்கொங்குநாட்டிருந்து அரசுபுரிதலானன்றே "குடகொங்கன்" (பெரியதிருமொழி) எனச் சேரனையும், "கோதைநாடு" (பழனித்தலபுராணம்) எனக் கொங்கு நாட்டையும் வழங்கினர். சேரநாட்டைச் சொல்லவேண்டியவிடத் துக் "குடகொங்குநாடு"(பாரதம்) என்று மொழிவதும் இக்கருத்தே பற்றிய தாகுமென்று கொள்க. சேரனுக்கு வானுலகுநல்கினன் என்று கூறுமிடத்துக் "கொங்கைக்கமராவதியளித்தகோவேராச குலதிலகா" எனப் பிறரும் பாடுதல்காண்க. இக்களவழிக்கண் நாடும் ஊரும் கூறியது போலவே,

> "கோங்குபுறம்பெற்றகொற்றவேந்தே
> ... ... ... ...
> வஞ்சிமுற்றம்வயக்களனாக
> ... ... ... ...
> கொண்டனைபெருமகுடபுலத்ததரி" (புறங்-373)

என்னுமிடத்தும் நாடும் ஊரும் கூறினாரென்று தெளியப்படுதல் காண்க. குடபுலம் கொங்குநாட்டைச் சிறப்பாக வுணர்த்துமென் பதை முன்னரே தெளிவித்தேன்.

இனிச் சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாத்தலையார்பாடிய புறப்பாட்டுக்களில்,

"அறத்தின்மண்டியமறப்போர்வேந்தர்
தாமாய்ந்தனரேகுடைதுளங்கினவே
... ... ... ...
"பெண்டிரும், பாசடகுமிசையார்பனிநீர்மூழ்கார்
மார்பகம்பொருந்தியாங்கமைந்தனரே" (62)

எனவும்,

"என்னாவதுகொல்தானேகழனி
யாம்பல்வள்ளித்தொடிக்கைமகளிர்
பாசவன்முக்கித்தண்புனற்பாயும்
யாணரறாஅவைப்பிற்
காமர்கிடைக்கையவரகன்றலைநாடே" (63

எனவும் வருதலைக் கற்றாரறிவர். இவற்றுட் சேரர் சோழர் இருவரும் படையுடன் பொருதபோது இருவர் படையும் பட்டபின்னும் பெயராது சென்று இருவேந்தரும் பொருது அக்களத்தேமாய்ந்தனரென்றும், அவ்வரசர் பெண்டிரும் பச்சையிலைதின்னாராய்க் குளிர்ந்த நீரின்கண் மூழ்காராய் அவர்மார்பத்தைக்கூடி அக்களத்தின் கண்ணே உடன் கிடந்தார் என்றும் கூறியிருத்தலுடன் இவ்விருவேந்தர் நாட்டினையும் வேறுவேறுவிசேடியாது ஒருபடியாகவே நீர்வளத்தான் விசேடித்து இனி யிவர்நாடு என்னவருத்தமுறுவதோதான் என்று இரங்குதலையுங் காணலாம். இப்போர்க்களத்து இருவேந்தர்பெண்டிரும் உடன்கிடந்தார் என்று கூறப்பட்டதனா லிவர் பொருதுமடிந்த விடம் இவ்விருவர் பெண்டிரும் வதியும் ராஜகிருகமுள்ள தலைநகர்க்கு அணித்தாயிற்றென்று துணியப்படும். அங்ஙனமன்றாயின் இவர் மடிந்ததுகேட்டுப்போந்து அவரவர்பெண்டிர் அவரவர்மார்பைத் தழீஇக்கிடத்தல் கூடாதென்க.

"குலமடமாதரொடுகலமிசைச்சேறலும்
பாசறைச்சேறலும்பழுதெனமொழிப" (இ-வி-அகத்-81)

என்பதனாற் பரத்தையரோடு பாசறைச்சேறலல்லது குலமகளிருடன் பாசறைச்சேறலில்லையென்பதும் உணர்ந்துகொள்க. அரசர் மடிந்த

களத்தே அவர்மார்பைத்தழீஇத் தாரகபோஷகபோக்கியங்களை விட்டு உடன்கிடத்தல் கூறியதனால் இவர் குலமகளிராதல் பெறப் படும். இதன்கட் "பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக்கொள் ளுதற் குரியோரொருவரின்றிக் கண்டார்க்கு அச்சம்வர உடனே மடிந்தது" எனக் கூறியுள்ளவாற்றாற் பாடிவீடு பாழ்பட்டவாறு முன்னரே பெறப்பட்டதாகும். தொல்காப்பியத்தும்,

"நீத்தகணவற்றீர்த்தவேலிற்
பேஎத்தமனைவியாஞ்சியானும்"

எனவும்,

"முலையுமுகனுஞ்சேர்த்திக்கொண்டோன்
றலையொடுமுடிந்தநிலையொடுதொகைஇ"

எனவும் வருவனவற்றால் இவ்வேந்தர் கணவரும், இப்பெண்டிர் அவர் மனைவியருமாதல் தெள்ளிதெனவுணர்க. புறப்பொருள்வெண்பாமாலை யினும்,

"எங்கணவனெங்கணவனென்பார் இகல்வாடத்
தங்கணவன்றாள் தம்முலைமுகம்பா—லெங்கணை சேர்
புண்ணுடைமார்பம்பொருகளத் தும்புல்லினார்
நுண்ணிடைப்பேரல்குலார்"

எனவருதலானும், அதற்கு மாகறலூர்கிழான் சாமுண்டிதேவ நாய கன், "எம்முடையகணவன் எம்முடைய கணவனென்று சொல்லும் பரத்தையர்மாறுபாடுகெடத் தமதுகொழுநன்மாலை தம்முலை முகந்து கொள்ள வெய்ய அம்புபட்டபுண்ணினை யுடையமார்பைப் போர்க் களத்துத்தழுவினார், நுண்ணிய இடையினையும் பெரிய அல்குலினையு முடைய குலமகளிர்" எனவுரைத்தலானும் இவ் வேந்தர்மார்பைத் தழுவிக்கிடந்தபெண்டிர் அவர்குலமகளிர் என்பதுணர்க.

"காய்கதிர்நெடுவேற்கணவனைக்காணிய
வாயிழைசேறலுமத்துறையாகும்"

"பகையைச்சிக்கும் ஒளிநெடுவேலினையுடைய கொழுநனைக்காண வேண்டி அவன்பட்டபோர்க்களத்துள் அழகிய ஆபரணத்தை யுடைய மனையாள்போயினதும் அத்துறையேயாகும்" (புறப்-வெண்) என்பதனான் மனைவியர் போர்க்களம்போய் இறந்தகணவரைக்

காண்டதுண்டென்றுணர்க. இவற்றாற் சேரர்சோழரிருவரும்பட்ட போர்க்களத்து அவர்மனைவியரேபோய் அவர்யார்பைத்தழுவிக் கிடந்தார் என்று துணியப்பட்டதாகும். இச்செய்தி, சோழர் உறையூரையும் சேரர் அதனையடுத்த கருவூரையும் தலைநகராகவுடையரென்பதற்குப் பொருந்துவதல்லது மேல்கடற்பக்கத்துக் கொடுங்கோளூரைச் சேரர் தலைநகராகவுடையர் என்பதற்குச் சிறிதும் பொருந்தாமை யுய்த்துணர்ந்து கொள்க. முற்காட்டியமேற்கோளிற் சேரசோழரிருவர்நாட்டையும் ஒருபடியாகவருணித்ததும் இக் கருத்தையே வலியுறுத்தும். ஆண்டு இருவரும் ஒருநாடுடையார் போலவே கூறியிருத்தலை நன்றுகண்டுகொள்க. இருவேந்தரும் காவிரிபாயுநிலவளமுடையராதலால் இங்ஙனங் கூறினாரென வுணர்க. இவ்விருவேந்தரும் பொருத போஒர் என்னும் ஊர் சோழன்மறவனாகிய பழையனுடையது; காவிரி நாட்டுள்ளது; இதனை,

"வென்வே, லிழையணியானைச்சோழன்மறவன்
கழையளந்தறியாக்காவிரிப்படப்பைப்
புனன்மலிபுறவிற்போஒர்கிழவோன்
பழையனோக்கிய வேல்போல்" (அகம்-326)

எனவருதலானுணர்க.

"கொற்றச்சோழர்கொங்கர்ப்பணீஇயர்
வெண்கோட்டியானைப்போஒர்கிழவோன்
பழையன்வேல்வாய்த்தன்ன" (நற்றிணை-10)

என்பதனாற் சோழர், பழையன்படைமுதன்மைபெற்றுக் கொங்கரோடுபொருதமை யுணரப்படும்.

இனிப் பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்தினுள் இளஞ்சேரலிரும்பொறையென்னுஞ் சேரனிருந்தரசாண்டவூர் வஞ்சியென்பது கற்றறிவர். ஒன்பதாம்பத்தின்பதிகத்து,

"வெருவருதானையொடுவெய்துறச்செய்துசென்
றிருபெருவேந்தரும்விச்சியும்வீழ
வருமிளைக்கல்லகத்தைந்தெயிலெறிந்து
பொத்தியாண்டபெருஞ்சோழனையும்
வித்தையாண்டவிளம்பழையன்மாறனையும்

வைத்தவஞ்சினம்வாய்ப்பவென்று
வஞ்சிமூதூர்த்தந்துபிறர்க்குதவி
மந்திரமரபிற்றெய்வப்பேணி
... ... ... ...
மன்னுயிர்காத்தமறுவில்செங்கோ
லின்னிசைமுரசினிளஞ்சேரலிரும்பொறை''

எனவருதலா னிஃதறியப்படும். இவனைப்பாடிய முதற்பாட்டில்,

"வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணல்
... ... ... ...
காந்தளங் கண்ணிச்செழுங்குடிச்செல்வர்
கலிமகிழ்மேவலரிரவலர்க்கீயுஞ்
சுரும்பார்சோலைப்பெரும்பெயற்கோல்லிப்
பெருவாய்மலரோடுபசும்பிடிமகிழ்ந்து
மின்னுமிழ்ந்தன்னசுடரிழையாயத்துத்
தன்னிறங்கரந்தவண்டுபடுதுப்பி
ஞெடுங்கீரோதியோண்ணுதலணிகோளக்
கொடுங்குழைக்கமர்த்தநோக்கினயவரப்
பெருந்தகைக்கமர்ந்தமென்சொற்றிருமுகத்து
மாணிழையரிவைகாணியவொருநாட்
பூண்கமாளநின்புரவிநெடுந்தேர்
முனைகைவிட்டுமுன்னிலைச்செல்லாது
தூவெதிர்ந்துபெறூஉத்தாவின்மள்ளரொடு
தொன்மருங்கறுத்தலஞ்சியரண்கொண்டு
துஞ்சாவேந்தருந்துஞ்சுக
விருந்துமாகநின்பெருந்தோட்கே''

எனவருதல் காணலாம். இது வேற்றுப்புலத்துச்சென்று தங்கிய சேரனை அவன் மனைவிகாணும்படி தேர் புரவிபூண்பதாக வேண்டுமென்றுகூறியதாகும். உரைகாரரும்,''அண்ணல் நின் அரிவைகாணிய நின்தேர் ஒருநாட் புரவிபூண்பதாகவேண்டும்; அதுதான் நின் அரிவைக்கே உடலாகவேண்டுவதில்லை; அதனானே துஞ்சாவேந்தருந் துஞ்சுவார்களாகவேண்டும்; அதுதான் நின் பெருந்தோட்கு விருந்துமாகவேண்டும்: இவ்வாறு இரண்டொருகாரியமாக இதனைச்செய்க:

எனவினைமுடிவுசெய்க" எனவுரைத்தார். இதனு லிது வேற்றுப் புலத்துத்தங்கியசேரனை அவன் கற்புடைமனைவியுள்ள கோயிற்குச் செல்லுமாறு வேண்டிக்கொண்டதென்று நன்குதெளியலாம்: இதன் கண், வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணுல்! நின் மாணிழையரிவை யாகியமனைவி கொல்லிமலையிலுள்ள இருவாட்சிமலருடன் பச்சிலையை யும் விரும்பிச்சூடி அதனு லோதியு நுதலும் அணிகொள அவள் காணுமாறு ஒருநாள் நின்புரவிநெடுந்தேர் பூண்பதாகவேண்டும்—என்று கூறப்பட்டுள்ளது: இதனுலிவன் மனைவியுள்ள அந்தப்புரத்தினை யுடையகோயில் கொல்லிமலைக்கு அணித்தாதல் நன்குதுணியப்படும். அங்ஙனமல்லாக்காற் கொல்லிமலையிலுண்டாகும் இருவாட்சியையும் பச்சிலையையும் சேரன்மனைவி கோயிலிலிருந்துசூடி யணிகொள்ளு தல் இயலாதென்று தெளிந்துகொள்க. இது வேற்றுப்புலத்திறுத்த சேரனை அவன் வஞ்சிக்குத்திருப்புமாறுவேண்டியதன்றி வேறன்று. அவ்வஞ்சியிலுள்ளார் கொல்லிமலைப்பூவையும் தழையையும் புனைந் தணிகொளல்கூறியவாற்ருன் வஞ்சிக்குக் கொல்லிமலையணித்தாதல் இன்றியமையாததாகும். கொல்லிமலைப்பூவையுந் தழையையும்புனையக் கூடியநிலையில் அப்பலைக்கு அணித்தாகவுள்ளவஞ்சி கொங்கிற் கருவூரேயன்றிப் பிறர்கூறுங் கொடுங்கோளூரல்லாமை எல்லாரும் அறிவர். இப்பதிற்றுப்பத்து, மேல் யான்காட்டிய,

> "குடையலர்காந்தட்டன்கொல்லிச்சுனை வாய்த்
> தொடையவிழ்தண்குவளைசூடான்"

என்ற வெண்பாமாலைப்பாட்டொடு கருத்தொத்து வஞ்சி கொல்லிக்கு அடுத்துளதென்பதனை ஐயமறத்தெளிவித்தல் நன்றுகண்டுகொள்க. இச்சேரனைக் கொங்கின்கணுள்ள "வானிமீரினுந்தீந்தண்சாயலன்" என்றதனையும், "காவிரிப்படப்பைநன்னுடன்ன.........ஒண்டொடி கணவ" என்றதனையும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. வானியும், காவிரியும் கொங்குநாட்டிலுண்மை முன்னரே காட்டினேன். இவ் வஞ்சி கொல்லிசூழ்நாட்டகத்துண்மையானே "வஞ்சிப்பைம்புறவில்" எனவும் "வனவஞ்சி" எனவும் இறையனுர்களவியலுரைமேற்கோள் களில் வந்தன என அறிந்துகொள்க. 'வஞ்சிவனம்' என்பதனேடு நோக்கின் 'வனவஞ்சி' என்பது கருவூராதல் நன்குதெளியப்படும். கானகநாடன் எனச் சேரனைக்கூறுதலுங்காண்க. புறப்பாட்டில் "கானகநாடனை நீயே பெரும" என்ருர். கானகநாடு பசுக்கள் நிறைந்த முல்லை நிலமாகும்.

இனிச் சேரசோழபாண்டியர் மூவரும் ஒருவர்க்கொருவர் மகட்கொடை நேர்ந்து ஒருவர் தந்நாட்டுக் கொண்டாடும் விழவுக்கு மற்றவர் போய்வருதல் நூல்களிற் கேட்கப்படுதலானும் இவர் வாழ்ந்த தலைநகர்கள் போக்குவரத்திற்கெளியவாகவும் அணிமையாகவும் இருந்தனவென்று துணியலாகும். உறையூர்க்கு மதுரை எவ்வளவு தூரமோ அவ்வளவினுங் குறைந்தது மதுரைக்குங் கருவூர்க்குமென்பது நன்கறிந்துகொள்க. பாண்டியர் சோழர்பாலும் சேரர்பாலும் பெண்கொண்டிருந்தன ரென்பது, நின்றசீர்நெடுமாறநாயனார் பத்தினியாரை 'வளவர்கோன்பாவை' என்பதனானும், குலசேகரபாண்டியன் வஞ்சிவேந்தன்மகளை மணந்தானென்று சவுந்தரபாண்டியனூலுள் அநதாரியப்பப்புலவர் கூறுதலானும் அறியப்படும். செங்குட்டுவனை "நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்" எனப்பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப்பதிகம் கூறுதலானும்,

"மன்னன்கரிகால்வளவன்மகள்வஞ்சிக்கோன்
றன்னைப்புனல்கொள்ளத் தான்புனலின்பின்சென்று"

எனச் சிலப்பதிகாரங்கூறுதலானும் சேரர் சோழர்பாற்பெண்கோடலறியப்படும். குலோத்துங்கசோழனுலாவால் அவன் பாண்டியன் மகளைமணந்தானென் றுணரப்படும். கொங்குநாட்டவனான சேரன் தன்னையடுத்துள்ள தெய்வீகனுக்குப் பெண்கொடுத்த செய்தியை முன்னரேகாட்டினேன். மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகளிற்கூறிய செய்தி அகநானூறுமுதலியவற்றிற் பல்லிடத்துங்கூறிய ஆட்டனத்தி, ஆதிமந்திகதையென்பது கற்றார்பலருமறிவர். கரிகால்வளவன்மகள் ஆதிமந்தி என்பவள். இவள் வஞ்சிக்கோனான அத்தியென்பவனை மணந்தவள். இவ்விருவரும் கரிகால்வளவனாற் கழார் முன்றுறையிற்கொண்டாடப்பட்ட காவிரிப்புதுப்புனல்விழவிற்குச் சென்று நீராடியபோது காவிரி ஆதிமந்திகணவனை வெளவியதாக அவள்பதைபதைத்து எங்குந்தேடிக்காணாது பின் காவிரி ஓடுழியெல்லாம் ஓடி அலந்தழுதேங்காநிற்க, அவள்கற்புடைமைக்கும் அன்பிற்கும் இரங்கிக் கடலே அவள்கணவனை அவள்முன்னிறுத்திக்காட்ட அவனைத்தழீஇக்கொண்டு பொன்னங்கொடிபோலமீண்டாள் என்று நூல்கள்கூறும். இவ்வரியகதையைப்பற்றி நல்லிசைப்புலமை மெல்லியலார்வரலாற்றுண் முன்னரே எழுதினேன். காவிரிப்புதுப்புனல் விழவுக்குச் சேரநாட்டுள்ளமகளையும் மருகனையும் சோழர் அழைப்பித்தல் இக்கதையான றியப்படும். கரிகாலன்புதுப்புனல்விழவுகொண்

டாடியவூராகிய கழார் சோணாட்டுமாயூரத்துக்கு அடுத்துள்ளது. இவ்வூரிற்புதுப்புனல்வருதலைய றிந்துகொண்டாடப்படும் விழவுக்குச் சோணாட்டையடுத்த கருவூர்வஞ்சியார்வருதல் எளிதென்பது யான் கூறவேண்டுவதன்று. கொங்குநாட்டு, அத்திஎன்னும்பெயர்வழக்கு இன்றுங்கேட்கப்படுகின்றது. அந்நாட்டு, அத்தியூர், அத்திபாளையம் என்னும் ஊர்களுமுண்டு.

இனித் தியாகராசலீலையென்னும் நூலில் மதுரை ஆலவாய்க் கடவுட்கு மிகுதியாகப் பசுக்கூட்டமிருந்ததென்றும், அப்பசுக்கூட்டத்தொருகன்று தப்பிப்போய்ச் சேரன்பசுக்கூட்டத்துக்கலந்து வளர்ந்ததென்றும், இக்கன்று கலந்ததைச் சேரன் தெரியானாயினனென்றும், பின் மதுரையினின்று வஞ்சியர்கோன் கோயில்புக்க ஓரந்தணனுக்குப் பலபசுக்களுடன் இக்கன்றினையுஞ் சேரன் நல்கினனென்றும், இக்கன்றினைப்பெற்ற அந்தணன் அதனைக் கூடலிற்கொடுபோய் ஓர்பசுவாணிகனுக்கு விற்றனனென்றும், ஆலவாய்க்கடவுட் பணிபுரிவார் இக்கன்றினைக்கண்டு தெளிந்து வந்தவாறுவினவியறிந்து இக்கன்றினோடும் அவ்வாணிகனோடும் அவ்வந்தணனோடும் வஞ்சியுட் புக்குச் சேரன்பாற்சென்று, இக்கன்று ஆலவாய்க்கடவுட்குரியது: நீ எங்ஙனம் இவ்வந்தணற்கீந்தனையென்று சொற்றார் என்றும், சேரன் கடவுளுடையகன்று என்றொழுவத்துறுதல் கூடுமோ? அடையாளமுண்டோ?நம்பன்பொருள் நஞ்சினுங்கொடிதாகும். யான் யாதொரு வஞ்சமுஞ் செய்தேனல்லேன் என்று சொற்றானென்றும், பின் மதுரையார் சேரனுடனும் இக்கன்றுடனும் தம்வழக்கைத் தீர்த்தற் பொருட்டுத் திருவாரூரடைந்தனரென்றும் கூறியிருத்தலைக் கற்றாறிவர். இக்கதையானுங் கொங்கிற்கருவூரே சேரர்வஞ்சிமாநகராதல் எளிதிலுய்த் துணரலாகும். இரண்டுநாட்டுப்பசுக்கூட்டத்துக்கும் கலப்புக்கூறப் படுதற்கும், மதுரையார் வஞ்சிபுக்குச் சேரனுடன் திருவாரூர் சென்றார் என்று கூறியதற்கும் பொருந்த நோக்கிக் கொள்க. இன்னுமோராற்றானும் இதனை விளக்குவல்.

இனிச் சேரசோழபாண்டியர் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையரென்பது பரிமேலழகர் முதலிய நல்லாசிரியர் கொள்கையாகும். இப்போது மலையாளமென்று வழங்குகின்ற கடன்மலைநாடோ ஆதியிற் கடவுளாற் படைக்கப்பட்டதாகாது. படைப்புக் காலத்துக்கு எத்துணையோபிந்தி இவ்வுலகமுழுதை-

காசிபர்க்குத் தானஞ்செய்த பரசுராமன் தானிருத்தற்கு நிலன் வேண்டித் தெய்வகிருபையாற் கடலை ஒதுங்குவித்து உண்டாக்கிய தென்று புராணம் வல்லார் கூறுவர். இதனைச் சேக்கிழார் விறன் மிண்டநாயனார் புராணத்து,

"விரைசெய்நறும்பூந்தொடையிதழிவேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமாதவமுனிவன் பரசிராமன்பெறுநாடு
திரைசெய்கடலின்பெருவளனுந்திருந்துநிலனின்செழுவளனும்
வரையின்வளனுமுடன்பெருகிமல்குநாடுமலைநாடு"

எனக் கூறியவாற்றானும் நன்றுதெளிலாம். பரசிராமன் சமதக்கினி புதல்வனாதலான் அச் சமதக்கினிபுதல்வரான திரணதூமாக்கினி யென்னும் இயற்பெயருடைய தொல்காப்பியனார்க்குடன் பிறந்தவனவன். தொல்காப்பியனார் "வண்புகழ்மூவர்காக்குந் தண்பொழில் வரைப்பு" என்று சூத்திரஞ்செய்தலானும், இம்மூவேந்தர் மாலையிணையுங்கூறுதலானும் தொல்காப்பியனார்க்குமுன்னே இம்மூவரும் இத்தமிழ்நாட்டு ஆட்சிபெற்று நிலைபெறுதல் நன்குணரலாகும். வான்மீகராமாயணத்தும் இம்மூவேந்தர்நாடு கூறப்படுதலா னிக் கருத்து வலியுறுதல்காண்க. தொல்காப்பியனார்க்குமுன்னே தமிழ் மூவேந்தர் நிலைபெறுதல் தெளிந்தவாற்றா லிம்மூவேந்தர் பரசுராமனுக்கு முன்னே அவரவர் தலைநகரில் நிலைபெறுதல் நன்குணரப்படும். பரசுராமற்குமுன்னே இம்மூவேந்தர் நிலைபேறுணர்ந்தவாற்றான் இவர் நிலைபெற்றதலைநகர் பரசுராமனா லிடையிலுண்டாக்கப்பட்ட கடன்மலைநாட்டில் இருப்பது அசம்பாவிதமாதல் எல்லாருங் கண்டுகொள்க. மேல்கடற்பக்கத்துத் தொண்டி, முசிரி, மாந்தை முதலிய பட்டினங்கள் சேரருடையனவாகக் கேட்கப்படுமாலெனின் அவையெல்லாம் பழைய சேரர்வஞ்சிக்குப்பின்னே உண்டாகிய பரசுராமக்ஷேத்திரத்துண்டாகிய நகரங்களென்க. இக்கருத்தானன்றே பழைய சேரர்கருவூர்வஞ்சியைப் பல்லிடத்தும் மூதூர் என்று கூறுவதூஉம், அவ்வூர்ப் புராணம் அதனை ஆதிபுரம் என்றுரைப்பதூஉம் எனக்கொள்க. இது பௌராணிகமுறையான் ஆராயப்பட்டது. எஞ்ஞான்றும் சேரர்க்குரியகருவூர் கரன் கைப்பற்றிய காலத்துக் கரபுரம் எனவும், வீரசோழன் கைப்பற்றியகாலத்து வீரசோழபுரம் எனவும் பெயர் பெற்றதுணர்க. இராவணன் இத்தென்னாட்டை ஆண்டான் என்றற்கும் திரிசிரன் உறையூர்ப்புறத்தைக்

கொண்டான் என்றற்கும் இங்ஙனமே பொருந்தக்கொள்க. இராவணன்காலத்தும் இத்தமிழ்வேந்தருண்மை இராமாயணத்தானுணர்க. இப் பரசுராமன் பெறுநாட்டுச் செங்குன்றூர் விறன்மிண்டநாயனார் ஊர் என்று பெரியபுராணங் கூறுதலான் இது கொங்குநாட்டுச் சிவத்தலமாகிய கொடிமாடச் செங்குன்றூரின் வேறென்று கொள்க.

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சியே திருவஞ்சைக்களமென்றும், அஞ்சைக்களமென்று பிரித்து வழங்கியது தவறென்றும் வஞ்சைக்களமென்று வழங்கவேண்டுவதென்றும் தம்மனம்போனவாறுகூறித் தெய்வப்புலவர்களான பெரியோர்கள்பால் அபசாரப்படுவாருமுளர். அஞ்சைக்களமென்றேவழங்கிய பெரியோர்கள் திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், சேக்கிழார், கச்சியப்பமுனிவர் முதலிய பலராவர்.

இனிக் கொங்குநாடு சோணாட்டையடுத்துள்ள தென்பதனை முன்னரேகாட்டினேன். சோழர்க்குச் சிறந்தமலை நேரியென்பது பலருமறிவர். அம்மலை சோணாட்டின்கண்ணதேயாகும். செங்குட்டுவன் தன் மைத்துனச்சோழனோடுபகைத்த சோழர்குடிக்குரிய ஒன்பதின்மரைச் செருவென்றது உறையூர்க்குத் தெற்கின்கண்ணதாகிய நேரிவாயில் என்னும் ஊர்க்கண் என்று சிலப்பதிகாரத்தாற்றெரிதலால், இம்மலையும் உறையூர்க்கு அணித்தாகுமென்று கொள்ளலாகும். இந்நேரிமலை களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரற்கும், செல்வக்கடுங்கோவாழியாதற்கும் இடனாகப் பதிற்றுப்பத்து நூல்கூறும். இதனை நான்காம்பத்தில் "நீர்திகழ்சிலம்பினேரியோனே" (40) எனவும், "கல்லுயர் நேரிப்பொருநன்" (67) எனவும், வருதலான் அறிந்துகொள்க: இவற்றாற் சோழர்க்குரிய நேரிமலையில் இரண்டுசேரர்கள் வதிந்தமை உணரலாம்: கொங்கிற்கருவூர்ச்சேரர்கள் சோழரோடுபொருது அவர்க்குரிய நேரிமலையை வென்றியாற்கொண்டு ஆண்டுவதிந்தனரென்றே துணியலாகும். இதனாற் கொங்குடையசேரர்கள் தங்கொங்குநாட்டுப் பக்கத்ததாய்ச் சோணாட்டினுள்ள மலையைக் கைப்பற்றி அதன்கண் வதிந்தார்கள் என்றெளிதி லறியலாகும். பிறர்நினைக்கின்றவாறு கடன்மலைநாட்டுச் சேரர் தமக்குரியதல்லாத கொங்குநாட்டைக்கடந்து சோணாட்டு நேரிமலையில் வதிந்தார் என்பது பொருந்தாதாதல் உய்த்துணரத்தகும். இந்நேரிமலையிற் சே...

இருந்தனரென்பது சேரர்க்குச் சோணாட்டுமலைவரை அரசாட்சி பண்டுநிலையினதென்பதை நன்கு காட்டுமென்க.

இனிப் பழையசேரர்வதிந்த குடபுலமாகிய கொங்குநாட்டைப் பற்றிச் சிலகூறுவல். சங்ககாலத்துவள்ளல்களுள் ஒருவனாகிய வையாவிக்கோப்பெரும்பேகன் ஆவியர் பெருமகனென்பது கற்றுணரறிவர். ஆவியர் என்பார் வேள் ஆவியின் வழியினர். இவ்வேளாவியிருந்தது ஆவிநன்குடியாகும். இது கொங்குநாட்டுள்ளதென்பது, "சேரர்கொங்கு வைகாவூர்நன்னாடதி லாவிநன்குடி" (அருணகிரிநாதர்) என வருதலா னறியப்பட்டது. இவ்வேளாவியின்வழியிலே சேரர்பெண் கொண்டாரென்பது "குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளாவிக்கோமான்றேவியீன்றமகன்" (பதிற். 6—பதிகம்) என ஆடுகோட்பாட்டுச் சேரலாதனையும், பொய்யில் செல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவியீன்றமகன்" (ஷை. அ-பதிகம்) எனப் பெருஞ்சேரலிரும்பொறையையும் கூறுமாற்றானறியலாம். வஞ்சியில் "வேளாவிக்கோமாளிகை" (சிலப்-நடுகல்-198) என்னும் பெயரான் ஓர் வாஸஸ்தானம் இருந்ததும் ஈண்டைக்கேற்ப நினைக்கத்தகும். இது சேரர்ஸம்பந்திமாளிகை என்பது பொருந்துவதாகும். கருவூர்க்கும் ஆவிநன்குடிக்கும் அதிகதூரமல்லாமையும் நெறியெளிமையு முணர்ந்துகொள்க.

இனிச் சேரவம்மிசனான அதிகமானெடுமானஞ்சிவழியினனாகிய அதிகனென்பவன் ஒருவன் குறும்பொறையூர் என்னும் மலையாணுடைய ஊரிலிருந்தனன் என்றும், அவன் புகழ்ச்சோழ நாயனார்க்குத் திறைகொடாதகாரணத்தால் அவர் படையால் வெல்லப்பட்டானென்றும் பெரியபுராணத்தா லறியலாம்.

"கொடிமாமதினீடுகுறும்பொறையூர்
முடிநேரியனார்படைமுற்றியதே"

எனவருதலா னிதனையறிக. 159-ஆம் அகப்பாட்டில்,

"நறும்பூஞ்சாரற்குறும்பொறைக்குணஅது
வில்கெழுதடக்கைவெல்போர்வானவன்
மிஞிறுமூசுகவுளசிறுகண்யானைத்
தொடியுடைத்தடமருப்பொடியநூறிக்
கொடுமுடிகாக்குங்குரூஉக்கணெடுமதிற்
சேண்விளங்குசிறப்பினாமூர்"

எனவருதலான் இக்குறும்பொறை சேரன்பகைஞனாகிய கொடுமுடியென்பவனுடைய ஆமூர்க்குமேற்கணுள்ளது நன்குபுலனாகும். சேரவம்மிசியனாகிய அதிகற்கும் சேரர்க்கும் தாயபாகவிஷயமாகப் பகைமையுண்டாகிப் பெரும்போர் நிகழ்ந்தது பதிற்றுப்பத்தாலும் புறப்பாட்டாலும் அறியப்படும். ஔவையார் அதியமானெடுமானஞ்சியைப்பாடிய புறப்பாட்டில்,

"கோடுயர்பிறங்குமலைகெழீஇய
நாடுடன்கொடுப்பவுங்கொள்ளாதோனே" (புறம்-232)

எனவருதலான் இவன் தாயநாடுபற்றிச் சேரனோடு பகைமைபூண்டானென் றுய்த்துணரப்படும். இவனூர்க்குக்கிழக்கே ஆமூர்க்கணிருந்த கொடுமுடி என்பவனும் இவனுடன் சேர்ந்து சேரனைப்பகைத்தனன் போலும். இவ்வாமூர் கொங்குநாட்டின்கண்ணேயுள்ளது. அதியனை "உண்டுறை, மலையலரணியுந் தலைநீர்நாடன்" என்பதனால் அதியன் தலைநீர்நாடன் என்பது முன்னரே கூறினேன். கறையூரிற் பாண்டிக்கொடுமுடி என்னுங் கோயிலுள்ளது தேவாரத்தாலறியப்படும். அது இக்கொடுமுடியரசன் சம்பந்தமுடையதாகும். சேரன்பகைவனாய்ப் பாண்டியற்குத் துணைவனாப காரணத்தாற் பாண்டிக்கொடுமுடி எனப் பெயர்சிறந்தான்போலும்.

இனிப் பதிற்றுப்பத்து நான்காம்பத்தில்,

"வெண்டிரைமுந்நீர்வளைஇயவுலகத்து
வண்புகழ்நிறுத்தவகைசால்செல்வத்து
வண்டனனையைமன்னீயே" (31)

என்பதனால் வண்டன் என்பானொருவன் சேரனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளான்: இவன் கோச்சேரனுக்கு உவமையாகக்கூறப்பட்டவாற்றாலும், "வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்துவண்டன்" என்றதனாலும் சேரரிற்சிறந்த முன்னோன் என்று ஊகிக்கலாகும். இவனிருந்தமலை வண்டமலை எனப்படுவது: இது கொங்குநாட்டுக் கருவூர்க்குத் தெற்கேயுள்ளது.

இனி ஆதன் என்பது, சேரர்க்குள் அதிகமாக வழங்கும்பெ... என்பது, சேரலாதன், நெடுஞ்சேரலாதன், ஆதனவினி, செல்வக்கடுங்கோவாழியாதன், பெருஞ்சேரற்றுதியஞ்சேரலாதன் எனவரு... லான் அறியப்படும். ஈண்டுக்காட்டிய பலபெயர்க்கும் ஆதன் ...

தன் ஆவன். இவனிருந்த ஊர் ஆதனூர் எனப்படும். இஃது இப்போது கொல்லியமலையை யடுத்துள்ளது. 168-ம் அகப்பாட்டில்,

"பல்லான்குன்றிற்படுநிழற்சேர்ந்த
நல்லான்பரப்பிற்குழூமூராங்கட்
கொடைக்கடனேன்றகோடாநெஞ்சி
னுதியனட்டில்போலவொலிியெழுந்
தருவியார்க்கும்பெருவரைச்சிலம்பின்"

எனவருதலான் உதியஞ்சேரல் குழூமூரிலிருந்து பெருஞ்சோறு பயந்தது உணரப்படும். இக்குழூமூர் உடையார்பாளயத்துக்கு அடுத்துள்ளது. இவ்வூரை, நல்லான்பரப்பிற்குழூமூர் என்றலான் இதனிடத்துப்பசுமிகுதியாக இருந்தது நன்குணரப்படும். இப்பசுமிகுதி கொங்குநாட்டுக்கே சிறந்தது. "கொங்கரானிரந்தன்ன" (77) எனப் பதிற்றுப்பத்திற் கூறுதலானுணர்ந்துகொள்க. மலைபாள நாடு பசுக்களால் மிகவுங் குறைபட்ட தென்பது கண்கூடாகக் கண்டது. இக்குழூமூர் சிறியமலைகளுக்கடுத்துள்ளதும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. இதன் பக்கத்தே கழுமல் என்ற ஊருள்ளது. வஞ்சியிலிருந்த சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன்,

"குன்றுறழ்ந்தகளிறென்கோ
... ... ... ...
மன்றுநிறையுநிரையென்கோ
மனைக்களமரொடுகளமென்கோ
ஆங்கவை,கனவெனமருளவல்லேநனவி
னல்கியோனேநசைசான்றோன்றல்" (புறம்—387)

என்பதனாற் பசுநிரைகளை ஊருடனுங் களிற்றுடனும் புலவர்க்கு நல்கினனென்று கூறப்படுதலையுங்காண்க.

இவையெல்லாம், சேரர் கொங்குநாட்டேவதிந்திருந்தன ரென்பதனையே நன்குவலியுறுத்துமென்றுணர்க. இனி, மாந்தரக்கொங்கேனுதி என இலக்கணங்களில் உதாரணமாக வழங்கும்பெயரும் இக்கொங்கு, மாந்தரனெனப்பெயரிய சேரனைச் சேர்ந்தது என்பதனையே வலியுறுத்தும்.

இனி நக்கீரனார் 93-ஆம் அகப்பாட்டிற் றமிழ்மூவேந்தர் தலைநகரங்கள் மூன்றையும்,

"ஆரங்கண்ணியடுபோர்ச்சோழ
ரறங்கெழுநல்லவையுறந்தை"

எனவும்,

"அரண்பலகடந்தமுரண்கொடானை
வாடாவேம்பின்வழுதிகூடல்"

எனவும்,

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்"

எனவும் கூறியிருத்தலைக் கற்றூரறிவர். இதன்கட் சோழர்க்குச் சிறந்த புகாரும், பாண்டியர்க்குச்சிறந்த கொற்கையும் கடற்றுறைப் பட்டினங்களாக இருக்கவும், அவற்றைக் கூறாமல் உள்நாட்டுச் சிறந்த தலைநகரங்களாகிய உறையூரையும் கூடலையுமே தாம் எடுத்துக் கொண்ட முறைமைக்கேற்பவே, சேரர்க்குச் சிறந்த தொண்டி, முசிறி முதலிய கடற்றுறைப்பட்டினங்கள் இருக்கவும், அவற்றைக் கூறாது உள்நாட்டுச் சிறந்த தலைநகராகிய வஞ்சியையே கூறினாரென் றெளிதிலறியப்படும். சிறுபாணாற்றுப்படையினும் இம்மூன்றுமே தமிழ்மூவேந்தர் தலைநகரென அறியக்கூறியதுகாண்க. ஆண்டு, மதுரையும் வறிதே, வஞ்சியும் வறிதே, உறந்தையும் வறிதே என்றார். சூளாமணியினும் மதுரை, கரபுரம், உறந்தை என இம்மூன்றையுமேகூறினர். யாப்பருங்கலவிருத்திமேற்கோளினும்,

"ஆடனடைப்புரவிச்சேம்பூட்சேஎய்
கூடலேனக்குயின்றனதோள்"

"மறந்தருதானைச்செங்கோற்கிள்ளி
யுறந்தையிற்சிறந்தனமுலை"

"மஞ்சுவரைத்திணிதோட்பூழியர்மன்னவன்
வஞ்சியெனமலர்ந்தனகண்"

என இவ்வாறே இம்மூன்றுமே (செய்யுளியல்-தரவேதரவிணை) வருதலான் இதனுண்மை யுணரப்படும்.

இனிக் கருவூர்ச்சேரமான்சாத்தன், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதன், கருவூர்க்கண்ணம்பாளனர், கருவூர் ஓதஞானி, க

லூர்க்கதப்பிள்ளை, கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார், கருவூர்கிழார், கருவூர்ப்பவுத்திரன், கருவூர்க்கோசனார், கருவூர்ப்பூதன்மகனார்பெருங்கொற்றனார் என நல்லிசைப்புலவர்பலர் கருவூரினராகக்கூறப்படுதலைத் தொகைநூல்களுட்காணலாம். இப்புலவர்தொகை மதுரைப் புலவர் தொகைக்குச் சிறிதாயினும் உறையூர்ப் புலவர்தொகைக்குப் பெரிதென்பது தொகைநூல்களை நன்காராய்ந்தார் அறிவர். உறையூரின் மிக்குக் கருவூரிற்புலவர்கள் இருத்தற்குக்காரணம் அவ்வூர் உறையூரிற் பெரிதாதலானும், அது சேரர்தலைநகராதலானும் என்று உய்த்துணரலாகும். ஈண்டுக்கூறியகருவூர் ஒருரேயாமென்பது வேற்றுமைப்படுத்தற்குரிய அடையொன்றுங்கொடாது வாளாகூறியவாற்றா னன்குதுணியப்படும். சோழர் வஞ்சியை முற்றியவிடத்தும், அதனை எறிந்தவிடத்தும்பாடிய புறப்பாட்டுக்களின் கீழ்க்குறிப்பிற் "கருவூர் முற்றியிருந்தானை" எனவும், "கருவூரெறிந்தானை" எனவும் வருதலை ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. பாடலுள் *வஞ்சியென்றுவருதலும், அப்பாட்டின் கீழ்க்குறிப்பிற் கருவூர் என்று வருதலும் ஒருரையேபற்றியதென்ப தியாவருமறிவர். ஆண்டெல்லாம் வஞ்சியை அறிவித்தற்குக் கருவூர்என்று அடைகொடாது வாளாவழங்குதல்போலவே ஈண்டும் வழங்கப்பட்டதாகும். "கருவூர்ச்சேரமான்" என்பதனானும் இக்கருவூர் வஞ்சியாகும். "கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதன்" என்பதனானும், இக்கருவூர்வஞ்சியேயாகும். "சதுக்கப் பூதரை வஞ்சியுட்டந்து, மதுக்கொள்வேள்விவேட்டோனாயினும்' எனச் சிலப்பதிகாரத்துவருதலான் வஞ்சியாகிய கருவூரிற் சதுக்கப் பூதருண்மை நன்குணரலாகும். கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார் சேரன் படைத்தலைவனாகிய பிட்டனைப்பாடுதலான் இக்கருவூர் வஞ்சியேயாகும். (புறம்-168) இவர் அகப்பாட்டில்,

> "கோடியர், பெரும்படைக்குதிரைநற்றேர்வானவன்
> றிருந்துகழற்சேவடிநசைஇப்படர்ந்தாங்கு" (309)

எனச் சேரனைப்பாடுதலானும் இதனுண்மையுணர்க. கருவூர்க் கண்ணம்பாளனார்:—

> "ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்
> வஞ்சியன்னவென்வளநகர்" (அகம்-268)

---

*புறம்-39. ஷை 173.

எனப்பாடுதலான் இக்கருவூர் வஞ்சியேயாகும். இவற்றானும் கருவூர் சேரர்கருவூரேயாதலும், அதுவே வஞ்சியாதலும், அது கொங்கு நாட்டுச் சோணாட்டையடுத்துச் சோழர்க்குப்பகைப்புலமாய்ச் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த ஊராதலும் (புறம்-13) நன்குணர்ந்துகொள்க. இப்புலவர்களல்லாமற் சேரர்க்குரிய கொல்லியினும் நல்லிசைப்புலவருண்மை "கொல்லிக் கண்ணன்" என்னும் பெயரானுணரலாம். இவர் "குட்டுவன்மாந்தை" (குறுந்தொகை-34) யினை எடுத்துவமிக்கின்றார். இதனானும் இவர் சேரன்புலவராதறெளியப்படும். இப்புலவரெல்லாம் கொங்குநாட்டுப் புலவரேயாவரென்ப தியான்கூறியறிவிக்கவேண்டுவதன்று. கொங்கர் என்பார் தமிழரேயென்பது "தமிழ்க்கொங்கர்கோன்" (தமிழ்நா)என, இரட்டையர் வக்கபாகைவரபதிபாட்கொண்டானைப் பாடுதலானுமறியலாகும். ஈண்டுச் சேரனாட்டுப்புலவரெனத்துணியப்பட்டபலரும் கருவூரினராக வழங்கப்படுதலல்லது வஞ்சிப்புலவரென வழங்கப்படாமையான் வஞ்சி செய்யுள்வழக்குப் பெயரென்றும், கருவூரென்பதே உலகவழக்கினுமுள்ள பெயரென்றும் அறியத்தகும். ஈண்டுக் கருவூர்வேறு வஞ்சிவேறென்று ஒரு விதண்டையுரைப்பின் மேற்காட்டிய நல்லிசைப்புலவரெல்லாம் கருவூரினராகவேநின்று சேரர் தலைநகராகிய வஞ்சியின்கண் நல்லிசைப்புலவரேயில்லாமலொழிய நேருமென்று கண்டுகொள்க. இதனாற் பிறர் விதண்டாவாதம் ஈண்டுப்பலியாதாத லொருதலை. இப்புலவர்களுட் கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனார் என்பவர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானைப்பாடிய,

"உள்ளாற்றுக்கவலைப்புள்ளிநீழன்
முழூஉவள்ளூரமுணக்குமள்ள
புலவுதிமாதோநீயே
பலராலத்தைநின்குறியிருந்தோரே" (புறம்-219)

என்னும்பாடலைக் கற்றாரறிவர். இதன்கண் இவர் "நின்கருத்திற்கேற்ப நின்னொடுவடக்கிருந்தார் பலராதலான், யானிதற்குதவாது பிற்படவந்ததற்கு என்னை அவரோடு சொல்லிவெறுத்தி நீ" என்று கூறுதலைக்காணலாம். இதனால் இப்புலவர் கோப்பெருஞ்சோழற்குயிர்த்துணைவரென்றும், அவன் இறத்தற்குத் தாமும் இறக்குமியல்பினரென்றும், இவரினுந் தூரதேயத்துள்ள பிசிராந்தையார் சோழற்

கும் அவர்க்கும் உணர்ச்சி யொத்தலாலுடனேபோந்து சோழனு டன் வடக்கிருந்தாராகவும், இவர் சோழன் வடக்கிருந்தவிடத்துக்கு அணித்தாக இருந்தும் முற்படவந்து உதவாமல் இவன் வடக்கிருத்தல் கேட்டுப் பிற்படவந்ததனை ஒருபெருந்தவறுகக்கருதித் 'தூரதேயத் துள்ளாரும் முற்படவந்து உதவாநிற்க அணிமையிலுள்ளவன் பிற்பட வந்தான் என்று அங்ஙனமுற்பட உதவினருடன் சொல்லி என்னை வெறுத்தி' யென்று தஞ்செயலை நொந்துகொள்கின்றாரென்றும் அறி ஞர் நன்கறிவர். உள்ளவாறு இப்புலவர் தூரத்திலிருந்து கேட்டு வருதல்பற்றிப் பிற்பட்டவராயின் அதற்குப் புலத்தல் கூடாமை நன் கறிந்துகொள்க. இவர் வஞ்சிப்புலவரென்பது முன்னரேகாட்டப் பட்டது. இதுவுஞ்சோழர்க்குச் சேரர்வஞ்சியணித்தாதலையே வலி யுறுத்துமென்று கண்டுகொள்க.

இனிப் பழமொழியின்கண்,

"கழுமலத்தியாத்தகளிறுங்கருவூர்
விழுமியோன்மேற்சென்றதனால்"

எனவருதலையும் அதற்கு உரைகாரர் "கழுமலம்என்னும் ஊரின் கண்ணே பிணித்துநின்ற களிறுங் கருவூரின்கண்ணேயிருந்த கரிகால் வளவன் கடிதிளையனாயினும் அவன் சிறப்புடையனாதலான் அவன் மேற் சென்று தன்மிசையெடுத்துக்கொண்டு அரசிற்கு உரிமை செய்தது ஆதலால்" எனக்கூறுதலையுங் கற்றாரறிவர். இது சோணாட் டுக்களிறு வேற்றுநாட்டு ஊர்புக்கு ஒருவற்கரசுரிமைசெய்த கதை கூறியதாம். கரிகாலன், தாயத்தார்பகைமைகாரணமாக இளமை யிலே தன்னாடுவிட்டு உயிருய்ந்துபோய்க் கொங்கிற் சேரர்கருவூரில் வதிந்தனனவன். இவ்வுண்மையினை ஈண்டுவிரிப்பிற் பெருகும். சோணாட்டுக்களிறு அஞ்சைக்களஞ்சென்று ஒருவனைத் தன் மிசை யேற்றி வந்ததென்று நினைத்தற்காகாமையும் அது கருவூர் எனப் பெயர் பெறாமையும் ஆராய்ந்து கொள்க. இதுவும் கருவூர் சோணாட் டுக்கணித்தாதலையே காட்டுமென்றுணர்க. கருவூர் கொங்குநாட்ட தென்பது உமாபதிசிவாசாரியர் திருப்பதிக்கோவையில், "சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி திருநணாகொடிமாடச்செங்குன்றூர் தானே" "வெஞ்சமாக்கூடல்கொடுமுடிகருவூர் கொங்கின்மேவுமேழ்" என்றதனானு நன்கறியலாம். நூல்களுளிரண்டுகருவூர் கூறப்படா மையும் அக்கருவூர் சோணாட்டுளதாக எந்நூலுங்கூறாமையும் அது

கொங்குநாட்டதென்றே எந்நாலுங்கூறுதலையும் ஆராய்ந்துகொள்க. சுந்தரமூர்த்திநாயனார் அவிநாசியை நீங்கி மலைநாட்டகம்புகுந்தார் என்னுமிடத்து "குடபுலத்துப்பதிகடொறுமின்புற்றுக்கடந்தருளிக் குன்றவளநாட்டகம்புகுந்தார்" எனவும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்துள், "குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி லெப்பாலுமேத்தித்திருநணுவினையிறைஞ்சிக் குணதிசைப்போதுகின்றார் செல்வக்கருவூர்த் திருவானிலைக்கோயில் சென்றிறைஞ்சி யந்நாடகன்று பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்" எனவும் சேக்கிழார் கூறியவாற்றாற் குடபுலம் அஞ்சைக்களமுடைய மலைநாட்டிற்கும் சோணாட்டிற்கும் இடையே நிலைபெறுத லினிதுணர்ந்து கொள்ளலாம். இவற்றொடு பொருந்தநோக்குமிடத்து "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர்" எனச்சேக்கிழார்வாக்கின் வந்ததற்குக் குடபுலத்துக்கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் என்பதே பொருளாகத் தெளிந்துகொள்க. "கொங்கிளங்கோசர்தங்கணாட்டகத்தே" என்னுஞ் சிலப்பதிகார உரைபெறுகட்டுரைப்பகுதிக்கும் கொங்கு மண்டலத்து இளங்கோவாகிய கோசரும் தாங்கள் தாங்கள் பகுத்துக்கொண்டாளும் சிறுநாடுகளிடத்தே என்பது பொருளாகக் கொள்க. அடியார்க்கு நல்லாரும் இளங்கோசர் என்பதற்கு இளங்கோவாகிய கோசரும் எனவுரைத்தார். இவ்விளங்கோக்கள் கொங்கு மண்டலத்தையுடைய கோச்சேரர்க்குத் தம்பியராய்த் தாயவுரிமையெய்தினராவர். "மூவர்கோவையு மூவிளங்கோவையும்" எனவருதல் காண்க. தங்கள் நாட்டகம் என்றதனால் இவர் பலராதலும், இவர் கோச்சேரர்கீழடங்கியாளும் சிறுநாடுகள் பலவாதலும் உணரப்படும். இவரே குடகக்கொங்கரென்பது கொண்டு குடகத்துப் புக்கிருந்த கொங்கரெனினும் அமையும். சிலப்பதிகாரம்வேட்டுவவரிக்கட் கண்ணகியைக்,

> "கொங்கச்செல்விகுடமலையாட்டி
> தென்றமிழ்ப்பாவைசெய்தவக்கொழுந்து"

என இளங்கோவடிகள் கூறியதற்கும் இவற்றொடுபொருந்தவே பொருள் கூறுக. கொங்கச்செல்வி என்று முற்படக் கூறினார்: அ[illegible]கள் தம்முடைய குடபுலமாகிய கொங்குவஞ்சியின் முதன்முத[illegible] கோயில் கொள்ளும் சிறப்பினை நினைந்து; குடமலையாட்டி என்[illegible] கண்ணகி "வென்வேலான் குன்றின் வினையாட்டியானகலேன்" என[illegible] கூறுவதை நினைந்து; தென்றமிழ்ப்பாவையென்றார்: கண்ண[illegible]

"தென்னவன் றீதிலன் றேவர்கோன் றன்வாயி, னல்விருந்தாயி னானவன்றன்மகள்" என்று கூறுதலையுட்கொண்டு. கண்ணகி விளையாடல்கொண்ட மலை சேரர் ஆட்சியுட்பட்ட குடதிசைக்கண்ணதாகலிற் குடமலை எனப்பட்டதெனவறிக. "கொல்லிக்குடவரை" எனவும் "குடவனாறு" எனவும் வழங்குதலானு முணர்க. இங்ஙனங்கொள்ளாது "கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே" என்று வருதல்பற்றிக் கொங்கச்செல்வி என்றுரைத்தனக்கொள்ளின் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே கோயில்கொண்டதனையே முற்படச் சிறப்பித்தற்கும் அவரோடொப்ப இலங்கைக்கயவாகுவும் சோழன் பெருங்கிள்ளியும் முறையே இலங்கையினும் உறையூரினும் வகுத்த கோயிலிலிவளிருந்தருளலைக் கூறுமைக்கும் ஏது இல்லையாகு மெனவுணர்க. அடியார்க்கு நல்லார் குடமலையாட்டி என்பதன்கட் குடமலையென்பது குடநாடென நலிந்துபொருள்கோடலைக் காண்க. "தென்னுடன் குடகொங்கன் சோழன்" எனச் சேரன் கூறப்படுதலையும் "சென்னிநாடு குடகொங்கனாடு திறைகொண்டு தென்னனுறை செந்தமிழ்க்கன்னிநாடு" எனச் சேரநாடு கூறப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதைக்கண்,

"வில்லவன்கோதைவேந்தற்குரைக்கு
நம்போல்வேந்தர் நம்மோடிகலிக்
கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற்கொடி
பகைப்புறத்துத்தந்தனராயினுமாங்கவை
திசைமுகவேழத்தின் செவியகம்புக்கன"

என்பதனாற் சோழர் பாண்டியரிருவருங் கொங்கர் செங்களத்துச் செங்குட்டுவனோடு இகலித் தமக்குரிய புலிக்கொடியையும் கயற்கொடியையும் பகைக்களத்தே அச்செங்குட்டுவனிடந்தந்து ஓடினர் என்பது கூறப்படுகின்றது. இதன்கட் சோழபாண்டியர் செங்குட்டுவனோடு பொருதது கொங்கர்செங்களம் என்று கூறுதலானும், செங்குட்டுவன் சோழபாண்டியர்மேற் படையெடுத்துச் சென்று பொருதான் என்று கொள்ளப்படாமல் சோழபாண்டியர் கொங்கர்செங்களத்தே செங்குட்டுவனோடுஇகலினரென்றே கொள்ளக்கிடத்தலானுஞ் சோழபாண்டியரிருவரும் ஒருங்கியைந்து இவனுள்ள கொங்குநாட்டே படையெடுத்துப்போந்து இவனோடு இகலினரென்றும், இவன் தன் கொங்கு நாட்டார் துணையாக அவரொடும்பொருத போர்க்களமாதலா லது கொங்கர்செங்களமெனப்பட்டதென்றும், அப்பகைக்

களத்து அவ்விரு வேந்தரும் தங்கொடியைச் செங்குட்டுவற்குத் தந்தோடினரென்றும் துணியப்படுதல் காண்க. களவழியினும், "கொங்கரையட்டகளத்து" எனவும், "வஞ்சிக்கோவட்டகளத்து" எனவும் வருதலுடன் பொருந்த நோக்கின், இதுவே பொருளாதல் தெள்ளிது. செங்குட்டுவனை மாடல மறையோன்,

"மண்ணாள்வேந்தேநின்வாணாட்க
டண்ணார்பொருநைமணலினுஞ்சிறக்க" (சிலப்-நடுகல்.)

எனவாழ்த்தற்கண்ணும் அவன் கொங்குநாட்டுப் பொருநைமணலினுஞ் சிறக்க எனக்கூறுதலையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. இப்பொருநை காவிரியிற்கலத்தலை முன்னரே தெளிவித்தேன்.

மேல் மாடலன் செங்குட்டுவனை நோக்கி,

"அறக்களவேள்வி செய்யாதியாங்கணு
மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

(சிலப்-நடுகல்-131)

எனக்கூறிய விடத்து யாங்கணும் மறக்களவேள்வி செய்தனை என்று விளக்குதலானும் இதனுண்மை நன்கறியலாகும்; ஈண்டு யாங்கணும் என்பதற்கு நின்னாட்டும் பிறநாட்டும் என்பதே கருத்தாதல் கண்டு கொள்க. செங்குட்டுவன் கொங்கர் செங்களத்தும், கனக விசயரை வென்று வடநாட்டினும் மறக்களவேள்வி வேட்டது பலரும் அறிந்தது. இவ்விரண்டையுங் குறித்தே யாங்கணும் மறக்களவேள்வி வேட்டனை யென்றான். இதுபோலவே மணிமேகலையினும்,

"என்னாட் டாயினும் பிறர்நாட் டாயினு
நன்னுத லுரைத்த நல்லறஞ் செய்கேன்"

எனவருதலான் இதன் உண்மை யுணர்ந்துகொள்க. இவன் கங்கைப் பேர்யாற்றுக்கு முதற்கட்சென்றது இவன் தன்தாயைக் கங்கை யாட்டுதற்கென்பது சிலப்பதிகாரத்தான் நன்கறிந்தது. பிறர் இனைக் கின்றபடி கொங்கர்செங்களம் பிறர்நாட்டாயின் ஆண்டு மறக்கள வேள்வி வேட்ட பின்னர்த் தன்னாடுசென்று தன்னூரெய்தித் தன் தாயைக் கூட்டிக்கொண்டு கங்கைப்பேர்யாற்றுக் கரைபோயின னென்று கூறுவர் என்க. அங்ஙனமில்லாமல் கொங்கர் செங்களப

வேட்டு ஆண்டு நின்றே கங்கைப்பேர்யாற்றுக் கரைபோயினு னென்று கூறியிருத்தலுங் காண்க. தாயுந்தானும் கொங்குநாட்டு வதிந்ததற்கு இவ்வடிகள் இயைவனவன்றி வேறொன்றற்கும் இயையா என்க.

இனி மணிமேகலையில்,

"எஞ்சா மண்ணசை இகலுளந் துரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரு மாவு
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கய னெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரிய லிளங்கோன் றன்னாற்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி"

எனவருதல் பலரும் அறிவர். இதன்கட் சேரரும் பாண்டியருஞ் சேர்ந்து வஞ்சியினிருந்து படையெடுத்துமேற்சேறற்குரிய அடையாளமான வஞ்சியைச்சூடிச் சோணாட்டிலே போர்புரிந்துவந்தார் (மலைத்துத் தலைவந்தோர்) என்றும், அங்ஙனம் படையெடுத்துப் போர்புரிந்துவந்த அவ்விருவரையும் சோழன் தன் தம்பியாகிய இளங்கோனை எதிர்பொரவிடுத்து, அவ்விருவரையுங் காரியாற்றங் கரையிற் றோற்பித்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனுள் "வஞ்சி சூடி மலைத்துத்தலைவந்தோர்" என்றதனால் படையெடுத்த அளவிற் போர்புரிந்து வந்தார் என்பது விளங்கக்கிடக்கின்றது. சேரரும்பாண்டியருஞ் சேர்ந்து வஞ்சிசூடிய இடமாகிய வஞ்சி மேல் கடற்கரைக்கண்ணதாயின் அது சோணாட்டுக்கு மிகவுஞ் சேய்மைத்தாதலின், படையெடுத்த வளவிற் போர்புரிந்து வருதற்கு உரிய தன்மைகாண்க. அன்றியுஞ் சேரர் பாண்டியருடன் சேர்ந்து மதுரையினின்று வஞ்சிசூடியெழுந்தார் என்று கூறாது பாண்டியர்சேரருடன் சேர்ந்து வஞ்சியிலிருந்து வஞ்சிசூடிப் படையெடுத்தார் என்று கூறப் படுதற்குப் பிறபொருத்த [illegible] [illegible] எதிரெழுந்தமையாலே அப்படையைச் சோழர் எல்லைப்புறப்படை எதிர்த்துப்பொருதகாரணத்தால்வஞ்சிசூடி மலைத்துத்தலைவந்தோர்என

கூறவேண்டியதாயிற்று. இளங்கோன் இருவரையுந் தோற்பித்த காரியாற்றங்கரை கருவூர்வஞ்சியை அடுத்த மணிமுத்தாற்றங்கரை யென்பது அம்மணிமுத்தாற்றைக் காரியாறு என்ற பெயரான் சேலஞ் ஜில்லாக்காரர்கள் இன்றைக்கும் வழங்குதலால் நன்குணரலாம். சோணடும் கருவூர் வஞ்சிப்புறனுஞ் சேரசோழர்க்குப் பகைப்புலமாதல் 13-ம் புறப்பாட்டால் அறிந்தது.

இனிப் பதிற்றுப்பத் தொன்பதாம் பத்தில் இளஞ்சேரலிரும்பொறையைக் கொங்கர்கோவே, தொண்டியோர்பொருந, குட்டுவரேறே, பூழியர்மெய்ம்மறை, மாந்தையோர் பொருந—எனவிளிப்பது காணலாம். ஈண்டுத்தொண்டி, குட்டம், பூழி, மாந்தை இவற்றிற்குமுன்னே கொங்கினை நிறுவி அந்நாட்டார்க்கு அரசாதலையே சிறப்பித்து விளித்தது தெரியலாம். இளங்கோவடிகள் கண்ணகியைக் 'கொங்கச்செல்வி' என முற்படச்சிறப்பித்ததும் ஈண்டைக்கு நினைக்கத்தகும். பல்பெண்டிராளனொருவற்கு அழுக்கிழத்திபோலப் பல நாடுகளையுடைய சேரற்கு இக்கொங்குநாடு தலைமைத்தாகு மென்பது கண்டுகொள்க. இக்கருத்தானன்றே இச்சேரனைக் "காவிரிப் படப்பை நன்னாடன்ன.........வண்டார் கூந்த லொண்டொடிகணவ" எனக்கூறிற்றென்க. கொங்கு நாட்டுப் பகுதிகளிற் காவிரிக்காநாடு எனப் பெயரியதோர்நாடு சோழர் பூர்வப்பட்டையத்துக் காண்டலால் இக்காவிரிப்படப்பைநன்னாடு அஃதெனினும் நனகு பொருந்தும். இவ்வொன்பதாம் பத்தில் "கொங்கர்கோ" என்று கூறப்பட்ட இளஞ்சேரலிரும்பொறை யென்பான் வேற்றரசரை வென்று கொண்டபொருள்களையெல்லாம் வஞ்சிமூதூரிற் கொணர்ந்து பிறர்க்குதவி மந்திரமுறையிற் றெய்வம்பேணினனென்று கூறப்பட்டது. கொங்கர்கோவானவன் தான்பெற்ற பொருள்களை வஞ்சிமூதூரிற் கொணர்ந்து பிறர்க்குதவினன் என்னுமிடத்து, வஞ்சி கொங்கின்கணுள்ளதென்று பிறநூல்களாலும் சாசனங்களாலுந் தெளியப்படுமாயின், அக்கொங்கர்கோவானசேரன் தான்வென்றபொருள்களைக் கொணர்ந்து பிறர்க்குதவிய வூர் தான்அரசனுகவுள்ள அக்கொங்கு நாட்டுள்ளதே என்று தெளிவதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

மற்றிக் கொங்கர்கோவையே "மாந்தையோர்பொருந" "தொண்டியோர் பொருந" எனக்கூறினபடியால் அம்மாந்தையுந் தொண்டியும் உள்ள இடத்து இவ்வஞ்சி யில்லாமை நன்குணரப்

படும். என்னைகாரணமெனின் மாந்தையுள்ள பக்கத்திற்குமாந்தையும் தொண்டியுள்ளபக்கத்திற்குத் தொண்டியும் தலைமையாக இருத்தல் பற்றியே அப்பக்கத்தார் மாந்தையோர் தொண்டியோர் எனப் பட்டார். பிறருந்தொண்டிராச்சியமென்றுபெயரிட்டுக்கொள்ளுதலால் அது தொண்டியைத் தலைமையான ஊராகவுடைய ராச்சியமென்று பொருளாகும். அந்த ராச்சியந் தொண்டியைத் தலைநகராகவுடைய தாயின் அதுவே வஞ்சியைத் தலைநகராகவுடையதாதல் யாங்ஙன மென்க. இளஞ்சேரலிரும்பொறை தொண்டியோர் பொருநனும், மாந்தையோர் பொருநனுமாக இருத்தலுடன் கொங்கர்கோவும், குட்டுவரேறும், பூழியர்மெய்ம்மறையுமாக இருத்தல் அப்பதிற்றுப் பத்தாலறியப்படும். இவன்பிறர்பால் வென்ற பொருள்களைக்கொணர் ந்துதவித் தெய்வம் பேணிய மூதூராகியவஞ்சி இவனுக்குரிமை யாகக் கூறிய மாந்தைப்புறம், தொண்டிப்புறம், கொங்குநாடு, குட்ட நாடு, பூழிநாடு என்னும் ஐந்தினுள் யாண்டுள்ளதென்பதே இப் போது ஆராயவேண்டுவது. மாந்தைப் புறனுந் தொண்டிப்புறனும் ஊர்களாற் பெயர்சிறத்தலின் அவ்வவ்வூரே அவ்வப்புறத்துச் சிறத்த லெளிதிலறியலாகும். மற்றுப் பூழியும், குட்டமும், கொங்கு மே நாடுகளாகவுள்ளன. இம்மூன்றுநாட்டுள்ளுங்கொங்குநாட்டுள்ளே வஞ்சியும் கருவூருமெனப் பெயரியதோரூரிருத்தல் நூல்களான உணரப்படுதல் கற்றாரெல்லாம் நன்கறிவர். கருவூர்வஞ்சியெனப் பெயரியதோரூர் வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில் கொங்குநாட்டின்கணல்லது வேறுயாண்டு மில்லாமை நன்காராய்ந்துகொள்க. இவ்விருபெயருமுடையதே பழைய சேரர்திருவஞ்சிமாநகர் என்பது தமிழ்கற்றார்க்கெல்லாம் உடன பாடாம்.

இவ்விளஞ்சேரலிரும்பொறையை நோக்கி "நின்மனைவி கொல்லிமலைப்பூக்களை விரும்பிச் சூடிக்கொண்டு நின்னைக்காணு மாறு மீளவேண்டும்" என்று வேண்டுதலானே இவன் மனைவியிருக் குந் தலைநகர் கொல்லிக்கு அணித்தாதல் இன்றியமையாதென்று முன்னரே தெளிவித்துவிட்டேன். அக்கொல்லிக்கு அணித்தாக வுள்ளதும் கருவூரும் வஞ்சியும் எனப்பட்ட பெயர்களையுடையது மாகிய தலைநகர் கொங்கின்கண் உள்ளதன்றி வேறாகாமை நன்கறிந்து கொள்க.

செங்குட்டுவனுக்குப் பெருநட்பினனும் அவனுடனேயுறைந்தவனுமாகிய "அழும்பில்வேள்" என்பவனுடைய அழும்பில் புதுக்கோட்டைராச்சியத்திருத்தலும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. கொங்கிற் கருவூர்க்கும் புதுக்கோட்டைப்புறத்திற்கும் நெடுந்தூரமாகாமை காண்க. இவ்வழும்பில் புதுக்கோட்டைக்கு வடகிழக்காக உள்ளதோரூர். இதன்கட் பெரியதோர் சிவாலயமுண்டு. இது அழும்பிற்கோவில் எனப்படும். இக்காலத்து இஃது அட்புக்கோவில் எனவழங்குவது. இவ்வூரிலகப்பட்ட சாசனங்களில் இவ்வூர் அழும்பில் என்றும் இது பன்றியூர் நாட்டிலுள்ளதென்றும் கூறப்பட்டுள்ளதனைக்காணலாம். (Madras Epigraphic Report G. O. No. 1260 of 1915. Page 28). அகப்பாட்டுரைகாரரும் "அழும்பிலன்னவறுஅயாணர்" என்புழி அழும்பில் பாண்டிநாட்டோரூர் என்றார். புதுகோட்டைராச்சியம் பாண்டிநாட்டதாக முன்னிருந்தது பின் சோணாடாயது எனவறிக. மதுரைக்காஞ்சியினும் "விளங்குபெருந்திருவின் வானவிறல்வே, ளழும்பிலன்ன நாடு" எனவருதல் காண்க.

வஞ்சியிலிருந்த செங்குட்டுவற்கும் அழும்பில்வேட்கும் உண்டாகிய பெருநட்புப்போலப் புகாரிலிருந்த கோவலற்கு ஒன்பது தலைமுறை முன்னோனாகிய கோவலற்கும் வஞ்சியிலிருந்த நெடுஞ்சேரலாதற்கும் பெருநட்புண்டாகியது, "நின்பெருந்தாதைக் கொன்பது வழிமுறை, முன்னோன் கோவலன் மன்னவன்றனக்கு, நீங்காக் காதற் பாங்கனாதலின்" என மணிமேகலையுள்வருதலான் அறியப்படும். இது சோணாட்டுக்கு வஞ்சி யணித்தாதலை வலியுறுத்துதல் காண்க.

இக்கோவலன் வஞ்சியுட் புத்தசயித்தங்கட்டியதும் இக்கருத்துக்குத் துணையாகும். இதற்கேற்பவே சோணாட்டுத்தலைச்செங்கானத்தவனை மாடலன் செங்குட்டுவற்குப் பெருநட்பினனாதலும், அவன் செங்குட்டுவன் வரலாறெல்லாம் நன்குணர்ந்தவனாதலுங் கண்டுகொள்க. கோவலன் தந்தையாகிய மாசாத்துவான் என்பவன் தன்மகன் இறந்தது கேட்டு ஏங்கித் தானம்பலசெய்து துறந்து வஞ்சியுள் இருந்தானென்றலுங் காண்க. செங்குட்டுவனைத் "திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்றமைந்தன்" என்பதும் செங்குட்டுவன்காலத்துச் சோழனைச் செங்குட்டுவற்கு மைத்துன

வளவன் என்பதும் இவற்றுடன் சேர்க்கொள்க. இவையெல்லாம் நிகழ்தற்கு முக்கிய காரணம் சோணாடு செங்குட்டுவனிருந்த வஞ்சியை யடுத்துள்ளதே என்று நன்குதுணியலாகும்.

இவையெல்லாம் ஆராயமாட்டாது "கடலோடுழந்த பனித்துறைப்பரதவ" என்று செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்துட் கூறியது கொண்டு செங்குட்டுவன் கடற்கரையில் வதிந்தவனென மயங்கினர் பிறரென்க. ஆண்டுக்

"கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலோ டுழந்த பனித்துறைப் பரதவ
ஆண்டு நீர்ப்பெற்ற தார மீண்டிவர்
கொள்ளாப் பாடற் கெளிதினி னீயுங்
கல்லா வாய்மைய னிவனென"

(பதிற்-5-8)

எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் இவன் கடலுட்புக்குச்செய்த வென்றியைக் குறிப்பானுணர்த்தியதன்றி இவன் அங்கு வதிந்தானென்று கூறவேயில்லை. நல்லுரையாளரும் "கடலோடுழந்தவென்னும் ஒடு வேறுவினை ஒடு; 'பரதவ' என்றதனாற் சொல்லியது அக்கடலின் உழத்தற்றொழிலொப்புமைபற்றி அக்கடற்றுறை வாழும் நுளையற்குப்பெயராகிய பரதவனென்னும் பெயரான் இழித்துக் கூறினான்போலக் குறிப்பானுயர்த்து வென்றிகூறினானாகக்கொள்க" எனவிளக்கினர். இவர் கடலின் உழத்தற்றொழிலொப்புமைபற்றிக் கடற்றுறைவாழும் நுளையன் என இழிப்பதுபோலக் குறிப்பான் உயர்த்தியதாகக் கருதியதன்றிச் செங்குட்டுவன் கடற்றுறைக்கண் வாழ்தலாகக் கருதாமை எளிதினறியலாம். இவன் கடற்றுறையில் வாழ்வோனாயின் கடலின் உழத்தற்றொழில் ஒப்புமையானும், அக்கடற்றுறைவாழ்தல் ஒப்புமையானும் பரதவனென்று கூறினான் என்று உரைகூறிச் செல்வர் என்றுணர்க. நூலுள்ளுஞ் செங்குட்டுவன் இடைநாட்டினின்று நாற்படையும் பரப்பிச்சென்று கடற்கரை எய்தி அப்பால் நீருட்புக்குக் கடலுட்போர்செய்தான் என்றே கூறப்பட்டுள்ளது.

ஈண்டுக்காட்டிய பதிற்றுப்பத்துள்ளும் "ஆண்டு நீர்ப்பெற்ற தார மீண்டிவர், கொள்ளாப்பாடற் கெளிதினி னீயுங் கல்லா வாய்மையன்" என்று கூறுதற்கண், ஆண்டு நீர்ப்போய்ப்பெற்ற தாரத்தை

ஈண்டு எளிதாகத் தாம்போதாதார்க்குக் கொடுக்கும் பேதை என இழிப்பதுபோல உயர்த்துக்கூறுதல் காண்க. ஆண்டு நீர்ப்பெற்ற தாரமென்றார், நெடுந்தூரம்போய் அப்பாற்கடலுட்புக்கு அரிதாகப் பெற்ற பொருளாதலால். ஈண்டு என்றார், அவற்றைச் செங்குட்டுவன் உள்ள வஞ்சியுட்டந்து உதவலான். ஆண்டு ஈண்டு என்பன இரண்டுங் கடற்றுறையே என்றுதுணிதல் அஸமஞ்ஜஸமாகும். உரைகாரரும் "ஆண்டு நீர்ப்போந்து பெற்ற தாரத்தை" என்று விளக்குதல் காண்க.

இதற்கேற்பவே செங்குட்டுவன் கடல் வென்றிபைக் கூறுமிடங்களில் (பதிற்—41-49) இவன்தன்னூரினின்று புறப்பட்டுநெடுந்தூரஞ் சுரம் பலகடவுந் தேரும், களிறும்சூழக் குதிரையூர்ந்து சென்றானென்று கூறுதலுங்காண்க. இவற்றால் இவன் உள்ள தலைநகர் கடற்றுறைக்கு நெடுந்தூரமான அகநாட்டதென்று இனிது தெளியலாம்.

இனிச்சிலப்பதிகாரத்துக் "குணவாயிற்கோட்டத் தரசுதுறந்திருந்த, குடக்கோச்சேர லிளங்கோவடிகள்" எனவருதலான் இளங்கோவடிகள் அரசுதுறந்திருந்த ஊர் குணவாயில் என்பது கற்றார் பலருமறிந்ததே. இக்குணவாயிலை இளங்கோவடிகள் பகல்செல் வாயில் என்று வரந்தருகாதையிறுதியிற் கூறிக்காட்டினார், இங்குப் பகல்செல் வாயிலென்பதற்கு அரும்பத உரையாசிரியர் ஆதித்தன் தோன்றுகிற குணக்காகியதிக்கிலே பேருடைய குணவாயில் என்று உரைகூறினார். இதனால் ஆதித்தன்தோன்றுகின்ற வாயிலின் கண் இவ்வூரிருத்தல்பற்றிக் குணவாயில் எனப் பெயர்சிறந்ததென்று கருதலாகும். அரும்பத உரையாசிரியர் "குணவாயிற் கோட்டம் என்றதற்குத் திருக்குணவாயிற்கோயில்" எனவே உரைத்தார். தேவாரத்துக் "குடவாயில் குணவாயி லானவெல்லாம் புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே" எனவும் "கோவலூர் திருக்குணவாயில்" எனவும் வருதலானே திருக்குணவாயில் எனவும் குணவாயிலெனவும் பெயர்சிறந்த ஊர் சிவஸ்தலமென நன்கறியலாகும்.

இக்குணவாயில் சிலப்பதிகாரம் கூறியபடி ஆதித்தன் தோன்றுங் கிழக்குப்பக்கத்தே கருவூர் வஞ்சிக்கு நேர்கிழக்கே சிதம்பரச் சேகரத்துள்ள ஓமாம்புலியூரை யடுத்தது கண்டுகொள்க. இது விளங்கிற்பற்றுக்கு நெடுந்தூரத்ததாகாமையுங் கண்டுகொள்க. அடி

யார்க்குநல்லார்"குணவாயில், திருக்குணவாயில் என்பதோரூர்; அது வஞ்சியின் கீழ்த்திசைக்கணுள்ளது, அஃது ஆகுபெயர். அது குணக் கண்வாயில் குணவாயில் எனவும் "குணவாயிற் கோட்டம்" என் புழிக் கோட்டம் அருகன்கோயில் எனவும் உரைத்தார். இளங்கோ வடிகள் "பிறவாயாக்கைப்பெரியோன்" எனவும் "உலகுபொதி யுருவத்துயர்ந்தோன்" எனவும் சிவ பாரம்மியமே கூறிச்செல்லுத லானும், "ஆனேறூர்ந்தோனருளிற்றோன்றி, மாநிலம்விளக்கிய மன்னவனாகிய" செங்குட்டுவற்குத் தம்பியாதலானும் இவர் அரு கன்கோயிலிற் றுறந்திருந்தார் என்பது பொருந்திற்றாத லில்லை. அரும்பதவுரையாளர் திருக்குணவாயிற்கோயிலென்றதன்றி அஃது அருகன்கோயில் என்னுமையுங்காண்க. கோட்டம் என்பது சிவபெரு மான் கோயிற்கும் வழங்குவதுண்டென்பது "குடந்தைக் கீழ்க் கோட்டம்" "கோழிச்சேவற்கொடியோன் கோட்டம்" எனவருதல் காண்க. குணவாயில் என்னும் பெயருடையதோ ரூர் கொடுங்கோ ளூர்க்குக்கீழ்பா லில்லாமையுங் கண்டுகொள்க. மற்றுக்குணவாயில் சேரர்க்கு என்றுமுள்ள நாட்டகத்ததாகாதெனின் அதனால் ஒரு குறையுமின்றென்க. அரசுதுறந்த இளங்கோவடிகள் தாம் துறந்த அரசுநிலைத்த நாட்டகத்தே இல்லாமல் அயல்நாட்டகத் தொரு கோயிற் கண்ணே துறந்துபோயிருந்தார் என்றாலும் பொருத்த முடைத்தாதல் காண்க.

இனிக் கேரளோத்பத்தி என்னும் நூலில், சேரன் பாண்டியன் சோழன் என்று கூறவேண்டிய இடங்களிற் கொங்கன், பாண்டியன் சோழராஜன் எனக்கூறிச் செல்லுதலானும், கடன்மலை நாட்டார் தம்முட் கலகப்பட்டு அயல் நாட்டினின்று தமக்கு அரசாகச் சேர ராஜனைக் கூட்டிவந்தாரென்றலானும் சேரன் கடன்மலை நாட்டு ஆதிதொட்டே தலைநகருடையனாதலின்மை துணியலாம். கொங்கு நாட்டிற்கு எல்லைகூறிய பழம்பாடல்

"வடக்குப் பெரும்பாலை வையாவி தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று" என்று

கூறுவதற்குப் பெரிதும் பொருந்தவே அகப்பாட்டில்

"வானவரம்ப னன்னாட்டும்பர்
வேனினீடிய வெங்கடற்றடைமுதல்" என வருதல்காணலாம்.

வேனில் நீடிய வெங்கடறு என்பதனுல் கோடை நீடிய வெய்ய பாலை வனம் என்று குறித்தார். இதற்குப்பொருந்தவே கருவூர்க்கு வடக்கணுள்ள கொல்லியைச்சூழ்ந்த நிலம் பாலை யென்பது "தன் மலைப்பிறந்த தாவினன்பொன், பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச், சுரத்திடை நல்கியோனே விடர்ச்சிமை, யோங்கிருங் கொல்லிப்பொருநன்" (புறம்-152) எனக்கூறுதலான் நன்கறியப் பட்டது.

இக்கொல்லிமலையில் பொன்னுண்டென்பதும், இதுவே கொங்கிற்கனகம் என நம்பியாண்டார் நம்பிகளாற் சிறப்பிக்கப்படுவ தென்பதும் அறிந்துகொள்க. இக்கொல்லிமலையிலுண்டாகிய வள்ளி யம்மையை அருணகிரிநாதர் "கோதைபொற் குறிஞ்சிமாது" என வழங்குதலுங் காண்க. கோதைபொற்குறிஞ்சி யென்பது சேர னுடைய பொன்னுண்டாகிய மலை என்றபடி.

இனிக் கல்லாடனுர் "எச்சஞ்சிறப்பே" என்னும் சொல்லதி காரச்சூத்திர உரைக்கண், முழுவது தழூஉவுதற்கும், ஒருபுடை தழூஉவுதற்கும் உதாரணங் கூறுவாராய் "அவையாவன யான் கரு ஆர்க்குச்செல்வேனென்முற்கு, யானும் அவ்வூர்க்குப் போதுவல் என்பதும் அவ்வாறுகூறினுர்க்கு யானும் உறையூர்க்குப் போதுவல் என்பதும்" என இவை விளக்கியுள்ளார். இவ்வாறு இலக்கண விளக்கமுடையாரும் கூறினுர் (இடையியல் சூத்திரம்-6.)

இதன்கண் இரண்டு தலைநகரைக் குறித்தாரல்லது வேறு கூற லாகாது. இவ்வூர்கள் செல்வார்க்கு நெறி ஒருபுடைதழுவுத லானன்றே இங்ஙனங் கூறப்பட்டதென்க. இவ்வூரிரண்டும் மேல் பாலும் கீழ்பாலும் நின்று சேய்மையவாயின் நெறிஒருபுடை தழுவுதல் இயலாமை கண்டுகொள்க.

இனி மணிமேகலையில், வஞ்சியுள் "போகம்புரக்கும் பொதுவர் பொலி மறுகு" இருத்தல் கூறப்பட்டுள்ளது. இது மேல்கடற்கரைக் குத் தெரியாததென்று அந்நாட்டார் நன்குதுணிவர்.

இனிச் சங்கநூல் வழக்கெல்லாங் கற்றுத்தெளிந்த கவிச் சக்ர வர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழதேவர் பிள்ளைத் தமிழில் சேரர் சோழர்பகைக்கு அஞ்சி வஞ்சியைவிட்டு மகோதை யிற் புக்கார் என்று விளங்க உரைப்பர். இதனை,

"மறிப்ப மறித்துகு மல்லரணப்பொறி வில்லரணத்தினர் தாம்
வஞ்சியைவிட்டகலஞ்சியகோதை மகோதை மதிற்கதவம்
பறிப்பப் பெயரும் மன்னவர் மன்னவனே."

எனவரும் அடிகளான் அறியலாம். இதன்கண் வஞ்சியும் மகோதையும் வேறுவேறாய்க் கூறப்பட்டது காண்க. இதற்கியையவே மூவருலாவில் இவர்

"உதிய, ரிடப்புண்ட பேரிஞ்சி வஞ்சியி லிட
கட்டப்பு முதுமுரசங் காணீர்" என்றார்.

இனி ஒருசாரார் கொச்சிக்குப் பதினெட்டு மைல் தூரத்தில் திருக்கரூர் என்று ஓரூரிருந்ததென்றும், அஃது அழிந்துபோய்ச் சில குடிசைகளையுடையதாய் இப்போதுள்ளதென்றும், அதுதான் சேரர்கருவூரென்றும் துணிவர். அது திருக்கருவூர் என்னும் பெயருடையதன்று; திருக்காரியூர் என்னும் பெயருடையது; இதனுண்மை "திருக்காரியூர்ப் பொன்பண்டபத்து" எனத் தேரளாந்பத்தியில் வருதலால் நன்கறியலாம். இப்பெயருண்மை யறியாது இதனை திருக்கரூர் என மயங்கிக்கொண்டார் அப்பிறர் என்க.

அவிநாசிப்புராணம் பாடிய இளையான்புலவர் கொங்குநாட்டு வஞ்சி வளம்பதியில் சேரமான் பெருமாணயனர் புக்காரென்று கூறியதன்பின், "வஞ்சிநகாகன் றுதிமாபுரவஞ்சியை மேவி" எனப் பாடுதலான் ஆதிமாபுரவஞ்சியாகிய கருவூர்வஞ்சியின் வேறாகக் கொங்குநாட்டில் ஆன்பொருநைக்கரையில் ஓர் வஞ்சியுண்டென்று அவர் கருதினராவர். அவர் அங்ஙனம் கருதுதற்குக்காரணம் கொங்கு நாட்டுள்ள தாராபுரத்திற்கு வஞ்சியென்ற பெயருள்ளதுபற்றி யென்று ஊகிக்கப்படுகின்றது. அது கருவூரென்ற பெயருடையதாகாமை காண்க. தாராபுரத்திற்கு வஞ்சியென்ற பெயருண்மை அதன் புராணத்தால் தெரியவந்தது. ஆதிமாபுரவஞ்சியாகியகருவூரை விட்டுச் சேரர்கொடுங்கோளூரில் வதிதற்குமுன் தாராபுரத்திலிடையில் உறைந்தாரென்று இளையான்புலவர் கருதினரென்று தெரிகிறது. தாராபுரத்திற்கு வஞ்சியென்ற பெயருண்டென்பது பேரூர்ப் புராணத்தாலும் அறிந்தது.

இங்ஙனம் நூன்முறையான் அன்றிப் பழைய சாசனமுறையால் ஆராயுமிடத்தும் யான்கூறுவதே வலியுறுவதுகாணலாம். இலண்டன் பொருட்காட்சிச்சாலையிலுள்ள சின்னமனூர்ச்செப்பேடு என்னும் பழைய பாண்டியர் சாசனத்தில் "புனற்பொன்னி வடகரையிற்பொழில்புடைசூழ்மதில்வஞ்சி, கனற்படவிழித் தெதிர்ந்த வீரர் கவந்தமாடக் கண்சிவந்தும்" எனவருதலைச் சாசன ஆராய்ச்சியுடையார் நன்கறிவர்.

பாண்டியன் பொன்னிவடகரையினின்று வஞ்சியைக் கனற்பட விழித்தானென்றும் அதுகண்டு வஞ்சிவீரர் பாண்டியனை எதிர்த்தவளவிற் அவர்தலைதுமித்து அவர்கவந்தம் ஆடுமாறுகண்டு கண்சிவந்தானென்றும் இதனாற் கூறியதாகும். இதற்கேற்பவே சாசன ப்ரசஸ்தியிலும் "கருபதிபலகாலவன்னி:" எனவந்தது காணலாம். இதன்கண்ணே கருவூரரசன்படைக்குக் காலநெருப்பாகப் பாண்டியன் கூறப்படுதல் காண்க. இப்பழையசாசனம் காவிரியையடுத்துக் கருவூர்வஞ்சி யுண்மையை விளங்கக்காட்டுகின்றது. கர்னல் மெக்கன்ஸிதுரை தொகுத்த கருவூர்ச்சாசனத் தொகுதியில் கருவூர் திருவஞ்சிமாநகர் என விளக்கப்படுதல் காணலாம். இவற்றுக்கு மாறாக வேறுசாசனம் கொடுங்கோளூர்க்கில்லாமையுங் கண்டுகொள்க.

இங்ஙனம் சங்ககாலத்தனவும், பிற்காலத்தனவுமாகிய இப்பன்னூற்றுணிபுக்கும், கிடைத்த சாசனங்களின் துணிபுக்கும் இயையவே, கொங்குநாட்டுப் பெருமக்களெல்லாம் தம்கொங்கிற் கருவூரைச் சேரராஜஸ்தானமென்று வாயாரவழங்குதலை இன்றுங் கேட்கலாம். இதற்குச் சான்றாகத் தும்பிவாடி, மாநிலையூர், தோரணக் கற்பட்டி, வஞ்சிப்பாளையம், வேட்டமங்கலம் இவ்வூர்களை அவ்வரசிருக்கைக்கடையாளமென்று அவர் காட்டுவர். தும்பிவாடி-யானைப்படை நின்ற இடம்; மாநிலை-குதிரைப்படை நின்ற இடம்; தோரணக்கற்பட்டி-தோரணவாயிலுள்ள பகுதி; வஞ்சிப்பாளையம்-வஞ்சிக்குரிய படைதங்கிய இடம்.

இத்துணையுங்கூறியவாற்றால் தமிழ்கூறும் நல்லுலகத்தி[illegible] மூவேந்தருட் குடதிசையாளுங் கோமக்களாகிய பழையசேர[illegible] நாடுமுழுதுங் குடபுலமாமேனும், அதன்கட் குடபுலமென்று சிற[illegible]

பித்துப் பெயர்பெறுவது கொங்குநாடேயென்றும் அது தாசாண்ட மலையமானுடாகிய கொல்லிமலைப்பக்கத்து நாடுமுதலா கப் பலநாடுகளையுடையதென்றும் அதன்கணுள்ள ஆன்பொருனைக் கரையிலுள்ள கருவூரே 'வருபுனனீர்த் தண்பொருநை சூழ்தரும்' வஞ்சியென்றும் ஐயந்திரிபறத் தெளிந்துகொள்க.

பழைய சேரர் மேல்கடற்கரை நாடுகளையும், அகநாட்டுக் கொங்குமண்டலத்தையுஞ்சேர ஆண்டனரென்றும் அவர்க்கு மேல் கடற்கரையிற் றொண்டி, முசிறி, மாந்தை முதலிய பெரிய பட்டினங் களும் அகநாட்டுக் கொங்குமண்டலத்து வஞ்சிமாநகராகிய கருவூர்த் தலைநகரும் உண்டென்றும் தொன்னூல் பின்னூல் முதலாகப் பன்னூல் கொண்டும் உணர்ந்துகொள்க. இன்னும் விரிப்பிற் பெருகும்.

கொங்கு குடபுலமாங் கோச்சேரன் வஞ்சிநக
ரங்கு வியன்கருவூ ராமென்ன-விங்குணரா
மாந்த ருளத்து மயக்கறுத்தேன் சேதுபதி
வேந்தன் பணிக்க விழைந்து.

வஞ்சிமாநகர் நிறைவேறியது.

---

Thompson & Co., Ltd., University Printers, Madras.